# எழுதுகோல்

## இதழ் - ௨



**கலைப்பீட முஸ்லிம் மாணவர் பிரிவு**

**முஸ்லிம் மஜ்லிஸ், யாழ் பல்கலைக்கழகம்**

ARTS MUSLIM UNIT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பம் செய்கின்றோம்"

# எழுதுகோல்

# Eluzhukol

(Since 2012)

ARTS MUSLIM UNIT

Volume 02
(February 2019)
Arts Muslim Students' Unit
University of Jaffna
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Title | : | Eluzhukol |
| Volume | : | 02 |
| Editors | : | Editorial Board Eluzhukol 02, Arts Muslim Students' Unit |
| Publishers | : | Arts Muslim Students' Unit University of Jaffna, Sri Lanka |
| Publication on | : | February 2019 |
| Email | : | eluzhukoluoj2018@gmail.com |
| Cover Concept | : | L.F. Zakiya |
| Cover Design | : | A.M Arsath |
| Layout & Printing | : | Vista8 Printers-Jaffna |
| Pages | : | 150 |
| Copies | : | 300 |
| ISSN | : | 2550-2999 |
| Price | : | LKR 400.00 |

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | எழுதுகோல் |
| தொகுதி | : | 02 |
| ஆசிரியர் குழாம் | : | மலர்க்குழு எழுதுகோல் 02- கலைப்பீட முஸ்லிம் மாணவர் பிரிவு. |
| வெளியீடு | : | கலைப்பீட முஸ்லிம் மாணவர் பிரிவு - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| பதிப்பு காலம் | : | மாசி - 2019 |
| மின்னஞ்சல் | : | eluzhukoluoj2018@gmail.com |
| அட்டை கருத்துரு | : | எல்.எப். ஸகியா |
| அட்டை வடிவமைப்பு | : | ஏ.எம். அர்ஷாத் |
| பக்க வடிவமைப்பு,அச்சு | : | விஸ்ரா8 பதிப்பகம், கலட்டி சந்தி, யாழ்ப்பாணம். |
| பக்கங்கள் | : | 150 |
| பிரதிகள் | : | 300 |
| சர்வதேச தரதொடர் எண் | : | 2550-2999 |
| விலை | : | ரூபா 400.00 (இலங்கை) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படக் கருத்துருவாக்கம்

ஆதி முதல் ஆண்டு வரும் ஆதாரமே...
தக்க தருணமதில் தவழுகின்ற தரிசனமே...
மனித குல மரியாதையின்
மாண்பிடமே...
பல வர்ண ஜால இறகினாலே...

சிறு துளி மையும்
சிதறிய தருணமதில்
சிந்தனைத் துளிகள்
சிறகடித்தனவே...
பரந்த வெளியில்
உனக்கென தனி இடமுண்டு
உணர்த்த வல்லனவே...

வர்ணங்கள் பலவாறாய்
கருத்தோட்ட நதி தனியே...
வர்ணனைகள் சிலவாறாய்
சிந்தனைச் சிதறல்களிலே...
விமர்சனங்கள் சிலபோதாய்
வீண் பேச்சுக்கள் தொடர்கையிலே
அறியாமை இருள் போக்கிய
வெள்ளைக் காகித வழவினிலே....

ஆரம்பம் ஆனதுவே...
எழுத்துக்களின் அடைக்கலமாய்
சிந்தனைகளின் உருவாக்கமாய்
எழுத்தாளர்களின் வண்ணங்களாய்
கைகளில் தவழ்கின்ற
"எழுதுகோல்" பிரசவிக்கிறது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே


- மலர்குழு
- பீடப் பிரதிநிதியின் செய்தி
- இதழாசிரியர்ச் செய்தி

1. மலர்க்குழு மலர்கிறது.
2. இலங்கை முஸ்லிம்களது நுண்கலை பங்களிப்பு.
3. இஸ்லாமியக் கலையைப் பறைசாற்றும் அரபு எழுத்தணிக்கலை.
4. எழுதுகோல்.
5. ஸ்ரீ்
6. நாச்சிமார் கோயிலடி தட்டார் சமூகத்தின் வரலாற்றுப் பின்னணி.
7. தலைமைத்துவம்.
8. நபி நாயகம்.
9. நான் யார்?.
10. Multiple intelligence
11. கல்வி.
12. யுத்தத்திற்கு பின்னரான கிறிஸ்தவ, முஸ்லிம் சமய நல்லுறவு மற்றும் கலந்தரையாடல் (முசலி பிரதேசத்தினை மையப்படுத்திய ஓர் ஆய்வு)
13. காலம் செய்த கோலம்
14. பட்டங்கள்
15. சமய நல்லிணக்கம்
16. இஸ்லாமும் மிருகவதையும்.
17. உளவியல் வரலாறு.
18. என்னைச் சமந்தவள் இவள்
19. The forgotten will: Feminism in Islam
20. சுவனத்து இன்பங்கள்.
21. கற்பொழுக்கத்தின் முகவரி ஹிஜாப்
22. மன ஐக்கியம் வளராத வரை இன ஐக்கியம் வளராது
23. மயானக் குச்சி
24. புனித அல்குர்ஆன்
25. வழிமாறும் விதி
26. பேயாடுகளம்
27. சுதந்திரத்தின் பின் இலங்கை அரசியலில் பெண்களின் நிலை
28. இஸ்லாமிய பார்வையில் சமத்துவமும் சகோதரத்துவமும்
29. இஸ்லாமியக் கிராமம்
30. துரித உணவும் அண்மைக் கால போக்கும்
31. இஸ்லாமும் விளையாட்டும்
32. தேசத்தின் மீதான வேட்கை
33. மதுவை ஏன் இஸ்லாம் ஒழிக்கிறது?
34. அல்குர்ஆனும் ஆரோக்கியமும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. சீதனம்
36. இஸ்லாமிய கண்ணோட்டத்தில் சமூக ஊடகங்கள்
37. தாய்
38. புதுயுகத்தில் புதையுறும் மார்க்கம்
39. இயற்கையான இயந்திரம் மனித உடல்
40. பலஸ்தீன பூமி
41. இஸ்லாத்தின் பார்வையில் கல்வியின் முக்கியத்துவம்
42. பொறுமையின் மகத்துவம்
43. பேச்சொழுக்கம் பேணி வாழ்வோம்
44. இறைவன் அளித்த இரண்டு அறிவுகள்
45. இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலை
46. மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்துறைகளில் முஸ்லிம்களின் பங்களிப்பு
47. Prophet Adam (alai)
48. தாய்மொழியாம் தமிழ்மொழி
49. மண்ணுக்கு வழிகாட்டும் விண்மீன் விளக்குகள்
50. போதையின் வீரியம்
51. உலக நீர் நெருக்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட முஸ்லிம் மாணவர் பிரிவினால் வெளியிடப்படுகின்றது
Published by the Arts Muslim Students' Unit, University of Jaffna

ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியவர்களே பொறுப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட முஸ்லிம் மாணவர் அலகோ, யாழ்ப்பானப் பல்கலைக்கழகமோ பொறுப்பாக மாட்டாது.

The views expressed by the contributors are their own and do not necessarily represent the view of the Arts Muslim Students' Unit, University of Jaffna or University of Jaffna.

**Arts Muslim Students' Unit,**
**University of Jaffna,**
**Sri Lanka.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Editorial Board**

| | | |
|---|---|---|
| Editor | : | M.F. Famees |
| Secretary | : | M.M.Rasheedha Farwin |
| Treasurer | : | S.S. Abdur Raheem |
| Faculty Representative | : | A.A.M. Askar |
| Members | : | M.M. Najeebur Rahman |
| | | M.S.M. Ihjas |
| | | M.K.F. Shamla |
| | | L.F. Zakiya |
| | | K.F. Maheesha |
| | | S.M.F. Mahira |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீட பிரதிநிதியின் செய்தி....

யாழ்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு முஸ்லிம் மஜ்லிஸ், முஸ்லிம் மாணவர்களின் நலனுக்காக செயற்பட்டு வருகின்றது. இம் மஜ்லிஸின் பிரதான பாகமாக கலைப்பீட முஸ்லிம் மாணவர்கள் பிரிவு செயற்படுகின்றது. சமகாலத்தில் சுமார் 230 மாணவர்களைக் கொண்ட கலைப்பீட முஸ்லிம் மாணவர் பிரிவின் ஒரு முக்கிய அம்சமாக "எழுதுகோல் இதழ் - 2" என்னும் இவ் சஞ்சிகை வெளிவருகின்றது.

எமது பீட சிரேஷ்ட மாணவர்கள் 2012 ஆம் ஆண்டு எழுதுகோல் முதலாவது சஞ்சிகையை வெளியிட்ட போதிலும் அதன் பிறகு இதழ் இரண்டு வெளிவரவில்லை. இதன் பின் தற்போது நீண்டதொரு முயற்சிக்குப் பின் இதழ் இரண்டை வெளியிடுகிறோம். இதனைத் தொடர்ந்து இன்ஷா அல்லாஹ் வருடத்திற்கொரு முறை எழுதுகோல் சஞ்சிகை நமது கலைப்பீட முஸ்லிம் பிரிவினால் வெளிவரும்.

பொதுவாகவே எமது மாணவர்கள் பாடம்சார் விடயங்களில் நின்றும் இது போன்ற எழுத்துத் துறையில் பிரவேசிப்பதில் அதீத ஆர்வம் காட்டி வருகிறார்கள். சமயம் சார், சமயம் சார்பற்ற பொதுவான விடயங்கள் என்று கவிதை, கட்டுரை, சிறுகதை என்று பல திறமைகளை இந்நூலில் வெளிக்காட்டியுள்ளனர். எழுதுகோல் சஞ்சிகை மாணவர்களுக்கு என்றென்றும் களமாக அமையும். இந்நூல் வெளிவர உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

"எல்லாப் புகழும் இறைவனுக்கே"

**ஏ.ஏ.எம். அஸ்கர்.**
கலைப்பீடப் பிரதிநிதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்ச் செய்தி

புகழனைத்தும் வையகத்தினைப் படைத்து பரிபாலிக்கும் அருளுக்குரிய இறைவனுக்கே அல்ஹம்துலில்லாஹ். இறைவனுடைய இறுதி இறை மறை "இக்ரஃ" என்ற பதமூடாக வாசிப்பு மீதான அவசியப்பாட்டினை எடுத்தியம்புகிறது. "அல.-கலம்" என்ற அரபு மொழி தமிழ் வடிவமாக "எழுதுகோல்" என்ற சொற்பிரயோகமுள்ளது. குர்ஆனில் இறைவன் நூன் எழுத்தின் மீதும் அதனை எழுதுகின்ற பேனாவினை சத்தியமிடுவதுடன் சூறதுல் கலம் என்ற தனி அத்தியாயத்தின் மூலம் எழுதுகோலுக்கான முக்கியத்துவத்தினை உணர்த்தியுள்ளான். 1977 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக யாழ்ப்பாணம் பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து கலைபீடத்திற்க்கும் முஸ்லிம் மாணவர்கள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டது மட்டுமின்றி முஸ்லிம் மஜ்லிஸினை ஆரம்பித்ததிலிருந்து கொண்டு நடாத்துவதில் பாரிய பங்களிப்பு இன்று வரைக்கும் வழங்கி வருகின்றனர் என்றால் மறுத்தலிக்க முடியாது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது அதிகப்படியான முஸ்லிம் மாணவர்களினைக் கொண்ட பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணம் இன்று திகழ்கிறது. அதில் சுமார் கால் பங்கிற்கு மேற்பட்டவர்கள் (229 மாணவர்கள்) கலைப்பீட மாணவர்களாவார்கள். இந்த அடிப்படையில் முஸ்லிம் மஜ்லிஸின் கலைப்பீட மாணவர்களின் மூலமாக பல்வேறுபட்ட செயற்பணிகள் பல்கலைக்கழக மற்றும் சமூக மட்டத்திலம் முஸ்லிம் மஜ்லிஸுடன் இணைந்தும் தனித்தும் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகைய அடிப்படையில் மாணாக்கரின் எழுத்தாற்றலுக்கு களம் அமைக்கும் வகையிலான முக்கிய நகர்வாக "எழுதுகோல்" உள்ளது. 2012 ஆம் ஆண்டு கலைப்பீடத்தின் எமது சிரேஷ்ட மாணவர்களினால் முதலாவது சஞ்சிகை வெளியிடப்பட்டது. அவர்களது கன்னிப்பிரசவத்தினைத் தொடர்ந்து இரண்டாவது இதழ் முயற்சியாக இது உள்ளது. மேலும் மலேஷியாவின் தற்போதைய பிரதமர் மஹாதிர் மொஹமட் குறிப்படுவது போன்று, "யாரிடம் கடற்படை இருந்ததோ அவர் 19 ஆம் நூற்றாண்டின் சக்தி மிக்கவராக விளங்கினார். யாரிடம் விமானப்படை இருந்ததோ அவர் 20 ஆம் நூற்றாண்டின் சக்தி மிக்கவராக விளங்கினார். அதுபோல ஊடகம் யாரிடம் இருக்கின்றதோ அவர்தான் 21 ஆம் நூற்றாண்டின் சக்தி மிக்கவராக விளங்குவார்." என்பதற்கு ஏற்ப எத்தனை தொழிநுட்பங்கள் வளர்ந்த போதிலும் எழுத்துக்கு தனியான ஒரு சக்தி உள்ளமை மறுத்தலிக்க இயலாது.

இத்தகைய அடிப்படையில் தமிழ்மொழி பயில் துறைகளில் புலமைப்பரிசிலை நிலைப் பெறச் செய்த பெருமை யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்குரியது. பல்வேறுபட்ட துறைகளான சமூகவியல், உளவியல், மெய்யியல், புவியியல், வரலாறு, ஆங்கில மொழி கற்பித்தல் உட்பட பல பாடத் தெரிவுகளையும் விஷேடமான சமுதாய மற்றும் பிராந்திய திட்டமிடல், மொழிபெயர்ப்பு கற்கைகள், ஊடகக் கற்கைகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், மனைப்பொருளியல், தொல்லியல் போன்ற தமிழ் மொழி பயில் துறைகளின் ஒரே பல்கலையாகவும் இது காணப்படுகிறது.

ஆகவே குறிப்பிட்ட தங்களது பயில்துறைகளில் இஸ்லாமிய விடயங்களை தழுவியதான தமிழ் மொழி ரீதியிலான ஆக்கங்களின் குறைபாடு தொடர்ச்சியாக உள்ளமையினால் அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு சிறிய முயற்சி இதுவாகும். இத்தகைய பின்புலத்தில் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாத பரீட்சை விடுமுறை காலப்பகுதியில் எழுதுகோல் சஞ்சிகைக்கான பல்வேறுபட்ட தொடர்ச்சியான பிரயத்தனத்தின் அடிப்படையில் பல்துறை சார்ந்த மாணவர்களது எண்ணக்கருவாக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களமமைத்து கொடுக்கப்பட்டது. போர் ஓய்ந்து ஒரு தசாப்தமாயுள்ள இச்சூழலில் இன்றும் இலங்கையின் சமூக, பொருளாதார, கலாச்சார சவால்கள் மற்றும் இனங்களுக்கு இடையிலான முரண்பாடு தீர்ந்தபாடில்லை. ஆகவே சகவாழ்வு மற்றும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, இஸ்லாம் பற்றிய சந்தேகங்கள் மற்றம் தெளிவின்மைகளை நிவர்த்தி செய்தல், புதிய விடயங்களை நோக்கிய துறை சார்ந்த பங்களிப்பினை வழங்குதல் என்ற இலக்குகளை கொண்ட எழுதுகோலின் பணி அகலவிரிந்துள்ளது. இவ்விலக்குகளை ஓரளவு நிவர்த்தி செய்யும் குறுகிய கால சிறு முயற்சியாகும்.

வாசிப்பானது ஏனையவற்றினை விட கூர்மையானது. ஹெகலிய பேனா முனை குறிப்புக்கள் கார்ல் மாக்ஸ்ஸினைத் தூண்டியமை, மார்சீம் கார்கின் நவால் பிடல் காஸ்ட்ரோவினை போராளியாக்கியமை, வில்டூராண்டின் தத்துவம் சிக்மன் பிராய்ட்டின் உலகை ஆழ மன வாசிக்கச் செய்தது இதற்கு போதுமான சான்றாகும். முஸ்லிம்களும் நிலைமாறுகாலநீதியும், வரலாற்று ஆவணவாக்கம், தனியார் சட்டம், கச்வி சவால்கள், இளையவர்கள் சார்ந்த பிரச்சினைகள் உட்பட பல்வேறுபட்ட விடயங்கள் மேலும் ஆராயப்பட வேண்டிய இடைவெளியை அடுத்து வருகின்றவர் - களுக்காக விட்டுச் செல்கின்றோம்.

எனது மூன்றாவது இதழாசிரியர் பயணத்தில் எழுதுகோலின் ஆரம்பம் முதல் இறுதி வரை இரவு பகலாக உழைத்த இதழ் குழுவினர், பீடப்பிரதிநிதி, அட்டைப்பட வடிவமைப்பாளர், வாழ்த்துச் செய்தி வழங்கிய மதிப்பிற்குரியவர்கள், கருத்துக்களை சரி பார்த்த எனது ஆசான் மௌளவி பைசல், விளம்பர உதவிகள், அச்சுப் பணி உட்பட அனைவருக்கும் இறைவன் நிலையான நன்மைகளை வழங்க இருகரமேந்துகின்றேன். தொடர்ந்து ஆண்டாண்டாக எழுதுகோல் நின்று நிலைத்திருக்கவும், பல காத்திரமான சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்ப படைப்புக்களையும் சுமந்து வர வேண்டும் என்பதே எனது அவா.

**எம்.எஸ்.எம். பௌவுஸ்தீன் பமீஸ்**

**இதழாசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு செய்தி

**"அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றோம்."**

எல்லாம் வல்ல இறையோனின் அருளினால் ஆரம்பமான இம்முயற்சி அவனின் மாபெரும் கருணையினாலே நிறைவு பெற்றுள்ளது. பல எண்ணங்களினதும், வண்ணங்களினதும் பிறப்பிடமாக இச் சஞ்சிகை திகழ்கின்றது. இச் சஞ்சிகை பல உன்னதமான நோக்கங்களுக்காக உயிர்பெற்ற ஒன்றாகும். கலைப்பீட மாணவர்களினுள் புதைந்துள்ள எழுத்தாற்றலினை வெளிக்கொனர்வதற்கான ஒரு களமாக இது அமைந்துள்ளது.

எழுதுகோலின் வரலாற்றுப் பின்னணியினை புடம் போடுவோமேயானால், அதற்கென தனியானதொரு அத்தியாயமோ, நீண்ட வரலாறோ கிடையாது. 2012 ஆம் ஆண்டு எமது சிரேஷ்ட மாணவர்களினால் வெறுமனே வெளியிடப்பட்ட ஒரு சஞ்சிகையாகும். இவ் வெளியீடானது உத்தியோக பூர்வமானதாக அமையவில்லை. எமது சிரேஷ்ட மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்ட இம் முயற்சி வீண் போய் விடக் கூடாது என்ற நோக்கிலேயே "எழுதுகோல் 02" எனும் சஞ்சிகையை பிரசுரிக்கின்றோம்.

இச் சஞ்சிகைக்காக மலர்க்குழுவான நாம் ஒரு குறுகிய காலமே செயற்பட்டோம். சுமார் கடந்த மூன்று மாதங்களின் கடின உழைப்பின் விளைவே இவ் எழுதுகோல் 02 எனும் சஞ்சிகையாகும். கடந்த நவம்பர் மாதம் இச் சஞ்சிகைக்கான முதல் ஒன்றுகூடல் நடைப்பெற்றது. அது மாணவர்களுக்கான பரீட்சை விடுமுறைக் காலமாக காணப்பட்டதனால், அவ்விடுமுறையை பயன்படுத்தி ஆக்கங்கள் சேகரிப்புக்கான முதல் கட்ட நடவடிக்கையை ஆரம்பித்தோம். சுமார் ஒரு மாத கால நிறைவினில் ஆக்கங்களைத் தெரிவு செய்யும் பணியினை ஆரம்பித்தோம். ஆக்கங்களை தெரிவு செய்வதற்கு பலரின் உதவியும் நமக்கு தேவைப்பட்டது. பல இன்னல்கள், சிரமங்களை நாம் எதிர் கொண்ட போதிலும் இச் சஞ்சிகையின் வெளியீட்டிற்காக அயராது உழைத்தோம்.

எழுதுகோலின் ஆரம்பம் முதல் இறுதி வரை இரவு பகலாக உழைத்த மலர்க் குழுவினர், பீடப்பிரதிநிதி, அட்டைப்பட வடிவமைப்பாளர், வாழ்த்துச் செய்தி வழங்கிய மதிப்பிற்குரியவர்கள், கருத்துக்களை சரி பார்த்த ஆசான் மௌளவி பைசல், விளம்பர உதவிகள், அச்சுப் பணி உட்பட அனைவருக்கும் இறைவன் நிலையான நன்மைகளை வழங்க இருகரமேந்துகின்றோம். சஞ்சிகை வெளியிடுவதனில் முக்கிய பங்காளர்களான ஆக்கங்கள் சமர்ப்பித்த எழுத்தாளர்களையும் இத்தருணத்தில் நினைவுபடுத்திக்கொள்கின்றோம்.

இஸ்லாமிய மற்றும் பொதுவான பல ஆக்கங்களைக் கொண்ட "எழுதுகோல் 02" எனும் சஞ்சிகையை வெற்றிகரமாக பிரசுரிக்க உதவிய வல்லோன் இறைவனுக்கே அனைத்துப் புகழும் உரித்தாகட்டும்.

**அல்ஹம்துலில்லாஹ்**

- மலர்க்குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களது நுண்கலை பங்களிப்பு

எம்.ஐ. ஹில்மியா
முதலாம் வருடம்
உளவியல் மற்றும் வரலாறு.

உலகின் முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியம் விசாலமான பன்முகப் பண்புகளைக் கொண்டது. நுண்கலைகள் பற்றிய இஸ்லாமிய அணுகுமுறைக்கு இசைவாக கலைகள் இஸ்லாமிய பண்பாட்டின் இன்றியமையாத கூறுகளாக, உலகக் கலைகள் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. அதேவேளை, இஸ்லாமிய சமயமும் நாகரீகமும் பல்வேறு நாகரீகங்கள் பெற்றிருந்த பண்பாடுகளையும் கலை வடிவங்களையும் ஏற்று செயல்படுத்தியதன் மூலம், அவை முஸ்லிம்களின் நுண்கலைகளாகவும் கலைப் பாரம்பரியங்களாகவும் மாறியுள்ளன.

இறைவன் இயற்கையை அழகுடனும் நயப்புடனும் படைத்துள்ளான். வர்ணங்களும் வகை வகையான தோற்றங்களும், பட்சிகளின் இனிய ஒலிகளும் அந்தி மாலையின் செந்நிறக் கலவைகளும் இயற்கை அள்ளி வழங்கும் அழகிய காட்சிகளாகும். இனிய ஓசைகளை விரும்பும் செவிகளையும் பல்வகைச் சுவைகளையும் ருசித்து உணரக்கூடிய நாவையும் மனிதன் பெற்றுள்ளான். மனிதன் இயற்கையாகப் பெற்றிருக்கும் புலனாற்றல்கள் இவை.

கலைகள் மனிதனின் உணர்வுகளின் இயற்கைத் தேவைகளின் ஊற்றுக்களில் இருந்து உருவாகி, உயர்ந்த கலை இரசனையாக மாற்றம் பெற்றது. இஸ்லாத்தின் கலைச் சிந்தனைகள் இந்த புலனுணர்வுகளுக்குத் தடையானதல்ல. கட்டுபாடுகள் என்ற வரையறைக்குள் இருந்து ஒரு முஸ்லிம் அவனது கலை நடவடிக்கைகளை மேற்கொள்ள இஸ்லாத்தில் சுதந்திரம் உண்டு. கலைரசனையற்றவனாக எந்தவொரு முஸ்லிமும் வாழ-வில்லை. தனது பண்பாட்டிலிருந்தும் ஏனைய பண்பாட்டிலிருந்தும் உயர்ந்த கலை-களையும் எளிமையான கலைச் செயற்பாடுகளையும், மரபுகளையும் தனது இலட்சியங்-களுக்கு ஏற்றவாறு தனதாக்கிக் கொள்கின்றான். இஸ்லாமிய ஒழுங்குக்கு முரணற்ற வகையில் ஒரு முஸ்லிம் நுண்கலைகளைத் தன் வசமாக்கிக் கொள்ளவதில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றான்.

கட்டடக் கலை, ஓவியம், சிற்பம், வர்ணம் பூசுதல், அலங்காரக் கலை, மட்பாண்டக் கலை, பீங்கான் கலை, சுவரோவியக் கலை, இசை, நாடகம், நடனம் என்ற எல்லா பிரிவிலும் உலக முஸ்லிம்களும், சில பிரிவுகளில் இலங்கை முஸ்லிம்களும் கலைப் பண்பாட்டில் தமது சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். அந்தவகையில், இஸ்லாமியக் கட்டடக்கலை சமய வளர்ச்சியோடு இணைந்து ஆரம்பமானதாக இஸ்லாமிய வரலாறு கூறுகின்றது. சமய வழிபாட்டுக்குரிய கட்டடங்கள் முதலாவதாக தோற்றம் பெற்றன. அடுத்ததாக, சமயவியல் கல்வி போதனைக்காக மத்ரஸா மற்றும் பல்கலைகழக கட்டடங்கள் தோற்றம் பெற்றன. பின் நிர்வாகக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. பள்ளிவாசல்கள், குப்பா, ஸாவியா எனும் தனித்துவமான பல கட்டட அமைப்புக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலமானதாகவும், வியக்க வைக்கும் அலங்கார வேலைப்பாடுகள் கொண்டதாகவும் காணப்படும் கட்டட நிர்மாணங்களில் பள்ளிவாசல்கள் பிரதான இடத்தை வகிப்பதாகக் கருத முடியும். இதற்கு உதாரணமாக பேருவளையில் அமைந்துள்ள இலங்கையின் முதலாவது பள்ளிவாசலைக் குறிப்பிடலாம். இப்பள்ளிவாசலில் மினாரா, பிறை வடிவ அமைப்பு, பிரசங்க மேடை, குப்பா, நுழைவாயிலில் எழுத்தணிக் கலைகள் என்பன அமைக்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரிய கலை வடிவங்களாக காணப்படுகின்றன.

மேலும், பேருவளையிலுள்ள கெச்சிமலை பள்ளிவாசலும், அதன் தொன்மையினாலும், கட்டடக்கலை அம்சங்களினாலும் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. ஆரம்ப கட்டட அமைப்பு தலதா மாளிகைக்கு அண்மையில் காணப்படும் "மகுல் மடுவ" கட்டட அமைப்பை பெற்றிருந்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது. கண்டி மீரா மக்கா பள்ளிவாசல், ஹனபி மஸ்ஜித் போன்றனவும் முஸ்லிம்களின் கட்டட நிர்மாணிப்பின் சின்னங்களாகும். பொதுவாக பள்ளிவாசல்களில் காணப்படும் கும்மட்டங்கள், குவிமட்டங்கள், சிறு மினாரா வடிவங்கள், பூ வேலைப்பாடுகள் கொண்ட ஜன்னல்கள், நிமிர்ந்த முகப்புப் பகுதி என்பன அழகை மேம்படுத்தும் கட்டடக் கூறுகளாக அமைந்துள்ளன. பள்ளியோடு இணைந்துள்ள அரை வட்டக் கூரை வடிவமைப்பையும் சலவைக் கல்லினால் செதுக்கியது போன்ற கும்மட்டங்களையும், குப்பாக்களையும் கொண்டு காட்சி தரும் மிஹ்ராபும் மிம்பரும் பள்ளியின் உட்பாக அழகை மெருகூட்டுகின்றன. இவை முஸ்லிம்களின் நுண்கலை பங்களிப்பினை பிரதிபலிக்கின்றன.

கொழும்பு நகரை அழகுபடுத்திய பல கட்டடங்களுக்கும் சேர் ராஷிக் பரீத் இன் தந்தை வாப்பிச்சு மரைக்காரரின் நிர்மாணிப்புக்கும் சம்பந்தமுண்டு. அதாவது கொழும்பில் தபாற்கந்தோர், நூதனசாலை, காலிமுகத்திடலை அலங்காரமாக்கல், கோப்பாஸ் ஹொட்டல், மணிக்கூட்டுக் கோபுரம், சங்கப்படுத்திக் கட்டடம் போன்ற நிர்மாணங்களில் முஸ்லிம்கள் சிறந்த பங்களிப்புச் செய்தனர். அரும்பொருட் காட்சிச்சாலை அமைத்ததும் அவர்களின் நுண்கலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

இசைக் கலை தொடர்பாக நோக்குகின்ற போது போர்த்துக்கேயரை முஸ்லிம்கள் எதிர்த்தமையால் அரபு இசை மரபை முஸ்லிம்கள் இழக்க நேரிட்டது. ஆனால், புதிய இசை மரபொன்று பிற்காலத்தில் மத்ரஸா மரபுடனும் மக்களின் சமய நடவடிக்கைகளுடனும் சேர்ந்து வரலாயிற்று எனக் கூறுதல் பொருந்தும். அரபு பதங்கள், கஸீதாக்கள், ராத்திபுகள், பைதுகள், அரபு மாலைகள், முனாஜாத்துகள் ஓதும் மரபு இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. பூசாரி இமாமின் புர்தா ஷரீப், ஜலாலிய்யா ராத்திபு போன்றவை முனாஜாத்துகள், ஸுப்ஹான மௌலூது, மொஹிதீன் மௌலூது உட்பட பலவகை மௌலூதுக்கள் என்பன அரபு மொழியில் இயற்றப்பட்டு பாடப்பட்டன. மழை வேண்டி பாடும் அரபு பைத்தும் அரபு மொழியிலே பாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மற்றும், முஸ்லிம்களின் கலைத் துறையில் நாட்டார் இசையும் முக்கியத்துவமானது. இது வடக்கு, கிழக்கு, வடமேல், மத்திய, தென்மேல் பகுதிகளில் காணப்படுகிறது. நாட்டார் கலைகள், பாடல்கள் என்பவற்றில் பேணப்பட்டு வந்த கும்மி, தெம்மாங்கு முதலான தமிழ் இசை வடிவங்களைப் பயன்படுத்தி, முஸ்லிம்கள் எண்ணற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களை நாட்டுப் பாடல் வடிவில் உருவாக்கினர். அதேபோல், வானொலி இசை நிகழ்ச்சிப் பிரிவில் 1956க்குப் பின்னர் முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்கப் பங்காற்றியுள்ளனர்.

இவ்வாறே, ஓவியக் கலையிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர். மனித உருவமல்லாத ஓவியங்களை வரைவதே ஆரம்பத்தில் காணப்பட்ட பண்பாக இருந்த போதும், பிற்பட்ட காலத்தில் இதில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. மனித உருவங்கள், பறவைகள், விலங்குகள், செடி, கொடிகள் என்பவற்றைக் கைதேர்ந்த முஸ்லிம் கலைஞர்கள் வரைந்தனர். செடி, கொடி அலங்காரம், அரபு எழுத்தணிகள் என்பன பள்ளிவாசல் முகப்பிலும் முன் பக்க சுவர்களிலும் வரையப்பட்டன. நுட்பமான சித்திர வேலைப்பாடுகள் கொண்ட ஜன்னல்கள், கதவு பொருத்தப்பட்ட சுவர்களின் வளைவுகள் என்பவற்றிலும் உருவமற்ற சிறந்த சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதை பழைய பள்ளிவாசல்களிலும் புதிய பள்ளிவாசல்களிலும் காணமுடிகிறது.

எழுத்தணிக் கலையில் இலங்கை முஸ்லிம்கள் கணிசமான ஆர்வத்தை நீண்ட காலமாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். இஸ்லாமிய நூல்களில் கலைக்கு முதன்மை அளித்து இஸ்லாத்துக்கு உரித்தான பல அலங்கார எழுத்துக்களையும் அலங்கார அணி வேலைப்பாடுகளையும் காணமுடிகின்றமையும் நோக்கத்தக்கது. இதனையும் ஒரு கலைப் பணியாகவே நோக்க வேண்டும். புத்தளம் காஸிமிய்யா மத்ரஸாவில் இப்படியான அரபு, அரபுத் தமிழ் கையெழுத்துக்கள் பல சேகரித்துப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

அரபு எழுத்தணிக் கலையைப் பொறுத்தவரையில் 1968 இல் அல் குர்ஆனின் 1400 ஆண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு மரங்கள், மரவேர்கள் போன்று அரபு எழுத்து வடிவங்களைக் கொண்டு உருவாக்கிய அல்லாஹ் போன்ற பதங்கள் கவரத்தக்கனவாக உள்ளன. தாளில் மட்டுமன்றி, மரக் குற்றிகள், பலகைகள், கண்ணாடிகள், குவளைகள் (கூஜாக்கள்), பீங்கான்கள் என்பனவற்றிலும் அரபு எழுத்தணி கலைகளை பயன்படுத்தியுள்ளனர். சங்குகள், கடல் ஓடுகள், சிற்பிகள் போன்றவற்றில் செதுக்கினர். மேலும், எழுத்தணியை பள்ளிவாசல் முகப்புக்களிலும் பொறித்தும் தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்தினர். அல்லாஹ்வின் அஸ்மா உல்ஹுஸ்னா எனும் 99 திருநாமங்களை தனித்தனியே ஓவியங்களாக்கி, அதன் தொகுதிக்கு "ஆன்மீகப் பயணம்" என்று பெயரும் இட்டமை எழுத்தணிக் கலையில் இலங்கையர் ஒருவரால் செய்யப்பட்ட முக்கிய பங்களிப்பாக வர்ணிக்கக் கூடியதாகும். அத்தொகுதியில் துல்லியமான ரேகை வளைவுகள், வர்ணச்சேர்க்கைகள், சித்திரங்கள் என்று அரபு வாக்கியங்கள் ஓவியப் பாணியாய் பொறிக்கப்பட்டுள்ளன. பழமையான வடிவங்களையே மீண்டும் மீண்டும் பிரதி செய்வதும் போதிய பயிற்சியின்மையும் சிறந்த முயற்சிகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இன்மையும், இக்கலையை தேக்கத்துக்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறாக கட்டடக்கலை, இசைக் கலை, எழுத்தணிக் கலை, ஓவியக்கலை முதலானவற்றில் முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

**உசாத்துணைகள்**

அப்துல் ரஹ்மான் நவாஸ். 2014. அல்இர்பான் சஞ்சிகை. கெகுனுகொல்ல. M.A.M. சுக்ரி. 2010. இலங்கை முஸ்லிம்களின் தொன்மைக்கான வரலாற்றுப் பாதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய கலையை பறைசாற்றும் அரபு எழுத்தணிக் கலை

ஏ.ஜி.ஹஸானா
இரண்டாம் வருடம்
நுண்கலை

இஸ்லாமிய எழுத்தணிக்கலை என்பது பொதுவாக அரேபிய எழுத்துக்கலை என அறியப்படுகிறது. பொதுவான இஸ்லாமிய கலாச்சார மரபுரிமையை வெவ்வேறு இடங்களில் அடையாளப்படுத்தும் முகமாக ஓவியலாளர்களால் பயன்படுத்தப்படும் கையெழுத்து முறையே அரேபிய எழுத்துக்கலை என அழைக்கப்படுகிறது. இவ் வெழுத்துக்கலையானது அரபு மொழி எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்டு வரையப்படுகின்றது. இஸ்லாமிய எழுத்தணிக்கலை நீண்ட காலமாக முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அந்த வகையில் இது இஸ்லாத்தில் உயர்ந்த சித்திரக் கலையாகவும் நோக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அரபு எழுத்தணிக்கலையின் வரலாறு**

அரபு மொழியானது இஸ்லாம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் மக்களால் பேசப்பட்டு வந்தது. புனித இஸ்லாம் மார்க்கம் நபி (ஸல்) அவர்களால் அரபு மொழியில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், புனித அல்-குர்ஆனும் அரபு மொழியில் இறக்கப்-பட்டது. இதனால் அரபு மொழியானது இஸ்லாமிய கலாச்சாரத்தில் மிக முக்கிய செல்வாக்கைப் பெற்றிருந்தது. அத்தோடு உலகின் 65 நாடுகளில் பேச்சு வழக்கு மொழி-யாகவும், 1 நாடுகளில் உத்தியோகபூர்வ மொழியாகவும் இவ்வரபு மொழி இடம் பெற்றிருப்பதை யாராலும் மறுக்க முடியாது. உமையா கிலாபத்தின் ஆட்சியாளர்களில் ஒருவரான கலீபா அப்துல் மலிக்கின் காலத்தில் இஸ்லாமிய ஆட்சிப்பிரதேசங்களில் உத்தியோகபூர்வ மொழியாக அரபு மொழி மாற்றப்பட்டது. அக்காலத்தில் அதிகமான முஸ்லிம் பிரதேசங்களில் தாய் மொழியாக அரபு மொழி காணப்படவில்லை. அக்கால இஸ்லாமிய உலகில் அரபு மொழிக்கு அடுத்தபடியாக பெரும்பான்மை மக்களால் பாரசீக மொழி பேசப்பட்டு வந்தது.இஸ்லாமிய உலகில் ஆரம்ப காலப்பகுதியில் எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஆட்டுத்தோல்களிலும், ஒரு வகையான மர இலைகளிலும் எழுத்துக்கலைகள் வரையப்பட்டு வந்தன.

பின்னர் கி.பி 9 ஆம் நூற்றாண்டில் சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட காகிதத் தாள்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் இஸ்லாமிய எழுத்தணிக்கலைகள் சிறந்த முறையில் வரைவதற்கு அவை பெரிதும் உதவி செய்தன. அக்கால இஸ்லாமிய எழுத்தணிக் -கலைகளை வரைவதற்கு "கலம்" எனும் சாதனம் பயன்படுத்தப்பட்டது. அது கோரைப்புல் தாவரத்தில் உருவாக்கப்பட்டிருந்தது. ஆரம்ப கால குர்-ஆன் பெரியவையாகக் காணப் பட்டதுடன் அவை இஸ்லாமியக் கலைத்திறன் மிக்கதாகவும் காணப்பட்டது. அதிலி- ருந்து இஸ்லாமிய எழுத்தணிக்கலைகள் சிறந்த ஓவிய முறையாக வளர்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரபு எழுத்தணி வகைகள்**

அரபு எழுத்தணிக்கலைகள் பல்வேறுபட்ட முறைகளில் எழுதப்படுகின்றன. கூபி நாஸ்க், தூலுத் தவ்கி என்பன இவற்றுள் சிலவாகும். புனித அல்குர்ஆன் அதிகமாக கூபி முறையில் எழுதப்படுகின்றன. படித்த முஸ்லிம்கள் நாஸ்க் முறையை பயன்படுத்து-கின்றனர். தூலுத் முறையானது அலங்கார முறையாகக் காணப்படுவதுடன், இம்முறை தலைப்புக்கள் எழுதவும் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வெழுத்தணிக் கலை அதிகம் பள்ளிவாசலிலேயே எழுதப்படுகிறது. அதாவது பூப்பின்னல் வேலைப்பாட்டினால் ஒப்பனை செய்யப்பட்ட சித்திர வேலைப்பாட்டுக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட அரபு, பாரசீகம் மற்றும் உஸ்மானிய துருக்கி எழுத்தணிக்கலைகள் பள்ளிவாசல்களின் சுவர்களிலும், கூரைகளிலும் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு இஸ்லாமிய எழுத்துக்கலைகள் உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் வரையப்பெற்றுள்ளன. அந்த வகையில் மதீனா நகரில் அமைந்துள்ள மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசல், துருக்கியின் ஸ்தாம்புல் நகரில் அமைந்துள்ள செலிமிய்யி பள்ளிவாசல், தாஜ்மஹால் என்பன இஸ்லாமிய எழுத்தணிக்கலைகள் காணப்படும் இடங்களுக்கு சிறந்த உதாரணங்களாகும்.

மேலும் இவ்வரபு எழுத்தணிக்கலை பற்றி சில அறிஞர்களும் தங்களது கருத்துக்களை வழங்கியுள்ளனர். அந்த வகையில் தோமஸ் ஆர்னொல்ட் எனும் அறிஞர் "எழுத்தணிக் கலை போன்று எந்தவொரு கலையும் கண்ணியப்படுத்தப்படவோ, விருத்தி செய்யப்படவோ இல்லை" எனவும், கலை வளர்த்த அப்பாஸியக் கலீபாவான அல் மாமூனின் கண்ணோட்டத்தின் படி "ஞானம் எனும் தாரகை மையின் இருளில் பிரகாசிக்க எழுத்தணிக்கலை காரணமாகின்றது." எனவும் கூறியுள்ளனர்.

இவ்வாறு பல்வேறு அறிஞர்களும் அரபு எழுத்தணிக்கலையின் சிறப்பு பற்றி கூறியுள்ளனர். இவ்வாறு இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது கலை என்ற வகையில் அழகாக எழுதுவதனை இவ்வளவு மனப்பூர்வமான பற்றுதலுடன் அரபியரைத் தவிர வேறு எந்த சமூகத்தவரும் மேற்கொள்ளவில்லை என்றே கூறலாம்.

இருந்தும் இன்று துரதிஷ்டவசமாக அரபு அலங்காரமிட்டு பாதுகாத்து வந்த எமது வரலாற்று முதுசங்கள் ஒரு புறம் யுத்தத்தாலும், மறுபுறம் சமூக அக்கறையின்மை -யினாலும் அழிந்து கொண்டு வருகின்றன. உதாரணமாக ராக், சிரியா, லிபியா போன்ற நாடுகளில் அமைந்திருந்த எமது பாரம்பரிய கட்டடங்கள் எமது வரலாற்றுச் சான்றுகள் அழிக்கப்பட்டுவிட்டன. மேலும் நவீன நாகரீகம் என்ற பெயரில் எமது பாரம்பரிய இஸ்லாமியக் கட்டடக்கலைகளை நாம் அறிமுகம் செய்து வருகிறோம். இதன் விளைவும் எமது வரலாற்றுச் சான்றுகள் அழியக் காரணமாக உள்ளன. இதனை இன்று உலகில் நன்கு அவதானிக்க முடிகிறது.

மேலும் இதன் அழிவுக்கு மற்றுமொரு காரணம் அரபு எழுத்தணி மூலம் எந்தவொரு பயனுமில்லை என்று நாங்கள் அதை ஒதுக்கி வைத்துள்ளோம். ஆனால் அவ்வாறல்ல இஸ்லாம் எமக்கு அழகியல் உணர்வை ஊக்குவிக்கின்றது. ஆனால் நாங்கள் அதைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணித்து விட்டு வாழ்கிறோம். மேலும் இலங்கையிலும் அரபு எழுத்தணிக்கலை என்பது மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது. வழிகாட்டலின்மை, எழுத்தணிக் கலை தொடர்பான முக்கியத்துவமின்மை போன்ற பல்வேறு காரணங்கள் இப்பின்னடைவிற்கு காரணமாக உள்ளன. இவ்வாறு இன்று ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு எழுத்தணிக்கலை உள்ளது. அது பௌத்த சமூகமாக இருக்கலாம் இந்து சமூகமாக இருக்கலாம் அல்லது வேறு சமூகங்களாக இருக்கலாம். அந்தந்த சமூகங்கள் தங்களது கலாச்சாரத்திற்கு ஏற்ப தங்களது கலைகளை கட்டிடக்கலைகள் மூலம் பாதுகாத்து வருகின்றன. ஆனால் இன்று எமது முஸ்லிம் சமூகம் இதில் பெரிதும் பின்னடைவிலுள்ளது.

எனவே நாங்கள் எமது பாரம்பரிய எழுத்தணிக்கலையை எமது சமூகத்தில் அறிமுகம் செய்து அதன் முக்கியத்துவத்தினை உணர்த்த முயற்சிக்க வேண்டும். அதாவது இதுபற்றி அல்-குர்ஆனில் "அவன் தான் எழுதுகோலைக்கொண்டு எழுதக்கற்றுக் கொடுத்தான்." (96 4) எனவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "அழகிய எழுத்தில் எழுதுங்கள் அது உங்களுக்கு பரக்கத்தை அள்ளித்தரும." எனவும் கூறியுள்ளார்கள்.

இவ்வாறு எழுத்தணிக்கலையின் வளர்ச்சிக்கு முதன்மையானதும், முக்கியமானது மான தூண்டுதலை அல்-குர்ஆனும், சுன்னாவுமே வழங்குவதை உணர்த்தி அதன்படி செயற்பட வைக்க வேண்டியது எமது கடமையாகும்.

# எழுதுகோல்

எம்.ஜெ.மின்ஹா
முதலாம் வருடம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் அரசியல்

நான் புன்னகைக்க, புன்னகைக்க
மறுப்பது ஏன்? புரியவில்லை
நான் நடக்கும்போது
கண்கள் இரு மருங்கிலும் தேடுகின்றன.
என் நிழலோடு ஓர் நிழலாவது
கலக்குமா என்று, இல்லை.
என் விதி எழுதுகோலின் முனையில்
சிக்கிக் கொண்டதுவோ என்னவோ ..
நிழலும் தனிமையை ஆசை கொள்கிறதா?
இல்லை, எல்லாம் எழுதுகோலின் சதி

எதையும் நிந்திக்க வில்லை மானுடா!
என்னையே நான் நொந்து கொள்வது.
ஏனோ, புரியவில்லையே!......
தெருவோரம் செல்ல மலரும் மலர்கள்
மொட்டுக்களாகவே சிணுக்குவது ஏனோ,
புரியவில்லை!...

கண்ணீர் துளிகளும் எனக்கு சொந்தமில்லை
என்கிறது அலைகளும் எனக்குள் நுழைய
விரும்பவில்லை ஏனோ, புரியவில்லையே!...
என் அகத்தில் சிதறி ஓடுகிறது.
நில்லாமல் குருதி மானிடனே! உனக்கு
அது வெறும் கண்ணீராய் உருமாறுகிறதே!

எழுதுகோலை நிந்திக்க மனம் துணிந்தாலும்
முனை தன்னை விதியென
முடக்குகிறதே!......
நிஜமாய் வாழ்கிறேன் இறைவா!
போலியாய் தெரிவது ஏனோ, புரியவில்லை.

எல்லாம் எழுதுகோலிடம் சிக்கிக் கொண்டதே!
இருகரம் ஏந்துகிறேன் - உன் உறவுக்காய்
உயிரோடு கலந்துவிடு என் இறைவனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ස්ත්‍රීන්

**M.Rasheedha Farwin**
*Translation Studies*
*Third Year*

ස්ත්‍රීන් නොමැති නම් ලොව රඳා පවතින්නේ නැතැයි නබිතුමාණෝ පැවසුහ. කාන්තාව නිසා ලොව අලංකාර වන්නේ යැයිද එතුමා පැවසුහ. පිරිමින් මෙලොවට බිහිකර හදා වඩා හරින්නේ ස්ත්‍රීන්මය. එහෙත් මෙලොව ඇතිවූ පළමු ස්ත්‍රිය බිහිවුයේ පිරිමියාගෙන්ය. පුදුමයක් නමුත් මෙය සත්‍යයකි. අල්ලාහුතආලා ආදම් (අලෛ) තුමා පස්වලින් මැව්වේය. නමුත් හව්වා (රළි) තුමිය මවන ලද්දේ ආදම් (අලෛ) තුමාගේ ඉළ ඇටයකින්ය. මිනිස් වර්ගයාගේ බෝවීම ආරම්භ වුයේ මෙයින් පසුවය. නමුත් අද මිනිසාගේ උත්පත්තියට ප්‍රධාන හේතුව වනුයේ ස්ත්‍රියකි.

කාන්තාව ගැන සිතිමේදී ඈ වරෙක පවුලේ සිඟිති දියණියකි. වරෙක ඈ මවට උදව්වන සහයිකාවකි. වරෙක ඈ ආදරණීය මවකි. තම ස්වාමියාගේ  ආදරයට පාත්‍ර වන සුන්දර බිරිඳකි. තමාගේ පවුලේ අය ලෙඩවු විට ඈ හෙදියක් වන්නාය. එසේම  තමාගේ කුසෙන් බිහි කළ බිළින්දාට තමාගේ ලේ කිරි කර දී ශක්තිය හා ධෛර්යය දෙමින් ලොවට අවශ්‍ය නායක නායිකාවන් බිහි කරන්නීය. නමුත් අද ලෝකයේ කාන්තාවට වන අඩම්තේට්ටම් කියා නිම කිරීමට බැරිය. එකළ කාන්තාව සෙල්ලම් බඩුවක් සේ විය. සමහර වෙළෙඳ දැන්වීම් වලට නැතුවම බැරිය. ඇයව වෙළෙඳ භාණ්ඩයක තත්වයට පත්කර ඇත. මෙය ගැහැණිය ඉතා පහත් මට්ටමකට ඇද දැමීමකි.

එම නිසා කාන්තා සංවිධානය මඟින් ඔවුන්ගේ අයිතිවාසිකම්, නිදහස් සහ ආරක්ෂාව ලබා ගැනීමට කරන සටන් ගැනත් දක්නට ලැබෙන්නේය. අද කාන්තාවන් ඉල්ලා උද්ඝෝෂණය කරන නිදහස, ආරක්ෂාව සහ අයිතිවාසිකම් මෙයට වර්ෂ 1400 පෙරම ඉස්ලාමය මඟින් ඔවුනට දෙන ලදි. මේ කරුණු තුන එකිනෙක හා සම්බන්ධව වෙලී පවතියි. කෙනෙකුට ප්‍රමාණය ඉක්මවා ආරක්ෂාව, නිදහස සහ අයිතිවාසිකම් දීම ඔහුගේ විනාශයටම හේතු වන්නේය. එසේම පිරිමින් කරන සෑම ක්‍රියාවක්ම කාන්තාවන්ටද කළ නොහැක. දේහ ලක්ෂණයන්ගෙන් හා ශාරීරික අංගෝපාංගයන්ගෙන් තමන් පිරිමින්ට වඩා වෙනස් නිසාය. ඉස්ලාමයේ කාන්තාවන්ට සීමිත නිදහස දී ඇත්තේ ද එබැවින්ය.

ඉස්ලාම් දහම කාන්තාවන්ගේ ශක්තියට හා හැකියාවන්ට අනුකූලව අවශ්‍ය සෑම නිදහසක් මෙන්ම අයිතීන්ද ලබා දී ඇත. ඔවුන්ට ඉසිළිය හැකි ප්‍රමාණයට ඩැඩි බරක් ඔවුන් මත පටවා නැත.

ඉස්ලාමයේ අධ්‍යාපනය සඳහා සමාන අයිතිවාසිකම් ඇත. අධ්‍යාපනයක් ලබා සිය හැකියාවන්  දියුණුකර ගැනීමේ නිදහස හා අයිතිවාසිකම් පිරිමින්ට මෙන්ම ස්ත්‍රීන්ටද ඉස්ලාමය ප්‍රදානය කර ඇත. ගැහැණු පිරිමි දෙපාර්ශමයම අධ්‍යාපනය ලබා ගැනීම අනිවාර්ය බව නබි මුහම්මද් (සල්) තුමා පවසා ඇත.

තම සහකරු තෝරා ගැනීමට ද අයිතිවාසිකම් ඇත. විවාහය යනු පාරිශුද්ධ වු ගිවිසුමක් බව ඉස්ලාම පවසයි. ඉස්ලාමයේ තම ජීවන සහකරු තෝරාගැනීමට කාන්තාවට



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පිරිමින්ට මෙන් සමාන අයිතිය ලබා දී තිබේ. ස්ත්‍රියකගේ කැමැත්ත ඇතිව කරන විවාහය ඉස්ලාමයේ ඉහළින් පිළිගනී. මව, පියා, සහෝදර, පුත්‍ර හා ස්වාමිපුරුෂයාගේ අභාවයෙන් පසු එම දේපළ වල අයිතිය ලබා ගැනීමේ මඟ ඉස්ලාමයේ ස්ත්‍රීන්ට පෙන්වා දී ඇත. එසේම කාන්තාවන් හා ගැහැණු ළමයින් ආශිර්වාදයක් සේ සළකන එකම දහම ඉස්ලාමය. ( කාන්තාවන් හා ගැහැණු ළමයින්ගේ වටිනාකම විදහාපාන නබි වදන් කිහිපයක් )

වරක් පුද්ගලයකු නබිතුමාගෙන් මිනිසුන් ගැන වැදගත් ගෞරවය ලැබිය යුතු පුද්ගලයා කවුරුන්ද, යන්න විමසනු ලැබීය, ඔහු පැවසුවා ඔබගෙ මව" නැවතත් දෙවරක් එලෙස අසන්නට විය, එවිටද එම පිළිතුරම ලැබිය, හතර වැනි වතාවටත් අසන්නට විය. එවිට ඔබගේ පියා යනුවෙන් පැවසීය.

කවුරුන් හෝ පුද්ගලයෙකුට අල්ලාහු තආලා ගැහැණු දරුවන් දෙදෙනෙකු ලබා දී තිබේ නම් ඔවුන්ව හොඳින් බලාගත්තේ නම් ඔහු ස්වර්ගයට යෑමට මේ දෙදෙනා හේතුවක් වේ".

- මුහම්මද් නබිසල්තුමා -

ඕනෑම අවස්ථාවක ඔබ පොලෙන් යමක් නිවසට අරන් යන්නේ නම්, මුලින්ම ගැහැණු දරුවාට තෑගි කරන්න, පසුව පිරිමි ළමයාට ලබා දෙන්න".

- මුහම්මද් නබිසල්තුමා -

අපගේ සමාජය තුළ කාන්තාවන් වෙන්කර පිරිමින් මෙන් නිදහසේ සැරිසරන්න ඉඩ නොදී, ෆර්ද (හිජාබ්) නැමැති ලෝගුව තුළ වසා කාන්තාවන්ගේ නිදහස ඉස්ලාමය පැහැරගෙන ඇතැයි ඉස්ලාමය වෙත චෝදනා කරති. මෙය නිවැරදි ද? සත්‍ය වශයෙන්ම කාන්තාවන් මෙම ෆර්දව ඇදීම ඔවුන්ගේ නිදහස පැහැරගැනීමක් නොවේ.

ෆර්ද යන්නෙහි අරාබි වචනය හිජාබ් යන්නය. යම් දෙයකින් වසාගන්නේද එයට හිජාබ් යනුවෙන් හැඳින්වෙයි. කාන්තාවන් ඇඟ පසඟ වැසෙන අන්දමේ ඇඳුමකින් තමන්ව වසාගත යුතු බව ඉස්ලාමය නියෝග කර ඇත. ඕනෑම අවස්ථාවක යම් දෙයක් වසා තබන්නේ නම් එය සුරක්ෂිතව තිබෙන්නේය. යම් දෙයක් ආරක්ෂාකර, එහි නිකැළැල් බව රැකගනු ලබන්නේද එම භාණ්ඩය හෝ (වස්තුව) උසස් දෙයක් ලෙස ජනයා පිළිගන්නේය. මේ ආකාරයෙන්ම කාන්තාවන්ගේ නිකැළැල්භාවය හා උසස්භාවය රැකගැනීමේ උත්තරීතර අරමුණින් ඉස්ලාමය කාන්තාවන්ට තමන්ව ආවරණය කරගන්නා ලෙස නියම කර ඇත.

කාන්තාව වනාහි මිල කළ නොහැකි සම්පතක් වූ ගොවි බිමත්, ඒ සුන්දර වූ ගොවිබිම විසින් එම බීජ පැළ කරවා එම සශ්‍රීක වගාවන්ගේ අස්වැන්න ලොවට ලබා දෙයි. මෙලොව විද්‍යාඥයින් තාක්ෂණ ඉංජිනේරුවන්, දක්ෂ පාලකයින් බිහි කිරීම සඳහා තම ලේ කිරි කර පොවා ජාතියට ලබා දුන්නේ එම උදර මාතාවන්ය. මේ ලෝකය මෙතෙක් දුටු තවදුරටත් දකින්නට ලැබෙන සියලු ආශ්චර්යයන්ට හා දියුණුවේ ප්‍රධාන කොටස්කාරියන් වන්නේ කාන්තාවන්ය. කාන්තාවන්ගේ හැකියාවන් හා ස්වභාවය අනුව ඔවුන්ගේ වැදගත්කම අගය කරන ඉස්ලාමය ඔවුන්ගේ හැකියාවන්ට අදාලව උසස් තත්වයක් ලබා දී ඇත. කාන්තාවන් වූ කලී සඳ ආරක්ෂාකර ගරු කළ යුත්තකි.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாச்சிமார் கோயிலடி தட்டார் சமூகத்தின் வரலாற்றுப் பின்னணி

சப்னா இக்பால்
நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
இலங்கை.

யாழ்ப்பாண சமூகத்தினரிடையே அந்தஸ்து, பொருளாதாரம் மற்றும் அதிகாரத்தை வெளிக்காட்டும் வகையில் ஆடை அணிகலன்கள், அலங்கார முறைகள் என்பன கொண்டுவரப்பட்டன. ஆபரணங்கள் ஊடாக அச்சமூகத்தின் பண்பாட்டின் பரிமாணங்களும் வெளிக்காட்டப்பட்டன. யாழ்ப்பாண சமூகத்தில் தட்டார் என்ற சாதிக்குழுவினர் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் தமது குடியிருப்புக்களை அமைத்து நகைத் தொழிலில் டுபட்டனர். போன்ற தகவல்களும் யாழ்ப்பாணத்தில் நகைகள் உற்பத்தி சார்ந்த முதன்மையினை வலியுறுத்தி நிற்கின்றன. கோயில்களினை அடிப்படையாகக் கொண்டும், சமயரீதியான சடங்குகள், நம்பிக்கைகள் என்பவற்றினால் யாழ்ப்பாணத்தவரிடம் நகைகள் பற்றிய மரபு என்பது தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்தது. சாதியின் அடிப்படையில் தொழிலாளர்கள் தீர்மானிக்கப்பட, உயர் சாதியினருக்கு சமமாகத் தம்மைக் கருதினர் பொற்றொழிலில் டுபட்டோர். இவர்கள் சாதி நிலையில் வேறுபட்டாலும் பொருளாதார நிலையில் அதிக வருவாயுடன் கோயில் சார்ந்தும் உயர் சாதியினருக்கான நகைகளை வடிவமைத்தல் சார்ந்தும் அந்தஸ்து நிலையில் உயர்வாகக் கொள்ளப்பட்டனர்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் அணிகலன்கள் பிரதேச மற்றும் இனத்துவத்தின் வெளிப்பாடாகக் காணப்பட்டன. அதாவது அணியும் அணிகலன்களைக் கொண்டு தொழில், பிரதேசம், சாதியமைப்பு, ழல் அந்தஸ்த்து போன்றவற்றினை அடையாளம் கண்டு கொள்ளக் கூடியதாகவும் அமைந்தன. குறிப்பாகக் கூறின் வடமராட்சி வல்வெட்டித்துறை மக்கள் அணியும் அணிகலன்களின் வடிவமைப்பில் வேறு பிராந்தியங்களில் காணமுடியாது, இணுவில் இசைவேளாளர் அணியும் அணிகலன்கள் தனித்துவமானவை, தம்பசெட்டி வியாபாரி மூலை மக்கள் அணியும் அணிகலன்கள் என்றவாறு யாழ்ப்பாணச் சமூகத்தவரிடையே மொழி, மதம், இனத்துவம், செல்வம், அதிகாரம், மற்றும் பிராந்திய ரீதியான பண்பாட்டுக் குறிகாட்டிகளாக அணிகலன்கள் காணப்பட்டமையினை வரலாற்று தகவல்கள் மூலம் அறியலாம்.

யாழ்ப்பாணச் சாதியமைப்பினை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பங்களில் சமூக ரீதியான அந்தஸ்து என்பதும் நடைமுறைகளும் பேணப்பட்டு வந்தன. 169 இல் "தொமஸ்வன்ங்" என்ற ஒல்லாந்தர் எழுதிய அறிக்கையில் சாதிப்பிரிவினருக்கான இராஜகாரிய முறைகளினைக் குறிப்பிட்டிருந்தார். இதில் சமய சடங்கு என்ற ரீதியில் ஒவ்வொரு சாதியினருக்கும் கோயில்களில் வணங்க வேண்டிய தெய்வங்கள் கூட வேறுபட்டிருந்தன. உதாரணமாக கோவியர் - ஜயனார், நளவர் - கூட்டத்தார், பள்ளர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன்மார், பறையர் - வல்லிக்கன், வண்ணார் - பெரியதம்பிரான், அம்பட்டர் - வைரவர், மடப்பள்ளி பிள்ளையார், தச்சர், தட்டார், கொல்லர், கன்னார், கம்மாளர், - காளி, முதலி, கரையார், முக்குவர், சிவியர் - பத்திரகாளி என்ற வகையில் வெவ்வேறு சடங்ககளும், நடைமுறைகளும் காணப்பட்டன. 19 0களைத் தொடர்ந்து யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி ரீதியான தடைகளுக்கு எதிரான போராட்டங்கள் வெளிக்கிளம்பின. இக்காலப்பகுதியில் சமூக நடைமுறைகளும் மாற்றங்கண்டன. 19 1 டொனமூர் யாப்பின் கீழ் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட சாதி அடிப்படையான நடைமுறைகள் கேள்விக்குள்ளாகின. இதன் தொடர்ச்சியில் 194 இல் வட இலங்கை சிறுபாண்மை தமிழர் மகாசபை, 195 இல் சமூகக் குறைபாடுகள் சட்டசபை, என்பன யாழ்ப்பாண சமூகத்தின் பல்வேறு மாற்றங்களுக்கு காரணமாகின. இதனூடு தட்டார் சமூகத்தவரும் தமக்கான அந்தஸ்து ரீதியான முக்கியத்துவத்தை வெவ்வெறு தளங்களில் வெளிப்படுத்தினர்.

இவ்வகையே யாழ்ப்பாணத்தின் வண்ணார்ப்பண்ணை பிராந்தியத்திலே நாச்சிமார் கோயிலினை மையப்படுத்தி ஆரம்பகாலம் தொட்டே தட்டார்கள் தமக்கான குடியேற்றத்தை அமைத்து இப்பகுதியில் வாழ்ந்ததாகவும் அவர்களுக்கிடையேயான பரம்பரை ரீதியான தொடர்ச்சி இன்றும் பேணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் இவர்கள் தமது சாதியமைப்புடனும் தொழில் ரீதியான செயற்பாடுகளுடனும் வாழ்ந்ததாக ஆரியச்சக்கரவர்த்தி கால குறிப்புக்களிலும் யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலின் எழுத்துக்களிலும் காணப்படுகின்றன. இதன் ஒரு பகுதியினரே நாச்சிமார் கோயிலடியினை மையப்படுத்தி நகர்ந்ததாகவும் அவர்களுக்கான அடையாளமாக நாச்சிமார் கோயிலை நிர்வகித்து வந்ததாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு நாச்சிமார் கோயிலடி தட்டார் சமூகத்திற்கான தனித்துவம் என்பது முக்கியத்துவம் பெற்றது.

இக்குழுவினர் நாச்சிமார் கோயிலை மையப்படுத்தி மூன்று குடும்பங்களின் தொடர்ச்சியாக இன்று வரை தொழிலை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது. அத்துடன் இன்று பத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் முழுமையாக இவ் நகை உற்பத்தியில் பாரம்பரிய முறைமைகளுடன் இயங்கி வருவதாகவும் கூறப்படுகின்றமை யைக் காணலாம். ஆரம்பங்களில் நல்லூர், சங்கானை கொக்குவில் மேற்கு, வண்ணார்ப்பண்ணை போன்ற இடங்களில் இவர்களது பரம்பரையினர் வாழ்ந்ததாகவும் அவர்கள் தமக்கான தனித்துவ அடையாளத்தை நிலைநாட்ட நான்கு தலைமுறையினருக்கும் முன்பே இப்பகுதியில் குடியமர்ந்ததாகவும் கூறப்படுகின்றது. ஆரம்பங்களில் இப்பகுதியினராலேயே யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் நகைகள் செய்து கொடுக்கப்பட்டதுடன் காலணிய ஆட்சியாளர்களுக்குமான உற்பத்திகளும் வடிவமைப்புக்களும் இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது. இப்பகுதியினர் பட்டறைகளை அடிப்படையாகக் கொண்ட இயந்திரங்களின்றி கைகளால் தமது உற்பத்திகளை மேற்கொண்டு வந்தனர்.

யாழ்ப்பாணத்தின் மாநகர எல்லைக்குள் அமைந்த இக்கோயில் கி.பி1880[ஆம்] ஆண்டு, விஸ்வகுல மேஸ்திரியாகிய கந்தர் என்பவரால் கல்லினால் கட்டப்பட்டது. என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கக் குறிப்பேடொன்றிலே காணப்படுகின்றது. இக்குறிப்பேடு கி.பி1898ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரச அதிபரினால், "யாழ்ப்பாணத்திலுள்ள சைவக் கோயில்கள் கிறிஸ்தவத் தேவாலயங்களைப் பற்றித் தயாரிக்கப்பட்டதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே, இக்கோயில் "நாச்சிமார் கோயில்" என அழைக்கப்பட்டது. ஒவ்வொரு கோயிலும் எவ்வாறு உற்பத்தியானது என்பதைப் பற்றிய குறிப்புக்களைத் தலபுராணங்கள் மூலமாகவும், கர்ணபரம்பரைக் கதைகள் மூலமாகவும், வரலாறு மூலமாகவும் அறியக் கூடியதாயுள்ளது. இதனடிப்படையே சிறு கோயிலொன்றைக் கல்லினால் கட்டி, அங்கு மாரியம்மனை வைத்து வழிபாடு செய்து வந்தனர். ஆலயச் சுற்றாடலிலே வாழ்ந்த பொற்கொல்லர், காமாட்சியைக் குலதெய்வமாக வணங்கும் வழக்கமுடையவராகக் காணப்பட்டனர். கல்லால் கட்டப்பட்ட கோயில் படிப்படியாக வளர்ச்சி பெற்று மூலஸ்தானமும், அர்த்தமண்டபமும் புதிதாக அமைக்கப்பட்ட போது, மூலஸ்தானத்தில் காமாட்சி விக்கிரகமும் ஸ்தாபிக்கப்பட்டது.

இதன் பின்னர் கி.பி 188 ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டது. ஆலயம் விருத்தியடைய இதனைச் சரிவர நிர்வகிக்கும் பொருட்டு கி.பி189 ஆம் ஆண்டில் ஆலய பரிபாலனத்திற்கென அமைக்கப்பட்ட வரைக் கொண்ட பஞ்சாயத்தும், நான்கு பேரைக் கொண்ட நிர்வாகசபையும் நிறுவப்பட்டது. இப்பகுதியில் வாழ்ந்த தட்டார்கள் ஆரம்பங்களில் தமது வீட்டினுள்ளே விஸ்வகர்க பிரம்மாவுக்கு கோயிலமைத்தும் வழிபட்டு வந்தனர். இவர்களே இப்பகுதியில் வாழ்ந்த தட்டார் சமூகத்தினராகக் காணப்பட்டனர். குறிப்பாக 1950 கருணைக் கழகம், 1951 நாச்சிமார் கோயில் தபாற்கந்தோர், 1958 வண்ணார்பண்ணை கந்தர் கானசபை, 1960 அம்பாள் கூட்டுப் பிரார்த்தனை சபை, தட்டார் பட்டறை, நிர்வாகசபை, 19 8 விஸ்வகர்மா சபை, 1989 தொண்டர் சபை, எனத் தமக்கான அடையாளத்தையும் நிலைநிறுத்திக் கொண்டது. இவ்வாறு தட்டார் சமூக நடவடிக்கைகளுடன் இணைந்த தட்டார் சமூகத்தவருக்கான கோயிலாக நாச்சிமார் கோயில் அடையாளம் பெற்றது. ஆரம்பங்களில் தமது விஸ்வப்பிரம்மா குல அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையே விஸ்வபிரம்ம ஓவியம் தீட்டப்பட்டு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. இவைகளுடன் இணைந்து குலத்தொழிலையும் மேற்கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக தமக்கான இருப்பிடத்தினையும் அந்தஸ்தினையும் மேலும் வலுப்படுத்தும் பொருட்டு பரமானந்தம் என்பவரால் இந்தியாவிலிருந்து பஞ்ச உலோகத்தினால் செய்யப்பட்ட விஸ்வகர்ம விக்கிரகமும் 006ஆம் ஆண்டு இக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இக்கோயில் முழுமையாக விஸ்வகர்ம பரம்பரையினருக்கான அடையாளமாக மொழியப்பட்டன. இதனூடாக இக்கோயில் விஸ்வகுல தட்டார் களுக்கான தனித்துவ ஆலயமாகவும் அடையாளமாகவும் வெளிப்படுத்தப்பட்டது.

இவ்வாறாக நாச்சிமார் கோயிலை மையப்படுத்தி தட்டார் சமூகத்தவர் தமது உற்பத்தி நடவடிக்கைகளையும் சமய, சடங்குசார் விடயங்களையும் வெளிப்படுத்தினர். இக்கோயில் நிர்வாகம் சார்ந்த செயற்பாடுகளும் அவர்களினாலேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்கப்பட்டன. இவர்களது சமூகக் குழு தமக்கான கைப்பட்டறைகளை அமைத்து அதனுள் பரம்பரை ரீதியாக இணைந்து தமது நகைத் தொழிலை மேற்கொண்டு வந்தனர். இப்பட்டறைகள் அவர்களது வீடுகளுடன் இணைந்ததாகக் காணப்பட்டன. இவ்வாறாக குடியிருப்பு சார்ந்து தமது அடையாளத்தை இப்பிராந்தியத்தில் தட்டார் சமூகத்தினர் வலுவாக நிலைநிறுத்தினர்.

மேலும் சடங்குகள் என்ற வகையில் இவர்களிடையே கலப்புத்திருமணம் என்பது இல்லை. ஆரம்பங்களில் விஸ்வகர்ம குல வழியில் பிறந்தோரை மட்டுமே திருமணம் செய்து கொண்டனர். அதிலும் தட்டார் சமூகத்தை சார்ந்தோரையே திருமணம் செய்தும் கொண்டனர். இவை ஆரம்பங்களில் இவர்களிடையே வலுவானதாகப் பேணப்படினும் தற்போது ஏனைய விஸ்வகுலத்தவர் களையும் திருமணம் செய்து கொள்ளல் என்பது இவர்களிடையே காணப்படுகின்றது. இவர்களிடம் யாழ்ப்பாணத்தின் உள்ளூர் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. கன்னார்திட்டி தட்டார்களிடையே இரு தாலி கட்டும் மரபு காணப்பட்டது. இவர்களிடம். இது காணப்படவில்லை. தங்கத்தாலான தாலியினையே இவர்கள் அணிவித்ததுடன் பாரம்பரிய முறைகளிளே திருமண நிகழ்வுகளையும் நடாத்தி வந்தனர். இவர்களுக்கு சமூகவியல் அடிப்படையிலும் செல்வாக்கு இருந்தது. சமூக அடுக்கமைவின் மேல் நிலையில் உள்ள பிராமணர்களுக்கு உள்ள சில சடங்கு முறைகள் இவர்களுக்கும் காணப்பட்டன. உதாரணமாக பூனூல் போடுதல், அதிகார சமநிலையைப் பேணுதல்

விக்கிரகங்களை தொடமுடிதல், சடங்குகளில் முதன்மை பெறல் போன்றவற்றைக் கூறலாம். மேலும் பொன்னூருக்குதல் என்ற ரீதியில் இவர்கள் அந்தஸ்து நிலையில் முக்கியம் பெற்றனர். இச்சடங்கு முறையானது வேறு நபர்களால் மேற்கொள்ளப்பட இயலாத விடயமாகவும் பொற்கொல்லருக்கே உரிய சடங்காகவும் காணப்பட்டது. இதனால் இவர்களுக்கு கோயில்களில் உயர் அந்தஸ்து வழங்கப்பட்டதுடன் மதிப்பும் அளிக்கப்பட்டன. இவ்வாறான சமூக அடுக்கமைவுடன் நாச்சிமார் கோயில் தட்டார்களது உற்பத்திச் செயற்பாடுகள் இன்றும் இடம் பெறுவதைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவம்

எஸ்.எப். சஸ்னா
இரண்டாம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

அன்று தொட்டு இன்று வரை எந்த ஒரு மனிதனாலும் தனித்து வாழ முடியாது என்பது வெளிப்படை உண்மையாகும். அந்த வகையில் மனிதர்கள் தங்களுக்குள்ளேயே ஒன்று சேர்ந்து சமூகம் எனும் கட்டமைப்பினுள் சில வழிகாட்டல்களுக்கு மத்தியில் நெறிமுறையான வாழ்வை வாழ்கிறார்கள். இதற்கமைய "மனிதன் ஒரு சமூகப் பிராணி" என்று கூறுவதில் யமில்லை. ஒரு சமூகத்தில் எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. அதாவது, ஒரே மாதிரியான எண்ணம் கொண்டவர்கள் அல்ல ஒரே மாதிரியான ஆற்றல்களை கொண்டவர்கள் அல்ல ஒரே மாதிரியான அனுபவங்களைக் கொண்ட-வர்கள் அல்ல. குறிப்பிட்ட விடயத்தில் சிலர் குறைவான அனுபவங்களையும், சிலர் அதிகமான அனுபவங்களையும், சிலர் அனுபவங்களே அற்ற நிலையிலும் காணப்படு கின்றனர். எனவே அனுபவசாலிகளால் அனுபவங்கள் குறைவாக உள்ளவர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. இதுவே தலைமைத்துவத்திற்கு அடிப்படையாக அமைகிறது. இவ்வாறு வழிகாட்டல்களை வழங்கக்கூடிய ஆளுமைகளைக் கொண்ட-வர்கள் தலைவர்கள் (தலைவன்/தலைவி) என அழைக்கப்படுகின்றனர்.

அதனடிப்படையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய குறிப்பிட்ட விடயங்களை ஆராய்ந்து, நிர்ணயித்து, ஒழுங்குபடுத்தி அவற்றை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றுவதற்கு தேவையான திட்டங்களை தீட்டி, அத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தம்மோடுள்ள பலரையும் ஆர்வத்துடன் பங்கு பற்றச் செய்வதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு அவர்களை ஒத்துழைக்கச் செய்வதன் மூலம் குறித்த செயற்பாடுகளின் போது ஏற்படக் கூடிய முரண்பாடுகள், சிக்கல்களுக்கு தீர்வுகளைப் பெறும் வழிகளைக் காட்டிக் கொடுக்கக் கூடிய வகையில் ஆற்றல்களைக் கொண்டவரே தலைவராக ஏற்றுக்கொள்ளப்படுவார்.

இவ்வாறு ஏற்றக்கொள்ளப்பட்ட தலைவர் வற்புறுத்தல், வலுக்கட்டாயமில்லாத-வாறு இலகுவான வழிமுறைகளினூடாக மக்களை ஊக்குவிப்பதன் மூலமும், ஒரு திட்டமிடலின் ஊடாகவும் வழிநடாத்திச் செல்லும் செயன்முறையே தலைமைத்துவம் எனப்படுகிறது. இத்தலைமைத்துவச் செயன்முறையானது நீண்ட கால குறிக்கோளுடைய தாகவோ, குறுங்கால குறிக்கோளுடையதாகவோ காணப்படலாம். மேலும் தூரநோக்கு ஒன்றை உருவாக்கி, அதனை அடைவதற்கான செயல் நுணுக்கங்களை விரிவுபடுத்தி, அங்கத்தவரின் ஒத்துழைப்பைத் திரட்டி அத்தூர நோக்கை அடைந்து கொள்வதற்கு ஊக்கும் செயற்பாட்டை செயற்றிறன்மிக்க தலைமைத்துவம் எனலாம். செயற்றிறன்மிக்க தலைமைத்துவத்தை ஆள்பவர், செயற்றிறன்மிக்க தலைவராவார். இச்செயற்றிறன்மிக்க தலைவரொருவர்,

- எதிர்காலம் பற்றிய தூர இலக்கை உருவாக்குவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அத்தூர இலக்கை நோக்கி பயணிப்பதற்காக அறிவுபூர்வமான நுணுக்கங்களைக் கையாள்வார்.
- அவ்வாறு இயங்குவதற்குத் தேவையான குழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் திரட்டுவார்.
- அவர்களுக்கான ஊக்குவிப்புகளையும் முறையாக வழங்குவார்.

19 9 ஆம் ஆண்டு கேட் லிவின் எனும் உளவியலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் பாடசாலை மாணவர்களை ஆய்வுக்குட்படுத்தியதன் விளைவாக வகையான தலைமைத்துவங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

**1. ஏகாதிபத்திய தலைமைத்துவம்**

இவ்வகைத் தலைமைத்துவத்தில், தலைவர்கள் ஏகாதிபத்தியத் தன்மை கொண்டவர்களாக காணப்படுவர். அவர்கள் என்ன வேலை, எவ்வாறு, யாரால், எப்போது நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தெளிவைக் கொண்டிருப்பார்கள். தலைவருக்கும் அங்கத்தவருக்கும் இடையில் வேறுபாடு காணப்படும். இத்தகைய தலைவர்கள் அங்கத்தவர்களின் கருத்துக்களைச் செவிமடுக்காது சுயமாக தீர்மானங்களை எடுப்பவராகக் காணப்படுவார். இவ்வாறான தீர்மானங்கள் புத்தாக்கம் குறைந்ததாகவே காணப்படும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

**2. பங்கு கொள்ளும் அல்லது ஜனநாயகவாத தலைமைத்துவம்**

இவ்வகைத் தலைமத்துவத்தில் ஜனநாயகவாத தலைவர்கள், அங்கத்தவர்களை ஊக்குவித்து பயிற்றுவிப்பதன் மூலம் வழிகாட்டல்களை வழங்குவது மாத்திரமின்றி தானும் குழுவில் ஒருவராக பங்கு பற்றி ஏனையோருடைய கருத்துகளுக்கு மதிப்பளித்து தீர்மானம் பெறுவார். இங்கு தலைவர் சுயமாக இயங்குவதைத் தவிர்ப்பார். இருப்பினும் இறுதி முடிவை தன் கைவசம் கொண்டிருப்பார். கேட் லிவின் குழுவின் ஆய்வின் பிரகாரம் முதலாவது வகைக் குழு அங்கத்தவரை விட இவ் வகைக் குழு அங்கத்தவர்கள் செயற்திறன் குறைந்தவர்கள் என இனங்காணப்படினும், இரண்டாவது வகைக் குழுவின் தீர்மானமே உயர் ரகமாகக் காணப்படும் எனவும் தெரிவித்தனர்.

**3. பகிர்ந்தளிக்கும் தலைமைத்துவம்**

இவ்வகைத் தலைமத்துவத்தில் தலைவர்கள், குழு அங்கத்தவர்களுக்கு மிகக் குறைந்தளவே வழிகாட்டல்களையும், பயிற்சிகளையும் வழங்குவர். சில வேளைகளில் வழங்காதும் விடுவர். இருப்பினும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் முழுவதையும் அவர்களிடம் ஒப்படைத்து விடுவர். அதிஷ்டவசமாக அங்கத்தவர்கள் துறைசார் திறனுள்ளவராக காணப்படின் இவ்வகைத்தலைமைத்துவம் தரமானதாகக் காணப்படும். எனினும் ஊக்கம்,சுறுசுறுப்பு குறைந்ததாகவே காணப்படும்.

இம்மூன்று வகையும் தலைமைத்துவங்களின் வகைகளாக இனங்காணப்பட்ட போதிலும் இரண்டாம் வகைத் தலைமைத்துவம் மிகவும் சிறப்பானது. எனினும் ஏனைய இரண்டு வகையான தலைமைத்துவங்களும் ஒரு சில சந்தர்ப்பங்களில் பயனளிக்கத்தக்கவையாகும் என்பது ஆய்வின் முடிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவர் ஆலோசனை குழு, நலன்புரி மன்றங்கள், கழகங்கள், போன்ற சமூக நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களிடம் கூட "பாடசாலை மாணவர்கள் எத்தகைய ஆற்றல்களைப் பெற்றிருக்க வேண்டும்" என்ற வினா எழுப்பப்படும் போது தலைமைத்துவத் திறன்களும், பண்புகளும் என்பதுவே பொதுவான விடையாகக் கிடைக்கப் பெறுகின்றது. ஏனெனில் உண்மையில் இன்றைய மாணவர்கள்தான் நாளை நாம் முன்னோக்கிக் கொண்டிருக்கும் எதிர்காலத்தின் தலைவர்களாக இருக்கின்றனர். அவர்களால்தான் நாளைய சமுதாயத்தை வினைதிறனான முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல முடியும். மேலும் தற்போது வேலைவாய்ப்புகளில் கூட அதிகமான தொழில் நிறுவனங்களில் ஊழியர்களைத் தெரிவு செய்யும் போதும் இத்தகைய தலைமைத்துவத் திறன்களைக் கொண்ட பட்டதாரிகளையே எதிர்பார்க்கின்றன. இன்று தலைமைத்துவத்துக்கான கேள்வி அதிகமாகக் காணப்படுகின்றமையாலேயே ஒவ்வொரு பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தலைமைத்துவப் பண்புகளைப் போதிப்பது அவசியமாக அமைகின்றது. இதனாலேயே தற்போது நடைமுறையில் இல்லாத ஒரு விடயமாகக் காணப்படினும், கடந்த சில வருடங்களாக பல்கலைக்கழக நுழைவை எதிர் நோக்கியிருக்கும் மாணவர்களுக்கு (Leadership training camp) முகாம்கள் தலைமைத்துவப் பயிற்சி அமைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டமை நாம் அனைவரும் அறிந்த விடயமே.

குறித்த ஒரு சமூகம் கல்வி கற்ற ஒரு மேதைக்குப் பின்னால் செல்வதை விட, கல்வியோடு தலைமைத்துவப் பண்புகளையும், திறன்களையும் கொண்ட ஒருவருக்குப் பின்னால் செல்வதையே விரும்புகிறது.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து, தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை போன்ற பழமொழிகளுக்கேற்ப பாடசாலை காலங்களிலேயே தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கான பல்வேறு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியுள்ளமையைக் காணலாம். விளையாட்டுப் போட்டிகள், மாணவர் மன்றங்கள், வருடப் பூர்த்தி விழாக்கள், கலை நிகழ்ச்சிகள், சாரணர் முகாம்கள், சுற்றுலாக்கள், இசை வாத்தியக் குழுக்கள், கழகங்கள் போன்ற சந்தர்ப்பங்கள் இதற்கு உதாரணங்களாகும்.

இவை தவிர மேலும் பல சந்தர்ப்பங்களிலும் தலைமைத்துவத்தின் தேவைப்பாடுகள் பல கோணங்களில் பிரயோகிக்கப்படுகின்றன. அதாவது, குடும்பம் எனும் போது தந்தை தலைவராகவும், அதற்குரிய தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவராகவும் காணப்படுவார். இவ்வாறு பாடசாலையில் அதிபர், பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர், வகுப்பறையில் வகுப்புத்தலைவர், நிறுவனங்களில் முகாமையாளர் போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களைக் கூறலாம். ஊதாரணமாக பாடசாலையின் அதிபர் பாடசாலைக்கு தலைவராகக் காணப்படும் அதே வேளை வீட்டில் குடும்பத் தலைவராகவும் காணப்படுகிறார். எனவே அவர் இரு வெவ்வேறு வகையான தலைமைத்துவங்களுக்கு ஆளாக்கப்படுகிறார். மேலும் அவருக்கு இவ்விரு சந்தர்ப்பங்களிலும் ஒரு சில தனியான தலைமைத்துவப் பண்புகளைப் பிரயோகிக்கும் நிலையும் ஏற்படுகிறது.

எனவே, தலைமைத்துவச் செயற்பாட்டில் பொதுவாக தலைவர் ஒருவர் அதற்குரிய தனிச்சிறப்பம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தனக்கு பொறுப்பு சாட்டப்பட்டுள்ள பணி தொடர்பான தெளிவான அறிவைக்-கொண்டிருத்தல்.
- தூரநோக்கான, புத்தாக்கமுடைய, உணர்வு பூர்வமான சிந்தனைகளைக் கொண்டிருத்தல்.
- மக்களுடன் சுமுகமாக தொடர்பாடும் ஆற்றலைக் கொண்டிருத்தல். மக்களை ஒரு திசையை நோக்கி நகர்த்தும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.
- தூண்டுதல்களை வழங்கி செயற்பட வைத்தல்.
- பொறுப்புகளை அடுத்தவர்களிடம் பகிர்ந்து ஒப்படைத்தல்.
- அங்கத்தவர்களைப் பயிற்றுவித்தல்.
- திட்டமிடல்.
- தீர்மானமெடுக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல். நெகிழ்வுத் தன்மையுடன் செயற்படல். போன்றவற்றைக் கூறலாம்.

எனவே ஒவ்வொருவரும் வெவ்வேறான ஆற்றல்களையும், திறன்களையும் கொண்டிருக்கிறார்கள் என்ற வகையில் அதற்கேற்றவாறான செயற்பாடுகளை இனங்-கண்டு பல்வேறு வகையான தலைமைத்துவப் பண்புகளையும், திறன்களையும் தேடி - யறிந்து சந்தர்ப்பங்களைத் தவற விடாது சமூகத்தின் சிறந்த தலைவர்களாக செயற்பட முயற்சிப்போம்.

## நபி நாயகம்

**என்.எம்.பி. ரிபானா**
முதலாம் வருடம்
அரசியல் மற்றும் வரலாறு

விண்ணுலகும் மண்ணுலகும்
போற்றும் நபியம்மா
அன்பிற்கும் பண்பிற்கும்
அர்த்தம் அவரம்மா!

அண்ணல் நபி நாயகம்
அன்பு நிறைந்த தாயகம்
அவர்போல் இங்கு யார் கூறம்மா?

கண்ணின் மணியானவர்
கருணை நபியானவர்
கண்கள் தேடும் ஓர் உயிரானவர்

தீனின் விதையானவர்
தீமைக்கெதிரானவர்
தினம் கூறும் நல் பெயரானவர்

நெஞ்சின் ஒளியாக
உயிர்வாழும் நேசர்
விஞ்சும் புகழோடு
மறைந்திட்ட தூதர்

உதிரம் உறைந்தாலுமே
உலகம் அழிந்தாலுமே
அவர் புகழ் என்றும் நிலையாகுமே!

உண்மை வடிவானவராம்
உள்ளம் நிறைவானவராம்
உலகம் போற்றும் உயர்வானவராம்
ஏக இறைவனின் இறுதித்தூதரானவர்
எங்கள் நபி நாதர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார்?

எம்.எச.எம். முஹப்பில்
இரண்டாம் வருடம்
ஊளவியல்

இறைவன் கூறினான் பிரதி என்று
வேதம் கூறியது மனிதன் என்று
அரசன் கூறினான் அடிமை என்று
நான் எதைக் கூற என் பெயரை அல்லவே!

என்னை தேர்ந்து எடுத்தவனிடம்
என் தேவையைக் கேட்க
நான் யாரென்பேன் அவனிடம்
அதன் பதிலை கேட்க.

உண்மைகளை ஏற்றும்
உணராமல் இருக்க
உள்ளம் இருள் கொண்டதே
தனிமையின் இரகசியத்தால்.

உள் ஒன்றும் வெளி ஒன்றுமாய்
மதி மயங்கி நிற்கும் மனிதனாய்
பாவம் செய்யும் கரமோடு
கூலிக்காய் ஏந்துகின்றேன்.

எல்லாம் இரண்டாய் உள்ளதே
ஒன்றிற்கு மற்றையது துணையாய்
நன்மைக்குத் துணை ஏன் பாவம் என்பதே
அதற்கும் நன்மை என்று வைத்திருக்கலாமே.

பருவங்கள் நான் தாண்ட
ஒவ்வொன்றாயத் தெரிகிறேன்
கணவனாய் மனைவிக்குத்
தந்தையாய் மகனுக்கு தெரியவில்லை
நான் யாரென்று?

அழியாச் செல்வம் எதுவோ?
கல்வி என்று ஆசான் கூற
காதல் என்று கம்பன் கூற
கல்ஃப்(உள்ளம்) என்று நான் கூறினேன்,

இறைவா! உன்னிடம் தலை குனிய
காத்திருக்கிறேன்
எனது தீர்ப்புக்காய்
நீ தந்த தவணைகள் முடிந்தனவே
நீ தரும் தீர்ப்பைத் தெரியாமல்.

என்னுள் தோன்றும் கற்பனைகள் வேறாய்
என்னுள் தோன்றும் கனவுகள் வேறாய்
தேவையில்லை வெவ்வேறாய்
கற்பனையும் கனவும் நானாக இல்லையே!

விடை தெரியாத என் கேள்விக்குத்
தேடுகிறேன் ஒவ்வொரு புத்தகமாய்
தெரியவில்லை என்று அவையும் கூறிற்று
ஆயினும் தாய் கூறினாலே மகன் என்று

ஒரு அழுகைப் பார்க்கும் போது நான் இல்லையே
தொலைந்து போகின்றேன்
தொலை தூரமாய்
அத் தொலைந்த இடம் நான்தானோ!

என்னை உணர்ந்தது என் புலன்களே
நான் அல்லவே!
ஞாபகம் மறதி இரண்டும் எதிர்தானே
அவ் இரண்டும் நான் தானே!

மதிக்கும் தங்குமிடம் உண்டே
என்னை மதிக்கும் மனிதர்க்கு என்னில் இடம் உண்டே
எனக்கு எது? இடமோ!
அது என் இறைவனின் இடம்தானே!

நான் யாரென்பதை உணரவில்லை
உணர்ந்து கொண்டால் சொல்கிறேன்
நீங்கள் என்னை உணராத வரை
நான் என்னை உணர என் இறைவன் போதுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Multiple Intelligences

## (An inspirational reading)

**L.F. Zakiya**
Second Year
Translation Studies

Today's Children are the leaders of tomorrow, and it is obligatory upon us to bring them up as heroes who build up tomorrow's society. Every child born in the world is with different abilities and personalities. It is an obligation upon the parents and teachers to find their personalities and abilities in their childhood. "We can identify a growing seed in its early period" this was a statement of our ancient scholars. According to their claim, parents and teachers should guide their kids to identify themselves in their childhood. Those who realize who they are can choose the most appropriate field for them in future. Thus, it is our duty to build up their skills and mould their personalities that can carry their life journey.

If you realize who you are, then there will be no one in the world to make obstacles to your ideal paths. Behind the efforts are not failures, but they are the rewards for your efforts. When bird needs to reach an island it won't mind flying across the sea and though it doesn't have trees to rest it still flies towards it's destination despite the pain in wings. The same as with man. He should try his best using his talents to achieve his goals and dreams. The reason we are superior over animals and other beings is because we have given intelligences and the power to think.Thus, Howard Gardner has classified a number of different intelligence in his book, "The Frames Of Mind: The Theory of Multiple Intelligence", published in 1983. This type is based on different intelligence suitable for us, and how we can improve it and cultivate on it. First of all we should know what intelligence is?. We define it as knowledge and skills which suit us. More importantly, this is the main aspect of understanding. It is the intelligence we use when using knowledge and also when handling a situation of fear or difficulty. So we have to understand what our intelligences are in order to handle these in the best manner. If we are to investigate various intelligence

**1. Musical intelligence** (Music Smart)

These types of people will have the characteristics associated with music and rhythm. They will be comforted by music when they are worried. Making a song's rhythm is the easiest thing for them. And they can easily memorize the lyrics of a particular song. If they want to do a proper study, they will use the music or the lyrics. These people are very interested in music. Always they are trying to listen something related to music.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. Visual-spatial intelligence** (Picture Smart)

These kinds of people will be interested with visually related topics like watching movies. They have the ability to remember anything in the shape of pictures. They will find the map and direction accurately. They will keep the things that were taught to them in the way of story in their mind. This is their specialty.

**3. Verbal-linguistic intelligence** (Word Smart)

The particular characteristic of those who possess this intelligence will have a close relationship with language. Most of the time, they will spend their time in reading. They like to read many good and innovative books. They will use new words to describe any case. They can learn any language very easily. They can easily remember a subject by reading it repeatedly. The word walks in their speech are very different.

**4. Logical-mathematical intelligence** (Logic Smart)

Their basic characteristic is logical thinking. Anything that happened, they can explore how it happened? And why?. And they will do their work according to a plan. The beautiful and the perfect environment are the best for their studies. They will act on a time schedule for their studies. They will use more mathematical codes, (+, -, ×, ÷) when they are taking notes. Their lives will be very regular and on a proper order.

**5. Body-kinesthetic intelligence** (Body Smart)

The motion of the body is the basic character of these people. If they are sitting in one place, without knowing they will move their legs because they are more likely to use the body than the warming. They love to play games with the body. They are not only interested in the field of games bit also in the field of acting and dancing. Moreover, the classroom sessions do not apply to them. They will be hyper active. They will prefer group activities over activities done alone. These kinds of people prefer outdoor learning.

**6. Interpersonal intelligence** (People Smart)

These kinds will always prefer to be with a group of people. Their ability is to make people available to themselves. They will be more willing to work together. Interest in group activities will be preferable than individual activities. In a very short time, people would be impressed with the reaction of these types of people. They are more active. Learning alone is not appropriate for them. During learning, they prefer to learn as a group. Communication is their best power.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. Intrapersonal intelligence** (Self Smart)

Those who have more respect for themselves will be included in this category. They have complete knowledge of themselves. A person has this intelligence knows who he is?, what his feelings are? And what his weaknesses are?. They will know the root of the success. And they love loneliness. They work better alone than a group. Unlike all of them, they wish to be unique with some limitations. And the best way to learning is by being alone.

**8. Naturalistic intelligence** (Nature Smart)

They will be surprised with the nature. They are the ones who love nature as a nuclear arsenal. Their worst times are dispersed naturally. Their task is to examine the flowers, leaves and tress in the environment. Spend more time with nature. They will in the best way when they are with nature.

Thus we have many kinds of intelligences within us and are the creatures of god. All such intelligence can be found within a man. But some of the intelligences are high and some are fewer. There are many experimental methods to find our intelligence capability. We can use them to find our intelligence and try to develop ourselves. Each of us is different and unique in our own way. When we start to know ourselves and use our intelligence in the correct way we can achieve and do it.

**"Let the world say a thousand**
**But you are the judge for yourself.....**
**If your heart feels**
**That you are creative**
**Then you can produce**
**An innovative world....."**

References:-

1. https://en.m.wikipedia.org/wiki/Theory_of_multiple_intelligences
2. https://www.tecweb.org/styles/gardner.html
3. http://www.institute4learning.com/resourers/articles/multiple-intelligences/
4. https://www.google.lk/url?sa=t&source=web&rct=%23&ed=0ahUKEwip_7_GhLLeAhUSXCsKHZSvBdoQxa8BCBwwAA&usg=AOvVawOVTJzWxrN8ZFOD4xbU2nov
5. https://google.lk/url?sa=t&source=web&rct=j&url=https://study.com/academy/lesson/multipleintelligences.html&ved=OahUKEwip_7_GhLLeAhUSXCsKHZSvBdoQo7QBCCQwBA&usg=AOvVaw040dn6B82nqbwyF3ZQkVaK
6. https://youtu.be/Y8EnK9ekLvs



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

என்.பி. நிரோஷா
முதலாம் வருடம்
அரசியல் மற்றும் வரலாறு

வற்றாத கடலதனின் ஆழமதைக் கண்டாலும்
வளமான கல்வியதன் கரைகாணல் முடியாதே!

எத்துறை தன்னதிலும் நாம் பட்டங்கள் பெற்றாலும்
எல்லாக் கல்வியும் நாம் பெற்றவராய் முடியாதே!

இவ்வுலகின் ஞானமெல்லாம் ஈருலகை ஆளுகின்ற
இறையோன் அவனுக்கே என்பதை நாம் மறக்கலாமா?

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கிப் பார்க்கையில்
மன்னனில் கற்றோன் சிறப்புடையோன் என்பதைப்போல

கல்வியின் பெருமையிது கண்முன்னே தெரிவதனை
கவனத்தில் உணர்ந்து நாம் கற்றிடல் வேண்டுமப்பா!

செல்வமது கோடிதான் சேர்ந்து நாம் வைத்திடினும்
சிறப்புமிகு செல்வமதாம் கல்விக்கு நிகராமோ?

காலத்தால் அழியாத கள்வர்கள் திருட முடியாத
காற்று நீர் தீண்டா செல்வமது கல்வியன்றோ?

இஸ்லாத்தில் இறையோனும் "இக்ரஃ" எனும் வார்த்தை
இனியமறை குர்ஆனில் வஹி மூலம் முதலினிதாய்

ஓதிடுவீர் என்றுரைத்து கல்வியின் சிறப்பதனை
உலகோர்க்கு உணர்த்துவதை உற்றே உணர்ந்திடுவோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்திற்குப் பின்னரான கிறிஸ்தவ முஸ்லிம் சமய நல்லுறவு மற்றும் கலந்துரையாடல். (முசலிப் பிரதேசத்தினை மையப்படுத்திய ஓர் ஆய்வு)

எம்.எப். பரீஸ்
நான்காம் வருடம்
சமூகவியல் துறை

இலங்கை சமயங்களுக்கிடையிலான நல்லுறவு மிக நீண்ட வரலாற்றினைக் கொண்ட ஒன்றாகும். பல்வேறுபட்ட காலகட்டங்களும் கிறிஸ்தவம், முஸ்லிம், இந்து மற்றும் பௌத்த மதத்தவர்கள் ஒருகரமிணைந்து "நாம் இலங்கையினர்" என்பதினை பல்வேறு வேற்றுமைகள் இருந்த போதிலும் ஒற்றுமையை வெளிக்காட்டியிருந்தமை ண்டு நோக்கத்தக்கது. அந்த அடிப்படையில் கிறிஸ்தவ, முஸ்லிம் சமயத்தலைவர்களுக்கு இடையிலான தொன்று உறவுகள் நிலைத்திருப்பதனை காணமுடியும். நாட்டின் முஸ்லிம்கள் அம்பாறை, புத்தளம், கொழும்பு போன்ற மாவட்டங்களில் அதிகமாகவும் ஏனைய மாவட்டங்களில் கிறிஸ்தவ சமயத்தவர்களுடன் இணைந்தும் வாழ்கின்றனர். விஷேடமாக வடக்கு, வடமேல் கரையோரங்கள் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் அதிகமாகக் காணப்படுவதுடன் மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலகப்பிரிவிலும் முஸ்லிம்கள் அதிகமாக இருப்பதுடன் இரண்டாவது பெரும்பான்மையாக கிறிஸ்தவர்களும் இருக்கின்றார்கள்.

மேலும் , 1990 ஆம் ஆண்டு வடக்கில் முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்படும் வரை இவ்விரு இனங்களுக்கிடையிலும் சமூக, பொருளாதார, அரசியல், கல்வி, மொழி மற்றும் இன்னோரன்ன விடயங்களிலும் உறவினைப் பேணிவந்துள்ளனர். எனினும் யுத்தத்தினால் ஏற்பட்ட பல்வேறுபட்ட இடப்பெயர்வுகள், பல தசாப்தங்களாக பிரிந்து வாழ்ந்தமை, புதிய தலைமுறை, நீண்ட காலத்தின் பின்னரான மீள்குடியேற்றம், வட்டாரத் தேர்தல்முறைமை, காணிப்பிரச்சினை, அரசாங்கத் திட்டங்களை அமுல்ப்படுத்ததுவதில் முரண்பாடு, தப்பான அபிப்பிராயங்கள் மற்றும் வார்ப்பாண எண்ணங்கள், சகிப்புத்தன்மை மற்றும் விட்டுக்கொடுப்பின்மை, நிர்வாகம் சார் பிரச்சினைகள், புரிந்துணர்வின்மை, போரின் பின்னர் தோற்றம் பெற்ற மத அடையாளங்கள், மதங்களுக்கிடையிலான எவ்வித கலந்துரையாடல்களுமின்மை, தொழில்நுட்ப மற்றும் விரைவான போக்குவரத்து வலையமைப்பு என்பன இரு மதத்தவர்களுக்குமிடையில் நல்லுறவு மற்றும் கலந்துரையாடலினை மேற்கொள்வதில் முரண்பாடு நிலையைத் தோற்றுவித்தது எனலாம். அந்த அடிப்படையில் பன்மைத்துவ மூலினை கொண்டுள்ள ஒரு பிரதேசத்தில் அல்லது நாட்டில் பிரச்சினை ஏற்படுவதென்பது இயல்பாகும். ஏனெனில் ஒருமைத்துவத்தினை கொண்டவர்களிடையேகூட ஒரு நிலையான சுமூகமான நிலை எங்கும் இல்லை எனலாம்.

ஆகவே முஸ்லிம்-கிறிஸ்தவ சமயத்தவர்களிடையே ஆரம்பகாலங்கள் தொட்டு தொண்ணூறுகளில் பேணப்பட்ட நல்லுறவுகள் தொடர்பாகவும் மேலும் விலகல்கள் தோன்றுவதற்கான காரணிகளும் அதனை தடுப்பதன் மூலமாக மீளக்கட்டியெழுப்பு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கான வழிகளை உருவாக்குவதற்கான அதன் முக்கியத்துவத்தினையும் மையமாகக் கொண்டு அக்கட்டுரை ஆராய்கின்றது. இடப்பெயர்வுக்கு முன்னரும், மீள்குடி-யேற்றப்பட்ட பின்னரும் பல்வேறுபட்ட சமூக பொருளாதார கலாச்சாரம், கல்வி மற்றும் ஏனைய உறவுகளை ஆராய்தல் காலத்தின் தேவையாக உள்ளது. பேண்தகு அபிவிருத்தி-யின் இலக்குகளில் பதினாறாவது இலக்காக நிலைபெறுதகு அபிவிருத்திக்கான சமாதான மற்றும் சமூகங்களுக்கிடையே அதுசார்ந்த ஊக்குவிப்பும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பிரதேசமானது கிறிஸ்தவ-முஸ்லிம் கிராமங்கள் ஒன்றாகக் கலந்த அமைப்பினைக் கொண்ட ஒன்றாகும். தொழில் ரீதியாக ஒருவரை ஒருவர் தங்கி நிற்கின்றனர். எதிர்காலத்தில் உலகில் 60% இவ்விரு சமயத்தவர்களே இருப்பார்கள் (Few Research Fown: 2015) என்பதுடன் இவ்விரு சமயத்தவர்களின் மூலம் சமாதானமும், நீதியும் இன்றி உலகில் எவ்விதமான சமுதாயமும் இல்லை (Acommon World; 2007) என்பதற்கேற்ப காலத்தின் தேவைகருதியதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.

**ஆய்வுப்பிரதேசம்**

மன்னார் மாவட்டத்தின் மிகப் பெரிய நிலப்பரப்பபை கொண்ட முசலி பிரதேச செயலகம் காணப்படுகின்றது. 16 பிரதேச சபை உறுப்பினர்களை உள்வாங்குகின்ற குறித்த பிரதேசமானது சிறந்த இயற்கை வளங்கள் நிறைந்த ஒன்றாகும் இந்த பின்புலத்தில் 018ஆம் ஆண்டு சனத்தொகை அடிப்படையில் 8, 8 குடும்பங்களைக் கொண்ட பிரதேசமாகும். அதில் கிறிஸ்வ முஸ்லிம் குடும்பங்களின் விபரம் பின்வருமாறு

| இல | கிராம சேவகர் பிரிவு | முஸ்லிம் குடும்பங்கள் | கிறிஸ்தவ குடும்பங்கள் |
|---|---|---|---|
| 1 | முள்ளிக்குளம் | - | 202 |
| 2 | பாலைக்குளி | 400 | - |
| 3 | மரிச்சுக்கட்டி | 575 | - |
| 4 | கரடிக்குளி | 447 | - |
| 5 | கொண்டச்சி | 524 | 110 |
| 6 | மருதமடு | 364 | 72 |
| 7 | அகத்திமுறிப்பு | 498 | - |
| 8 | வேப்பங்குளம் | 807 | - |
| 9 | கொக்குபடையான் | - | 127 |
| 10 | எஸ்.பிபொற்கொணி | 343 | 39 |
| 11 | சிலாபத்துறை | 608 | 19 |
| 12 | கூளாங்குளம் | 591 | - |
| 13 | பூநெச்சிக்குளம் | 347 | - |
| 14 | புதுவெளி | 240 | - |
| 15 | பி .பி.பொற்கொணி | 323 | - |
| 16 | மேத்தன்வெளி | 192 | - |
| 17 | பண்டாரவெளி | 433 | - |
| 18 | அரிப்புமேற்கு | - | 328 |
| 19 | அரிப்புகிழக்கு | - | 253 |
| 20 | சவேரியாபுரம் | 204 | 116 |
| | மொத்தம் | 6808 | 1299 |

( தகவல் முசலி பிரதேச செயலகம் 018)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் பன்மைத்துவ காலாச்சாரத்தினை கொண்ட பிரதேசமாக இது காணப்படுகின்றதுடன் முஸ்லிம்களை அதிகமாக கொண்ட பிரதேசமாக இருப்பதுடன் இரண்டாவது பெரும்பான்மையாக கிறிஸ்தவர்களையும் கொண்ட பிரதேசமாகும்

**போருக்குப் முன்னர்:-**

இரு சமயத்தவர்களும் பல்வேறுபட்ட சமுதாய கலாச்சார பங்கேற்ப்பு நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளனர். முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களுடைய கோவில் விழாக்களிலும் திருமண நிகழ்வுகளிலும் பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் மரண நிகழ்வுகளிலும் பங்கேற்ப வர்களாக காணப்பட்டனர். ஆகவே கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் மஞ்சக்குளத்துப் பள்ளி நிகழ்வு மற்றும் ஏனைய பல நிகழ்வுகளிலும் சமமாகப் பங்கெடுத்துள்ளனர்.

மேலும் இருபெருநாட்களிலும் பெருநாள் பொருட்கள் பரிமாறுவதுடன் மே நிகழ்வு, பிரதேச விளையாட்டுப் போட்டிகள், பாடசாலை மட்டப் போட்டிகள் என்ப வற்றில் கலந்து கொள்பவர்களாகக் காணப்பட்டனர். மேலும் கல்வி நடவடிக்கைகளின் போது முஸ்லிம்கள் தமிழ்ப் பாடசாலைகள் (அரிப்பு, கொக்ககுப்படையாயின்) ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றல் என்பதுடன் முசலி பாடசாலைகளிலும் கல்வி கற்றுள்ளனர். இன்று முசலி தேசிய பாடசாலை, சிலாவத்துறை மகா வித்தியாலயம், கொண்டச்சி மகா வித்தியாலயம் உட்பட்ட பல பாடசாலைகளிலும் கிறிஸ்தவ மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மேலும் இன்று அரிப்பில் உள்ள முக்கியமான பதவியில் உள்ளவர்கள் முசலி மகா வித்தியாலயத்தில் (அன்று) கற்றவர்களாவார்கள். மேலும் கற்றல் செயற்பாடுகள் மட்டுமன்றி நண்பர்களின் வீடுகளுக்கு தரிப்பு. பல்வேறுபட்ட கலை கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்றல் ஊடாக மிகவும் நல்லுறவினைப் பேணக்கூடிய-வர்களாக இருந்தனர். ஆரம்ப காலங்களில் இவ்விரு சமயத்தவர்களுக்கடையில் பணப்பரிமாற்றம் இருந்து - வந்துள்ளது. கிறிஸ்தவர்கள் மீனைக் கொடுத்து அரிசியை உணவுக்காகவும், முஸ்லிம்கள் அரிசியைக் கொடுத்துவிட்டு மீனை உணவுக்காக வாங்கும் முறைமை காணப்பட்டது. இன்று இப்பிரதேச மீனும் அரிசியும் கொழும்புக்கே செல்கின்றது. மேலும் முன்பு போல தங்கி நிற்க வேண்டியின்மை, விரைவான போக்குவரத்து, பொருட்களைத் தேவையான இடத்திலும் பெறக்கூடியதான நிலைமை இன்றைய உறவுகளினை செம்மையாக்கி -யுள்ளது. தொழில் ரீதியாக கிறிஸ்தவர்கள் மீன்பிடியிலும் முஸ்லீம்கள் விவசாயத்திலும் பெரும்பாண்மையானவர்கள் டுபட்டமை குறிப்பிடத்தக்கது.

முன்பு இவ்விரு சமயங்களுக்குமடையிலான நம்பிக்கை கொண்டவர்களாக இருந்துள்ளனர். முஸ்லிம்கள் மீதான நம்பிக்கையில் வயற்காணிகளை தொழில் மேற் கொள்ள கொடுத்துள்ளனர். மேலும் கிறிஸ்தவர்கள் முஸ்லீம் கிராமங்களிலும் (இராணுத்திடமிருந்து பாதுகாப்புக்கருதி) வசித்துமுள்ளனர். சிலாபத்துறையானது அதிக முஸ்லிம் வியாபார நிலையங்களைக் கொண்டதாக இருந்ததுடன் அரிப்பினைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இவர்களிடம் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்களாக காணப்பட்டனர். இவ்விருசமயங்களுக்குமிடையில் அரசியல் ரீதியாக மிக நெருக்கமான உறவுகளை **1990** முன் காணப்பட்டது. **1960** களில் முசலி பிரதேச தவிசாளராக அரிப்பைச் சேர்ந்த ஒருவரே இருந்துள்ளதுடன் பல சந்தர்ப்பங்களில் ஒற்றுமையாக இணைந்து அரசியல் தெரிவுகளினை மேற்கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போருக்குப் பின்னர் :-**

இவ்விரு சமயத்தவர்களிடையே அரசியல் ரீதியில் போருக்குப் பின்னரான இச் சூழலில் உறவுநிலையில் பல்வேறுபட்ட விடயங்கள் முரண்பாட்டினை தேற்றுவதற்கான காரணிகளாக உள்ளமை மறுத்தலிக்கமுடியாது. ஆயுதக்குழுக்களும் தமிழ் மக்களும் நம்பிக்கைத்துரோகம் செய்தமை, பலவந்த வெளியேற்றம், சொத்துக்கள் அழிக்கப்பட்டமை, நீண்டகால இடைவெளி, புதிய தலைமுறை போன்ற ஏற்கனவே குறிப்பிட்ட காரணிகளாக உள்ளன. அந்தவகையில் அரசியல் அடிப்படையில் மத மற்றும் இனசார் அரசியல் போக்கு, சமய நிறுவனங்கள் அரசியலில் செல்வாக்கு செலுத்துதல், தேர்தலின் வாக்கினை மையமாகக் கொண்ட போக்கு, தற்போதைய வட்டாரத் தேர்தல் முறைமை, மற்றும் பல்வேறுபட்ட விடயங்கள் மத நல்லுறவு சார்ந்து செல்வாக்குச் செலுத்துகின்றது.

மேலும் தொழில் மற்றும் பொருளாதார ரீதியான செயற்பாடுகளில் மாற்றம், அனைவரும் எல்லாத்தொழில்களிலும் டுபடமுடியுமானவை, தங்கி நிற்க வேண்டிய தேவையின்மை உட்பட பலகாரணிகள் பின்புலமாக அமைவதுடன் சமூக நிகழ்வுகளில் பங்கேற்பு குறைவாக உள்ளமை, இவ்விரு சமயத்தவர்களின் இடைவினையினைப் பாரிய அளவில் குறைத்துள்ளது. விளையாட்டுப்போட்டி கலைநிகழ்வுகள், பிரதேச கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்பு குறைவாக உள்ளமையும் இடம்பெறுகின்றமையும் குறைவாக உள்ளது. பங்கேற்பு நிகழ்வுகளான சமய விழாக்கள், வாழ்வியற் சடங்குகள் உட்பட முக்கிய நிகழ்வுகளில் முன்பு போன்ற உறவின்மை குறிப்பிடத்தக்கது.

மேலும், கல்வி ரீதியில் அதிகரித்த பாடசாலைகள் மதத்தினை மையமாகக் கொண்ட பாடசாலைகள் உருவாக்கம், குறித்த கிராமங்களில் பாடசாலைகள் காணப்படுகின்றமை என்பவற்றின் காரணமர்க ஒன்றாகக் கல்விச் செயற்பாடுகளில் டுபடும் வீதம் குறைந்துள்ளது. எவ்வாறான போதிலும் கிறிஸ்தவப் பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர்களும் முஸ்லிம் பாடசாலைகளில் கிறிஸ்தவ ஆசிரியர்களும் உள்ளமை முஸ்லீம் மிலாத் விழாக்களில் கிறிஸ்தவ மாணவர்கள் பங்கேற்பதும் கிறிஸ்தவ கிறிஸ்மஸ் போன்ற விழாக்களில் இஸ்லாம் மாணவர்கள் பங்கேற்பதும் சிறந்த உறவை கட்டியெழுப்பு வதற்க்கான மூலினை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது எனலாம். மேலும் வலயமட்ட போட்டிகள், கருத்தரங்குகள், முசலி தேசிய பாடசாலையாகவும் 1000 பாடசாலைத்-திட்டத்தில் உள்வாங்கப்பட்டமை, அனைவரினையும் உள்ளீர்ப்பு செய்ததாக பாராட்டு-விழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அன்று கல்வி ரீதியாக இரு சமயத்தவர்களிடையே உறவுநிலையை நோக்குமிடத்து கடந்த காலங்களினைப் போல மிக நெருக்கமாக இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு உறவுநிலை பேணப்படுகின்றமை நோக்கத்தக்கது. "இன்று வலைய கிறிஸ்மஸ் நிகழ்வுகளில் முஸ்லிம் மாணவர்கள் பங்குகொள்ள உள்ளதுடன் மீலாத் விழாவிலும் நாங்கள் பங்குபற்றுகின்றோம். பாடசாலைகளுக்கிடையிலான கருத்தரங்குகள் அனைவரையும் தழுவியதாக இடம்பெறுகின்றது." இது நல்லுறவை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சமூக நிகழ்வுகளில் பங்கேற்பு, பொதுநிகழ்வுகளில் பங்கேற்பு மற்றும் வாழ்வியற்சடங்குகளில் பங்கேற்பு என்பது இன்று இரு சமயத்தவர்களிடையே முன்பு போன்ற நல்லுறவினைக் காணமுடிளாதுள்ளமை குறிப்பிடத்தக்கது." முன்பு முஸ்லிம்களுக்கான தனியான உணவுவகைகள் வாழிவியற்ச் சடங்குகளில் கிறிஸ்தவ சமயத்தவர்களிடம் காணலாம் (நேர்காணல்).

மேலும் வளங்களினை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல் தன்மையானது போரின் பின்னரான சூழலில் தொடர்ந்து இன நல்லுறவை பேணுவதில் சிக்கல் தன்மையை ஏற்படுத்தியுள்ளது. காணிப்பிரச்சினை, வீட்டுத்திட்ட பகிர்வில் பிரச்சினை, விகிதத்திற்கேற்ப வளப்பகிர்வின்மை, என்பன குறிப்பிட்டுக் கூறமுடியும் மேலும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்ட முக்கியமான விடயமாக சமய நல்லுறவு, நல்லிணக்கம் சார்ந்த எந்தவொரு நிகழ்ச்சிகளிலும் அமர்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என 100% ஆனவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே கலந்துரையாடலின் வடிவங்களின் அடிப்படையில் வாழ்க்கைக்கான கலந்துரையாடலானது இரு சமயத்தவர்களும் வாழும் சூழலில் பண்பாட்டுத் தளத்தில் காணப்படும் உரையாடலாக இது இருப்பதுடன் இடப்பெயர்வுக்கு முன்னரான சூழலினை விட இன்று இவர்கள் திறந்த மனதுடன் பழகுவதும் இன்னல் துன்பங்களினை பகிர்கின்றமை (அவதானம், நேர்காணல்). கவனிக்கத்தக்கது.

இவ்விரு சமயங்களுக்கிடையிலான உரையாடல் என்பது இதுவரைக்கும் பாரிய குறைபாடாகவும் மேலும் இவர்களிடையே ஒன்றிணைந்த சங்கங்கள் எதுவும் கிடையாது. நிலையான மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் நேர்மயமான போக்கினையும் ஏற்படுத்துவதில் இவர்களின் பங்கு அவசியம் வேண்டப்படுகின்றது. மேலும். செயல்வழி கலந்துரையாடல்பட்டுணர்வு பகிர்வு சார்ந்த கலந்துரையாடல் வடிவங்களில் கூட எதுவும் இடம்பெறவில்லை. அதிக ஒற்றுமையைத் தழுவியதாக உள்ள கிறிஸ்தவ முஸ்லீம் சமயங்களுக்கிடையே இவ்வாறான நிலை நீக்கப்பட வேண்டும். முஸ்லிம் கிறிஸ்தவர்களுக் -கிடையிலான கலந்துரையாடல் குறைக்கமுடியாது. உண்மையில் இது மிகப்பெரிய தேவையாகும். இதிலே எமது எதிர்காலம் உள்ளது. (16வது பத்திரிகை ஆண்டகை 006). மேலும் சங்கங்கள் அமைப்புக்கள் என்பவற்றில் இவ்விரு சமயத்தவர்களும் தங்களுக் கானதும் மேலும் சில இடங்களிலும் இணைந்தும் உள்ளமை நல்லுறவினை மீள உயிர்ப்-பிப்பவையாக உள்ளது. கிராம சக்தி மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் என்பவற்றில் நாம் அவர்களை அங்கத்தவர்களாக இணைத்துள்ளோம். (நேர்காணல்). கிறிஸ்தவ முஸ்லிம் மத நல்லுறவையும் கலந்துரையாடல்களையும் ஏற்படுத்து வதற்கான பரிந்துரைகள்.

மதநல்லுறவை மேலும் கட்டியெழுப்பி ஓர் சிறந்த புரிந்துணர்வு மிக்க சமூகத்தினை கட்டிமெழுப்புதல் காலத்தின் கட்டாயமாகும். சகவாழ்வு, விட்டுக் கொடுப்பு, மனிதநேயம் போன்ற பண்புகளைக்கொண்ட மானுட சமூகத்திற்க்கூடாக நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியும். இவ்விரு சமயத்தவர்களுக்கிடையிலான சமயப்பிரதிநிதிகள் மதத் தலைவர்களுக் கிடையிலான கலந்துரையாடல்களுக்கான சூழல்களினை ஏற்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த இடப்பெயர்வு காரணமாக உள்ள தப்பான அபிப்பிராயங்கள் களையப்படல் வேண்டும். (உதாரணம் - முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களை வெளியேற்றுவர்கள் எனும் மனப்பாங்கு.) இன நல்லுறவைப் பாதிக்கச் செய்யும் தனியன் குழுக்கள் மற்றும் அரசியல் ரீதியாக சுயலாபத்திற்க்கு மதவாத கருத்துக்கூறுபவர்களுக் கெதிராக நடவடிக்கை எடுத்தல். மக்கள் பங்கேற்றலுக்கான பிரதேச மட்ட விளையாட்டு மற்றும் கலை கலாச்சார நிகழ்வுகளை இருசமயத்தவர்களும் இணைந்து நடாத்த வழியேற்படுத்தல்.

- அரச வளங்கள், காணி மற்றும் வீட்டுத்திட்டங்கள் பகிர்வின்போது விகிதாசாரத்திற்க்கேற்ப வழங்கப்படல் வேண்டும்.
- பொது மக்கள் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சமயம் சார்ந்த ஒற்றுமையை வளர்க்கும் செயற்றிட்டங்களை முன்னெடுத்தல்.
- பாடசாலை ஆசிரியர்களிடையே சமய நல்லிணக்கம் மற்றும் மேம்பாடு பற்றிய கல்வியூட்டல் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை மேற்கொள்ளல்.
- இரு சமயத்தவர்களிடையேயும் இதுவரை நிலவிவந்த பல்வேறு பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும் அத்துடன் எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படாதவகையில் செயற்றிட்டங் களையும் சமாதானப் பொறிமுறைகளையும் மேற்கொள்ளுதல்.
- மதரீதியான அடையாளங்களை பொதுஇடங்களில் நிறுவுதலினை இல்லாமல் செய்தல் போன்ற பல்வேறுபட்ட விடயங்களினூடாக இருசமயங்களிற்கிடையிலும் நிலையான மத நல்லுறவைக் கட்டிெழுப்புதலினூடாக இரு சமயங்களுக்குமிடையில் சுபீட்சமான எதிர்காலத்திற்கு வழியேற்படுத்துவோமாக.

உசாத்துணைகள்

- கஜப். எம் .காசிம் வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் மீள் குடியேற்றத்தின் போதான சவால்கள்
- ஹஸ்புல்லா எஸ்.எச்(1997) ,இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்களும், வடக்கு முஸ்லிம்களுக்கான அமைப்பு
- மஸ்தான்.எம்.எம். (2013) வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் 1990 முசலி இளைஞர் ஒன்றியம் (Musali youth assacition)
- விடுதலைக்கான தேடல்: வடக்கு முஸ்லிம்களின் கதை (2013) (இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினை காரணமாக 1990ம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் பற்றியதாக பிரஜைகள் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ) சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிதியம் கொழும்பு
- மயூரகிரி.ச.(2009) எவ்வழி நல்வழி அவ்வழி நாடுவோமா? சாம்கபவி பதிப்பகம் யாழ்ப்பாணம்
- திருச்செல்வன்.அ.(2007) ,மறை அருவித்துளிகள் ,திருமறை கலாமன்றம் ,லங்கா பப்ளிக் ஹவுஸ்
- **Thiranagama, S** (2011). *In My Mother's House: Civil War in Sri Lanka*. Philadelphia: University of California Press, DOI: https://doi.org/10.9783/9780812205114
- https://en.wikipedia.org/wiki/Expulsion_of_Muslims_from_the_Northern_province_by_LTTE
- http://www.thehindu.com/fline/fl1720/17201260.htm
- http://www.uthr.org/Reports/Report6/chapter3.htm
- http://www.srilankaguardian.org/2011/08/displaced-northern-muslims-of-sri-lanka.html



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் செய்த கோலம்

## (விவாகரத்தின் இன்றைய நிலை)

எம்.சி.எவ். ரிகாஸா
இரண்டாம் வருடம்
ஆங்கிலமொழி கற்பித்தல் மற்றும் பொருளியல்

"இருமனம் சேர்வது திருமணம்" இந்த திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் ஏற்படுகின்ற ஒப்பந்த அடிப்படையிலான உடன்படிக்கையாகும். அன்பு, பாசம், கருணை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு என்பவற்றால் பின்னிப் பிணைந்ததே திருமணமாகும். இன்றைய 1 ஆம் நூற்றாண்டிலே திருமணம் என்பது சாதாரண விடயமாக மாறிவிட்டது அதே போல விவாகரத்து என்பது சர்வ சாதாரணமாக மாறிவிட்ட அவல நிலையை காண முடியும்.

விவாகரத்து என்றால் என்ன திருமண பந்தத்திலிருந்து இருவரும் சட்டப்படி விலகிக் கொள்வதாகும். இருவருக்கிடையிலும் இருக்கும் மணமுறிவு காரணமாக விவாகரத்து ஏற்படுகின்றது. இன்றைய நவீன யுகத்தில் 016 ஆம் ஆண்டின் ஆய்வின் படி நாளுக்கு 400 விவாகரத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காலம் செய்த கோலம் என்றே இதனைக் கூறலாம். விவாகரத்து என்ற வார்த்தை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. பல்வேறுபட்ட காரணிகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

திருமணம் என்பது வாழ்க்கை முழுவதும் வாழப்படும் ஒரு அன்பான ஒப்பந்த-மாகும். அந்த ஒப்பந்தம் அனைத்து மதமும் கடுமையான சட்டதிட்டங்களை வைத்திருந்தாலும் அதையும் மீறி விவாகரத்துகள் ஏற்படத்தான் செய்கிறது.

இலங்கையில் 54 வீதமான விவாகரத்து ஏற்படுகிறது என்பது கவலையான ஒரு செய்தியாகும். உலக நாடுகளை விடவும் குறைவாக இருந்தாலும் கூட இது ஒரு பெரிய பாதிப்பாகவே உள்ளது. உலக நாடுகளின் முதலிடத்தில் ரோப்பாவின் சில நாடுகளை குறிப்பிடலாம். அதற்கடுத்து அமெரிக்கா இங்கிலாந்து என்பன காணப்படுகிறது. கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ முடியவே முடியாது என்ற பட்சத்திலே பிரிகின்றனர். அன்றைய காலங்களில் விவாகரத்து ஏற்படுவது மிகவும் குறைவாகும்.

காரணம் அக்கால பெண்மணிகள் "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்" என வாழ்ந்தார்கள். தன கணவன் என்னதான் செய்தாலும் பெண் கணவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதும் எது நடந்தாலும் சகித்துக்கொள்வதும் விட்டுக்கொடுப்பதுமாக இல்லற வாழ்க்கையை அமைதியாக வாழ்ந்தார்கள். இதனால் விவாகரத்துகள் மிக மிகக் குறை-வாகவே காணப்பட்டன. ஆனால் இன்று தலைகீழான சமுதாயமாக மாறிவிட்டது.

ஒவ்வொரு குடும்பத்திலும் விவாகரத்து எனும் றாவளி ஏன் ஏற்படுகிறது என்னதான் கணவன்-மனைவிக்கிடையில் இடம்பெறுகிறது என்ற பல்வேறுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகள் எல்லோரினதும் மனதில் ஓடத்தான் செய்கிறது. ஏன் நானே பல தடவை ஏன் இந்த றாவளி ஏற்படுகிறது என்பதை பலவாறு சிந்தித்துள்ளதோடு இதற்கான தீர்வுகளும் எவ்வாறு இருக்கும் என சிந்தித்திருக்கேன்.

இனி என்னதான் காரணங்கள் என பார்ப்போம்.. ஆயிரக்கணக்கான மக்களிடம் பெண்களை பெற்ற பெற்றோரிடம் கேட்டால் வரதட்சணை கொடுமை என்றே கூறுகின்றனர். இன்று அதிகமான விவாகரத்து வரதட்சணையாலே ஏற்படுகிறது. மனைவியிடம் பணமாகவோ சொத்தாகவோ பண்டமாகவோ கேட்டு பெறுகின்றனர் அவ்வாறு கிடைக்காவிட்டால் மனைவியை துன்புறுத்துகின்றனர் இதனால் பல விவாகரத்து நிலைமைகள் ஏற்படுகிறது. இஸ்லாம் மதம் இதனை வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் ஆண்மை குறைபாடு காரணமாகவும் அதிக விவாகரத்துக்கள் ஏற்படுகின்றன, இன்னும் குழந்தை இன்மை, கணவன் மனைவிக்கிடையில் புரிந்துணர்வின்மை விட்டுக் கொடுக்கும் தன்மை குறைவாகக் காணப்படுவதால் பல முரண்பாடுகள் ஏற்பட்டு பிரிவினைகள் ஏற்படுகின்றன.

மேலும் விருப்பமில்லா திருமணங்கள் கட்டாயத்திருமணங்கள் சிறுவயதுத் திருமணங்கள், காதல் திருமணங்கள், கணவன்-மனைவிக்கிடையில் அதிக வயது வித்தியாசங்கள்,சம வயது திருமணங்கள் ஏமாற்றுத் திருமணங்கள் என்பன அதிகளவிலான விவாகரத்து ஏற்படுவதற்கான காரணங்களாக அமைகின்றன.

வேடிக்கையை மட்டும் விரும்பக்கூடிய இன்றைய தலைமுறை இதனை ஆங்கிலத்தில் fun loving generation என்பார்கள். நாகரீகம் என்ற பெயரில் அநாகரீகமாக நடந்துகொள்கின்றனர். தனது உணர்வுகளை தன் துணையிடம் காட்டாமல் வேறு ஒரு மூன்றாம் நபரிடம் பகிர்ந்துகொள்ளல், தவறான உறவுகளை பேணுதல், துணையை சந்தேகப்படுதல், இருவருக்கிடையிலும் பாலியல் பிரச்சினைகள், உறவில் திருப்தியின்மை, மதுபோதை பாவனைகள் போன்ற காரணங்களின் மூலம் குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டு விவாகரத்துகள் ஏற்படுகின்றன.

மேலும் விவாகரத்திற்கு சமூகவலைத்தளங்களும் ஒரு காரணியாக இருக்கின்றது. whatsapp, facebook, imo,viber. E-Mail என பல்வேறுபட்ட சமூக வலைத்தளங்கள் காரணமாகவும் குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுகிறது. ஆணோ பெண்ணோ தன்னைப்பற்றிய தவறான தகவல்களையோ புகைப்படத்தையோ சமூகவலைத்தளங் - களில் போட்டு வருகின்றனர். இதனால் பல்வேறுபட்ட பிரச்சனைகள் தவறான தொடர்புகள் ஏற்படுகின்றன.

இன்றைய காலத்தில் பெண்கள் பெண்களுக்கே எதிரிகளாகின்றனர். அதாவது ஒரு தம்பதிக்கிடையில் குழப்பங்கள் ஏற்படுவதற்கு உந்துதலாக மாமியாரும் காணப்படு கின்றனர். என்பது யாவரும் அறிந்த விடயமே. மூன்றாம் நபரான இவர் தம்பதியினரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கையில் டுபடுவதாலும் இருவரின் சிறு பிரச்சினை கூட விவகாரத்தில் முடி வடைகிறது.

பெண்கள் கணவனை விட கல்வியில் அதாவது உயர் பதவியிலிருத்தல், இருவரும் வேலைக்குச் செல்லுதல் என்பன இருவரினதும் அன்புக்கு தடையாகவும் இல்லற வாழ்வில் விருப்பமின்மையும் ஏற்படுத்தியிருக்கிறது. இன்னும் பொறுப்பில்லாமலிருத்தல், நண்பர்களை அடிக்கடி வீட்டிற்கு அழைத்து வருதல், மனைவியை கொடுமை செய்தல், உழைக்காமல் வீட்டிலே இருத்தல் என்பன கணவனிடமிருந்து பெண் விவாகரத்து பெற காரணங்களாக அமைகின்றன. ஒரு பெண் கணவனுக்கு மரியாதை செலுத்துபவளாகவும், கணவனின் பேச்சை கேட்பவளாகவும், அடக்கமானவளாகவும் இருத்தல் அவசியம். இதற்கு மாறாக அடாவடித்தனமும் அதிக கோபமும் கணவனை மதிக்காமலும் நடந்து கொள்ளல் என்பன மனைவி மீது கணவனுக்கு வெறுப்பை ஏற்படுத்துகிறது. மனைவி தூரமாக்குகின்றன. இதனால் கணவன்கள் மறுமணம் செய்து கொள்கின்றனர். இவ்வாறு பல்வேறு காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

விவாகரத்து பற்றி மத கருத்துக்களைப் பாரத்தால் சமயத்தில் விவாகரத்துச் சொல்வது தடை செய்யப்பட்ட ஒரு விடயமாகும். இஸ்லாம் மார்க்கம் " அல்லாஹ் அனுமதித்தவற்றில் அவனுக்கு மிகவும் வெறுப்பான விடயம்" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறுபட்ட நிபந்தனைகள் விவாவகரத்து பெறுவதற்கு தடைகள் காணப்பட்டாலும், இன்று இது ஒரு பேஷன் (fashion) ஆகவே காணப்பட்டு வருகின்றது என்பது கவலைக்குரிய விடயமாகும். இன்றைய குடும்பங்கள் சின்னாபின்னமாக மாற்றப்படுகிறது. குழந்தைகளும் பெண்களும் அனாதரவற்று கலாசார சீரழிவுகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகிறது. இவை மாற வேண்டும். நல்ல ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும். நல்ல சந்ததிகளை தோற்றுவிக்க வேண்டும். இன்பமான நிம்மதியான குடும்ப வாழ்கை ஒன்றை நடாத்த வேண்டும். எனவே விட்டுக்கொடுப்பு பொறுமை சகிப்புத்தன்மை புரிந்துணர்வு என்பவற்றுடன் தம்பதியர் வாழ முற்பட்டால் விவாகரத்துக்கள் குறைந்து அழகான ஒரு எதிர் காலத்துடன் வாழ்கையை வாழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டங்கள் ?......!

எம்.எம்.பி. நதா
இரண்டாம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

யாழ்தேவி பச்சைக்கொடி காட்டியாச்சு. நகருகிறது. எனது எண்ணங்களும் கூடவே பின்நோக்கி தண்டவாளத்தைத் தாண்டுகின்றன.

அன்றும் மனச்சுமை என் கண்களை அழுத்தியது. கண்ணீர் மழை உப்புக் கறித்தது. இன்றும் மனக்குமுறல் உஷ்ணமாய் உள்ளம் கொந்தளிக்கிறது. வேப்பங்காற்று என் வேதனைக்கு ஒத்தடம் தருகிறது. அறங்காவலர்களான பனைகள் கை அசைத்து விடை பகர்கின்றன.

நான்கு வருடங்களுக்கு முன்னால் திருநெல்வேலியோடு இணைந்த உறவு, கலந்து வந்தவர்கள் எத்தனை பேர்..? கலைந்து சென்றவர்கள் எத்தனை பேர்..?

விடை தேடி வந்தவர்கள்.. வியப்புக்கு ஆளானவர்கள். வித்தியாசமாகிப் போனவர்கள். அப்பப்பா பட்டியலாய் நீண்டுவிடும். பல்கலைக்கழகத்தைப் பகடைக் காயாக கருதியவர்களும் உண்டு. பலன் பல பெற்றோரும் உண்டு.

"ஏம்மா யுனிவசிட்டிக்கா உங்கட மகள் போகப்போறா? ஒரு கால் கட்ட போட்டு வீட்டோட வச்சிருங்க. போற இடம் பொல்லாத இடம். நம்ம கல்ச்சருக்கு ஒத்துவராது." இப்படி வாழ்த்துரைத்தவர்கள்.

"ம் பொட்டப்புள்ள மேல மேல படிச்சு பட்டத்த வாங்கி காத்துல தான் பறக்க விடனும்." இப்படி வேறு.

என்ன பல்கலைக்கழகத்தை நிணக்கூழ் காய்ச்சும் பேய்கள் வாழுமிடமென்றா இவர்கள் கருதினார்கள்.

இளமையின் வேகம் இலக்கை அடைய வேண்டும் என்ற தாகம் இரண்டும் சேர்ந்து தடைகளைத் தாண்டி பல்கலைக்கழக வளாகத்துள் வலக்கால் பதிக்க விட்டது.

பல்கலைக்கழக பகிடிவதை பற்றிய பயம் உள்ளூர இருக்கவே செய்தது. ஆயிரமாயிரம் அர்த்தமுள்ள கனவுகளைச் சுமந்து கொண்டு சென்ற போது, கூடவே இருந்த நண்பிகளின் அபிப்பிராயம் பல வண்ணங்களாய் விரிந்தன.

"சுதந்திரக் காற்றினைச் சுவாசிக்கலாம். புதுயுகம் படைக்கலாம். உல்லாசமாய் பொழுது போக்கலாம்"

இப்படியாக பல பல கற்பனைகளைப் பட்டங்களாக்கி பறக்க விட்டிருந்தனர்.

செத்தவர்களுக்குத் தானே சுடுகாடு பற்றித் தெரியும்.

ஸீனியர்ஸ் கொஞ்சம் சீரியஸாகத்தான் நடந்து கொண்டார்கள். அதுவெல்லாம் புதிய அனுபவங்கள்.

பல நேரங்களில் வீட்டுக்கு திரும்பிப் போய் விடுவோமா என்று கூட நினைத்ததுண்டு. குளியலறையும் தலையணையும் கண்ணீரின் கதை கேட்டு ஆறுதல் அளித்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகராதியில் சில சொற்களுக்கு அர்த்தம் தேட முடியவில்லை.

வந்த முதல் நாளே, "ஏன் உனக்கு பேசி வெச்சில்ல? உங்கட ஊருல பொடியன் இல்லயா? இவ்வளவு தூரம் அனுப்பிருக்காங்க?" என்ற கேலிக்கணைகள் வேறு.

என்னவோ ஊரில் இல்லாததால் தான் பல்கலைக்கழகம் வந்தது போல. அறிவு மட்டம் அவ்வளவு தான் என எண்ணிக்கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்.

ச்சே..நான் திரும்ப போவதில்லை. பட்டம் பெறுவது என் இலக்கு. பட்டதாரிக் கனவை சிதைக்க விரும்பவில்லை. இலட்சிய வெறி எனக்குள்ளே.

சில நேரங்களில் பல்கலைக்கழகத்துக்கே உரித்தாய்ச் சொல்லப்படும் ஜோடி சேர்க்கும் கட்டுக்கதைகள் பரப்பப்படாமலுமில்லை. அதெல்லாம் அதிகப்படியாய் பொறுமையைச் சோதிக்கும் கட்டங்கள். இதனாலே படிப்பை பாதியில் நிறுத்தியோரும் உண்டு. அது சரி, கதை கட்டவென ஒருவர் இருந்துவிட்டால் கண்ணகியும் கலங்கமானவள் தானே.

பெட்ச் என்றும் மஜ்லிஸ் என்றும் யூனியன் என்றும் எம்மைச்சுற்றி பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. எல்லாமே எம்மை சீர்ப்படுத்தவதற்காகவே அன்றி வேறெதற்கும் இல்லை என்பதை வருடங்கள் கழிந்த பின்னரே புரிந்து கொண்டனர்.

பெண்கள் பாடசாலையில் படித்ததாலோ என்னவோ. ஆண், பெண் இரண்டும் கலந்த பல்கலைக்கழக கலாசாரத்துக்குள் திடீரென பிரவேசிக்க முடியவில்லை. ஆனால் நண்பிகள், பெண் சீனியர்ஸ் இவர்களையும் தாண்டி தேவைகளும், பிரச்சினைகளும் விரிந்திருந்ததால் ஆண்களின் உதவி பெரும்பாலான சந்தாப்பங்களில் தேவைப்பட்டது. அதிலும் குறிப்பிட்ட சிலரை தேரந்தெடுத்து பழகியதாலோ என்னவோ பிற சிக்கல்கள் தவிரக்கப்பட்டன. வரையறைகள் பேணப்படும் வரை தவறுகள் நடைபெறுவதில்லை.

பல்கலைக்கழகத்துள் நாம் கலாசார உடை அணிவதையே வழக்கமாய் கொண்டிருந்தோம். இது ஆரம்பத்தில் சீனியர்ஸால் வலியுறுத்தப்பட்டாலும் காலப்போக்கில் இதைப் பலரும் உணர்ந்தனர்.

பல்கலைக்கழகம், பகிடிவதையின் பிறப்பிடமல்ல. சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை வளர்த்து தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்றமுறச் செய்யும் புனித பூமி என்பதை வருடங்கள் கடக்கும் போது அனுபவத்தால் அறிந்து கொண்டேன். அனுபவத்தைப் போல சிறந்த ஆசான் இல்லை என்று பெரியவர்கள் சும்மாவா சொன்னார்கள். ஆத்ம பலம் தந்த சீனியர்ஸ்க்கு ஒரு சபாஷ் மனதினால் வாழ்த்துகிறேன்.

ரஜீனா படியில் வழுக்கி விழுந்து காலுடைந்த போது அவளது வீட்டுக்கு கூட தெரியப்படுத்தாமல் அன்பும் அரவணைப்பும் கொடுத்து ஹொஸ்பிடலுக்கும் ஹொஸ்டலுக்குமாய் அலைந்து கூடவே இருந்து அவளை அன்புடன் பராமரித்த கருணை இதயங்கள்.

உண்மை தான் படிப்பை வறுமையால் பாதியில் நிறுத்தப்போனவளை அப்படியேவா விட்டார்கள்? மாதா மாதம் யாருக்கும் தெரியாமல் பண உதவி செய்து பட்டம் பெற வைக்கவில்லையா?

பல்கலைக்கழக கலாசாரம் கூட புதுமையாய்த்தான் இருந்தது. பல்கலைக்கழக கலாசாரத்திற்குள் எம்மை இணைக்க அவர்கள் எமக்கு வரவேற்பு நிகழ்வை நடத்தும் வரை பகிடிவதைக்கு உட்படுத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாய் இருந்து. பாடல். நாடகம். கவிதை என பகிடிவதை எனும் பெயரில் இவையே அரங்கேறிக் கொண்டிருந்தன. இதுவே பிற்காலத்தில் சிலரை பல துறைகளில் தடம் பதிக்க வைத்தது. இலைமறை காய்களாயிருந்த பலரது ஆளுமைகள் வெளிச்சத்துக்கு வந்து உயரத்தின் உச்சிக்கு செல்ல களமாய் அமைந்தது.

மீட்டிங் எனும் போதும் சீனியர்ஸ் எனும் போதும் அடிமனதில் பயம் தோன்றாமலுமில்லை. அதற்காய் அவர்களை திட்டாமலும் இருந்ததில்லை. பகிடிவதைகள் ஒரு காலத்துக்கு மட்டும் தான். பிறகு அவர்களே நல்ல நண்பர்களாய் மாறிவிடுவதுமுண்டு.

இப்படி ஆயிரமாயிரம் சம்பவங்கள். அப்படியானால் ஏன் பல்கலைக்கழகத்தை அப்படி மோசமாக விவரித்தார்கள்?

ம்.நந்தவனத்துக்குள்ளே நச்சு மலர்களும் உண்டல்லவா! சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சாதகத்தை பாதகமாக்கிக் கொண்டவர்களால், சுதந்திரத்துக்கு அர்த்தம் தெரியாதவர்களால் எங்கள் அபய பூமி அசிங்கப்படுத்தப்படுகிறது.

சம்பவங்கள் சரித்திரமாகிப் போனதை யார் மறுப்பார்கள். பல்கலைக்கழகத்தில் கால் பதித்து பட்டம் பெறாமல் போனவர்கள் எத்தனை பேர்.

இளைய சமுதாயத்தின் இருப்பிடம் அது. வெற்றியும் பெறலாம் தோல்வியும் தழுவலாம் எல்லாம் அவரவர் கைகளில்.

"என்னடி நீ அனுபவிக்க வேண்டிய வயசுல அனுபவிக்கத் தெரியாம இருக்குறியே"

அவளது இணையப்பக்கம் தணிக்கை செய்ய வேண்டிய தரவிறக்கங்கள்.

"ஏய்.. என்னடி இதெல்லாம். உனக்கொரு போன் இருப்பது இதற்குத்தானா எத்தனை நாளாக இந்த நாடகம்?" கேட்டேன்.

"இதெல்லாம் ஜஸ்ட் (F)பன்னுக்கு என்ன பொண்ணு நீ. ஒன்றும் தெரியாம."

அவளது குடும்ப வறுமை எனக்குத் தெரியும். தந்தை ஒரு பென்சன் கிளார்க். குடும்பத்தில் ஐந்து பெண் பிள்ளைகளுக்கு மூத்தவள். பெற்றோர் கஷ்டத்தின் மத்தியில் அனுப்பும் காசில் இவள் பணக்கார வீட்டு பருவமகளாய் காசெல்லாம் வீணாய் அழிக்கிறாள்.

யார் பேச்சையும் கேட்பதாய் இல்லை. பல தடவைகள் கண்டித்துப் பார்த்து விட்டேன்.

"என் வழி தனி வழிஅனுபவிக்குற இந்த வயசுல தான் ஜொலியா இருக்கணும்"என்றாள்.

"ஏன் இந்த ஆண்கள் பிரீடமா இருக்குறதப் போல நாங்களும் இருக்கக் கூடாதா?" என்று தர்க்கம் பேசுவாள்.

மனதையும் அலைபாய விட்டு விட்டாள். படிப்பை பாதியிலே விட்டொழித்து படிக்காத மேதையோடு மணமாலை சூடிக்கொண்டு பயணப்பட்டவள்.

குழந்தையின் அழுகுரல் என் சிந்தனையை திசை மாற்றுகிறது. ஓ இவள் இவள் அவளாக இருப்பாளோ. இருக்கக் கூடாது. குழந்தையோடு அடுத்த பெட்டிக்குள் நகர்கிறாள். என் கண்களும் கூடவே நகர்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழி விழுந்த கண்கள். மெலிந்து போன தோற்றத்துடன் மீண்டும் வந்து எனக்கு முன் ஆசனத்தில் அமர்கிறாள்.

என்னை அடையாளம் கண்டு கொண்டாள். "நீ..நீ." அவளது கண்களின் ஓரத்தில் நீர் முத்துக்கள். உளக்குமுறலை கொட்டித் தீர்த்தாள்.

"பெற்றோரின் ஆசைக்காய் பல்கலைக்கழகம் சென்று படிப்பை கைவிட்டு பெற்றோரின் பட்டதாரிக் கனவுகளை சிதைத்து விட்டு ஏமாந்து போனேன்."

"தினம் வரும் கார் அவருடையது என்றார். முதலாளியின் கார் ட்ரைவர் அவர் என்பது பிறகு தான் தெரியும். பட்டதாரி என்றார். பள்ளிக்கூடப்பக்கமே தலை வைத்திருப்பாரா என்பதே டவுட். ஒரு நாள் சாலை விபத்தொன்றில் இறந்து விட்டார். இப்ப கூட தொழில் பார்த்த முதலாளியிடம் போய் செலவுக்கு காசு வாங்கிக் கொண்டு வருகிறேன். என்றாள்.

அடுத்த ஸ்டேஷனில் இறங்கிக் கொள்கிறாள். வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படி எத்தனை எத்தனைக் கதைகள் சரித்திரங்களாய்

பல்கலைக்கழகம் வந்து சுதந்திரம்..உல்லாசம் சந்தோஷம் என அதன் புனிதத்தை பாழாக்கியவர்கள் பாழாய்ப் போனவர்கள்.. இவர்களால் பல்கலைக்கழகம் அனுப்பத் தயங்கும் பெற்றோர். ஒரு சிலரால் முழு சமூகத்தையும் நிறக்கண்ணாடி போட்டுப் பார்க்கும் சமுதாயம்.

கட்டுப்பாட்டை தளர்த்தாதிருக்கும் வரை பட்டங்கள் யாவும் நூலறுக்கப்படாதவை தான்.

பண்பாடு..கலாசாரம்..பாரம்பரியம் பாதுகாக்கும் எம் பல்கலைக்கழகத்தை திரும்பவும் மனக்கண்ணில் பொதிந்து பார்க்கிறேன்.

முறையாக படித்து முயற்சியோடு முன்னேறி பட்டதாரிகளாகிப்போன பலர் கனவு மெய்ப்பட்டவர்களாய்த் தொடர்கிறோம்.

குருநாகல் ஸ்டேஷனில் ரயில் வண்டி நிற்கிறது. என் அலைபேசியும் குறுகுறுக்கிறது. நாளையே வந்து வேலையை பொறுப்பேற்கும் படி.

அதோ என் பட்டம் வானில் தெரிகிறது. நான் நூலைப் பிடித்தவாறு இறங்குகிறேன்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய நல்லிணக்கம்

ஏ.ஜி.எம். அர்சாட்
இரண்டாம் வருடம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் பொருளியல்

தொலைந்து போன வெளிச்சத்தினை இருளில் தேடும் மூடர்களாய் மாறும் நிலையில் இன்றைய சமூகங்கள். காலம் தன் கடமையை செவ்வனே செய்கின்றது என்பதற்காக காலவோட்டத்தின் விரைவினிலே வீசி எறியப்பட்ட காகிதங்களாய் மனிதர்கள் தேடும் மாண்புகள் புடம் போடப்பட வேண்டிய நிலையை வேண்டி நிற்கின்றன. மனிதம் இது மானிடம் காக்கும் கூறிய ஆயுதம் தவறிய வழியில் தடயங்களாக்கப்பட்டால் அத்தனையுமே சேதாரங்கள் தான். இறை வண்ணங்களுக்கு இணையே இல்லாமல் ஆக்கப்பட்ட அலங்காரம் தான் மனிதன். இறைவன் கொடுத்த பகுத்தறியும் ஆற்றல் அவனை ஏனைய படைப்பினங்களிலிருந்து வகுத்து வைக்கின்றது. இறைவன் கொடுத்த இனிய வழி, அவன் வகுத்த வாழ்வியல்நெறி, வார்த்தைகளுக்குள் அடக்க முடியாத அவனின் மொழி அது தான் இன்றைய சமூகங்களின் அறியாமையால் கேள்விக்குறிக்குள்ளான சச்சரவுகளை விலைக் கொடுத்து வாங்குகின்ற சமயங்கள் எனும் புனிதப் போர்வை. மனிதன் புனிதனாக போர்த்தப்படும் போர்வைக்கே இந்நிலை என்றால்.....

சமூகங்களே சிந்தனையை கொஞ்சம் தூசு தட்டுங்கள் மனிதம் எனும் மகுடம் தாங்கிய மனிதனின் பண்பாடுகளை பட்டை தீட்டும் பாசறையின் பரிதாப நிலையைப் போக்க உருவான விருட்சம் தான் இப் புனிதப் போர்வையின் நல்லிணக்கம்.

கட்டாயக் கலாசாரத்திற்கும், சடங்கு சம்பிரதாயங்களுக்குமான சிரிக்கும் உதடுகளும், பேசும் வார்த்தைகளும், செய்யும் செயல்களும் என்று நம் சமூகத்தின் சிலர் ஒரு தோணியில் கால் வைத்திருக்க, வேண்டாம் இவையெல்லாம் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற மனிதாபிமானக் கோஷத்திற்காய் இன்னும் சிலர் மற்றைய தோணியிலுமாக பயணம் நீண்டு செல்கின்றது. இரு தரப்பினருக்கும் பயணிக்க பாதைகள் இருந்தாலும் 'பாதிப்புக்கள் அதிகம் என உணர மறந்து போனதென்னவோ கசக்க வைக்கும் உண்மையாகும். வீதியோரப் போராட்டங்களும், விளம்பரப் பலகைகளும் விமர்சிக்கும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது மனிதம் காக்க நினைக்கும் இந்த நல்லிணக்கம். நல்லிணக்கம் என்ற சொல்லே அதன் வரைவிலக்கணத்தின் ஆழமான கருத்தை வெளிப்படுத்துகின்றது. வேற்றுமையிலும் ஒற்றுமைக் காண்பதுவே நல்லிணக்கம் என்று சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்தி விடலாம். பல்வேறு அமைப்புக்களின் அடிப்படையில் வேறுபடுகின்ற இரு சாரருக்கு மத்தியில் ஏற்படுகின்ற புரிந்துணர்வு அல்லது சகிப்புத் தன்மையுடன் கூடிய ஒருமைப்பாடே நல்லிணக்கம் எனக் கொள்ளப்படுகின்றது. உதாரணமாக குறிப்பிடுவதானால் இரு மொழிகளில் பேசுகின்ற சகோதரர்கள் சந்தித்துக் கொள்கின்ற பொழுதினில் இருவரும் ஒன்றுபட்டு ஒரு மொழியினிலே கலந்துரையாடுவது போன்றதோர் செயற்பாடே நல்லிணக்கமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளில் மாத்திரம் வாழ்ந்து கொண்டிருக்கும் பலரின் மத்தியில் செயல் பம் கொடுக்க நினைக்கும் ஒரு செயற்திட்டம் தான் நல்லிணக்கம். நம் வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி காணப்படுகின்ற பல்வேறுபட்ட கருத்துக்களையும் கடந்து காக்க வேண்டிய ஒரு உன்னதமான ஒற்றுமைக் கோஷம் இவ்வார்த்தையில் காணப்படுகின்றது என்றால் மிகையாகாது.

கடலில் சென்று முத்தெடுக்க் பாடுபடும் ஜீவனாய் சிலர் நல்லிணக்கத்திற்காய் பாடுபடும் வேளையில், சீறும் பாம்பாய் படம் எடுத்து அடுத்த சமூகத்தினை இல்லாதொழிக்க சதிக்கு மேல் சதி செய்யும் ஒரு இரத்த வெறி கொண்ட காடயர்களாய் சிலர் விசமம் செய்கிறார்கள். பிரச்சினை வரும் போது மாத்திரம் நல்லிணக்கத்திற்காக திட்டங்கள் தீட்டியும் பிரச்சினை முடிந்த உடன் மழை நின்ற பின்பு ஆங்காங்கே சத்தம் போடும் தவளைகளைப் போல் தான் நல்லிணக்க கோஷம் ஒலிக்கின்றது. சீரழிந்து போகின்ற நல்லிணக்கத்தின் ஆணிவேர்களாக யூதர்களின் திட்டங்களையும், ஸியோனிசத்தின் ஆதிக்கத்தையும், மேற்கத்தேய கலாசாரங்களின் சாயல்களையும் குறிப்பிடலாம். யூதர்களின் முழு முதல் நோக்கம் யாதெனில் இஸ்லாமியர்களின் அடித்தளத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்பதாகும். இதற்காக அவர்கள் செயற்படுத்தும் பல திட்டங்களில் ஒன்று தான் அந்நிய கலாசாரங்களை இஸ்லாத்தினுள் புகுத்துவதாகும். இதன் விளைவுகள் தான் நாம் யார் என்பதையே மறந்து தற்போக்கு வாதிகளாக சுயநல வெறியார்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்கும் மேலாக ஸியோனிஸம் என்ற சக்தி செயற்படுகின்றது என்பதனை மறந்து விடக் கூடாது. பலஸ்தீன், ராக், மியன்மார், லெபனான் போன்ற நாடுகளில் நடைபெறுகின்ற மனிதாபிமானமற்ற போருக்கெதிராக அனைத்து இன மக்களும் இணைந்து குரல் கொடுக்க எத்தணிக்கின்ற சமயத்தில் உள்நாட்டில் கலவரங்களை ஏற்படுத்தி அவர்களின் கவனத்தை திசைதிருப்பி விடுகின்றார்கள். இவ்வாறான பல ஆதிக்கங்களின் பேரணியில் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதானது பெரும் சவாலுக்குரிய விடயமாகவேயுள்ளது.

நல்லிணக்கம் மலர, வெற்று வார்த்தைகளும், போலிப் பேச்சுக்களும், கண் துடைப்பு நடவடிக்கைகளும் எவ்வகையிலும் உதவ மாட்டாது. மனித நேயம், நீதி, நியாயம், தர்மம், அஹிம்சை ஆகியவற்றின் கொள்கைகளும் செயல்பாடுகளுமே சமூக நல்லிணக்கம் உருவாக வழி வகுக்கும்.

**1. மனித நேயத்துடன் வாழ்க!**

மொழியால், இனத்தால், சமயத்தால் வேறுபட்டிருப்பினும் நாம் அனைவரும் மனிதர்கள். ஒரே வகையான உடலைமைப்பு, உடல் செயற்பாட்டுமுறை, உளவியல் போக்கு கொண்டவர்கள். நமது தேவைகளும், உணர்வுகளும், ஆசைகளும், நிராசைகளும் ஒரே மாதிரியானவை. எனவே தனக்கு விரும்புவதையே பிறருக்கும் விரும்புவோம் என்று எண்ணிச் செயல்பட்டாலே நல்லிணக்கம் நம்மை தேடி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனிதர்கள் அனைவரும் ஒரே குலத்தில் இருந்து பிறந்தவர்கள் ஒரு தாய் தந்தையரின் வழித்தோன்றல்கள்" (குர்ஆன் - பைபிள்)

**. உணர்வுகளை மதித்திடுக**

பிற சமயங்களை, கொள்கைகளை, சித்தாந்தங்களை மறுக்கலாம். ஆனால் உணர்வு-களை மதிக்க வேண்டும். மாற்றுக் கருத்துக்களை கண்ணியமாக மனதைப் புண்படுத்தாமல் விமர்சிக்கலாம், ஆனால் இழிவுபடுத்தக் கூடாது. "முஸ்லிம்களே அவர்கள் ஏக இறைவனை விடுத்து யாரை அழைத்து பிரார்த்தனை புரிகின்றார்களோ அவர்களை ஏசாதீர்கள்" (குர்ஆன் 6 108) "பிற மதங்களைத் திட்டுவதும், விளைவுகளைப் பற்றி அக்கறை இன்றி அறிவிப்புக்களை வெளியிடுவதும், பொய் பேசுவதும், அப்பாவி மக்களைக் கொல்வதும், கோயில்களையும் பள்ளிவாசல்களையும் களங்கப்படுத்துவதும் இறைவனை மறுப்ப தாகும்". (காந்தியடிகள்)

**3. வேற்றுமையில் ஒற்றுமை காண்க!**

ஒரு நாட்டில் பல்வேறு மதங்களும், பண்பாடுகளும், மொழிகளும் இருப்பது தவிர்க்க முடியாதது. ஒரு மதத்திற்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் உருவாவதும் தவிர்க்க முடியாதது. இப்படி இருக்கையில் ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாசாரம் என்பது ஒற்றுமைக்கல்ல, வேற்றுமைக்கே இட்டுச் செல்லும். பிறரது உரிமைகளைப் பறிக்காத வகையில் ஒவ்வொரு பிரிவினரும் தமது சமயத்தை பண்பாட்டைப் பின்பற்றி நடப்பதால் எவருக்கும் கேடில்லை.

நமக்குத் தேவையானது ஒருமைப்பாடே தவிர பிற கலாசாரங்களை அழித்து ஒரே மாதிரியாக இருப்பது அல்ல. ஒற்றுமை வேறு மாதிரியாக இருப்பது வேறு "இஸ்லாத்தை மேற்கொள்வதில் யாதொரு கட்டாயமோ, நிர்ப்பந்தமோ இல்லை" (குர்ஆன் 56) என்ற இறைவசனம் கருத்துத் திணிப்பை வன்மையாக எதிர்க்கின்றது.

**4. சம உரிமைகளையும், வாய்ப்புக்களையும் வழங்குக!**

எவ்வித பேதமுமின்றி குடிமக்கள் அனைவரின் உயிர், உடைமை, கண்ணியம், நம்பிக்கை ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் பொருளியல் தளங்களில் அனைவருக்கும் சம வாய்ப்புக்கள் வழங்க வேண்டும். ஒரு சமூகத்திற்கு ஒரு நீதி என்ற கொள்கையின் அடிப்படையில், உரிமைகளும், வாய்ப்புக்களும் மறுக்கப்படும் போது பொறாமையும், துவேஷமும் உருவாகி நல்லிணக்கம் குழைய நேரிடும்.

"நீதி செலுத்துங்கள். எந்தவொரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்து விடக்கூடாது" (குர்ஆன் 5 8)என்ற இறைவசனம் பகைமை கொண்டுள்ள சமுதாயத்திற்கும் நீதி செலுத்திட வேண்டும் என்று பணிக்கின்றது.

**5. எல்லோரும் நல்லவரே என்று எண்ணுக!**

நமது சமுதாயத்தவர்கள் நேர்மையானவர்கள், வீரர்கள், தேச பக்தர்கள், சகிப்புத்தன்மை உடையவர்கள், அறிவு மிக்கவர்கள், மென்மையானவர்கள் மற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தவர்கள் இதற்கு நேர் மாறானவர்கள் என்று எண்ணுவது உண்மைக்குப் புறம்பானது மட்டுமல்ல, வெறுப்பையும், பகைமையையும் விதைக்கும் தன்மை கொண்டது.

"மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என்ற உயரிய சிந்தனையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

#### 6. வரலாற்றை சரியான கோணத்தில் புரிந்து கொள்க

மக்களை பிளவுபடுத்த வரலாறு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. நடுநிலையோடு ஆதாரப் பூர்வமாக எழுதப்பட்ட வரலாற்றுக் குறிப்புக்களை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டும். உள்நோக்கத்தோடும், ஒருபக்கச் சார்போடும் எழுதப்பட்ட செய்திகளைப் புறக்கணிக்க வேண்டும் வரலாற்றுக் குறிப்புக்களில் உள்ள முரண்பாடுகளை அறிய வேண்டும். ஒரு முஸ்லிம் மன்னர் கோயிலை இடித்தார் என்று ஒரு குறிப்பு காணப்படுகின்றது. அதே மன்னர் கோயில்களுக்கு மானியம் வழங்கினார் என்றும் ஆதாரப்பூர்வ ஆவணக் குறிப்புக்கள், கல்வெட்டுக்கள் காணக் கிடைகின்றன. எனவே இங்கு ஓர் உண்மை திட்டமிட்டு மறைக்கப்படுகின்றது என்பது அம்பலமாகின்றது.

வரலாற்றில் என்றோ நடந்து விட்ட தவறுகளுக்கு இப்போது வாழும் மக்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தித் தண்டிப்பது நியாயமல்ல வரலாற்று நிகழ்வுகளை இந்த நோக்கில் அணுகாவிடில் உலக முடிவு நாள் வரை நாட்டு மக்களுக்கு அமைதி கிட்டாது.

#### 7. சமூக சேவை ஆற்றுக

சமூக சேவை பகைமையையும் துவேஷத்தையும் அகற்றி மக்களை இணைக்கும் ஆற்றல் கொண்டது. எனவே, ஒவ்வொரு சமூகமும் சாதி, மதபேதமின்றி அனைவருக்கும் பலன் கிட்டும் வகையில் சமூக சேவைகளைச் செய்து வர வேண்டும். இப்பணிகளில் எந்தச் சமூகத்தையும் ஒதுக்கவும் கூடாது எந்தச் சமூகமும் ஒதுங்கவும் கூடாது.

#### 8. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்க

எமது நாட்டில் பல்வேறு சமூகங்கள் நூற்றாண்டுகளாக அருகருகே வாழந்து கொண்டிருந்தாலும் அரசியல், பொருளியல், வாணிபம், தொழில், கல்வி, வேலை வாய்ப்புக்கள், ஆகிய எல்லாவற்றையும் பேசுவார்கள், ஆனால் சமூகம், சமயம் சார்ந்த விஷயங்களைப் பரிமாறிக் கொள்ள மாட்டார்கள். இதன் விளைவாக சமூகங்களுக்கு இடையில் பெருத்த இடைவெளி ஏற்பட்டுள்ளது. எனவே, சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வை அதிகப்படுத்த பல்சமயப் பல்சமூக உரையாடல்களையும் அடிக்கடி நடத்த வேண்டும்.

#### 9. அநீதிக்கெதிராக குரல் எழுப்புக

மதவெறி, இனவெறி காரணமாக ஒரு சமூகத்தின் உரிமைகள் பறிக்கப்படும் போதும், அச் சமூகத்தினருக்கு அநீதிகள் இழைக்கப்படும் போது நாட்டின் எல்லா தரப்பு மக்களும் ஒரே குரலில் கண்டிக்க வேண்டும். அநீதி இழைப்பவர் நமது சமூகத்தவராயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவுகளைக் கண்டு அஞ்சாமல் துணிந்து எதிர்க்க வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "தமது சமூகம் செய்யும் அநீதிகளுக்குத் துணை நிற்பதே இனவெறி" என்றார்கள்.

**10. நன்மையைக் கொண்டே தீமையைத் தடுத்திடு**

"நன்மையும், தீமையும் சமமாக மாட்டாது, மிகச்சிறந்த நன்மையைக் கொண்டு தீமையைத் தடுப்பீராக, அப்போது கடும் பகை கொண்டவர்கள் கூட உற்ற நண்பர்களாகி விடுவதைக் காண்பீர்" என்று கூறுகின்றது திருக்குர்ஆன் (41 4, 5). நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாது. அது போலவே ஒரு தீமையை இன்னொரு தீமையின் வாயிலாகக் களைந்து விட முடியாது. வகுப்பு வாதத்தை இன்னொரு வகுப்பு வாதத்தால் ஒழிக்க முடியாது. வகுப்புவாதிகள் துவேஷத்தை விதைத்தால் நாம் அன்பை விதைப்போம். வகுப்புவாதிகள் பொய்ச் செய்தியைப் பரப்பினால் நாம் உண்மையைச் சொல்வோம்.

கசக்கும் உண்மைகள் காட்டித் தருகின்ற பாடங்களுக்கு கண்டிப்பான சில வழிகாட்டல்களின் வழியே சமார்த்தியமான முடிவுகளாகும். நான் என்ற சொல் வெல்லும் போது அது வெறும் ஒற்றை உயிர்தான் நாம் என்ற சொல் உயிர்ப்பிக்கப்படும் போது தான் ஓராயிரம் உயிர்கள் உயிரோட்டம் அடைகின்றன. நல்லிணக்கம் என்ற மகுடம் தாங்கிய சோதனைகளுக்கு கணக்கில்லை இனியும் அதனை தாங்கவிடாமல் காக்கும் கரங்களை உருவாக்க வேண்டியதே நம் தேவை. தாமதம் காக்கும் ஒவ்வொரு தருணங்களும் தங்களுக்கெதிராய் ஓர் சக்தியை விலை கொடுத்து வாங்குகின்றோம். பல கரங்கள் இணையும் காலம் வெகு தொலைவில் இல்லை எனவே இன்றே இணைத்திடுவோம் ஒற்றுமை எனும் கயிற்றை பற்றிப் பிடித்து நல்லிணக்க பயிருக்கு ஒற்றுமையை உரமாய் இடுவோம்.

"நாளைய உலகுக்கு நாமே வர்ணம் தீட்டுவோம் நம் உள்ளங்களில் துளிர் விட்டிருக்கும் நல்லிணக்க பயிரின் வாயிலாக"

**உசாத்துணைகள்**


1. அண்ணல் நபி (ஸல்) அழகிய வரலாறு
   மௌலானா அபூஷலிம் முஹம்மத் அப்துல்லாஹ் (ரஹ்)

. அண்ணல் நபிகளார் வாழ்வினிலே
   மௌலவி ஏ. குத்புதீன் அஹ்மதி பாகவி

. நெஞ்சுக்கு நிம்மதி
   மௌலவி நூஹ் மஹ்ழரி

4. நடுநிலை இஸ்லாமிய சிந்தனை
   கலாநிதி யூசுப் அல் கர்ளாவி

5. நபிகளார் வரைந்த கோடுகளில் மனித வாழ்வு
   உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் மிருகவதையும்

எம்.எப்.எப். பஸ்ரினா
இரண்டாம் வருடம்.
பொருளியல் மற்றும் உளவியல்

இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் ஏதோ ஒரு வகையில் மற்றொரு உயிரை கொன்று சாப்பிட்டுத்தான் உயிர்வாழ்கின்றன. ஆனால் இஸ்லாமியர்கள் மட்டும் அந்த இரக்கமற்ற செயலை செய்கின்றார்கள் அல்லது அதனை அதிகமாக செய்கின்றார்கள் என்று கூறுவதோ, வாதிடுவதோ தவறு. மனித இனத்தின் தேவை உயிரினங்களின் சமநிலை பேணுவதற்காகவே அனைத்து சமயங்களும் மாமிசம் உண்பதை அனுமதித்துள்ளது. ஆதிமனிதனது ஆரம்ப உணவில் கூட மாமிசமே முதலிடம் வகிக்கிறது. நாங்கள் இதனை மத கோட்பாடுகளுக்கப்பால் பகுத்தறிவைக் கொண்டு சிந்தனை ரீதியாக நோக்க வேண்டும்.

இந்த கேள்விக்கான பதிலை நாம் சமயங்களோடு ஒப்பிட்டு நோக்குவது எமக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தும். ஒரு சில குறிப்பிட்ட சமயங்களை மையப்படுத்தி, இழிவுபடுத்தி விமர்சனம் செய்து ஒரு சிலர் தமது ஆக்கங்களை இக்கேள்விக்கு பதிலாக இணையத்தளங்களில் வழங்கியுள்ளார்கள். ஆனால் நாம் இதனை வேறொரு கண்ணோட்டத்தில் நோக்குவது சாலச் சிறந்தது.

மீன், ஆடு, மாடு, கோழி மற்றும் பூச்சிகள், தாவரங்கள் எல்லாம் நம்மைப்போலவே உணவை எடுத்துக்கொண்டு கழிவை வெளிவிடுகின்றன, மூச்சு விடுகின்றன, வளர்கின்றன. இவற்றுக்கும் உயிர் இருக்கின்றது. உலகம் முழுவதும் இறைச்சி அதிக அளவில் மக்களால் விரும்பிச் சாப்பிடப்படுகின்றது. பொதுவாக இறைச்சி என்ற சொல் பாலூட்டி வகை விலங்குகளின் இறைச்சியை மனித இனம் நுகர்வுக்காகப் பயன்படுத்துவதை குறிப்பதாகக் கருதப்பட்டாலும் மீன், மற்ற கடல் உணவுகள், கோழியினங்கள் மற்றும் மற்ற விலங்குகளின் இறைச்சியையும் சேர்த்தே இறைச்சி என அழைக்கப்படுகிறது. இந்த உலகில் கோழி, மீன் மற்றும் கடல்வாழ், தரைவாழ் உயிரனங்களை நாம் அதிகமாக சாப்பிடுகின்றோம். ஆனால் மாடு, ஆடு போன்றவைகளை அறுத்து சாப்பிடுவதை இரக்கமற்ற செயல் என்று வாதிடுவோர்களே கோழி, விலங்குகள், தாவரங்கள், மீன் மற்றும் கடல்வாழ் உயிரினங்களை துடிதுடிக்க நீங்கள் கொலை செய்து சாப்பிடுவது இரக்கமுள்ள செயலா

பண்டைய காலத்திலிருந்து நமது முன்னோர்கள் விலங்குகளை உணவு, மகிழ்ச்சி, வியாபாரம் போன்றவற்றிற்காக வேட்டையாடும் வழக்கம் இருந்து வருகின்றது. வேட்டையாடுதல் உணவளிக்கும் ஒரு செயலாய் இருந்து வந்தது. உணவுக்காக மான், மரை, மாடு, பன்றி, முயல் முதலான விலங்குகள் மற்றும் பறவைகள் பொதுவாக வேட்டையாடப்பட்டன. பன்னெடுங்காலமாக தமிழ் அரசர்கள் வேட்டையாடியதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி இலக்கியங்கள் கூறுகின்றன. பண்டைய காலத்தில் மன்னர்கள் பொழுது போக்குக்காகவும், தனது வீரத்தை மெய்ப்பிப்பதற்கும் வேட்டையாடுதலை மேற் கொண்டனர். குறி பார்த்து சுடும் அல்லது ஆயுதங்களைக் கையாளும் திறனை பரீட்சிப்பதற்கும் வேட்டையாடுதல் மேற்கொள்ளப்பட்டது. எனவே கால்நடைகளை கொல்வது இரக்கமற்ற செயல். ஆனால் எமது முன்னோர்கள் அந்த கால்நடைகளை இரக்கமற்ற முறையில் கொன்று அதன் இறைச்சியை உண்டார்கள், விற்றார்களே ஏன் கொம்பு, பல், பால், தோல், உரோமம் பெறுவதற்காக பயன்படுத்தினார்களே ஏன்

எமது மூதாதையினர் ஆடு, மாடு, கோழி, பன்றி முதலான விலங்குகள், பறவைகள் மற்றும் பல உயிரினங்களை உண்ணவில்லையாயின் இந்த உலகின் சமநிலை எவ்வாறிருக்கும் என்பதை சிந்தியுங்கள். உணவுச்சங்கிலி தொடர்பாக நாம் அறிவோம். தாவரவுண்ணிகள், விலங்குண்ணிகள், அனைத்துமுண்ணிகள் என்பன பற்றியும் நாம் அறிவோம். இந்த உலகில் உயிரினங்களைப் படைத்த இறைவனால் அவற்றிற்கான ஊண், உடை, உறைவிடம் போன்ற சகல விடயங்களும் படைக்கப்பட்டுள்ளன. உணவுச்சங்கிலியை நீங்கள் சரியாக விளங்கிக் கொண்டால் இறைவனின் நியதியைப் புரிந்து கொள்வீர்கள். இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் ஏதோ ஒரு வகையில் மற்றொரு உயிரை கொன்று சாப்பிட்டு தான் உயிர் வாழ்கின்றன. மனிதர்களை அனைத்துமுண்ணிகளாகப் படைத்தது இறைவனின் நியதியாகும். எனவே மனிதர்கள் விலங்குகளையும் தாவரங்களையும் கொண்டு தங்களுடைய உணவுத்தேவையை நிறைவேற்ற வேண்டுமென்பதும் படைப்பாளனின் நியதியாகும்.

உயிரினங்களுக்கு உரிய முறையில் உணவு, நீர் கொடுக்காதிருத்தல், மாடுகளுக்கு டுவைத்தல் (குறிசுடல்), ஆண்மை நீக்கம் (நலமடித்தல் என பேச்சு வழக்கில் சொல்வார்கள்), கடுமையாக அடித்து துன்புறுத்துதல், அதன் சக்திக்கு மீறி அவற்றிடம் வேலை வாங்குதல், ஒய்வு கொடுக்காதிருத்தல், குட்டியையும், தாயையும் பிரித்தல், பொழுதுபோக்கிற்காக சாப்பிடப் பயன்படாத உயிரினங்களை வேட்டையாடல் மற்றும் பல மிருகவதைகள் போன்றவைகளே ஜீவகா ண்யம் அற்ற செயற்பாடுகளாகும். இப்படியான இரக்கமற்ற செயற்பாடுகளை தடுக்கும் இஸ்லாம் அதனை உரிய முறையில் மேற்கொள்வதற்காக கால்நடைகளை அறுக்கப் பயன்படும் கத்தி அல்லது வாள் மிகக் கூர்மையானதாக இருத்தல், அறுக்கும் போது கால்நடைகள் வலியை உணராதவாறு அல்லது மிகக்குறைவாகவே வலியை உணருமாறு மிக வேகமாக அறுக்கப்படல், அறுக்கும் போது, கழுத்தில் உள்ள மூச்சுக்குழாயும் இரத்தக்குழாயும் ஒரே சமயத்தில் அறுக்கப்பட்டு கால்நடைகளை உயிரிழக்கச்செய்தல். (அவ்வாறு செய்யும் போது அவற்றின் நரம்பு மண்டலம் துண்டிக்கப்படாமல் இருக்க வேண்டும்), அறுக்கப்பட்ட கால்நடைகளின் உடலில் உள்ள இரத்தம் முழுவதும் வழியும்படி செய்தல், அறுக்கும் போது ஏனைய விலங்குகள் பார்க்காதவாறு அறுத்தல் போன்ற நிபந்தனைகளை விதித்துள்ளது.

உடல் வலுப்பெற பலரும் இறைச்சியை சாப்பிடுவது அதிகரித்து வருகின்றது. ஆனால் முஸ்லீம்கள் ஜீவகா ண்யம் அற்றவர்கள், இரக்கமற்றவர்கள் என்று கருதுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு. முஸ்லிம்கள் அதிகமாக புலால் சாப்பிடுகிறார்கள் என்றால் அதிகமாக உயிர்களை கொலை செய்கிறார்கள் என்று அர்த்தமா, விரலுக்கேற்ற வீக்கம் என்று பழமொழி உண்டு. எனவே அவர்களிடம் இருப்பவற்றை கொண்டு சாப்பிடுகிறார்கள்.

நாங்கள் சிந்திக்க வேண்டிய விடயம் என்னவென்றால் முஸ்லிம்கள் மற்றும் ஏனையோர்கள் தாவரங்கள், விலங்குகள் மற்றும் மற்ற உயிரினங்களை சாப்பிடாவிட்டால் கல்லையும், மண்ணையும் சாப்பிட்டு நீரைக் குடித்தா உயிர்வாழ்வது, அது தான் சாத்தியமாகுமா இறைவன் "கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான் கொடுத்துத்தான் இரட்சித்தானா " என வறுமையில் வாடும் ஒரு புலவர் தன்னுடைய நிலைமையை எண்ணி வருந்திப் பாடுகிறார்.

இஸ்லாமியர்கள் விருந்தோம்பல் மற்றும் அவர்களின் மத கடமைகளான குர்பான், அகீகா, உழ்ஹிய்யா போன்றவைகளுக்காக ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற விலங்குகளை உரிய முறையில் அறுத்து ஏழை எளிய மக்களுக்காக வழங்குகிறார்கள். ஆனால் அவர்கள் அதனை வீண்விரயம் செய்வது குற்றம். வீண்விரயத்தை இஸ்லாம் வன்மையாக தடுத்துள்ளது.

"மேலும் நீங்கள் உண்ணுங்கள், பருகுங்கள், விரயம் செய்யாதீர்கள் நிச்சயமாக அவன் (அல்லாஹ்) விரயம் செய்வோரை நேசிப்பதிலலை." என்பதாக புனித அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்லாமியர்கள் மிகவும் தெளிவான முறையில் தங்களுடைய மத கோட்பாடு களுக்கமைய உணவுப் பழக்கத்தையுடையவர்கள். ஜீவகா ண்யம் பற்றியும் தெளிவான விளக்கத்தையுடையவர்கள். புனித இஸ்லாத்தில் எவற்றை மனிதன் உண்ண வேண்டும், உண்ணக்கூடாது என்ற வரையறைகள் உண்டு. எனவே இஸ்லாமியர்கள் பற்றிய இந்த பிழையான சிந்தனைகளை புரியப்படுத்துவதற்காகவே இக்கட்டுரை சிந்தனை ரீதியாக யதார்த்தத்தை புரியவைக்கும் நோக்கில் வரலாறு, உலக நியதி, பழமொழி, கோட்பாடு, எளிய மொழிநடை, சுய சிந்தனை, பாடல், உவமானம், உவமேயம் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையப்பெற்றுள்ளது. எல்லாப்புகழும் இறைவன் ஒருவனுக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் வரலாறு

பி. அப்ரா
இரண்டாம் வருடம்
ஊளவியல் மற்றும் மனைப்பொருளியல்

உளவியல் அல்லது மனோதத்துவம் (Psychology) என்பது மனிதனின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் ஒரு கற்கை மற்றும் பயன்பாட்டு ஒழுங்குமுறை எனக் கொள்ளப்படும். மேலும் உளவியல் என்பது நடத்தையை ஆராய்ந்தறிவதுடன் உள்ளம் அல்லது மனதின் செயற்பாடுகளை விளக்கும் ஒரு விஞ்ஞானமாகும். இந்த துறையின் தொழில் முறை அறிஞர் அல்லது ஆய்வாளர் உளவியலாளர் என அழைக்கப்படுவார். உளவியலாளர்கள் சமூக அல்லது நடத்தை விஞ்ஞானிகள் எனவும் வகைப்படுத்தப்படுவார்கள். உளவியல் ஆய்வு என்பது அடிப்படை அல்லது செயல்முறை சார்ந்ததாகக் கருதப்படும். உளவியலாளர்கள் தனிப்பட்ட மன செயற்பாடுகளின் பங்கினை மற்றும் சமூக ஒழுக்கத்தை புரிந்து கொள்ள முயற்சிக்கும் பொழுது அடிப்படையான உளவியல் மற்றும் நரம்பியல் செயற்பாடுகளும் வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே மனித நடத்தையை விபரித்தல், விளக்குதல், கட்டுப்படுத்துதல் என்பனவாகும்.

உளவியல் எனும் சொல்லை முதன் முதலில் கிரேக்க தத்துவ ஞானியான யூடோவ் யொசிலியஸ் என்பவர் 1950ல் பயன்படுத்தினார். உளவியல் எனும் சொல் கிரேக்க மொழிச் சொற்களான Psyche என்ற ஆன்மா என்பதனைக் குறிக்கும் சொல்லையும் Logos என்ற இயல் என்பதனைக் குறிக்கும் சொல்லையும் மூலமாகக் கொண்டு உருவாக்கபட்டது. Logia எனும் சொல்லின் பொருள் மனதைப் படிப்பது என்று பொருள்படும். Psukhe எனில் சுவாசம், ஆவி, ஆன்மா என்று Logia எனில் ஆய்வு அதுவும் ஒரு கல்விக் கழகத்தில் பாடப்பயிற்சி ஒழுங்குமுறை மற்றும் அறிவியல் சார்ந்த மானிட விலங்குகளின் மனோ செயல் முறை மற்றும் நடத்தை பற்றியதாகும்.

உளவியல் ஆய்வானது தத்துவ ரீதியல் எகிப்து, கிரிஸ், சீனா, இந்தியா, பாரசீகம் போன்ற புராதன நாகரிகங்கள் பற்றி அறிய காலத்தால் பின்னோக்கியே செல்கின்றது. உளவியல் ஓர்படுக்கை வசதி கொண்ட மருத்துவ போதனை சாலை (இப்ராகிம் பி சையத், இஸ்லாமி மருந்து) மற்றும் பரிசோதனை நோக்கினை முதலில் ஏற்றுக் கொண்டவர்கள் இடைக்காலத்து முஸ்லிம் உளவியலாளர்கள் மற்றும் உடலியலாளர்கள் ஆவார்கள். அவர்கள் தாம் மனநல மருத்துவ மனைகளை அத்தகு நோக்கங்களுக்காக எழுப்பினார்கள்.

180 ம் ஆண்டில் பிரெஞ்சு உளவியல் நாரி பைஞ்ரி கேபானிஸ் உயிரியல் உளவியல் பற்றிய ஒரு கட்டுரை எழுதி முன்னோடியாக திகழ்கின்றார். Rapports du Physique et dumosal de L hommeve என்பதே இக்கட்டுரையாகும் இதன் பொருள் "மனிதனின் மீது" என்பதே ஆகும். கேபானிஸ் பொருள் விளங்குவது முந்தை உயிரியல் ஆய்வுகள் அடிப்படையில் யாதெனின் நரம்பு மண்டலத்தின் உடமைகளாக உள்ளது ஊறுகோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு மற்றும் ஆன்மா இரண்டுமே தான் என்று விவாதித்துள்ளார். அல்டிகேனன் காட்சி ஒளி ஆய்வு நூல் 10 1இல் வெளிவந்தமையால் அதுவே தான் உளவியல் பரிசோதனை பற்றி விபரமறிய காலத்தில் பின்னோக்கிச் செல்கின்றது. அதன் விளைவாக உளவியல் ஒரு சுயேட்சையாக ஆய்வுக்கு பரிசோதனைக் களமாக 18 9ம் ஆண்டு முதல் தொடங்கியது. ஜேர்மன் இயற்பியலாளர் வில்கெல்ம் வுண்ட் முதல் பரிசோதனை கூடம் ஒன்று நிறுவினார். அது உளவியல் ஆராய்ச்சிக்காக பிரத்தியேகமாக லிப்ஸிக் (லேப்கிக்) பல்கலைக்கழத்தில் நிறுவினார். எனவே வுண்ட் "உளவியலாளரின் தந்தை" எனப் போற்றப்படுகின்றார். 18 9ம் ஆண்டு அதனால் சில சமயங்களில் உளவியலாளரின் "பிறந்தநாள்" என்று கருதப்படுகின்றது. அமெரிக்க தத்துவ உளவியல் ஞானியுமான வில்லியம் ஜேம்ஸ் வெளியிட்ட இனப்பெருக்கம் பற்றிய புத்தகம் "உளவியல் கோட்பாடுகள்" 1890ம் ஆண்டில் பல்வேறு வினாக்களுக்கு அடிகோலியது. அதனால் உளவியல் ஞானிகள் தொடர்ந்து மேலும் பல வருடங்களாக கவனஞ் செலுத்துதலாயினர். உளவியல் துறையில் முக்கிய பங்காற்றிய பிற அறிஞர்களில் ஒருவராகிய ஜேர்மன் உளவியல் ஞானி ஜேர்மன் எப்பின்காஸ் (1850 - 1909) நினைவகம் பற்றிய ஒரு பரிசோதனை ஆய்வினை பெர்லின் பல்கலைக்கழத்தில் நடத்தினார்.

மேலும் ரஷ்ய உளவியல் ஞானி இவன்பாவ்லோவ் (1849 - 19 6) என்பவர் ஆராய்ந்து அறிந்து கற்பிக்கும் வழிமுறை தற்போது சிறப்பு வாய்ந்த ழ்நிலை அமைப்பாக குறிப்பிடுவதற்கு காரணமாக விளங்கினார். 1959ம் ஆண்டில் தொடங்கிய பரிசோதனை நுட்பங்கள் வுண்ட், ஜேம்ஸ் ஜெம்ஸ், எப்பின் காஸ் ஆகியோர்களால் வரையறுக்கப்பட்டது. மற்றவர்கள் அதனை பரிசோதனையின் உளவியல் என்று வலியுறுத்துகின்றனர். இது அறிவாற்றல் ஆகவும் வளர்ந்துள்ளது. (செய்தி மற்றும் செயல் பாங்கு சம்பந்தம் கொண்டிருப்பதிலும் இறுதியாக ஒரு பரந்த அறிவாற்றல் விஞ்ஞானத்தின் பகுதியாக அமைந்துள்ளது.) ஆரம்ப வருடங்களில் இந்த வளர்ச்சியொரு "புரட்சி" என்று கருதப்படுகின்றது. அது எண்ணத்தில் கடும் சுமைகளுக்கு எதிரிடையாகவும், டுகொடுத்தும் வந்துள்ளது. இடைப்பட்ட காலத்தில் மனோ இயக்கவியல், நடத்தையியல் போன்றன வளர்ச்சியடைந்துள்ளன.

1890 களில் இருந்து இறப்பு வரை 19 9, ஆஸ்திரியன் மருத்துவன் சிக்மண்ட் பிராய்ட் ஒரு மனநோய் நீக்கும் முறையை மனோபகுப்பாய்வு எனும் பேரில் கண்டார். பிராய்டின் மனதை கிரகித்தல் பெரும்பாலும் உட்பொருள் வெளிப்படுத்தும் முறைகளான உள்முக நோக்கு படுக்கை மருத்துவ பயிற்சி உற்றுநோக்கல் அடிப்படையில் சார்ந்துள்ளன. அதிலும் குறிப்பாக தன்னுணர்வற்ற சச்சரவுகள், மனஇறுக்கம் மற்றும் மனநோய் குணம்தீரக் கூடியதாய் உள்ளது. பிராய்டடின் கோட்பாடுகள் பிரபல அடைந்தன. ஏனென்றால் பால்தன்மை, இயற்கைத் தூண்டுதல்களை அடக்குதல், தன் உணர்வற்ற மனம் ஆகியவற்றை எல்லாம் சமாளிப்பதாக அமைந்திருப்பது காரணமாகும். இவைகள் எல்லாம் ஒரு காலத்தில் தொடக் கூடாக படங்களாக கருதப்பட்டன.

பிராய்ட், அவைகளுக்கு ஒரு ஊக்கியை அறிந்ததால் பண்பட்ட சமுதாயத்தில் சிறந்த மனதுடன் விவாதிக்க முடிந்தது. மருத்துவ பயிற்சி ரீதியில் எண்ண இயைபு முறை, நோய் நீக்கும் கலைமீதுள்ள அக்கறை கனவுகளின் வளர ஒரு முன்னோடி உதவிக் கரமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் திகழ்ந்தார். பிராய்ட் ஒரு குறிப்பிடத்தக்க செல்வாக்கு ஸ்வில உளவியல் ஞானி கார்ல் ஜங் மீது கொண்டிருந்தமையால் அவரின் பகுப்பாய்வு “மனோதத்துவம், ழ்நிலை மனோதத்துத்திற்கு” ஒரு மாற்றாக அமைந்தது. 0ம் நூற்றாண்டின் மத்தியில் ஒரு நன்கறிந்த உளவியல் பகுப்பாய்வு சிந்தனையாளர்கள் பின்வருபவர்கள் அவர் சிக்மன்ட் பிராய்ட் மகள் அன்ன பிராய்ட், அவரும் ஒரு உளவியல் பகுப்பாய்வாளர்கள் மேலும் ஜேர்மன் அமெரிக்க உளவியல் ஞானி எரிக் எரிக்சன் அஸ்திரியன் பிரிட்டிஷ் உளவியல் ஞானி மேலான் க்லேன் ஆங்கில உளவியல் பகுப்பாய்வாளர் மற்றும் மருத்துவருமான டி.டபள்யூ லின்னிகாட் ஜேர்மன் உளவியல் ஞானி கரேன் ஹோர்றே, ஜேர்மனில் பிறந்த உளவியல் ஞானி மற்றும் தத்துவ ஞானி எரிச் பிரோம், ஆங்கில உளவியல் ஞானி ஜான் பவுல்மி 0ம் நூற்றாண்டு முழுமையும் இத்தகைய மாறுபட்ட சிந்தனைக் கூடங்கள் வளர்ச்சி கண்டன. அவைகள் புதிய பிராடியன் என்றும் வகைப்படுத்தப்பட்டது.

0ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடத்தையியல் துறை அமெரிக்க உளவியல் ஞானி ஜான் வாட்ஸன் அவர்களால் நிறுவப்பட்டது. பிறகு அதை தழுவி விரிவாக்கப்படுத்திய அமெரிக்கர்கள் எட்வர்டு தார்ண்டைக், க்ளார்க் எல் ஹல் எட்வர்ட் சி. டோல்மன் மற்றும் பின் நாட்களில் பி. எப் ஸ்கின்னர் ஆவார்கள். நடத்தை நெறியில் ஒரு நம்பிக்கையாக பிரதிபலித்தது. ஆய்வு கூடத்தில் விலங்குகளை வைத்து பரிசோதனை மேற்கொள்ளும் வழிமுறையியல் பிரசித்திப் பெறலானது. ஓர் உயிரின அறிவியல் துறை நடைமுறை அறிவிக்கேற்ப வளர்ந்தது போல எனவே பலன் தரும் மனோ சமூக புரிந்துணரும் வகையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டமையால் மனோ இயக்க பகுப்பாய்வு பராய்டால் கையாளப்பட்டது. அல்லது வுண்ட் உள்முக நோக்கு கையாண்டார்.

1950களில் நடத்தையியல் மற்றும் மனோபகுப்பாய்வு இரண்டின் விளைவாக மனித இனநல உளவியல் எனும் கோட்பாடு வளர்ச்சி கண்டது. இக்கோட்பாடு பயன்படுத்தும் உத்திகளாவன “அறிவின் அடிப்டையில் நிகழ்ச்சி உணர்வுகள் மட்டும் அல்லது என்ற கோட்பாடு, அகநிலை எனும் உள்ளுணர்வு சார்பு முதல் நபர் வகைப்பாடுகள் மனித இனநல நோக்கு போன்ற அனைத்தும் கையாண்டு ஒரு முழு மனிதனின் கணநேரத் தோற்றல் காணப்பெறுவதே ஆகும்.

மனித இனநலக் கோட்பாடு அடிப்படையில் சிறப்பம்சமாக மானிடப் பிரச்சினைகள் அதாவது “சுயஅடையாளம் அறிதல், இறப்பு, தன்மை, மற்றும் அர்த்தம்” என்பதெல்லாம் ஆராய்ந்து அறிவதே ஆகும். இக் கோட்பாட்டின் நோக்கம் யாதெனில் அகநிலை பொருள், தீர்மானவியல் புறக்கணித்தல், நேர்முக வளர்ச்சிக்குரிய கவலை இவைகள் எல்லாம் தான் வலியுத்தப்படுகின்றதே தவிர நோய்க்குறி நூல் அறிவு மட்டுமல்ல இத்தகைய சிந்தனைப் பள்ளியின் ஸ்தாபகராக இருந்த அமெரிக்க உளவியல் ஞானி ஆப்ரஹம் மாஸ்லோவ் என்பவர் மனிதனின் அத்தியாவசியங்கள் ஒரு தொகுப்பாக அல்லது படிநிலை அமைப்பாக வெளியிட்டார்.

அந்த வகையில் விஞ்ஞானங்களைப் போலவே தோன்றி வளர்ந்து வருவதை நோக்கும் போது அதுவும் மற்றைய விஞ்ஞானங்களுக்கு இணையான ஒரு முக்கிய இடத்தினையும் பெறுகின்றது. குற்றங்களும் குழப்பங்களும் மன முரண்பாடுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகங்களும் வாழ்கைத் தோல்விகளும் தற்கொலைகளும் நிறைந்துள்ள இன்றைய மனித சமுதாயத்திற்கு மிகவும் பயன்படும் ஒரு விஞ்ஞானம் உளவியலாகும். இன்று உளவியல் வெளிப்படையான அல்லது கவனிக்கக் கூடிய நடத்தைகளான நடத்தல், பேசுதல், சிரித்தல், அடித்தல் மட்டுமல்ல அது இரகசியமான நடத்தைகள் பற்றியே கவனித்தலையும் உள்ளடக்கியது. இரகசியமான நடத்தைகள் உள்ளே நடக்கும் விடயங்களான கற்றல், தூண்டுதல், ஆர்வங்கள், நம்பிக்கைகள் மற்றும் உணர்வுகள் என்பவற்றையும் உள்ளடக்கி விஞ்ஞான பூர்வமாக ஒழுங்படுத்தப்படுகின்றன. மேலும் அமைதியிலிருந்து வன்முறை வரை பயங்கரவாதத்திலிருந்து யுத்தம் வரை மனிதன், மிருகங்கள், தாவரங்கள் சகலவற்றையும் தற்கால உளவியல் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

உசாத்துணைகள்

https://ta.m.wikipedia.org/wiki/ உளவியல்

உளவியல் ஓர் அறிமுகம், கலாநிதி க. கஜவிந்தன், சிரேஷ்ட உளவியற்துறை விரிவுரையாளர், தலைவர் மெய்யிற்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை.

# என்னைச் சுமந்தவள் இவள்

கருவுக்குள் என்னைப் பதியம் போட்டு
பத்து மாதங்கள் பக்குவமாய்ச் சுமந்து
விழிகளை மூடி வலிகளைத் தாங்கி
இப் பூமிக்கு என்னைத் தந்தவள்.
கூட்டியும் பெருக்கியும் கொண்டுவந்த
கூலிக்காசில் என்னைக்
கூட்டலும் பெருக்கலும் படிக்க
வைத்தவள் இவள்.
காதணிகளையெல்லாம் விற்றுவிட்டு எனக்கு
உருவக அணிகளையும்
உவமை அணிகளையும்
வாங்கித் தந்தவள் இவள்.
தான் அணிவதற்குக் கூட
செருப்புகளை வாங்காமல்
நான் பறப்பதற்காய் சிறகுகளை
சேமித்துக் கொடுத்தவளும் இவளே.

நிஜத்தின் நிழலும் நீதான்
என்நெஞ்சில் இதழும் நீதான்
என்னுயிரின் துடிப்புகள் நீதான்
என்னுணர்வின் தூண்டுதல் நீதான்.
போலிகள் இல்லை உந்தன் அன்பில்
வெறும் வேஷங்களில்லை உந்தன் நட்பில்
கடிதம் கூட எழுதத்தெரியாத இவள்தான்
என்னைக்
கணிதமும் கவிதையும் எழுத வைத்தாள்.

எம். நதீரா பர்வின்
மூன்றாம் வருடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The forgotten will: Feminism in Islam

**S.H.H.F. Hasna**
*Second Year*
*Geography (Spl.)*

Islam emphasises racial diversity, gender equity and has always liberated women's position in the society. Islam has raised the status of women from mere earthly beings, high enough that the paradise lies at her feet.
"...Paradise is at her feet." (Al-Tirmidhi)

However, today, in the twenty- first century, almost a thousand five hundred years after the final prophet (peace be upon him), we still observe ill-treatment of women in the name of religion in the form of forced marriages, mandated clothing, domestic and social violence, prejudiced stereotypes and expectations which reminisces the times of "*Jahiliyah*" (the days of ignorance). These discrepancies do not root from Islamic teachings; however, they are being practiced in the name of certain ill-interpretations of Islam. Misinterpretation and manipulation of Islam has influenced and infiltrated our social, cultural norms, laws, daily lives to a point where we still can't recognize it. Therefore, it is crucial to rectify the damage done in the name of religion. Feminism can be a movement to end all interconnected systems of oppressions. Feminism is not exclusive struggle of women, it's the responsibility of men and women of the society to work actively towards the long-term solutions and to actively remove societal red-tapes which hinder our basic rights. A woman should speak and be heard without unfair obstacles and women's standards should be reverted to what was promised in Islam.

The stereotypical muslim woman is expected to have a reserved nature, not outspoken, accept the fate given by the society and live life accordingly. Thus, presuming a muslim woman to be weak and docile. Growing up as a muslim girl, as they get older, they quickly get introduced to the cultural aspect of religion. The word "Haram" meaning religiously prohibited and "Aib" meaning culturally inappropriate are exchanged carelessly, as they meant the same and have equal consequences. This is when these stereotypes are forcefully integrated wrapped as religious teachings. For example, the hijab has become so politicized that many still do not understand the original purpose. Hijab or a headscarf is a constant spiritual jihad (*struggle*), practiced


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

solely for the creator, and in line with submitting to him. No one has the right to have a say or dictate on that decision, or on the specifics of how, when and why it is worn. A woman or a girl's attire is her personal and spiritual choice, beyond a society (including men as a subset) or an organization's jurisdiction. Hijab is not a sole representation of Islam, but a choice, it should not be an abstract form of oppression. Hijab is not mandated, nevertheless, it is part of the Islamic guidelines (suggestion or a recommendation), envisioned as a sacrifice to Allah, not a sacrifice to another man, woman, society or any earthly entity, it is meant to be a decision made by a woman to be modest. Hijab does not define an Islamic woman, nor correlated to her spirituality. Should we be a stereotypical muslim woman? Can a girl be forced to marry against her will? and still, the answer would be no. Feminism is a means to defy such stereotypes, to speak out against injustices against women.

The first word in the Qur'an, "Iqra," (meaning "read/recite") is recited by all including men and women. The verse directly implies to seek, spread and retain knowledge. In order to mitigate the deviations, we should read, learn, research and analyze the original scriptures. In sociological terms, a society comprises of individuals, collection of families who share same culture or faith in a definable territory. An Islamic society differs from the typical definition where the communities are primarily bound by faith, with an outreach of plethora of cultures and territories. In any Islamic society, women are not an isolated entity, they play a vital role as individuals, in a family and they are an integral aspect of the community. Women rear and raise generation after generation, they directly teach and shape our community. Thus, their participation in the community is pivotal. Islam has taught muslims to first to respect (and give importance to) the mother, second to respect the mother, and third to respect the mother and then to respect the father (Bukhari, Muslim), stressing the importance of the respect women should receive in a family and a society. The only way to ensure the full participation of women is to reclaim the original practices of islam. A muslim woman should be able to be proud of her faith, it gives her the strength and conviction to perform her duties as an individual and to society.

A brief look into the past and hearsay evidence, muslim women were leaders, innovators, who were politically strong, contributed economically, even served and lead a military. In fact, the first muslim was a woman: Khadija(Radi Allahu Anha) who was an entrepreneur, financed Islam in its infancy. Whereas, the cultural norms of our current society frowns at a working woman. Islam goes one step further, Sumayyah


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

bint Khabbat, the first to die for Islam, Khawlah and Nusaybah bint Ka'ab were the notable muslim warriors, fought in many battles, they were strong, and was in a position of leadership. Aisha bint Abu Bakr (Radi Allahu Anha) was an administrator a great scholar of hadith and jurisprudence, an educator, and was an orator. In essence, muslim women were working, in a position of power, they were scholars, lawmakers, and more importantly, they were not withheld.

Why weren't we learning about these women? Do they resonate with the twenty-first century muslim women? Why is the modern woman being relegated to positions predating the teaching of our faith? If we are equal in the eyes of God, why aren't we equal in the eyes of men? Why are male-dominated societies and religious institutions deciding the fate of women? As a 21st century woman, when looking back to the Islamic women of the past, I wonder where did we go wrong? Our foundation seems to be fragmented. Until the system is rectified, we can't realistically expect to have full economic and political participation of woman. Does Islam and feminism go hand in hand? The forgotten will is that Islam shouldn't need an external feminism if appropriately interpreted and practiced. Nevertheless, the deviations need to be addressed, distorted religious messages should be challenged by women as well as men. We (men and women) should work towards betterment of our society, gender equity and be an example for generations to come.

## சுவனத்து இன்பங்கள்

மண்ணவர்கள் வியக்கும்
மறையா அற்புதங்கள்
மண்ணுலகத்திலே உண்டு எனினும்,
மனது மயக்கும்
மேலான இன்பதனை
மிகையாகப் படைத்துள்ளான்
மண்ணோரின் இரட்சகன்
அல்லாஹுத்தஆலா !

அருளாளனின் ஏவல்களை
அழுகுற அடிபணிந்து,
அகமதை அடக்கி வைத்து,
முஃமின் எனும் மேன் மனிதருக்கு
மென்மையான ஹூருல்ஈன்கள்
மாந்தர்களும் - மணிமணியான
மழலைகளின் உபசரிப்புகளும்

சலசலப்புடன் ஓடும் தேனாறுகளும்
சஞ்சலமின்றி வாழ்ந்த,
சன் மார்க்கத்தை நிலைநிறுத்திய
சோரதா உனக்குத் தான் !

கற்பனைக்கும் எட்டாத
சுவனத்து இன்பங்கள்
அனந்தரமாகப் - புரிவான்
அருளை ஏக இறைவன்

எம்.எஸ்.எம். மும்தாஸ்
ஊடக கற்கை சிறப்பு
இரண்டாம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பொழுக்கத்தின் முகவரி ஹிஜாப்

ஏ.ஏ.எப். அஜீமா
இரண்டாம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

மனித சமூகத்திற்கு அல்லாஹ்வினால் கிடைக்கப்பெற்ற எண்ணிலடங்கா அருட் கொடைகளில் மிகவும் முதன்மைவாய்ந்தது இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த வாழ்க்கை நெறிமுறை தான். அந்த வாழ்கை நெறிமுறைகளை நம்பி ஏற்றுக்கொண்டு செயலாற்றுகின்ற மனிதர்களை முஸ்லிம்கள்- இறைவனுக்கு கீழ்ப்படிவோர் என்றும், மு மின்கள்- இறை நம்பிக்கை யாளர்கள் என்றும், இஸ்லாம் அழைக்கின்றது.

அந்த வகையில் இவ் ஆடம்பர உலகத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இஸ்லாமிய வாழ்க்கை நெறிமுறைகளை கடைப்பிடிப்பதில் அலட்சியப் போக்கையே கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பெண்களின் ஆடை அடையாளம் இன்று பல சர்ச்சைகளுக்கும் விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்பட்டு வருவதையும் அதை அணிவதற்கு உலக நாடுகளில் பல்வேறு தடைச்சட்டங்கள் இயற்றப்பட்டு வருவதையும் கண்டு வருகிறோம். இவ்வாறான ஒரு ழ்நிலையில் பெண்கள் அணியும் ஹிஜாப் பற்றிய விழிப்புணர்வு அத்தியவசியமாகிறது.

**ஹிஜாப் என்றால் என்ன?**

ஹிஜாப் என்பது வெறுமனே தலையை மட்டும் ஒரு ஸ்காப் போன்ற சிறு துணித்துண்டினால் சுற்றிக்கட்டுவது இஸ்லாம் சொன்ன ஹிஜாப் அல்ல என்பதை முதலில் அனைவரும் தெளிவாக தெறிந்து கொள்ள வேண்டும். ஹிஜாப் என்ற அரபுப்பதத்திற்கு திரை, தடுப்பு, மதில் ( curtain, barrier, screen, veil, partition ) என்று பல பொருள்கள் உண்டு. இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஹிஜாப் என்பது ஒரு தடுப்பு, எதற்கான தடுப்பு எல்லாவற்றிற்கும்- எண்ணங்கள், செயல்கள், இச்சைகள், ஆடைகள் என ம்புலன் களுக்குமான தடுப்பு, வரம்பு மீற அனுமதிக்காத தடுப்பு. அதாவது அல்குர்ஆனின் ( 54) வது வசனத்தில் அல்லாஹ் நபியுடைய மனைவியருக்கு கட்டளையிடும் ஹிஜாப் என்பது மேனியை மறைக்கின்ற ஆடையல்ல, மாறாக ஆளையே மறைக்கின்ற திரையைத்தான் அல்லாஹ் " ஹிஜாப் " என்று வரையறுத்துள்ளான். அதாவது திரைக்குப் பின்னால் இருப்பவரை வெளியில் இருக்கும் ஒருவரால் எவ்வாறு பார்க்க முடியாதோ அதைப்போன்று தான் ஹிஜாப் எனும் திரைக்குப் பின்னால் மறைந்திருக்கும் ஒரு பெண்ணின் உருவத்தை அடையாளம் காணமுடியாமல் இருக்கும். இதற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாக பாத்திமா (ரழி) அவர்களின் வாழ்கைச் சம்பவத்தை கூறமுடியும், ஒரு நாள் பாத்திமா (ரழி) அவர்கள் வெளியில் சென்று வீடு திரும்பும் வழியில் அலி (ரழி) அவர்களும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களும் உரையாடிக் கொண்டிருந்தார்கள் பாத்திமா (ரழி) அவர்கள் வீட்டை நோக்கி நடந்து செல்லும் போது அலி (ரழி) அவர்கள் இந்த வயோதிபப் பெண் யார் என்று முஹம்மத் நபி (ஸல்) அவர்களிடம் வினவினார்கள். தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியையே அடையாளம் காண முடியாமல் இருந்ததற்கு காரணம் பாத்திமா (ரழி) அவர்களின் ஹிஜாப் முறையாகும்.

அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான், "இன்னும் மு மீனான பெண்களுக்கும் நீர் கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் தங்கள் வெட்கத்தளங்களைப் பேணிக் காத்துக் கொள்ள வேண்டும் தங்கள் அலங்காரத்தை அதினின்றி (சாதாரணமாக வெளியில் தெரியக் கூடியதைத் தவிர வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது இன்னும் தங்கள் முந்தானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும் மேலும் (மு மீனான பெண்கள்) தம் கணவர்கள் அல்லது தம் தந்தையர்கள் அல்லது தம் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தம் புதல்வர்கள் அல்லது தம் கணவர்களின் புதல்வர்கள் அல்லது தம் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் புதல்வர்கள் அல்லது தம் சகோதரிகளின் புதல்வர்கள் அல்லது தங்கள் பெண்கள் அல்லது தம் வலக்கரங்களை சொந்தமாக்கிக் கொண்டவர்கள் அல்லது ஆடவர்களில் தம்மை அண்டி வாழும் (பெண்களை விரும்பமுடியாத அளவு வயதானவர்கள், பெண்களின் மறைவான அலங்காரங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத சிறுவர்கள்) ஆகிய இவர்களைத் தவிர (வேறு ஆண்களுக்குத்) தங்களுடைய அலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது மேலும் தாங்கள் மறைத்து வைக்கும் அலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம் மேலும் மு மின்களே (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்) நீங்கள் தவ்பா செய்து (பிழை பொறுக்கத் தேடி) நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். (அல்குர் ஆன்- ரத்துந்நார்)( 4 1)

ஹிஜாப்பைப் பற்றி இவ்வசனம் தெளிவுபடுத்தும் ஆடை விதிமுறைகளைப் பார்ப்போம்.

**(1). தலையை மட்டும் மறைத்துக் கொண்டால் போதுமா?**

இந்த வசனத்தை உற்று நோக்கும் போது தங்கள் முந்தானைகளை மேற்சட்டையின் மீது போட்டு கழுத்து, நெஞ்சு ஆகியவற்றையும் மறைக்க வேண்டும். அதாவது தலையை மறைக்கப் பயன்படுத்தும் துணியால் இந்த பாகங்களையும் மறைக்க வேண்டும் என்ற தெளிவு கிடைக்கின்றது. இது பர்தா, ஜில்பாப், புர்கா என பல பெயர்களால் இன்று அழைக்கப்படுகின்றது. ஆனால் இன்று சில பெண்கள் நாகரீக மோகத்தால் சிறிய துணியினால் தலையை மட்டும் மறைத்துக்கொண்டு (shawl wrapping) ஏனைய பாகங்களான கழுத்து, நெஞ்சுப் பகுதியை மறைக்காமல் விட்டு விட்டு தாங்களும் ஹிஜாபின் ஒழுங்கு முறைகளைப் கடைப்பிடிப்பதாக எண்ணிக்கொள்கின்றனர். இது அறியாமைக்கால பெண்களின் நடைமுறையாகும். மேலும் இங்கு, "சாதாரணமாக வெளியில் தெரியக் கூடியதைத் தவிர வேறு எதையும் வெளிக்காட்டலாகாது" என்ற வசனத்தில் "வெளியே தெரிவன" முகத்தையும் இரு கைகளையும் குறிக்கும் என்பது இப்னு உமர் (ரழி) அவர்களின் கருத்தாகும்.

எனவே இதிலிருந்து, "பெண்கள் முகத்தையும் மணிக்கட்டுவரை இரு கைகளையும் தவிர உடலின் ஏனைய பாகங்கள் எல்லாவற்றையும் மறைக்க வேண்டும்" என்ற ஆடை விதிமுறை தெளிவாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(2). இறுக்கமான உடைகள் அணியலாமா?**

இன்று சில சகோதரிகள் அபாயா என்ற பெயரில் உடலின் அங்கங்கள் அச்சு அசலாக வெளித்தெறியும் வகையில் அணிந்து தலையை மட்டும் ஒரு துணியால் மறைப்பது ஹிஜாப்பாகாது. உடலமைப்பை வெளிப்படுத்தும் இறுக்கமான ஆடைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அணியக் கூடாது. நபி (ஸல்) கூறினார்கள், என் உம்மத்தில் பெண்களிலிருந்து ஒரு சாரார் ஆடை அணிந்தும் நிர்வாணமாக இருப்பார்கள். அவர்களின் தலைகள் ஒட்டகங்களின் திமில்களைப் போன்று உயர்ந்திருக்கும். அவர்கள் சுவனம் நுழையவே மாட்டார்கள், ஏன் சுவனத்தின் வாடையைக்கூட நுகர மாட்டார்கள். (ஆதாரம் முஸ்லிம்) இது இன்று நாம் நம்மவர்களுக்கிடையில் நடைமுறையில் காணும் ஒரு விடயமாக இருப்பது கவலைக்குரியதொன்றாகும்.

எனவே "ஆடைகள் மிகவும் இறுக்கமின்றி நெகிழ்வானதாக இறுக்க வேண்டும்" என்ற இரண்டாவது நிபந்தனை விளக்கப்படுகின்றது.

**(3)மெல்லிய ஆடைகளை அணியலாமா?**

மெல்லிய துணிவகைகளால் ஆன ஆடைகளை அணியக்கூடாது. உடல் முழுவதும் மறைத்து இருந்தாலும் தோலின் நிறம் வெளியே தெரிகின்ற ஆடைகளை ஹிஜாபாக ஆக்க முடியாது. நபி(ஸல்) அவர்களுக்கு ஒரு மெல்லிய உடை அன்பளிப்பாக கிடைத்தது. அதை ஒஸாமா பின் ஜைத்(ரழி) அவர்களிடம் கொடுத்தார்கள். அதை அவர் தன் மனைவிக்கு கொடுத்துவிட்டார். நபி(ஸல்) அவரிடம் இதைப்பற்றி கேட்டபோது தம் மனைவிக்கு கொடுத்ததை தெரிவித்தார்கள். அதற்கு நபி(ஸல்) அதை அணியும் போது மேலே வேறு ஒரு ஆடையும் சேர்த்து அணியட்டும். ஏனெனில் அவ்வுடை அவரின் எலும்புகளின் அளவை விவரிக்கும் விதமாக இருப்பதாக நான் அஞ்சுகிறேன் என நபி(ஸல்) கூறினார்கள்.

"எனவே உடல் உறுப்புக்களை பார்க்கக்கூடிய வகையில்,அணியும் ஆடைகளை மெல்லியதாக இருக்கக் கூடாது" என்பது ஒர் நிபந்தனையாகும்.

**(4) ஹிஜாப் பிறறின் கவனத்தை ஈர்க்கும் விதமாக இருக்கலாமா?**

இன்று அனேகமான பெண்கள் மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக ஆடை அணிகிறார்களே தவிர இஸ்லாமிய ஷரீஆவுக்கு உட்பட்டுள்ளதா என்பதை பார்க்க மறந்துவிடுகிறார்கள். ஆடையானது பிற ஆடவரின் கவனத்தை கவரும் விதமாக இருக்கக் கூடாது. அல்லாஹ் தனது திருமறையில் "அழகை வெளிப்படுத்தக்கூடாது" எனத் தெளிவாக கூறுகின்றான். இருந்தும் சில சகோதரிகள் ஹிஜாப் அணிகின்றோம் என்ற பெயரில் அலங்கரிக்கப்பட்ட ஹிஜாபை அணிந்து கொண்டு வலம் வருகின்றார்கள். பள பளக்கும் கற்கள், கண்ணை கவரும் பல வர்ண டிசைன்கள் உள்ள இந்த ஹிஜாப் சாதாரண ஆடைகளில் அவர்கள் இருப்பதை விட கூடுதல் அழகை வெளிப்படுத்தக்கூடியதாக இருப்பதனால் ஆண்களின் பார்வை அவர்களை நோக்கிச் செல்கிறது. இதனால் ஹிஜாபின் முக்கிய அம்சமே முடக்கப்பட்டுவிடுகிறது.

மேலும் இன்று அலங்காரத்தின் உச்சகட்டமாக செருப்பு, கைச்செயின், கைப்பை, டொப், கிளிப் போன்ற உடைகளில் சத்தம் வரும் மணிகள் வைக்கப்படுகின்றன. இவை ஹிஜாபின் ஒழுங்குகளுக்கு எதிரானவை. இதையே அல்லாஹ் தனது திருமறையில் கூறும் போது, "மேலும் தாங்கள் மறைத்து வைக்கும் அலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம்" என்று எச்சரித்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இக் குர்ஆன் வசனத்தில் அல்லாஹ், உங்கள் பார்வைகளை தாழத்திக் கொள்ளுங்கள் என்று கட்டளையிட்டுள்ளான். ஏனெனில் ஒரு பார்வை ஆயிரம் வார்த்தைகளைக் காட்டிலும் அர்த்தம் மிக்கவை. எனவே இஸ்லாமிய முறைப்படி முழுமையாக நாம் உடையணிந்திருந்தாலும், நமது பார்வைகளைத் தாழ்திக்கொள்வதைக் கொண்டு நமது வெட்கத்தைப் பேணிக்கொள்ள வேண்டும். மேலும் பெண்கள் ஆண்களை கவரும் விதமாக நெஞ்சை நிமிர்த்தி பேஷன் ஷோக்களில் நடப்பதைப் போல் நடக்கக் கூடாது, கண்ணியமான முறையில் ஒழுக்கத்துடன் நடையைப் பேணிக்கொள்ள வேண்டும். "நபி (ஸல்) காலைத் தட்டி நடக்கும் பெண்கள் நரகத்துக்குரியவர்கள்" என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம் முஸ்லிம்) எனவே ஒரு பெண்ணின் நடை, உடை, பாவனை அனைத்தும் பிற ஆடவரின் கவனத்தை ர்க்கக்கூடியதாக அமையக் கூடாது. இதிலிருந்து "நமது செல்வ செழிப்பை எடுத்து காண்பிப்பது போன்ற அதாவது காட்சிப்பொருளாக ஆடம்பரமான ஆடைகளை ஹிஜாபாக அணியக் கூடாது, எளிமையானவையாக இருக்க வேண்டும்." என்ற நிபந்தனை தெளிவாகின்றது.

**(5) பெண்கள் ஆடைகளில் வாசனைத்திரவியங்களை உபயோகிக்கலாமா?**

நபி (ஸல்) கூறுகின்றார்கள், "யாரேனும் ஒரு பெண் நறுமணம் பூசிக் கொண்டு அதன் வாசணையை பிறர் நுகர வேண்டும் என்பதற்காக ஒரு கூட்டத்தை கடந்து செல்கிறாளோ அவள் விபச்சாரியாவாள்" (ஆதாரம் அஹ்மத்) எனவே வாசனைத் திரவியங்களை உபயோகிப்பது ஆகுமானதல்ல. ஆனால் கணவனுடன் மட்டும் இருக்கக் கூடிய நேரங்களில் மட்டும் உபயோகிக்கலாம். எனவே "பெண்கள் நாம் அணியும் ஆடைகளுக்கு நறுமணம் பூசக் கூடாது" என்பது மற்றுமொரு நிபந்தனையாகும்.

**(6) ஆண்களின் ஆடைக்கு ஒப்பான ஆடை அணிவது சரியா?**

இன்று அந்நிய கலாசாரத்தின் தாக்கம் எம்மவர்களிலும் பிரதிபலிக்கின்றது. ஆண்கள் அணியும் அதே சேட், சட், மற்றும் டெனிம் டவுசர் அணிந்து தலையை மட்டும் சிறு துணித்துண்டினால் சுற்றிக் கட்டிக் கொண்டு ஆண், பெண் வித்தியாசமின்றி திரியும் சகோதரிகள் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்.

மூவர் சுவனம் புகமாட்டார்கள், அல்லாஹ் மறுமையில் அவர்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டான் (அவர்கள் யாரெனில்) தனது பெற்றோருக்கு அநியாயம் செய்தவன், ஆண்களைப் போன்று நடந்து கொள்ளும் பெண், தனது மனைவி விபச்சாரத்தில் டுபடுவதை அங்கீகரித்து அதற்கு ஒத்தாசையாக இருப்பவன் ஆகியோராவார் (அஹ்மத், இப்னு ஹுஸைமா, இப்னு ஹப்பான்) நபி (ஸல்) பெண்களுக்குரிய ஆடைகளை அணியும் ஆண்களையும், ஆண்களுக்குரிய ஆடைகளை அணியும் பெண்களையும் சபித்தார்கள். (அபூதாவுத், இப்னு மாஜா, ஹாகிம்) எனவே "ஆண்களின் ஆடைகளின் பிரதிபலிப்பைப் போல பெண்களின் ஆடை இருக்கக் கூடாது" என்ற விதிமுறை உணர்தப்படுகின்றது

**(7) அன்னிய கலாசார பெண்களின் ஆடையை ஒத்ததாக இருக்கலாமா?**

"காபிரான பெண்களின் ஆடைகளை ஒத்ததாகவும் முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடை அமைதல் கூடாது, அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) அறிவிக்கிறார்கள், நான் மஞ்சள் நிறத்திலான இரு ஆடைகளை அணிந்திருப்பதைக்கண்ட நபி (ஸல்) அவர்கள், இவை காபிர்களுடைய ஆடைகள் எனவே இவற்றை அணியாதீர் " என்றார்கள். (முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே "மற்ற சமூகப்பெண்களின் உடைகளைப் போல இருக்கக் கூடாது" என்ற ஓர் நிபந்தனை தெளிவாகிறது. இவ்வாறு, ஒரு பெண்ணுக்குரிய ஹிஜாப் எப்படியானதாக அமைய வேண்டும் என்பதை இஸ்லாம் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளது. இதற்கு காரணம், ஒரு பெண்ணின் உடல் கட்டமைப்பை பொறுத்தவரை ஆண்களின் உடல் கட்டமைப்பை விட அழகானதும் கவர்ச்சியானதுமாகும். அதனால்தான் பெண்களிகன் உன்னதத்தை அறியாத சிலர் அவளை ஒரு காட்சிப்பொருளாகவும், அலங்காரப்பொருளாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட காமவெரியர்களின் ஆசைகளுக்கு ஒரு பெண் ஆளாகிவிடக்கூடாது என்பதற்கே இஸ்லாம் இந்த ஆடை முறையை கடமையாக்கியிருக்கின்றது.

மேலும் ஒரு பெண்ணுக்கு ஹிஜாப் என்பது எப்படியான அந்தஸ்த்தை கொடுக்கிறது என்பதை எளிமையாக கூறுவதாயின், ஒருவர் முன்னிலையில் இரண்டு இனிப்புக்கள் வைக்கப்படுகின்றன அதில் ஒன்று பொதித்தாளை நீக்கி விட்டு வெறுமையாகவுள்ள ஒரு இனிப்பு மற்றயது பொதித்தாளுடன் சுற்றி வைக்கப்பட்ட ஒரு இனிப்பு. இதில் உங்கள் தெரிவு எதுவாக இருக்கும் நிச்சயம் பொதித்தாளுடன் இருந்த இனிப்பையே தெரிவு செய்வீர் காரணம், க்கள், எறும்புகள், நுண்ணங்கிகள் மொய்த்திருக்காது, அசுத்தங்கள் படிவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை போன்ற பாதுகாப்பு உத்தரவாதங்கள் அதிகம் என்பதனாலாகும். இதுவே ஹிஜாப் அணிந்த பெண்ணுக்கும் ஹிஜாப் அணியாத பெண்ணுக்கும் இடையிலான வித்தியாசமாகும்.

எனவே பெண்கள் மேற்குறிப்பிட்ட குர்ஆன், ஹதீஸ் தெளிவுபடுத்திய ஷரீஆ வரையறைகளைப்பேணி உடையணிவதால் அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் அடையும் நன்மைகள் அளப்பரியன. உண்மையில் இஸ்லாம் பெண்களுக்கு வரையறை செய்துள்ள "ஹிஜாப்" உடை அவர்களுக்கு கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் உள்ளது. அது அவர்களுக்கு சமூகத்தில் அந்தஸ்த்தையும், மதிப்பையும் பெற்றுக்கொடுக்கின்றது. ஒரு பெண்ணின் கற்பொழுக்கத்திற்கும், அடக்கத்திற்கும், நாணத்திற்கும் அவள் அணியும் ஹிஜாப் உடை சான்றாக விளங்குகின்றது. இதனால் அவளை காண்போர் அவளை மதிக்கிறார்கள், கௌரவிக்கிறார்கள், கெட்ட எண்ணத்துடன் அவளை அணுக முனையமாட்டார்கள். அந்த வகையில் ஹிஜாப் உடை பெண்ணிண் பாதுகாப்பிற்கான உத்தரவாதமாகவும், ஆண்களை பாவம் செய்ய தூண்டாத ஒரு கண்ணியமான உடையாகவும், பெண்களுக்கு எதிராக தோன்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வாகவும் அமைகிறது.

**உசாத்துணை நூல்கள்:**

1. "ஹிஜாப்" அதன் அவசியம் என்ன (எஸ்.எம்மன்சூர்)
. ஹிஜாப் என்றால் என்ன (இஸ்ஸத் பின்த் ஹசன்)
3. www.suvanathendral.com
4. Srilankamuslims.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனஐக்கியம் வளராத வரை இனஐக்கியம் வளராது

என்.எப். நவ்ரா
மூன்றாம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

மனம் இருப்பவன் மனிதன் மாத்திரம் தான் உலகில் உள்ள எல்லா உயிரினங்களுக்கும் குணம் இருக்கின்றது. அதேவேளை மனதின் எண்ணங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அப்போது தான் அவனது சொல் வடிவத்திற்கும், செயல்வடிவத்திற்கும் சுவையான அர்த்தமும் அங்கீகாரமும் கிடைக்கின்றது.

ஔவையின் சொல்லை ஆராய்ந்து பார்க்கின்றோம். அங்கே "அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது" என்று கூறுகின்றார். உலகில் எந்தப் படைப்பாகவும் பிறக்கலாம். ஆனால் மனிதனாகப் பிறப்பதற்கு மதிப்பும் கௌரவமும் இருக்கின்றது. சிந்திக்க தெரிந்தவன் மனிதன். செயலாற்ற தெரிந்தவனும் மனிதன் தான். இன்னும் ஒருவருக்கு இன்னல் செய்யாதவனே மனிதன் என முஹம்மத் நபி தனது இஸ்லாமிய பிரச்சாரத்தில் எடுத்தியம்புகின்றார்.

நாயன்மார்களில் ஒருவர் தான் அப்பரடிகள். அவர் அழகாக கூறுகின்றார் "மனித பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்கின்றார். மனிதனிடத்திலே தான் கற்றதை கசடறக் கற்கின்ற மனப்பக்குவமும் ஒழுக்கமான நடத்தையை உள்வாங்கவும் அதன்படி நடக்கவும் முடிகின்றது. திருவள்ளுவர் கூறினார் "ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்" என்றார். மனிதனுடைய ஒழுக்க விழுமியங்களே அவன் வாழும் சமூகத்தில் நற்பெயரை பெற்றுத் தருகின்றது.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியும் மானுடர்களின் பரோபகாரம் இன க்கியம் என்பவற்றை மையமாகக் கொண்டு நி பிக்கப்படுகின்றது. சமுதாயத்தில் சண்டை, சச்சரவு, அதிலும் சமயச் சண்டை, சமூகச் சண்டை இவ்வாறான காரணிகளை ஆராய்கின்ற போது கல்விக் குறைபாடும் ஒழுக்கக் குறைபாடும் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

சாதுவான ஒரு போக்கை மக்கள் கடைப்பிக்கின்ற போது ஒவ்வொருவரினாலும் சமுதாயத்திற்கு நற்பெயர் கிடைத்துக் கொண்டே இருக்கின்றது. உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்காது வாழுதல் வரலாற்று மனிதனை உருவாக்குகின்றது.

சீனப்பெருஞ்சுவர் உடைந்தால் கட்டலாம். ஆனால் உடைந்த மனதைக் கட்டுவது என்பது இலகுவான காரியமல்ல.

வள்ளலார் பெருமானார் வாய்விட்டுச் சொன்னார் "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்றார். என்ன அழகான சொல் எத்தனை அர்த்தம் எவ்வளவு எளிமை உயிர்களின் மேல் கொண்ட உன்னதப் பார்வைதான் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாத்திரி மகரிஷி இனத்துவேசத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த மூதறிஞர் அன்னாரின் பார்வை இப்படி இருக்கின்றது. "அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமையெல்லாம் அன்பின் செயலாகும்." மிகக் கூடிய மனித யதார்த்தம் இங்கே மீட்டப்படுவதைப் பார்க்கின்றோம்.

மதப் பெரியார்களும் மதத்தைப் பின்பற்றுவோரும் மனம்விட்டு பேசிக் கதைத்து மனித சஞ்சாரம் செய்ய பழக்கிக் கொள்ள வேண்டும். இந்த நடைமுறை இன க்கியத்திற்கு மிக ஏற்ற ஒரு உந்து சக்தியாகும். சமுதாயத்திலே முதலாளி, தொழிலாளி, பணக்காரன், ஏழை என்ற வித்தியாசமும் உயர்சாதி, கீழ்சாதி என்ற வடிகட்டலும் சமுதாயத்தில் நம்மை பின்நிற்கச் செய்கின்றது. அறிவுபூர்வமான இந்த உலகில் வறுமைக்கோட்டில் வாழ்ப - வர்கள், எந்தப் பயங்கரவாதத்திற்கும் துணைபோகின்ற நிலைமையை பார்க்கின்றோம்.

ஔவையார் சொன்னார் "கொடிது கொடிது வறுமை கொடிது" அதனோடு நிறுத்தவில்லை அடுத்த வரியில் "அதனிலும் கொடிது இளமையில் வறுமை" என்கின்றார். இன்று உலகில் வறுமைப்பட்ட நாடுகள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நாடுகளில் எல்லாம் சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை குண்டர்களாகவும் குண்டு வீசுபவர்களாகவும் இயங்குபவர்களெல்லாம் மிகவும் வறுமைப்பட்டவர்களே. இவர்கள் அனைவரும் இளமையில் வறுமையை அனுபவிப்பவர்கள். எதை வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராகுகின்றார்கள். எனவே முழு உலகிலும் சமய வேறுபாடின்றி ஏழைகளுக்கு உதவி செய்யும் மனப்பக்குவம் உள்ளவர்கள் உருவாக வேண்டும்.

இறைபக்தி, அறநெறிக்கல்வி இரண்டும் மனிதனிடம் இணைகின்ற பொது இனங்களிடையே இணங்கி வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் தொழிற்படுவார்கள். நம்மால் இந்த உலகிற்கு செய்யக் கிடைத்த ஒரு பெரும் காரியம் ஒரு நல்ல சமூகச் பூலை உருவாக்குவதுதான்.

நாம் வந்தோம் வாழ்ந்தோம் போவோம் என்று இராது இனிவரும் சமுதாயத்திற்கு நல்லதோர் ழ்நிலையை உருவாக்கி கையளிக்க தயாராக வேண்டும்.

அறிவு, ஆற்றல், சமூகஉணர்வு உள்ள சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும். படிக்க வாய்ப்பற்று இருப்பவர்களுக்கு படிக்க வசதி செய்ய வேண்டும்.

அறிவுடைமையை வலியுறுத்தும் திருவள்ளுவர் "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பது இவரது நாட்டமாக அமைந்தது. இது மட்டுமல்ல. வள்ளுவர் வாய் திறந்து பாடும் போது "அறிவுடையார் ஆவது அறிவார் அறிவு இலார் அ து அறிகல்லாதவர்" அறிவுள்ளவர்கள் வருங்காலத்தை வளமாக அறிந்து இருப்பார்கள். அறிவு இல்லாதவர்கள் வருங்காலத்தின் எண்ணப்பாடு இல்லாமலே இருப்பார்கள். கணிக்கின்ற கணதி இல்லாதவர்களாக காலத்தைக் கழிப்பார்கள்.

இன க்கியத்தை இல்லாதொழிக்கும் இயந்திர சாதனம் தான் போதையும் குடியுமாகும். குடி குடியைக் கெடுக்கும். திருக்குறளில் வள்ளுவர் சொன்னார். "துஞ்சினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" இஸ்லாமிய இறைமறை அல்குர்ஆன் கூறுகின்றது "குடி இறைவனால் தடுக்கப்பட்டுள்ளது" இன்று இளைய சமுதாயம் குடியிலும் மதுவிலும் தங்களைத் தானாக அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். குடியில் தடுமாறும் இளைஞர்களால் பல இடங்களில் இனக்கலவரம் வெடித்துள்ளது. மாத்திரமன்றி உயர்தரப் பாடசாலைகளிலும் கூட கல்வி கொள்ளும் மாணவர்கள் போதை மாத்திரைகளுக்கு அடிமையாகி தனது கல்விக் காலத்தை வீணாக்கி கொண்டிருக்கின்றார்கள்.

இதன் பின்புலத்தில் செல்வாக்கு அரசியல் என்றெல்லாம் தலையீடு செய்து சிலந்திக் கூடாக இருக்கின்றது. வாழும் சமுதாயத்தை வளப்படுத்திக் கொண்டால் தான் இனிவரும் சமுதாயம் எல்லா வழியிலும் ஏற்றம் காணும். சமயங்களும் சமயத் தலைவர்களும் பாடசாலை மட்டத்திலிருந்து குடிபோதைப் பழக்கத்தை தடுப்பதற்கு முயற்சி செய்வதோடு இன ஒற்றுமைக்கான வழிமுறைகளையும் வகுக்க வேண்டும்.

வாசிப்புப் பழக்கத்தை சிறுவயதிலிருந்து உருவாக்கி எழுத்து, கலை, சமயம், கலாசாரம், ஒழுக்கம் என எல்லாவற்றையும் வழங்கி உருப்படியான சமுதாய மூலை ஒன்றுபட்டு உருவாக்க வேண்டும். ஒரு வாசிகசாலை திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது. வாசிப்பின் எதிரொலியாக இன க்கியத்திற்கு உரமிடலாம்.

மனங்கள் இரங்காத வரை இன க்கியம் துளிராது. ஆகையால் மன க்கியமே இன க்கியமாகும். அதற்காக ஒவ்வொரு மானுடனும் ஒற்றுமையின் ஊழியராக மாறுவோம்.

---

தனியாகப் பிறந்தோம்
தனியாக மரணிப்போம்
தனித்தே மண்ணறைக்குள் இருப்போம்
இப்படியிருக்க மற்றவர்கள் எம்மைப்பற்றி
எண்ணும் எண்ணங்களுக்கு ஏன் நாம் கவலைப்பட வேண்டும்?

- முப்தி மெனக்-

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானக் குச்சி !

எம்.எச்.எம். அப்ரா
இரண்டாம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

போதை என்பது நமக்குள் காலம் விதைத்த கொடிய விஷம் மனிதனின் ஆரம்பம் தொட்டே ஏதோ ஒரு போதை மனிதனை ஆட்டுவிக்கிறது. அது ஆட்டுவிக்கும் படி அவனும் ஆடிவருகிறான்.மனமகிழ் போதைப்பொருட்களின் பயன்பாட்டில் புகைத்தல் பிரதானமானது. இன்று ஆறு தொடக்கம் அறுபது வரை வே ன்றி அனைவரின் உயிரையும் றையாடுகின்றது என்பது கவலைக்குரிய விடயமே

"என்னைக் கொல்பவனை நானும் கொல்வேன்" என்று இந்தப் புகையும் மனிதனை நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாக கொன்று கொண்டிருக்கிறது.எச்சரிக்கை புகைப்பழக்கம் புற்றுநோயை உண்டாக்கும் என்று சிகெரட் பெட்டியிலே பொறிக்கப் -படிருந்தாலும் எந்த அக்கரையுமின்றி அதைப்படித்துக்கொண்டே புகை அபிமானிகள் அதனை ஊதித்தள்ளுகிறார்கள்.புகைத்தல் தொடர்பான புள்ளிவிபரங்களை ஆராய்ந்தால் எயிட்ஸ்,டெங்கு,மற்றும் விபத்துக்களால் மரணிப்பதை விட புகைத்தலி -னால் அதிகமானோர் மரணிக்கின்றனர்.தற்போது கிட்டத்தட்ட நாளொன்றுக்கு 50 இற்கு மேற்பட்டோரும் ஒரு நிமிடத்துக்கு ஆறுக்கு மேற்பட்டோரும் புகைத்தல் காரணமாக உயிரிழக்கின்றனர்.ஒருவர் ஒவ்வொரு சிகெரட் புகைக்கும் போதும் அவரது வாழ்நாள் 5நிமிடங்களால் குறைவதாக கணிக்கப்பட்டுள்ளது.வருடந்தோரும் 6மில்லியன் மரணங்களுக்கு காரணமாக இருக்கும் புகையிலை 0 0ஆம் ஆண்டளவில் இதில் இருமடங்கு உயிரைப்பறிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

"சிகெரட் நுனியில் நீங்கள் பற்றவைக்கும் தீ நீங்கள் உங்களுக்கே வைத்துக் கொள்ளும் தீ" அத்தீ உங்களை மட்டுமில்லாமல் சுற்றியிருப்பவர்களையும் சேர்த்தே எரிக்கிறது.புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்களை நன்கு அறிந்தும் அதனை நிறுத்தமுடியாமல் இருக்கின்றனர். ஏனெனில் ஒரே ஒரு சிகெரட்டில் கிட்டத்தட்ட 5000 வெவ்வேறு இரசாயனங்கள் காணப்படுகின்றது.இதில் கிட்டத்தட்ட 599 addictive வகையைச் சார்ந்தவை அவையே மறுபடியும் மறுபடியும் புகைக்கத்தூண்டுகின்றன (புகைத்தலை ஒரு அடிமைத்தனமாக உலக சுகாதார ஸ்தாபனமும் (WHO) வகைப்படுத்தி -யுள்ளது). இதில் 4 வகை புற்றுநோய்க்காரணிகளை உண்டுபண்ணக் கூடியவை.இவற்றில் சில மிக மோசமான விளைவுகளை உண்டாக்கக்கூடியவை. காபன் மோனாக்சைட்டு (நச்சு வாயு), ஆர்சனிக்(எலி மருந்தில் உள்ளது), ஹைட்ரஜன் சயனைட்டு(நச்சு வாயு), நாப்தலின், பார்மடிஹைட் (பிணங்களை பதப்படுத்தும் திரவம்), கந்தகம்(தீக்குச்சியில் உள்ளது). இவை எல்லாவற்றையும் மீறிய வில்லன் நிக்கோட்டின் ஒரு சிகெரட்டில் ஒரு மில்லிகிராம் நிக்கோட்டின் உள்ளது.நிக்கோட்டின் சாதாரண நஞ்சு அல்ல மிகக்கொடிய நஞ்சு அதனை தனியே பிரித்தெடுத்து ஊசியால் உடலுக்கு செலுத்தினால் ஆள் உடனே இறந்துவிடுவார்.இத்தகு கொடிய நச்சுத்தன்மை வாய்ந்தது.புகைப்பவர்கள் புகையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுக்குள் இழுக்கும் ஒவ்வொரு வேளையும் நிக்கோட்டின் மின்னல் வேகத்தில் மூளையை சென்றடைகிறது. மூளையில் மனநிலையை மாற்றும் செல் (Cell)க்கு நிக்கோட் - டின் செல்வதால் புகைப்பவர்கள் ஒரு ஆறுதலான நிலையை அடைகிறார்கள். இதனால் புகைப்பவர்கள் மனதாலும் உடலாலும் நிக்கோட்டி னில் தங்கியிருக்கும் ஒரு வேண்டாத பழக்கத்துக்கு ஆளாகின்றனர். இப்பழக்கத்தினால் இரத்தத்தில் சிறிதளவு நிக்கோட்டின் குறைந்தவுடனேயே அவர்களுக்கு மீண்டும் புகைக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகின்றது. இதன் காரணமாகவே பணமும் விரயமாகி ஆரோக்கியமும் கெடுகின்றது எனத்தெரிந்தும் புகைத்தலை கைவிட முடியாமல் இருக்கின்றனர்.

புகைப்பவருக்கு வரக்கூடிய எல்லா நோய்களும் எந்தவித பாரபட்சமுமின்றி அப்புகையை சுவாசிப்பவர்களுக்கும் வருகின்றது. ஒருவர் புகைப்பதினால் அவரக்கு ஏற்படும் பாதகத்தைவிட அவர் வெளியிடும் புகையை சுவாசிப்பவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஒருவர் புகைப்பிடிக்கும் போது 5சதவீதம் மட்டுமே உட் செல்கின்றது உட்சென்ற புகையில் 10சதவீதம் மீண்டும் வெளிவிடப்படுகிறது. இதன் மூலம் அப்பாவிக்குழந்தைகளும் இல்லத்தரசிகளும் அநியாயமாக நோய்வாய்ப்படு கின்றனர். இவர்களே (passive smoker)என்ற வகையில் உள்ளடங்குவோராவர். மேலும் புகையானது புகைக்கப்பட்ட இடங்களில் உள்ள பொருட்களில் புகைபடிந்து அந்த இடத்தை பயன்படுத்துபவர்கள் அனைவரும் இப்புகைத்துகள்களை சுவாசிப்பதால் அந்த இடத்தை பயன்படுத்தும் பலரும் உடல் நல பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றனர். அநேகமாக இதில் குழந்தைகளே பாதிக்கப்படுகின்றனர் இது Third hand smoking என்ற வகையில் உள்ளடங்குகிறது. இந்த புகை அபிமானிகள் ஊதி ஊதி தானும் அழிந்து பிறரையும் அழிக்கின்றனர்.

"நெருப்பு வைத்து தன்னை அழித்தவனை பழிவாங்கியது சிகெரட் கான்சர் வடிவில்" 19 9இல் முதன் முதலாக நாஜி ஜெர்மன் விஞ்ஞானி ப்ரான்ஸ் முல்லர் சிகெரட்டுக்கும் கான்சருக்கும் இடையிலான தொடர்பைக் கண்டுபிடித்து பதிப்பித்தார். second hand smoking மூலமும் புற்றுநோய் ஏற்படும் என்பதையும் நாஜி விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். இதை எல்லாம் ஏனைய நாடுகள் ஏற்றுக்கொள்ள பல பத்தாண்டுகள் ஆகின என்பது குறிப்பிடத்தக்கது.

"சிகெரட்டின் ஒரு முனையில் நெருப்பும் மறுமுனையில் முட்டாளின் இருதயமும் இருக்கிறது" என்றார் அறிஞர் ஜான்ஸ். புகைப்பதினால் ஏற்படும் ஆபத்துக்களைத் தெரிந்தும் எம் சமூகத்திலுள்ள புகை அபிமானிகள் தொடந்தும் அதனை ஊதித்தள்ளு-வதன் மூலம் பல சன்மானங்களை பெற்றுக்கொள்கின்றார்கள். உச்சி முதல் உள்ளங்கால் வரை சிகெரட் பாதிக்கிறது. சிகெரட்டில் உள்ள நிக்கோட்டின் நஞ்சு போதைப்பொருளாக செயற்பட்டு மூளையை அடிமைப்படுத்துகிறது. மேலும் சமீபத்தில் இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் சிகெரட் அறிவுத்திறனை பாதிப்பதையும் நினைவை மழுங்கடிப்பதையும் கண்டறிந்துள்ளனர். மேலும் இன்னும் பல ஆபத்தான நோய்களாவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1) புற்றுநோய்**

அண்மையில் கனடா பி.சி புற்றுநோய்க்கழக ஆய்வின்படி புற்றுநோயை எதிர்த்துப் போராடும் மரபணு 5(ஜீன்) புகைபிடிப்பதால் அழிந்துபோவதாக அறியப்பட்டுள்ளது. புகைப்பிடிப்பதனால் முதலில் உடலில் ஏற்படும் ஆபத்தான நோய் தான் புற்றுநோய்.அதிலும் அந்த சிகெரட்டில் உள்ள கார்சினோஜென் நுரையீரல்,வாய்,தொண்டை,சுவாசப்பை,மற்றும் உணவுக்குழல் போன்ற இடங்களில் புற்றுநோய் தாக்கத்தை ஏற்படுத்தும்.குறிப்பாக புகைப்பதால் 90சதவீதம் பேர் நுரையீரல் புற்றுநோயால் தான் பாதிக்கப்படுகின்றனர். புகையிலையின் புகையில் காணப்படும் புற்றுநோயை உருவாக்கக்கூடிய பல நச்சுக்கலவைகள் இணைந்து இப்பொருட்கள் நுரையீரலில் புற்றுநோய் தோற்றத்தை செல்களில் ஒரு தீவிர மாற்றத்தை தூண்டும், நுரையீரலின் இயற்கை சளி திசுக்களுக்கு சேதம் விளைவிப்பதன் காரணமாக புற்றுநோய் உருவாகிறது. நிக்கோட்டின் புற்றுநோய்க்கான வளர்ச்சியில் பங்களிக்கிறது. இது உடலின் அதிகமான அளவுக்கு நுழைந்து நோயெதிர்ப்பு மண்டலத்தின் வேலையை தடுக்கிறது. அதேபோல் தொண்டைப்புற்றுநோய் புகையிலையில் உள்ள புற்றுநோயை உருவாக்கும் நச்சுப இரசாயனங்கள் வாயில் உள்ள உமிழ்நீர்ச்சுரப்பிகளை பாதிக்கின்றன. சுமார் 80சதவீதம் தொண்டைப்புற்றுநோய்க்கு புகைத்தலே காரணம். அனைவரும் புகைப்பதால் புற்றுநோய் மட்டும் தான் வரும் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றனர் ஆயினும் அது தவறான கருத்தே ஏனெனில் புகைபிடிப்பதால் புற்றுநோய் மட்டுமன்றி மேலும் பல நோய்கள் வருவதாக மருத்துவ ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**2) மாரடைப்பு**

மனித இதயம் ஒரு கணப்பொழுதுகூட ஓய்வெடுக்காது தொழிற்படும் ஓர் அபூர்வமான உறுப்பாகும்.ஒருநாளுக்கு இதன் துடிப்பு 10இலட்சம் தடவை இடம் பெறுகிறது. இது 60000 மைல் தூரமான இரத்தக்குழாய்களுடாக இரத்த விநியோகத்தைச் சமச்சீராக நடத்துகிறது. இதயமானது உடல் எங்கும் இரத்தத்தை அனுப்பியபோதும் இதயம் தனக்கென இரத்தத்தை இரண்டு கொறனரி நாடிகள் மூலம் இதயத்துக்கு இரத்த விநியோகம், ஒட்சிசன் விநியோகத்தை நடத்தி வருகின்றது. புகைப்பிடிப்பதால் இதயம் மற்றும் இதயத்திற்கு செல்லும் இரத்தக்குழாய் மற்றும் மற்ற பாகங்களில் உள்ள இரத்தக்குழாய்களில் அடைப்புக்களை ஏற்படுத்தி இதயச் சுவர்களுக்கான இரத்த விநியோகம் தடைப்படவே பெரியக்காடியம் ,மயோக்காடியம், என்டோக்காடியாகிய இதயத்தின் மூன்று படைத்தசைகளிலும் கலனழிவினால் பிரிவடைகிறது.இப்படிப் பிரிந்து இரத்தமானது இதயத்தை விட்டு வெளியேறுகிறது. இதனையே மாரடைப்பு என்போம். சாதாரணமானவர்களைவிட புகைப்பிடிப்போர் 15மடங்கு வரை அதிகமாக இதயநோய்களுக்கு ஆளாகின்றனர் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றது.

**3) எம்பிசீமா**

புகைப்பதால் புகையானது முதலில் சுவாசப்பை சுவாசச்சிற்றரைகளை அடைகின்றது. புகை நஞ்சுகள் சுவாசச் சிற்றறைகளின் சுவர்களையும் சுருங்கச்செய்வதுடன் அவற்றின் மீள்சக்தியையும் இழக்கச்செய்கின்றது.இதன்மூலம் அல்வியோலஸ்சில் நிரப்பப்பட்ட காற்றானது பரிமாற்ற முடியாது தேக்கமடைகிறது.இந்நிலைகளால் நோயாளியின் வெளிச்சுவாசப் பொறிமுறை சிக்கலடைகிறது.நோயாளி இழுப்புடன் (Wheezing) மூச்செடுக்கப் போராடுவார்.உரிய சிகிச்சையளிக்காவிடின் மரணமும் ஏற்படலாம். இது ஓர் ஆபத்தான நிலையாகும்.புகைப்பவருக்கு காசநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4)ஆஸ்த்துமா**

புகையானது சுவாசச் சிற்றறைகளையும் தாக்கி அவற்றின் சுவர்களின் மீள்சக்தியை இழக்கச்செய்வதுடன் மூச்சுக்குழாய் (bronchial) தசைகளை செயலிழக்கச் செய்து விடுகிறது.இதனால் நோயாளி மூச்சை வெளிவிடப்பெரிதும் சிரமப்படுவார்.இந்நிலை 5மணித்தியாலங்கள் தொடரின் நோயாளி ஆபத்தான நிலையையடைவர்.

**5) பேகேஸ் நோய்**

இது பீடியை கட்டுக் கட்டாய் ஊதித்தள்ளுபவர்களிடம் காணப்படும் பொதுவான நோய் இதயத்தின் தொலைவிலுள்ள கால்,கைப்பாகங்களுக்கு இரத்தம் போவது புகைப்பவரில் குறைவு அதுவும் நிக்கோட்டின் தொழிற்பாட்டால் குறுகிய இரத்தக்கட்டிகளும் (clots) தோன்றிவிடும் இப்படியான சீரற்ற இரத்த விநியோகம் கட்டிகளின் தடைகளால் இரத்தம் குழாய்களுக்கு குறைந்து போகவே,நரம்புகள் செயலிழந்து அப்பகுதி விறைத்துப்போவதுடன் கலனழிவு ஏற்பட்டு புண்கள் தோன்றுகின்றன.இந்நிலையில் பாதிப்புற்ற விரல்களை அப்புறப்படுத்துவதை தவிர வேறுவழியில்லை அகற்றாவிடின் தானாக அழுகி விழும்

**6) பார்வைக்குறைவு**

அதிகமாக புகைப்பிடிப்போருக்கு கண்களில் விழித்திரை நோய் தாக்கும் வாய்ப்பு இரு மடங்கு உண்டு.முதுமையடையும்போது பார்வைக்குறைவு ஏற்படும் வாய்ப்பு அதிகம் உண்டு.

**7) இனப்பெருக்க மண்டலம்**

புகைப்பதனால் இனப்பெருக்கமண்டலத்தின் ஆரோக்கியமானது பாதிக்கப்படுகின்றது.

**பெண்களில்**

புகைப்பதன் மூலம் இனப்பெருக்கத்துறையில் பல விரும்பத்தகாத நிகழ்வுகளை சந்திக்கின்றனர். கர்ப்பிணிப் பெண்கள் புகைப்பதால் நஞ்சுக்கொடி சம்பந்தமான சிக்கல்கள் ஏற்படுகிறது.குறிப்பாக தாயிலிருந்து இதனூடாகவே குழந்தைக்கு உணவு போகிறது.புகைக்கும் பெண்ணில் குழந்தைக்கு உணவு போவது தடுக்கப்படுகிறது. இதனால் குழந்தை வளர்ச்சி குன்றுகிறது.அத்துடன் குறைப்பிரசவம், கருச்சிதைவு, தி ரென்று கருவில் இருக்கும் குழந்தை இறப்பது போன்றவை ஏற்பட அதிகவாய்ப்பு உள்ளது.மேலும் புகைத்தல் மலட்டுத்தன்மையை ஏற்படுத்துகிறது.

கர்ப்பிணிப் பெண்கள் சிகெரட்,பீடி,சுருட்டு புகைத்தால் அவர்களுக்கு பிறப்பது ஆண் குழந்தையாக இருந்தால் அதற்கு மலட்டுத்தன்மை ஏற்படும் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.கருவில் சிசு இருக்கும்போது தாயார் புகைத்தால் குழந்தையின் விந்தனு உற்பத்திக்கு உதவும் மரபணு கடுமையாக பாதிக்கப்பட்டு அதன் செயற்பாடு குறைகிறது.எனவே இப்படிப்பட்ட ஆண்களுக்கு மலட்டுத்தன்மை வரும்.

**ஆண்களில்**

ஆண்மைக்குறைவுக்கு புகைத்தலும்,மதுப்பழக்கமும் முக்கிய காரணமாகும்.16 வயதில் புகைப்பவன் வயதில் ஆண்மையை இழந்து விடுகிறான்.மேலும் விந்தணுவின் உற்பத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டு குழந்தை பிறப்பதில் பிரச்சினை உண்டாக்கும். புகைப்பதால் இனவிருத்தி ஆரோக்கியம் பெரிதும் பாதிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இப்புகை அபிமானிகளால் குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். குழந்தைகள் புகைப்பிடிப்போரின் அருகில இருந்தால் நாளடைவில் ஆஸ்துமா, மூச்சுக் -குழாய் அழற்சி, செவிட்டுத்தன்மை,போன்றவை ஏற்படுவதோடு வளர வளர நுரையீரலின் வளர்ச்சியும் வளராமல் தடைப்படும். மேலும் குழந்தைகளுக்கு பார்வைக்குறைபாடு ஏற்பட்டு மூக்குக்கண்ணாடி அணிய வேண்டி வரும்.85சதவீதமான குழந்தைகளின் பெற்றோர் புகை பிடிப்பவர்கள் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மதுவும் போதையும் குடிப்பவர்களை மட்டுமே கெல்லும் புகையோ குடிப்ப வரையம் அவர் கூட இருப்பவர்களையும் சேர்த்தே கொல்லும்.இவ்வாறு அனைவரினதும் நிம்மதியையும்.சந்தோஷத்தையும் கெடுக்கக்கூடிய இப்பகைவனை தொடர்ந்தும் ஆதரிக்க வேண்டுமா

**இஸ்லாத்தின் பார்வையில் புகைத்தல்**

புகைப்பழக்கம் நபி(ஸல்) அவர்களது காலத்தில் இடம்பெற்ற ஒன்றல்ல. பிற்பற்றகாலத்திலேயே தோன்றியது.எனினும் அதன் யதார்த்தத்தையும் தீமைகளையும் கருத்தில் கொண்டு புகைத்தல் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கிறது என்பதையும் உணர்ந்து பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் புகைத்தல் ஹராம் என்றே தீர்பளித்துள்ளனர்.

*"நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்களாகின்றனர் ஷைத்தான் தனது இரட்சகனுக்கு நன்றி கெட்டவனாகவே இருக்கின்றான்"(1 )*

புகை அபிமானிகளே தாங்களுக்கு ஷைத்தானின் சகோதரர்களாக இருக்க விருப்பமா

*"நீங்கள் உங்களையே கொலை செய்து கொள்ளாதீர்கள் நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கிருணையுடையவனாக இருக்கிறான்"(அந்நிஸா 9)*

*"உங்கள் கையாலேயே (உங்களை) அழிவின் பால் போட்டுக்கொள்ளாதீர்கள்"(அல் பகரா 195)*

**பிறருக்குத்தொல்லை தருவது ஹராம்:**

நல்ல முஸ்லிம் யார் என நபி(ஸல்) அவர்களிடம் கேட்ட போது, தன கையாலோ,நாவாலோ பிறருக்கு தீங்கிழைக்காதவனே சிறந்த முஸ்லிம் எனக் கூறியுள்ளார்கள்(புகாரி)

ஒருவன் புகைப்பதன் முலம் அவன் மட்டும் பாதிக்கப்படுவதில்லை.அவன் ஊதித்தள்ளும் புகையைச் சுவாசிப்பவர்களும் சேர்ந்தே பாதிக்கப்படுகின்றனர்.ஒரு கர்ப்பிணி புகைத்தால் அவளது குழந்தையும் சேர்ந்தே பாதிக்கப்படுகின்றது,வீட்டில் ஊதித்தள்ளும் ஊதாரித்தந்தைகளால் அவர்களது குழந்தைகளே நோய்வாய்ப் படுகின்றனர். தந்தையைப் பார்த்து பிள்ளைகளும் புகைத்தலுக்கு அடிமையாகின்றனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைத்தல் பிறருக்கு தீங்கிழைக்கவே செய்கின்றது ஆகவே மேற்கூறிய ஹதீஸின்படி புகைப்பவன் ஒரு நல்ல முஸ்லிமாக முடியாது

மேலும் இந்த குர்ஆன் வசனங்கள் மட்டும் ஹதீஸின்படி இஸ்லாத்தில் புகைத்தல் ஒரு வெறுக்கத்தக்க ஹராமான காரியமாகவே காணப்படுகின்றது.

இன்று எத்தனையோ குடும்பங்களின் கண்ணீருக்கு புகைத்தலும் ஓர் முக்கிய காரணமே,வாழ்க்கையின் ஒட்டுமொத்த மகிழ்ச்சியையும் கெடுத்து மனிதனை ஓர் நோயாளியாகவும்,குழந்தையே இல்லாத மலடர்களாவும் ஓர் நடைபிணமாக்கி இறுதியில் உயிரையே பறிக்கிறது இந்த மயானக் குச்சி. புகை அபிமானிகளே நீங்கள் விடும் ஒவ்வொரு புகைத்துளியிலும் ஒரு சமூகமே அழிந்து கொண்டிருக்கின்றது மேலும் .உங்கள் குடும்பத்தினரை நீங்களே கொலை செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு முறைப் புகைக்கையிலும் உங்கள் அன்பான குடும்பத்தையும்,குழந்தைகளையும் நினைவில் கொள்ளுங்கள். புகைப்பிடிப்பவர்களின் மனோநிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுப் புகைத்தலின் கேடுகளை உணர்ந்து அவர்களாகவே அப்பழக்கத்தை விட்டு விட்டால்தான் புகைத்தலை ஒழிக்க முடியும்.

புகைத்தலும் ஓர் முக்கிய காரணமே,வாழ்க்கையின் ஒட்டுமொத்த மகிழ்ச்சியையும் கெடுத்து மனிதனை ஓர் நோயாளியாகவும்,குழந்தையே இல்லாத மலடர்களாவும் ஓர் நடைபிணமாக்கி இறுதியில் உயிரையே பறிக்கிறது இந்த மயானக் குச்சி. புகை அபிமானிகளே நீங்கள் விடும் ஒவ்வொரு புகைத்துளியிலும் ஒரு சமூகமே அழிந்து கொண்டிருக்கின்றது மேலும் .உங்கள் குடும்பத்தினரை நீங்களே கொலை செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு முறைப் புகைக்கையிலும் உங்கள் அன்பான குடும்பத்தையும்,குழந்தைகளையும் நினைவில் கொள்ளுங்கள். புகைப்பிடிப்பவர்களின் மனோநிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுப் புகைத்தலின் கேடுகளை உணர்ந்து அவர்களாகவே அப்பழக்கத்தை விட்டு விட்டால்தான் புகைத்தலை ஒழிக்க முடியும்.

"சாம்பலாவது சிகெரட் மட்டுமல்ல விரைவில் நீங்களும் தான் " மறப்போம் மறுப்போம் மயானக்குச்சியை.

**உசாத்துணைநூல்கள்**

1. புதை குழிக்குத் தள்ளும் புகைப்பழக்கம்(மௌலவி முஹம்மத் ரஸீன்-ஹஸனி)
.உயிரைக்குடிக்கும் புகையின்பம்(பேரின்பநாதன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ~புனித அல்குர்ஆன்~

பெருமானார் அகமதிலே
பதிவானது
உயர் பேரொளியாம் அல்குர்ஆன்
புனிதமானது.
அறியாமை இருளகற்றும்
ஒளியானது
அரும் லைலதுல் கத்ர் இரவில்
வெளியானது.
நெறியான வாழ்விற்கு
முறையானது
அந்த நிகரில்லா இறையோனின்
மறையானது.
மருள் சூழ்ந்த மண்தண்ணில்
மதி தந்தது.
கடும் இருள் சூழ்ந்த மண் தண்ணில்
ஒளி தந்தது.
பொருள் தர வல்லது.
அதை நாடினவர்க்கு புகழ்
தர வல்லது.
உண்மை தனில் அதுவே இறையருள்
தந்தது
அகிலத்தில் கதிரானது.
அஞ்ஞானம் நீக்குகின்ற முத்தானது

மெய்ஞ்ஞானம் போக்குகின்ற கொத்தானது
மெய்ஞ்ஞான மலர்ச்சிக்கு வித்தானது
என்றும் விஞ்ஞானம் வளர்ச்சிக்கு
சொத்தானது.
காலம் முழுமைக்கும் பொதுவானது
அந்தக் காலம் அனைத்திற்கும் இதமானது
ஆதம் நபி வாயால் வெளியானது
சிறாத் பாலம் கடந்தேற சரியானது.
உளம் கனிந்து நாடுவோரை
இறைவனிடம் கொண்டு செல்ல
களம் அமைத்து தரும்
மறையே இதுவானது
பற்பல நூல்களுல் ஆகியானது.
இதன் உட்புல அங்கங்கள்
புதிரானது.
எண்ணிலடங்காத உண்மைகளை கூறியும்
பெண்ணிலடங்காத மடமைகளையும் அகற்றி
உண்ணிலடங்க வழி செய்வதை நம்
கண்ணிலடங்கும் திருமறையாம்
அல்குர்ஆன் உயிரானது
"நீ மறுமையில் வெற்றி பெற
1000 நன்மைகளை சேகரிப்பதை விட
முதலில் அல்குர்ஆனிடம். நேசம் வைத்துக் கொள்.
"நீ"
நிச்சயம் வெற்றி பெறுவாய்..."

எம்.எஸ்.எம். இஹ்ஜாஸ்
முதலாம் வருடம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் தமிழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிமாறும் விதி

எம். எம். ஜீனத்பானு
நான்காம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

மாரிகாலத்துக் குளிர் அதிகாலையில் வீடு முழுவதும் பரவிக்காணப்பட்டது. வீட்டைவிட்டு வெளியே வந்தால் குளிர் காற்றில் நடுங்கி விழும் அளவிற்கு பனி மூட்டத்தால் மூழ்கிக் கிடந்தன. அதிகாலை சேவல் கூவும் ஓசையும், பறவைகளின் கீச்சிடும் ஓசையும் காதுக்கு இதமாக இருந்தன. படுக்கையை விட்டு எழும்பக் கூட மனமில்லாமல் படுத்துக் கொண்டிருந்தாள் முர்சிதா. முர்சிதா எழுந்திரு என உம்மாவின் குரல் சிறிது நேரம் கழித்து மகள் முர்சிதா எழுந்திரு என வாப்பாவின் குரல் காலை ஆறு மணி அலாரம் ஒலித்தது இவையனைத்தையும் கேட்டுக்கொண்டு முர்சிதா படுத்துக் கொண்டு கூரையைப் பார்த்து யோசித்துக் கொண்டிருந்தாள் எழும்ப வேண்டுமா வேண்டாமா என்ற கேள்வி அவளுள் எவ்வாறாயினும் எழும்பியே ஆக வேண்டும் காரணம் அவளுக்கு இன்று அரச சுய தொழில் முயற்சியாளர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வு காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

அவள் சென்றே ஆக வேண்டும் அது அவளினதும் அவளது பெற்றோரினதும் நீண்ட நாள் கனவும் ஆசையும் கூட. முர்சிதா எழுந்திரு குளித்து, சாப்பிட்டு விட்டு செல்ல நேரம் சரியாக இருக்கும் என மறுபடியும் உம்மாவின் குரலோசையைக் கேட்டு எழுந்தாள். விரைவாகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு நிகழ்வுக்குச் செல்ல தனது பெற்றோரையும் தயார் படுத்தினாள். அவர்களுடன் இஸ்ஹாக்கும் செல்வதற்கு தயாராக இருந்தான். முர்சிதாவை அழைத்துச்செல்ல அவளது அலுவலக வாகனம் வந்தது, அவள் அதிலும், அவளது பெற்றோர்கள் அவர்களது வாகனத்திலும் செல்வதற்கு தயாராகி அவள் வாகனம் முன்னால் சென்றது அதைப் பின் தொடந்து இஸ்ஹாக்கின் வாகனமும் சென்றது. மகள் விருது பெறும் சந்தோசத்தில் முர்சிதாவின் பெற்றோரும் வருங்கால மனைவி விருது பெறும் சந்தோசத்தில் இஸ்ஹாக்கும் மூழ்கிப் போயிருந்தனர். அடுத்த மாதம் உங்களது திருமணத்தை நடத்த வேண்டும் எனக் கூறிய படி பல ஆசைகளுடனும் கனவுகளுடனும் சென்ற அவர்களுக்கு எதிர்பாராத விதமாக லொறி ஒன்று குறுக்கே வந்து இவர்கள் வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானது. ஏதோ சத்தம் கேட்கிறது என திரும்பிப் பார்த்த முர்சிதாவிற்கு அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

யாருமே எதிர்பாரத்திராத இத் தி ர் விபத்தில் முர்சிதாவின் குடும்பம் பலியானது. தன் கண் முன்னே அடிபட்டுக் கிடக்கும் பெற்றோரை கவனிப்பதா தனக்கு கணவராக வரப்போகும் இஸ்ஹாக்கை கவனிப்பதா அதிர்ச்சியில் தலை கால் புரியாமல் திகைத்து நின்றாள். அவசர சேவை அம்புலன்ஸ் மூலம் அவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். மூவருக்கும் நன்றாக அடிபட்டுள்ளது என்பதை அவள் அறிந்திருந்தாள். வைத்தியசாலையில வைத்து முர்சிதாவின் தந்தை முர்சிதாவின் கையைப் பிடித்து எங்களுக்கு எதுவும் ஆகாது அல்லாஹ் இருக்கிறான் எங்களை காப்பாற்றுவான் நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப் படாதே எனதருமை மகளே அல்லாஹ் நம் அனைவரையும் பொருந்திக் கொள்ள வேண்டும். அல்லாஹ் தான் நாடியதைத்தான் செய்வான் தான் நாடாதவற்றை செய்ய மாட்டான். "கழா கத்ரை" யாரால் மாற்ற முடியும்' அல்லாஹ்வைத் தவிர, "துஆ" வால் மாத்திரமே மாற்ற முடியும் துஆ செய்து கொள் மகளே மேலும் இந்தப் பெற்றோரின் ஆசையையும் நீ நிறைவேற்ற வேண்டும். நீ ஜனாதிபதி கையால் விருது வாங்குவதை எங்களால் பார்க்க முடியாவிட்டாலும் அவ்விருதை கட்டாயமாக நீ வாங்கியே ஆக வேண்டும் இது உனது தாய் தந்தையின் "ஒசிய்யத்" ஆகும் இதனை கட்டாயம் நிறைவேற்றியே ஆக வேண்டும். என்று கூறினார். முர்சிதாவுக்கு ஒன்றும் புரியவில்லை அவர்களை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து விட்டு விழாவிற்கு வந்தாள்.

**(முர்சிதாவைப் பற்றி ஒரு அறிமுகம்)**

அக்பர் கிராமத்தில் சமூகத்திலுள்ளவர்களால் மதிக்கத்தக்க ஓர் அழகிய குடும்பமாக முர்சிதாவின் குடும்பம் திகழ்ந்தது. முர்சிதாவின தந்தை ஒரு பாடசாலை அதிபர் தாய் ஆசிரியர். இவர்களுக்கு ஒரே ஒரு செல்ல மகளாக முர்சிதா இருந்தாள். உண்மையில் முர்சிதா அவர்களின் சொந்தப் பிள்ளையில்லை அவள் ஒரு வளர்ப்புப் பிள்ளை அதை அவர்கள் அவளுக்கு குறிப்பிட்ட வயது வந்ததும் அவளிடம் கூறிவிட்டனர் பிறர் மூலம் தன் மகளுக்கு தெரிவதை விட தாமே சொல்லலாம் என முடிவெடுத்து அவளிடம் கூறிவிட்டார்கள். அதை கேட்ட அவள் பெரும் அதிர்சியடைந்தாள். அவளால் அதை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

அவர்கள் அவளை தங்களது சொந்தப் பிள்ளை போலவே பார்த்துக் கொண்டார்கள். அவளுக்குத் தேவையான எல்லாவற்றையும் எந்தக் குறையும் இன்றி செய்து கொடுத்தார்கள். அவள் ஒரு புத்திஜீவியாகவும், நல்லொழுக்கம் உள்ளவளாகவும், மார்க்கப் பற்றுள்ளவளாகவும், பிறரால் மதிக்கத் தக்கவளாகவும், இருந்தாள். கல்வியிலும் சாதனை படைக்குமளவிற்கு அறிவுடையவளாக முர்சிதா திகழ்ந்தாள். உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவைக் கற்று சித்தியடைந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப் பட்டப்படிப்பை முடித்துவிட்டு இப்போது இலங்கையின் சுகாதாரப் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறாள். பகுதி நேரத்திற்கு ஒரு சுய தொழில் நிறுவனம் ஒன்றினை இயக்கிக் கொண்டிருக்கிறாள். அதில் பல நூற்றுக் கணக்காணோர் வேலை புரிகின்றனர் வசதியற்றவர்களுக்கு சுய தொழில் பட்டறைகளை அமைத்துக் கொடுத்து நன்மை பெற வாய்பினை வழங்கியுள்ளாள். இளைஞர்களுக்கு உபயோகப்படும் வகையில் சுய தொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ளாள். சமூகசேவை செய்வதில் மிகவும் ஆர்வம் கொண்டவள். இவை அனைத்திற்கும் அவளது பெற்றோர்கள் மிகவும் பக்கபலமாக உதவி புரிந்தார்கள். அவளுக்கு இஸ்ஹாக்கை திருமணம் முடித்துக் கொடுப்பதாக பெற்றோர்களால் நிச்சயம் செய்யப்பட்டுள்ளது.

விழாவிற்கு வந்த முர்சிதாவிற்க்கு அவ்விழாவில் ஜனாதிபதியின் கையால் அதிசிறந்த இளம் பெண் சுய தொழில் முகாமையாளர் என்ற சிறப்பு விருதும் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பும் கிடைத்தன. இன்றைய வளர்ந்து வரும் தொழில் முயற்சியாளர்களுக்காக ஒரு உரையை ஆற்றுமாறு கேட்டுக் கொண்டதிற்கினங்க முர்சிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் உரையினை ஆற்றினாள். ஒரு பெண் வணிகத்துறையில் சாதிப்பதென்பது மிகவும் சுலபமான காரியம் அல்ல. நான் இந்நிலையை அடைவதற்கு நிறைய தடைகளை தாண்டி வந்துள்ளேன். நான் ஒரு முஸ்லீம் பெண்ணாக இருந்தும் வர்த்தகத்துறையில் மிகப் பெரிய சாதனை படைத்துள்ளேன். சாதிப்பதற்கு மதமும், வயதும் தடையில்லை முயற்சியும் அயராத உழைப்பும் இருந்தால் போதும் இந்த உலகிலுள்ள அனைத்தையும் எல்லோராலும் சாதித்துவிடலாம். இன்று இந்த மேடையில் உங்கள் அனைவராலும் வாழ்த்தப்படும் அளவிற்கு உயர்ந்துள்ளேன் என்றால் அதற்கு எனது பெற்றோரின் ஊக்குவிப்பும் முயற்சியும், அன்பும், ஆதரவுமே காரணமாகும். என்னை ஒரு பட்டதாரியாக உருவாக்கி இந்நாடே போற்றும் முயற்சியாளர் விருதைப் பெறுமளவிற்கு ஒரு சிறந்த பெண்ணாக என்னை வளர்த்துள்ளார்கள் இந்தப் பேரும் புகழும் அவர்களையே சாரும். ஆனால் இந்நிகழ்வைக் காண்பதற்கு அவர்களுக்கு கொடுத்து வைக்கவில்லை. இந்நாளை அவர்கள் மிகவும் ஆவலாக எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்."தனது மகள் ஜனாதிபதியால் கௌரவிக்கப்படுவாள். அவளது பெற்றோர் என்ற வகையில் நாமும் கௌரவிக்கப்படுவோம் என்று மிகவும் ஆவலாக காத்திருந்த நாள்தான் இன்று, ஆனால் அந்நிகழ்வைக் காண்பதற்கும் மகிழ்வதற்கும் என் சந்தோசத்தில் பங்கு கொள்ளவும் அவர்கள் இப்போது என்னோடு இல்லை. (என்று கூறி முர்சிதா அழ ஆரம்பித்தாள்) மன்னிக்கவும் என்று கூறி உரையை முடித்தாள்.

ஏன் அழுகிறாய் என முர்சிதாவின் நண்பி சுமையா கேட்க பதில் கூற முடியாமல் தொடர்ந்தும் அழுதாள். அழாமல் முதலில் நடந்ததை கூறு என அவள் கேட்க முர்சிதா காலையில் தன் கண் முன்னே நடந்தவற்றைக் கூறி சத்தமிட்டுக் கதறியழுதாள். சுமையா அவளை ஆறுதல் படுத்தி விட்டு இருவருமாக வைத்தியசாலைக்குச் சென்றனர். அங்கே அவளுக்கு பெரும் அதிர்சி காத்திருப்பது அவளுக்குத் தெரியாது. வைத்தியசாலையை வந்தடைந்த அவள் டாக்டர் கூறியதைக்கேட்டு பித்துப்பிடித்தாற் போல் இருந்தாள். முர்சிதா உனது பெற்றோரின் உயிரை எங்களால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது ஆனால்.. ஆனால் என்ன டாக்டர் சொல்லுங்கள் இஸ்ஹாக்கிற்கு தலையில் அடிபட்டதால் சுயநினைவை இழந்துள்ளார். என்றார் டாக்டர். இவையனைத்தையும் கேட்ட முர்சிதா பித்துப்பிடித்துப்போய் தலையில் கை வைத்தபடி கீழே விழுந்தாள். விழுந்தவள் எழும்பவில்லை. சுமையா டாக்டர் டாக்டர் எனக் கத்தினாள் பிறகு அவளை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்தனர் அவளை பரிசோதித்து விட்டு வெளியே வந்த டாக்டர் சுமையாவைப் பார்த்து முர்சிதாவின் குடும்பத்தில் விதியின் விளையாட்டைப் பாருங்கள் அல்லாஹ் அவர்களை எவ்வாறு சோதித்துள்ளான் பார்த்தீர்களா தனது பெற்றோர்களின் இழப்பையும் தனது கணவராக வர இருப்பவருக்கு ஏற்பட்டிருக்கும் நிலையையும் எண்ணி முர்சிதாவின் மனநிலையும் பாதிக்கப்பட்டுள்ளது என்றார். இன்று முர்சிதா ஒரு சிறு குழந்தையாக தன்னை எண்ணிக் கொண்டு மனநலக்காப்பகத்தில் இருக்கிறாள். நாம் நினைப்பது ஒன்று இறைவன் நினைப்பது ஒன்று எது நடக்க இருக்கிறதோ அதுநடந்தே ஆகும். "கழாகத்ரை" யராலும் மாற்ற முடியாது. முர்சிதா எப்போது குணமடைவாள் இஸ்ஹாகிற்கு எப்போது நினைவு வரும் யார்தான் அறிவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேயாடுகளம்

வீடெனத் தொடங்கி
ரோடெனக் கடந்து
பாரெனப் பரவி
படுகுழியின் சதுக்கத்தில்
பணிவிழுந்தோர் உலகு
பலமுறை தினமெல்லாம்
பேயாடுகளமாய்..

மாந்தரென மனிதரென
மானுட மாதிரிகள்
மாற்றம் நாறி
பேய்களாய்
பேயாடும் களமாய் தேசம்.

சேயெனக் கொல்லும் தாய்
சேட்டைகளாய் தந்தாய்
உறிஞ்சும் உற்றார்
தன் இரத்தம் குடிக்கும்
தன் கூட்டு அட்டைகள்
அதிகரிப்பால் உலகே!
பேயாடுகளம்.

பந்தய மடமாய்ப் பாதை
பலியாய் விபத்து
வேகப் போட்டியின் கணக்கில்
மது போதைக் குடியில்
பிணங்கள் காவும் பேயாடுகளமாய்..
சுற்றம் முற்றம்.

அநீதிக் கொலை
அக்கிரமப் போர்
இனவெறிச் சூதாட்டம்
இதழ்கள் கருகும்
இடி மின்னல்
மாமிச மிருகங்கள்

இருதயச் சதைப்பிண்டம்
இருள் சூழ்ந்த
கொடுமைப் பூத்த
சுடு இடு காடாய் ஆனதே இன்று

கலியுகக் காரணம்
வேதம் மறந்து
மார்க்கம் துறந்து
இறைவன் மறுத்துப் போகும்
மறு வாழ்வு நினைக்கா
மானிடராலே
மனிதம் பேயாடும் களமாய்.

ஏ.எம்.எம். அஸ்கர்
நான்காம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் பின் இலங்கை அரசியலில் பெண்களின் நிலை.

எம்.எம். சப்னா பர்வின்,
நான்காம் வருடம் வரலாறு,
எஸ்.டி.எப். முனாசிரா
நான்காம் வருடம்,
வரலாறு சிறப்பு.

இலங்கையானது இந்துசமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு தீவாகும்.இத்தீவானது தென்னாசியாவில் 500 வருட கால தொடர்ச்சியான வரலாற்றை பேணிவருகின்ற ஒரு முதன்மையான நாடாகும்.

19 ஆம் ஆண்டு வரை செலான் (ceylon) என்று அழைக்கப்பட்ட இலங்கையானது 19 8 களில் "இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு" என உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டது. ஜனநாயகம் என்பது அரசியல் முறைமையின் அடிப்படை குணாம்சங்கள் இறைமை மக்களிடத்தில் இருத்தல், சமத்துவம், சுதந்திரம் அடிப்படை உரிமைகள் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் சர்வஜன வாக்குரிமை போட்டிக்கட்சி உரிமை,சட்டத்தின் ஆட்சியில் சுயாதீனமான நிதித்துறை மற்றும் சுதந்திர ஊடகத்துறை ஆகும்.

ஜனநாயக அமைப்பொன்றினை தாங்கி நிற்கும் பிரதான மூன்று கற்றூண்களாக மனித உரிமைகள், சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்பன கருதப்படுகின்றன. ஆண்-பெண் வேறுபாடுகளின்றி நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் அவர்களின் வாழ்க்கை, தனிநபர் அபிவிருத்தி,அடையாளம் மற்றும் கௌரவமாக வாழ்க்கையினை கொண்டு நடாத்துவதற்கான நிபந்தனைகள் சமமான வகையில் தேவையாகும்.இந் நிபந்தனைகளை எளிமையான முறையில் விபரிக்கின்ற போது அதனை மனித உரிமைகள் என அடையாளப்படுத்துவர். சமூக கலாசார பொருளாதார உரிமைகளைப் போலவே அரசியல் உரிமைகளில் மனித வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமான நிபந்தனை அடிப்படை உரிமையாகும் என இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகள் அரசியலமைப்புகளில் உறுதிப்படுத்தியுள்ளன. ஏனைய உரிமைகள் பொதுச்சட்டம், பாராளுமன்ற சட்டதிட்டங்கள் மற்றும் சர்வதேச சட்டங்கள் மூலமும் பாதுகாக்கப்பட்டுள்ளன. அரசியல் உரிமைகள் பிரிவுக்குள் உள்ளடக்கப்படும் வாக்களித்தல், பிரதிநிதித்துவம், தேர்தல் நடவடிக்கைகளில் பங்குபற்றல், அரசியல் கட்சிகளை உருவாக்கிக் கொள்ளல் மற்றும் அதனோடிணைந்த செயற்பாடுகளில் பங்குபற்றல்,அரசாங்கத்தை விமர்சித்தல் மற்றும் தீர்மானம் எடுப்பதில் நேரடியாக அல்லது மறைமுகமாக அமைதியான முறையில் பங்குபற்றல் என்பன ஆண் பெண் அல்லது வேறெந்த பாகுபாடுமில்லாமல் ஒரு நாட்டின் அனைத்து குடிமக்களும் அனுபவிக்கும்போது அது அரசின் அழுத்தமில்லாமல் வேறு நபர்களின் சுதந்திரத்திற்கு தடைகள் ஏற்படாவண்ணம் சுயாதீனமாக அனுபவிக்கும் சுதந்திரம் அனைத்து மக்களுக்கும் சமமாக கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் உள்ளூராட்சி அரசாங்கத்தை அமைத்தல் தொடர்பான வரலாறு 1865 வரை நீண்டு செல்கின்றது. 1865ம் ஆண்டு மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் கொழும்பு மாநகரம் உருவாக்கப்பட்டதோடு, இங்கு வாக்குகளால் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் முறையும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் இந்த சட்டத்திற்கு ஏற்ப குறித்த மக்கள் பிரிவினருக்கே வாக்குரிமை கிடைத்தது. 1 வயதுக்கு மேற்பட்ட, பா100 க்கு அதிகமான சொத்துடைய ஆண்களுக்கு மட்டுமே வாக்குரிமை கிடைத்தது. தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் வாய்ப்பு குறைந்தபட்சம் ருபா 5000 பெறுமதியான சொத்துடைய ஆண்களுக்கு மட்டுமே கிடைத்தது.19 1இல் இலங்கையின் ஆண் - பெண் இருசாராருக்கும் சர்வஜன வாக்குரிமை கிடைத்ததன் பின்னர் தேசிய மட்டத்தைப் போலவே, உள்ளூராட்சி தேர்தல்களிலும் வாக்களிக்கவும் மற்றும் வேற்பாளராக போட்டியிடுவதற்குமான வாய்ப்பு பெண்களுக்கும் கிடைத்தது.

19 8ம் ஆண்டு 1 வது அரசியலமைப்பு திருத்தத்தின் முலம் இலங்கையில் மாகாண சபைகள் தாபிக்கப்பட்டன.முன்பு காணப்பட்ட மாநகரசபை மற்றும் நகரசபைகள் விசேட மாற்றங்களுக்கு உட்பட்டதோடு, 198 ம் ஆண்டு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. தற்போதைய நிலையில் இலங்கையில் 8 மாகாண சபைகள் (வடக்கு தவிர்த்து), 1 மாநகர சபைகள், 8 நகரசபைகள் மற்றும் 5 பிரதேச சபைகளும் தொழிற்படுகின்றன.

இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களினுள் பெண்களின் பிரதிநிதித்துவம் தேசிய சட்டசபையின் பெண்களின் பிரதிநிதித்துவத்திலும் பார்க்க மிகவும் குறைவாகும். பிரித்தானிய காலணித்துவத்தின் கீழ் இருந்த நாடுகளில் முதலில் சர்வஜன வாக்குரிமையை இலங்கைப் பெண்களே பெற்றுக் கொண்டனர். 19 1 அரசுக்கழக தேர்தலில் இலங்கைப் பெண்கள் வாக்கினைப் பயன்படுத்தினாலும், வேட்பாளர்களர்களாக போட்டியிட வில்லை. எனினும் 19 1 நவம்பர் 14 ருவன்வெல்ல இடைத்தேர்தலுக்கு முகங்கொடுத்த எட்லின் மொலமுரே அதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். 19 6 தேர்தலில் நேசம் சரவணமுத்து வெற்றி பெற்று அரசுக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழ் பிரதிநிதியாவார்(Mettananda, 1981).

19 1 முதல் இதுவரையாகும் போது 80 வருட நீண்ட காலத்தில், இலங்கைப் பெண்கள் சர்வஜன வாக்குரிமையினை பயன்படுத்தியுள்ள போதும், அண்மைக்கால தேர்தல்களில் பெண்களின் வாக்களிக்கும் விகிதாசாரம் 55 - 56% வரை வளர்ச்சியடைந் துள்ளது (Liyanage 1999). இலங்கை 1960 இல் உலகின் முதல் பெண் பிரதமரை உருவாக்கியது. 1994இல் ஒரே சந்தர்ப்பத்தில் இலங்கையில் பெண்கள் இருவர் ஜனாதிபதி (சந்திரிக்கா குமாரதுங்க) மற்றும் பிரதமர் (சிறிமாவோ பண்டாரநாயக்க) பதவி வகித்தனர். இவ்வாறான வெற்றிகளைப் பெற்றாலும், இன்று வரை இலங்கை பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5.8% ஆகும். மாகாண சபைகளில் இந்த விகிதாசாரம் 4.8%, மாநகரசபை மற்றும் நகர சபைகளில் 3.2% மற்றும் பிரதேச சபைகளில் 1.9% ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து முடிந்த 015 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் பெண்கள் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்த வரையில் கறைபடிந்த ஒரு தேர்தல் என்றே கூற வேண்டும். பெண்கள் அமைப்புக்கள் 40 பெண்களாவது இம்முறை அங்கம் வகிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். வேட்பாளர் பட்டியலில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தேசிய பட்டியலில் உள்ளடக்குவது போன்ற கோரிக்கைகளை நிர்ப்பந்தித்து வந்தார்கள்.

5 பேரை நாடாளுமன்றத்துக்கு 6151 பேர் போட்டியிட்டனர். அதில் 556 பெண் வேட்பாளர்கள். அதாவது இது மொத்த வேட்பாளர்களில் 9. % . சனத்தொகையில் 5 % வீதத்துக்கும் அதிகமாக கொண்ட பெண்கள் தமது அரசியல் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதற்கு குறைந்தது 0% வீதத்தினரையாவது தமது வேட்பாளர் பட்டியலில் சேர்க்கும்படி தொடர்ச்சியாகப் போராடிப் பார்த்தனர். இம்முறையும் அதனை எந்த கட்சியும் மேற்கொள்ளவில்லை. இத்தனைக்கும் பிரதான கட்சிகள் உட்பட பல கட்சிகள் கொள்கையளவில் இணங்கியிருந்த போதும் நடைமுறையில் அதனை செய்யவில்லை. பிரஜைகள் முன்னணி போன்ற கட்சி நுவரெலியா மாவட்டத்தில் பெண்களை மட்டுமே வேட்பாளர்களாக இறக்கியிருப்பதாக தெரிவித்துக் கொண்ட போதும் அது பிரஜையுடன் மேற்கொள்ளப்படவில்லை. கூடவே பாமர தோட்டப்பெண்களை மோசமாக வழிநடத்தும் கும்பலிடம் அந்தப் பெண்கள் அகப்பட்டிருந்தார்கள்.

இறுதியில் இம்முறைத் தேர்தலில் 11 பெண்கள் மாத்திரமே தேர்தலில் தெரிவானவர்கள். தேசியப்பட்டியலில் இரண்டு ஆசனங்களையும் சேர்த்து சென்ற தடவை போல் இம்முறையும் 1 பெண் உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். இது மொத்த உறுப்பினர் தொகையில் 5.8 வீதமே தற்போது இலங்கையின் மாகாண சபைகளில் மொத்தம் 4.1 வீதமும், உள்ளூராட்சி சபைகளில் . வீதமுமே பெண்களின் பிரதிநிதித்துவமுமே உள்ளது.

19 1இல் இலங்கையில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்ட போது ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏக காலத்தில் வழங்கப்பட்டது. ஆங்கிலேய காலத்தினித்துவத்தின் கீழ் இருந்த நாடுகளில் முதன் முதலில் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட நாடு இலங்கை. வளர்ச்சியடைந்த பல நாடுகளில் கூட அப்போது பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை. இத்தனை பழமையான வரலாறு இருந்தும் கூட இலங்கையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6.5 இதுவரைத் தாண்டியதில்லை.

தென்னாசியாவிலேயே குறைந்தளவு பெண்களின் பிரதிநிதித்துவம் கொண்ட ஒரே நாடு இலங்கை மட்டுமே. இந்தியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை போன்ற தென்னாசிய நாடுகள் பெண்களை நாட்டின் அரச தலைவர்களாக உருவாக்கிய நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது." சர்வதேச நாடாளுமன்ற நிறுவனம்"(IPU- international organization of parliaments) உலக நாடுகளில் பெண்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்தவம் குறித்த தர வரிசையை அட்டவணையாக வெளியிட்டுள்ளது. அதன் படி ருவாண்டா அதிக பெண்களை நாடாளுமன்றத்தில் கொண்டுள்ளது. மொத்தம் 63.8% பெண்கள் அங்கு நாடாளுமன்றத்தில் உள்ளார்கள். அந்த அட்டவணையின்படி இலங்கை 5.8 வீதத்தையே கொண்டுள்ளது. ஆகவே, இலங்கை 1 1வது இடத்தில் உள்ளது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான பெண்கள் அமைப்புக்களின் தொடர்ச்சியான போராட்டம் தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக கடந்த ஒரு தசாப்தத்திற்குள் இதற்காகவே பல பெண்கள் அமைப்புக்கள் தோற்றம் பெற்று முனைப்புடன் தொழிற்பட்டு வந்துள்ளன. அந்த அமைப்புகள் அரசியல் விழிப்புணர்வை ஊட்டுவதற்காக சாதாரண பெண்கள் மற்றும் அரசியல் கட்சிகளையும், அரசியல்வாதிகள் மத்தியிலும் இயங்கிவந்துள்ளன. அதன் விளைவாக இந்த அமைப்புகளின் கணிசமான கோரிக்கைகளுக்கும் இணங்கினர். குறிப்பாக பல முக்கிய கட்சிகள் பெண்களின் பிரதிநிதிகளை உள்ளடக்குவதாக தமது வேட்பாளர் பட்டியலில் 5% பெண் பிரதிநிதிகளை உள்ளடக்குவதாக உறுதியளித்தன. ஆனால், அது நடக்கவில்லை. 0ஆவது திருத்தச்சட்டத்திலும் அந்தக் கோரிக்கையை உள்ளடக்குவதாக தற்போதைய ஆளும்கட்சி ஒப்புக்கொண்டது.

புதிய நாடாளுமன்றம் ஆட்சிக்கமர்ந்ததும் 100 நாட்களில் 0ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டுவருவதாக அறிவித்து இருக்கிறார்கள். அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் கூட அதனை உள்ளடக்கியிருந்தன.

**2015 தேர்தல் முடிவுகள்.**

| பெயர் | மாவட்டம் | விருப்பு வாக்குகள் | கட்சி | உறவு முறை பின்புலம் |
|---|---|---|---|---|
| 1. சுதர்சினி பெர்னபண்டோ பிள்ளை | கம்பஹா | 73553 | UPFA 2010 2015 | கொல்லப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோவின் மனைவி |
| 2. விஜயகலா மகேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 13071 | UNP 2010 2015 | கொல்லப்பட்ட முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் மனைவி |
| 3. ஹிருனிக்கா பிரேமசந்திர | கொழும்பு | 70584 | UNP 2015 | கொல்லப்பட்ட முன்னனாள் அமைச்சர் பிரேமசந்திரவின் புதல்வி |
| 4. சுமேத குணவதி ஜயசேன | மொனராகலை | 69082 | UPFA 1989 1994 2000 2004 2015 | வேட்புமனு தாக்கலின் பின் கணவர் சுமேத இறந்தமை |
| 5. கீதா குமாரங்க | குாலி | 63995 | UPFA 2015 | |
| 6. ரோகினி குமாரசிங்க | மாத்தளை | 41766 | UNP 2015 | முன்னாள் அமைச்சர் விஜேரத்தின பண்டாராவின் புதல்வி |
| 7. தலதா அத்துக்கோரளை | இரத்தினபுரி | 145828 | UNP 2004 2010 2015 | முன்னாள் அமைச்சர் காமினி அத்துக்கோரலவின் சகோதரி |
| 8. பவித்ரா வன்னியாராய்ச்சி | இரத்தினபுரி | 87660 | UPFA 1994 2000 2004 2010 2015 | முன்னாள் அமைச்சர் தர்மதாச வன்னியாராய்ச்சியின் மகள் |
| 9. துசிதா விஜேமான்ன | கேகாலை | 50890 | UNP 2015 | |
| 10. சிறியானி விஜேவிக்கிரம | அம்பாறை | 49691 | UPFA 2010 2015 | |
| 11. சந்திராணி பண்டார | அனுராதபுரம் | 83666 | UPFA 2000 2004 2010 2015 | முன்னாள் அமைச்சர் சந்திரா பண்டாரவின் புதல்வி |
| 12. சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா | யாழ்ப்பாணம் | தேசிய பட்டியல் | ITAK 2015 | |
| 13. அனோமா கமகே | அம்பாறை | தேசிய பட்டியல் | UNP 2015 | கணவர் அம்பாறை மாவட்ட பா.உ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாராளுமன்றத்துக்கு இதுவரை தெரிவான பெண்களின் பட்டியல்.**

| காலம் | வேட்பாளர் தொகை | மொத்த பெண்கள் | % | மொத்த உறுப்பினர் | தெரிவான பெண்கள் |
|---|---|---|---|---|---|
| 1947 | 361 | 3 | 0.8 | 101 | 3 |
| 1952 | 303 | 9 | 3.0 | 101 | 2 |
| 1956 | 249 | 5 | 2.0 | 101 | 4 |
| 1960(மார்ச்) | 899 | 16 | 1.8 | 157 | 3 |
| 1960(யூலை) | 393 | 5 | 1.3 | 157 | 3 |
| 1965 | 492 | 14 | 2.8 | 157 | 6 |
| 1970 | 440 | 14 | 3.2 | 157 | 6 |
| 1977 | 756 | 14 | 1.8 | 168 | 11 |
| 1989 | 1688 | 52 | 3.1 | 225 | 13 |
| 1994 | 1492 | 52 | 3.5 | 225 | 12 |
| 2000 | 5048 | 117 | 2.3 | 225 | 9 |
| 2001 | 4610 | 52 | 1.1 | 225 | 10 |
| 2004 | 6060 | 375 | 6.2 | 225 | 13 |
| 2010 | | | | | |
| 2015 | 6151 | 556 | 9.2 | 225 | 13 |

மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் நோக்கும் போது இலங்கை அரசியலில் பெண்களுக்கான ஒதுக்கீடு என்பது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. பண்டைய காலத்தில் பெண்களை தலைமையாகக் கொண்ட தாய் வழி சமுதாயங்கள் காணப்பட்டண. ஆனால் இன்றைய காலத்தில் நமது அரசாங்கம் பெண்களுக்கு அரசியலில் பங்கு கொள்வதற்கான தகுதி இல்லை என்று நினைக்கின்றதா அல்லது அவர்களது அரசியல் பிரவேசத்தை விரும்பவில்லையா என்பது கேள்விக்குரியே பெரும்பாலும் இக்காலத்தில் பெண்களின் அரசியல் பிரவேசம் என்பது ஆண்களின் நிலையை டு செய்வதற்காகவே அன்றி பெண்களை முன்னுரிமைப்படுத்தி வழங்கப்படுவதாக தெரியவில்லை என்பது ஆராயத்தக்கது. குறிப்பாக தென்னாசிய நாடுகளில் சர்வஜன வாக்குரிமையை முதலில் பெற்றுக் கொண்ட நாடாக இலங்கை காணப்பட்டாலும் கூட இலங்கை அரசியலில் பெண்களுக்கான இடம் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.

**உசாத்துணை நூல்கள்.**


1._லியனகே, க., (மொ.பெ-இரா.ரமேஸ், சோபனாதேவி ராஜேந்திரன்), ( 01 ), இலங்கை உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் சவால்களும் எதிர்ப்புக்களும்இப்ரெட்ரிச் பர்ட் ஸ்டிப்டுங் வெளியீடு.

. சிவராஜா. அ., ( 006), இலங்கை அரசியல், குமரன் புத்தக இல்லம்.

3. https://maatram.org/?p=3676

4. https://www.tamilwin.com/politics/01/181451




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய பார்வையில் சமத்துவமும் சகோதரத்துவமும்

எம்.எப்.எப். முஷர்ரத்
இரண்டாம் வருடம்
புவியியல்.

இஸ்லாமிய மார்க்கம் தீவிரவாதத்தை தோற்றுவிக்கும் மார்க்கம், தங்களுக் கிடையில் ஏற்றத் தாழ்வைக் காட்டும் மார்க்கம், அது ஏனைய மதத்தவர்களிடத்தில் பாரபட்சத்தைக் காட்டும் மார்க்கம் என பல்வேறுபட் கருத்துக்கள் மாற்று மதத்தவர்களிடத்தில் நிலவுகின்றன. இது அவர்களிடத்தில் நியாயமான எண்ணக்கருவை ஏற்படுத்தினாலும் இஸ்லாமிய பார்வையில் அது மறுக்கக் கூடிய ஒன்றாக விளங்குகின்றது.

இஸ்லாம் மனிதனால் உருவாக்கப்பட்ட மார்க்கமன்று. அது அல்லாஹ்வினால் அருளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட மார்க்கமாகக் காணப்படுகின்றது. இதனை திருக்குர்ஆனும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளது. இஸ்லாம் மார்க்கமானது பல்வேறு சிறப்பம்சங்களையும் நெகிழ்ச்சித் தன்மைகளையும் கொண்டு எக் காலத்திற்கும் எந்நாட்டவர்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் காணப்படுகின்றது. மேலும் மாற்று மதத்தவர்கள் கருதுவதைப் போன்று தீவிரமாக மார்க்கமோ, முஸ்லிம்களிடத்தில் ஏற்றத்தாழ்வைக் காட்டும் மார்க்கமோ, மாற்று மதத்தவர்களிடத்தில் பாரபட்சத்தைக் காட்டும் மார்க்கமோ இல்லை. மாறாக அது இஸ்லாமியர்களிடத்திலும் மாற்றுமத சகோதர்களிடத்திலும் சிறந்த உறவினையும் நட்பினையும் பாராட்டி வருகின்ற மார்க்கமாக திகழ்கின்றது.

அந்த வகையில் இஸ்லாமானது இஸ்லாமிய சகோதரர்களுடன் சிறந்த உறவினை வளர்ப்பதற்கும், மாற்றுமத சகோதரர்களுடன் நட்பு பாராட்டுவதற்கும் சமத்துவத் தினையும், சகோதரத்துவத்தினையும் பேணிப் பின்பற்றி வருவதனை அவதானிக்கலாம். அந்த வகையில் இஸ்லாமிய பார்வையில் சமத்துவம் சகோதரத்துவம் தொடர்பாக நோக்குவோம்.

இஸ்லாமியர்கள் தங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வை காட்டுகின்றார்கள் என்பது சில மாற்று மதத்தவர்களின் கருத்தாக காணப்படுகின்றது. அக் கருத்தினை மறுக்கும் விதமாக இஸ்லாம் மார்க்கமானது அன்றிலிருந்து இன்று வரை சமத்துவத்தினை பேணி வருகின்றது. வணக்க வழிபாடுகள் தொடக்கம் சாதாரண உரிமையில் கூட சமத்துவத்தினைப் பேணி வருவதைக் காணலாம். மேலும் இஸ்லாமியர்கள் மத்தியில் சகோதரத்துவ உணர்வனையும் ஏற்படுத்தி வருகின்றது. இதற்கு பல்வேறு ஆதாரங்களும் காணப்படுகின்றன. இதற்கு எடுத்துக் காட்டாக ஐந்து கடமைகளில் ஒன்றான தொழுகையை எடுத்துக் கொண்டால் அது அனைவருக்கும் சமமான வணக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகையின் போது வெள்ளையன், கருப்பன், பணக்காரன், ஏழை போன்ற எவ்வித வேறுபாடுகளும் இன்றி தொழுகையில் ஒரே வரிசையில் நின்று வணங்குகின்றனர். மேலும் நோன்பை எடுத்துக் கொண்டால் அதுவும் அனைத்து முஸ்லிம்களுக்கும் சமமேயாகும். ஒரே மாதத்தில் தான் நோன்பு நோற்கப்படுகின்றது. அத்துடன் நாட்டுக்கு நாடு நோன்பு வைக்கும் நேரமும் நோன்பு திறக்கும் நேரமும் வேறுபடுகின்றது. மற்றும்படி ஏனைய நிபந்தனைகள் ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றது.

அத்துடன் சர்வதேச ரீதியில் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் பேணும் ஒரு அலகாக ஹஜ் காணப்படுகின்றது. ஹஜ் கடமையின் போது நிறம், மொழி, பால், நாடு போன்ற எவ்வித வேற்றுமைகளும் இன்றி சர்வதேச ரீதியாக அனைவரும் ஒன்றுபடுகின்றார்கள். மேலும் ஹஜ் கடமையானது அனைத்து நாட்டவர்களுக்கும் ஒரே மாதத்திலேயே நிறைவேற்றுகின்றார்கள். மேலும் ஹஜ் உலகளாவிய முஸ்லிம்களையும் இணைப்பதனால் சிறந்த வணக்கமாகக் காணப்படுகின்றது. இதனை அபூ ஹனீபா (ரஹ்) அவர்களின் கருது உறுதிப்படுத்தப்படுகின்றது. "இஸ்லாமிய வணக்கங்கள் யாவற்றிலும் சிறந்தது எது எனத் தீர்மானிக்க முடியாது இருந்தேன் ஹஜ் செய்து அதில் மறைந்திருக்கும் எண்ணற்ற நன்மையைக் கண்டதும் ஹஜ்ஜே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தேன்". எனக் கூறினார்.

மேலும் இஸ்லாமானது இஸ்லாமியர்களிடத்தில் எவ்வித பாரபட்சமும் காட்டுவதில்லை. அத்துடன் ஏழைகளுக்கு ஒரு சட்டம் பணக்காரனுக்கு ஒரு சட்டம் ஒரு நியாயம் என்றவாறாக இல்லாது அனைத்து முஸ்லிம்களுக்கு சமத்துவத்தினை வழங்குகின்றது. இதற்கு பின்வரும் சம்பவம் எடுத்துக்காட்டாக அமைகின்றது. "ஒரு சமயம் திருட்டினை செய்த ஒருவருக்கு கரத்தை துண்டிக்கும் தண்டணை வழங்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இத் திருட்டினை எனது மகள் பாத்திமா செய்திருந்தாலும் தான் இதே தண்டனையைத் தான் வழங்குவேன்". என்று கூறினார்கள். இச் சம்பவமானது இறைத்தூதரின் மகளாக இருந்தாலும் சட்டம் அனைவருக்கும் சமம் என்பதை அறியத் தருகின்றது.

அத்துடன் இஸ்லாமியர்கள் மத்தியில் ஒற்றுமையையும் சகோதரத்துவ எண்ணத்தையும் உருவாக்க குர்ஆனும், ஹதீஸூம் பல்வேறு போதனைகளை வழங்குகின்றது. "மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் பெண்ணிலிருந்து படைத்து, நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு பின்னர் உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே) உங்களில் அவர் மிகவும் பயபக்தி உடையவராக இருக்கின்றாரோ அவர் தாம் இறைவனிடத்தில் நிச்சயமாக மிக்க கன்னியமானவர், நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவர், யாவற்றையும் தெரிந்தவன்" (49: 13) எனும் குர்ஆன் வசனம் உயர்சாதி, கீழ்சாதி, வெள்ளையன், கருப்பன் என்ற பாரபட்சத்தை தகர்பதாக அமைகின்றது. அத்துடன் படைப்பால் எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்பதனையும் வலியுறுத்திக் கூறுகின்றது. இச் சம்பவமானது இஸ்லாமியர்களிடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையும் ஏற்படுத்துவதுடன் தீவிரவாத எண்ணங்கள் மற்றும் இரக்கமற்ற செயல்களை தவிர்ப்பதாகவும் தகர்ப்பதாகவும் அமைகின்றது.

இஸ்லாம், இஸ்லாமியர்களுடன் மாத்திரம் நல்லுறவினைப் பேணுவதன்றி மாற்றுமதத்தவர்களுடனும் சிறந்த முறையில் நட்புப் பாராட்டி வருகின்றனர். மேலும் இஸ்லாம் எல்லா மதத்தவர்களுடனும் நட்பினைப் பாராட்டும் படி பணிக்கின்றது. மேலும் மதத்தினை காரணமாக வைத்து அவர்களிடத்தில் பாரபட்சம் காட்ட வேண்டாம் என்றும் குறித்து நிற்கின்றது. அதிலும் மனிதர்கள் ஒருவரில் இருந்து இன்னொருவர் பிரிந்து வாழ வேண்டிய அவசியம் தோன்றவில்லை என்பதை வலியுறுத்துகின்றது. இதற்கு மேற்குறிப்பிட்ட குர்ஆன் வசனத்தையே (49: 13) ஆதாரமாகக் குறிப்பிட முடியும். அத்துடன் அன்றிலிருந்தே முஸ்லிம்கள் மாற்று மதத்தவர்களுடன் நல்லுறவினையும் நட்பினையும் பாராட்டி வந்துள்ளார்கள் என்பது நாம் யாவரும் அறிந்ததே. அந்த வகையில் ஒரு சில தமிழ்மொழிகளையும் சம்பவங்களையும் நோக்குவோம்.

அந்த வகையில் படைப்பினங்கள் யாவும் இறைவனின் குடும்பம் என்ற கொள்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் "இறைவனின் குடும்பத்திற்கு அதிக நன்மை புரிபவரே, இறைவனிடம் (நல்லவர்) உகப்பானவர்" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கு இறைக் குடும்பம் என்ற சொல்லானது படைப்பினங்களுக்கிடையில் பிரிவில்லை. அனைவரும் ஒன்றே என்ற கருத்தினை தருகின்றது. மேலும் "மனிதர்களே உங்கள் இறைவன் ஒருவனே உங்கள் தந்தையும் (ஆதம்) ஒருவரே, நீங்கள் எல்லோரும் ஆதமின் மக்களே! ஆதம் மண்ணினால் படைக்கப்பட்டவர். அறபியல்லாதவர் ஒரு அறபியின் மீது பெருமையடிக்க முடியாது. அரபி, அரபி அல்லாதவர் மீது பெருமையடிக்கவும் முடியாது. அது போன்று செந்நிறமானவர், வெந்நிறமானவர் மீது பெருமையடிக்க முடியாது. அதே போன்று வெந்நிறமானவர் செந்நிறமானவர் மீது பெருமை அடிக்க முடியாது. ஒருவருக்கு பெருமை வருவதாயின் அது இறைபக்தியானவர் என்ற பெருமையே தவிர படைப்பாலல்ல" என்ற நபி (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் உபதேசமானது பல்வேறு படிப்பினைகளைத் தருகின்றது. இதில் அனைவருக்கும் இறைவன் ஒருவன் என்ற ரீதியிலும் யாவரும் ஓர் ஆண், பெண்ணில் இருந்து படைக்கப்பட்டார்கள் என்ற ரீதியிலும், மொழி, நிறம் என்ற ரீதியிலும் வேறுபட்டு பிரிந்து விட முடியாது என்ற கருத்தையும் அனைவரும் ஒன்று என்ற எண்ணத்தையும் இஸ்லாமியர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது. மேலும் நபிகளாரின் இவ் வினதேசம் மொழி பேதம், சாதிபேதம், குலபேதம், அன்னிய வாதம், இனவாதம், பிரதேச வாதம் ஆகிய அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்துள்ளது.

மேலும் ஹஸன்பஸரி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் அண்டை வீட்டாரின் கடமைகளும் உரிமைகளும் என்ன என்று வினவிய போது நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் "கடன் கேட்டால் கொடுக்கப்பட வேண்டும். அழைத்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் சொல்ல வேண்டும். நோய் வாய்ப்பட்டால் நலம் விசாரிக்க வேண்டும். உதவி தேவைப்பட்டால் உதவியளிக்க வேண்டும். துன்பத்தின் போது ஆறுதல் கூற வேண்டும். நலவுகளின் போது வாழ்த்த வேண்டும். மறைந்தால் குடும்பம் வீடு போன்றவற்றை பாதுகாக்க வேண்டும். அவனின் அனுமதி இல்லாமல் கட்டிடத்தை உயர்த்திக் காட்டக் கூடாது." என்று குறிப்பிட்டார்கள். இக்கடமைகளை நோக்குகையில் நபி (ஸல்) அவர்கள் அந்நிய அண்டைய வீட்டாரிடத்தில் எவ்விட உறவினைப் பேணியுள்ளார் என்பது தெரிய வருகின்றது.

அது மட்டுமல்லாது, நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுடன் அமர்ந்திருக்கும் போது அந்த வழியாக அந்நிய மதத்தவரின் மையத் கொண்டு செல்லப்பட்டது. நபி (ஸல்) அவரகள் அதனைக் கண்டதும் எழுந்து நின்றார்கள். இதனை அவதானித்த ஸஹாபாக்கள் அந்நியவரின் சடலத்திற்கு எதுக்கு மரியாமை செய்கின்றீர்கள் என்று கேட்ட போது அந்நியராக இருந்தாலும் அவரும் மனிதரே என்று கூறினார்கள். மேலும் "முஸ்லிம் அல்லாத குடிமகன் ஒருவருக்கு ஒரு முஸ்லிம் அநீதி இழைத்து விட்டாலோ அவனது உரிமையை பறித்தாலோ அவனது சக்திக்கு மீறி சுமைகளை அவன் மீது சுமத்தினாலோ அவனது பொருள் எதையேனும் பலவந்தமாக எடுத்துக் கொண்டாலோ நாம் மறுமை நாளில் இறைவனின் நீதிமன்றத்தில் அந்த முஸ்லிமுக்கு எதிராக தொடுக்கப்படும் வழக்கில் அந்த முஸ்லிம் அல்லாத குடிமகனின் வழக்கறிஞராக வாதாடுவேன்." என்று நபி (ஸல்) அவரகள் கூறினார்.

இவ்வாறான அம்சங்களினை நோக்கும் போது இஸ்லாமானது முஸ்லீம்களிடத்தி லும் முஸ்லிம்கள் அல்லாதவர்கள் இடத்திலும் சமத்துவத்தினையும் சகோதரத்துவத் தினையும் பேணிவருகின்றது என்பது தெளிவாகின்றது.

இஸ்லாத்திற்கு வெளியில் நின்று பார்க்கும் போது முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் இஸ்லாத்தின் பார்வையில் நோக்கும் போது இஸ்லாமியர்கள் முஸ்லிம்களுடன் மட்டுமல்லாது முஸ்லிம் அல்லாத மாற்று மதத்தவர்களுடன் சிறந்த உறவினையும் நட்பினையும் பாராட்டுகின்றனர் என்பதை அறியலாம்.

## Reference

*Soaththal Islam Part I;*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியக் கிராமம்

கே.எப். மஹீஸா
முதலாம் வருடம்
வரலாறு மற்றும் உளவியல்

**அறிமுகம்**

இஸ்லாமியக் கிராம உருவாக்கம் சம்பந்தமாக இன்று பரவலாக பேசப்படுகின்றது. இஸ்லாமியக் கிராமம் என்பது "முஸ்லிம்கள் ஒரு கிராமத்தில் வாழ்கின்றார்கள், இஸ்லாமிய ஆடைகளை அணிகிறார்கள், ஒரு சில வணக்க வழிபாடுகளைச் செய்கிறார்கள் இப்படி பலவாறாகப் புரிந்து வைத்துள்ளோம்.

ஆனால் இத்தகைய பார்வைகளுக்கு அப்பால் அல்குர்ஆன் இஸ்லாமியக் கிராமத்தின் மாதிரியை அழகாகக் கூறுகின்றது. அக்கிராமம் அல்லாஹ்வின் அருளைப் பெற்று பசுமையானதாகவும் செழிப்பு மிக்கதாகவும் காணப்படும். அங்கு வாழும் மனித உள்ளங்கள் மன அமைதியடைந்தவையாகவும் காணப்படும். இதை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"எந்த ஊர்வாசிகள் அல்லாஹ்வை பயபக்தி கொண்டு அஞ்சி வாழவார்களோ அத்தகைய ஊருக்கு வானங்களுடையதும் பூமியினுடையதும் அருள் வாயில்களை திறந்து கொடுப்போம். (ஸூரா அஃராப்: 96)

அல் குர்ஆன் வர்ணிக்கின்ற வர்ணனைகள் தாங்கியதாக எமது கிராமங்கள் காட்சியளிக்கின்றதா? அல்லாஹ்வின் அருட் கொடைகள் நிறைந்த கிராமமாக காட்சியளிக்கின்றதா? என்றால் விடையளிப்பது மிக மிக கஷ்டத்திற்குறிய விடயமாகும். அத்தகைய அல்லாஹூத்தஆலாவின் அருளுக்கு உரித்தான கிராமமாக மாற்றுவதற்கு தேவையான ஒரு சில அடிப்படைகளை இக்கட்டுரை பேச முனைகிறது.

இன்று உலகலாவிய ரீதியிலான தரவுகளின் அடிப்படையில் உலகில் மிக வேகமாக பரவுகின்ற மார்க்கமாக இஸ்லாம் காணப்படுகின்றது. இதற்கு இஸ்லாம் மனித வாழ்வை மிகச்சரியாக ஒழுங்கு படுத்தும் சக்தி வாய்ந்தது என்ற உண்மை மிகத்தெளிவாக அறிந்து விளங்கிக் கொண்டமையே காரணமாகும்.

இஸ்லாமியப் போதனைகள் வெறும் ஆன்மீகத்தை மாத்திரம் கருத்திற் கொள்ளாது முழு வாழ்வையும் மிகச்சிறந்த வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும் ஒழுங்கில் காணப்படுகின்றது என்பதை இஸ்லாத்தை அறிந்த எவரும் மறுக்க முடியாது. தண்ணீர் அருந்துவது முதல் ஆட்சி பீடம் வரை அழகிய முறையில் வழிகாட்டுகின்றது. உதாரணமாக பிற சகோதரனைப் பார்த்து புன்முறுவல் பூப்பது நன்மைக்குரிய விடயம். அதற்கும் அல்லாஹ்விடம் வெகுமதி இருக்கின்றது என்று கூறும் மார்க்கம் இஸ்லாம்.

ஆனால் இந்த மார்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் இதனை உணர்ந்திருப்பார்களா என்றால் அதுவும் விடையளிப்பதற்கு கஷ்டமான கேள்வி. நாங்கள் தொடர்ச்சியாக சமூகத்தை கைநீட்டித் தொடர்ந்து குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையுமே சாதித்து விடமாட்டோம். சாதித்ததும் குறைவு. ஆகவே, இஸ்லாமிய மயமான முன்மாதிரிக் கிராமம் ஒன்றை எப்படி உருவாக்கலாம் என்பதை சற்று சிந்திப்போம்.

**ஆன்மீக வாழ்வைக் கட்டியெழுப்புதல்**

இஸ்லாமிய வாழ்வின் அடித்தளம் இறை தொடர்பாகும். ஒவ்வொரு மனிதனும் அல்லாஹ்வோடு எவ்வளவு தூரம் தொடர்புபட்டுள்ளான் என்பதைப் பொறுத்தே அவனது இஸ்லாமிய வாழ்வின் முழுமை தங்கியுள்ளது. இஸ்லாமிய வாழ்வை தன்வசப்படுத்திக் கொள்வதற்கு அவனை இயக்குகின்ற சக்தியான ஈமான் சிறந்த முறையில் இருக்க வேண்டும். அப்போது தான் அவனது தொழுகைகள், குர்ஆன் நூல்கள், திக்ர், நோன்பு மற்றும் ஹஜ் போன்ற நன்மையான விடயங்கள் அமையும்.

ஆன்மீக வாழ்வை ஒழுங்கு படுத்துவதற்கு கூடிய கரிசனை காட்ட வேண்டும். இந்தப் பயிற்சி சிறு பராயம் முதலே கொடுக்கப்படுமாக இருந்தால் பிற்காலத்தில் சிறந்த தாக்கத்தை உணர முடியும். சிறு குழந்தையைப் பொறுத்த வரைக்கும் அடுத்தவர்களைப் பார்த்துத்தான் (Role Models) தன் வாழ்வை அமைத்துக் கொள்கிறது. ஆகவே பெற்றோரிடம், அயலவர்களிடம், ஆசிரியர்களிடம், தன்னைச் சூழ உள்ளவர்களிடம் இந்த ஆன்மீக வாழ்வை அவதானித்து தானும் அதனைச் செய்வதற்கு முயலும். உதாரணமாக மஃரிப் தொழுகைக்கு தனது தந்தையுடன் பள்ளிவாசலுக்குச் செல்லும் குழந்தை தொழுது முடித்த பின் தந்தையோடு வீடு திரும்பி, தந்தை அல் குர்ஆன் ஓதும் போது பிள்ளையும் அதனை அவதானித்து அதனைச் செய்ய முயலும். அடுத்தது குழந்தையின் ஆரம்பப் பள்ளிக்கூடம் இஸ்லாமிய மயப்பட்டு அமைந்து காணப்படும் போது இஸ்லாமிய ஆளுமைகளின் வீர வரலாறுகள் கதை வடிவத்திலோ அல்லது இறுவெட்டுக்கள் (CD) மூலமாகவோ புகட்டப்படும் போது தானும் அவ்வாறு உருவாவதற்கு முயலும். அடுத்து அப்பிள்ளை செல்லுமிடம் பாடசாலை, பாடசாலையும் இஸ்லாமிய மயப்பட்டதாக அமையும் போது இளைஞர் சமூகமும் சிறந்த கட்டுக் கோப்புடையதாக உருவாகும். இவ்வாறு உருவாகின்ற போது இவர்கள் நாளைய நற்தலைவர்களாக, பள்ளி நிர்வாகிகளாக, ஊடகவியலாளர்களாக இன்னும் இன்னோரன்ன துறைகளில் சமூகத்திற்கு பிரயோசனமுள்ளவர்களாக மிளிர்வார்கள்.

இங்கு இஸ்லாமிய மயமாதல் எனக் குறிப்பிடுவது அல்லாஹ்வும் ரஸூலும் ஒரு முஸ்லிம் எவ்வாறு விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ அவ்வாறு உருவாவது ஆகும். உதாரணமாக ஒரு முஸ்லிம் சுயநலவாதியாக, பொறாமைக் குணம் படைத்தவனாக இருக்க முடியாது. இப்படிப்பட்ட சிறந்த நாளைய தலைமுறை ஒன்றினை பாடசாலையினால் நிச்சயம் உருவாக்க முடியும்.

பள்ளிவாசலும் ஒரு கிராமத்திற்கு சிறந்த வழிகாட்டலைக் கொடுக்க முடியும். ஆன்மீகம், அறிவியல், பொருளாதாரம், அரசியல் மற்றும் எல்லா விவகாரங்களும் பள்ளிவாசலினூடாக ஒழுங்கு படுத்தப்பட முடியும்.

நபி (ஸல்) அவர்களை வெறும் ஆன்மீகத்தை மட்டும் போதித்தவர்களாக எங்களால் அவதானிக்க முடியாது. ஒரு முறை ஒரு காய்ந்த தானியக் குவியலுக்குள் கையை இட்டுப் பார்த்தபோது உள்ளே காணப்பட்ட ஈரத்தை உணர்ந்து அந்த வியாபாரியை வழிப்படுத்தினார்கள். ஆகவே பள்ளிவாயலும் அதன் நிர்வாகிகளும் ஓரிண்டு வழக்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரித்து தீர்ப்புக் கூறுவோராக அன்றி சமூகத்தை முன்னேற்றஞ் செய்வதற்கும் கிராமங்களை முழுமையாக இஸ்லாமிய மயப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பொருளாதார வாழ்வைக் கட்டியெழுப்புதல்.**

இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டம். அதைப் பகுதி பகுதியாக வேறுபடுத்த முடியாது. உதாரணமாக பாரியதோர் இயந்திரத்தின் உதிரிப் பாகங்களை அதனுடன் இணைத்து இயக்கினால் மாத்திரமே அதன் செயற்பாட்டை எம்மால் பெற முடியும். மாறாக அவைகளை தனியாக இயக்க நாடுவது ஓர் அர்த்தமற்ற செயலாகும். ஆகவே இஸ்லாமிய மயமான கிராமம் தனது பொருளாதார ஒழுங்கையும் சீராக இயக்கிச் செல்லும். அக்கிராமத்து வியாபாரிகளிடத்தில் இஸ்லாம் கூறும் வியாபார ஒழுக்க மாண்பு சிறந்ததாகக் காணப்படும். கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையில் உண்மையான வர்களாகவும் நேர்மையானவர்களாகவும் காணப்படுவார்கள். நபி (ஸல்) அவர்கள் நேர்மையான வியாபாரி பற்றிக் குறிப்படும் போது "வாய்மை நிறைந்த நம்பிக்கையான வியாபாரி மறுமையில் நபிமார்களோடும் ஸாலிஹீன்களோடும் சுஹதாக்களோடும் இருப்பர்" அல் ஹதீஸ்) என்றவாறு கூறுகின்றது. ஆகவே, வியாபாரிகள் இவ்வாறான மாபெரும் பாக்கியம் உண்டு என்பதை உணர வேண்டும். அவ்வாறு உணர்த்தி அவர்கள் உணரும் போது இஸ்லாம் கூறும் தாராளத் தன்மை, கடனைத் தரமுடியாத கடனாளிகளோடு விட்டுக் கொடுத்தல், அல்லாஹ்வின் பாதையில் தனது செல்வங்களை செலவிடும் பண்பு என்பன இயல்பாக உருவாகும்.

இத்தகைய இஸ்லாமிய மயப்பட்ட கிராமத்தில் இஸ்லாம் ஹராமாக்கிய எந்தவோர் அம்சமும் காணப்படாது. அதனுடைய பாரதூரத்தையும் நன்கு உணர்ந்திருப்பார்கள். உதாரணமாக வட்டி, பதுக்கள், அளவை நிறுவையில் மோசடி, ஏமாற்றுதல் மற்றும் கலப்படம் போன்ற மோசமான பண்புகளும் காணப்படாது. அக்கிராம மக்களின் பொருளாதார ஒழுங்குகள் இஸ்லாமிய போதனைகளால் ஆளப்படும். உதாரணமாக ஸகாத்தை குறிப்பிடலாம்.

ஸகாத் கடமையே சமூக வறுமையை ஒழிப்பதற்கு போதுமானதாகும். என்றாலும் இஸ்லாம் இன்னும் பல வழிமுறைகளைக் காட்டித்தந்துள்ளது. உதாரணமாக, ஸதகாவைத் (தர்மம்) குறிப்பிடலாம். நபி (ஸல்) அவர்கள் "தர்மம் மோசமான மரணத்தை விட்டும் மோசமான நிலைமைகளை விட்டும் தடுக்கும்" என்று கூறினார்கள். இந்த வகையில் ஸதகதுல் ஜாரியாக்கள் நிரந்தரமாகவே முழு சமூகத்திற்கும் பயன் கொடுத்துக்கொண்டே இருக்கும். நிழல் தரும் மரம், மக்களின் பாவனைக்கான குடிநீர் திட்டம், தேவைக்கேற்ப பள்ளிவாசல் நிர்மாணம், பாடசாலைக்குத் தேவையான விடயங்கள், சமூகத்துக்க தேவையான வளவாளர்களை உருவாக்குதல் என்பவற்றுக்கு உதவும்.

**முடிவுரை**

இவ்வாறு ஒரு கிராமத்தை இஸ்லாமிய மயப்படுத்துவதற்கு தேவையான விடயங்களை துறை சார்ந்த நிபுணர்களோடு கலந்துரையாடிப் பெற்று செயற்படுத்து வோமாக இருந்தால் அல்லாஹுதஆலா வாக்களித்ததன் படி அவனது அருள் நிச்சயமாக கிட்டும். ஆகவே நம்முடைய கிராமங்களையும் மீள் பரிசீலனை செய்து அல்லாஹுத்த ஆலாவுடைய அருளுக்கு உரித்தான கிராமமாக மாற்றுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரித உணவும் அண்மைக்கால போக்கும்.

என்.ஏ.எப். இஷாநா
மூன்றாம் வருடம்
மனைப்பொருளியல்

உணவென்பது திண்ம அல்லது திரவ பதார்த்தங்களால் ஆனவை. அவை மனிதனால் உள்ளெடுக்கப்பட்டு சமிபாடடையச் செய்யப்பட்டு அகத்துறிஞ்சப்பட்டு ஏனைய உடற்பாகங்களுக்கு போசணையை எடுத்துச் செல்கின்றது.

ஆகவே மனிதனது உணவுக் கலாச்சாரம் என்பது அக்காலம் தொட்டு இன்றுவரை பல்வகைப்பட்டிருப்பதனை அறியக்கூடியதாக உள்ளது. அதாவது ஆரம்பத்தில் வேட்டையாடி பச்சையாக உட்கொண்ட மனிதன் நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து சமைத்து உண்ண பழகியதன் மூலம் மனிதனது உணவுப் பல்வகைமை ஆரம்பமானது எனலாம்.

ஆகவே மனிதனது பசியினை போக்கும் ஒரு கருவியாக இருந்த உணவு இன்றைய நவீன காலகட்டத்தில் அதன் சுவையாலும், கட்டமைப்பாலும், கவர்ச்சித்தன்மை போன்றவற்றாலும் பதிய புதிய பெயர்களில் விற்பனை செய்வதனை அறியக்கூடியதாக உள்ளது. ஆகவே இன்றைய காலகட்டத்தில் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்று, அதிகளவு கொள்வனவு செய்யப்படும் ஒரு உணவே துரித உணவாகும். துரித உண வென்பது உடனடியாக சமைத்து, அல்லது கொள்வனவு செய்து உண்ணக்கூடியதாகும். அதாவது அத்துரித உணவுகள் பல மாதங்களுக்கு முன் பதப்படுத்தி வைத்து தேவையான போது சமைத்து உண்பதாகும்.

இன்றைய பரபரப்பான அவ்வியந்திர மைய உலகத்தில் மக்களால் அதிகளவு விரும்பி உண்ணப்படும் உணவாக இது காணப்படுகின்றது. காரணம் அவை அதிகளவு சுவையாக காணப்படுவதும், குறைந்த விலையில் அவற்றை பெற்றுக் கொள்ளக் கூடியதுமாகும்.

மேலும் உலகத்திலுள்ள அனைத்து நாடுகளிலும் அரசாங்கத்தின் அனுமதியுடன் பலதரப்பட்ட துரித உணவகங்கள் செயற்பட்டு வருவதும் பிரதான காரணமாகும். உதாரணம் :- KFC, Pizza Hut, Burger king

அத்துரித உணவுகளில் அதிகளவு காணப்படுவது கலோரி, கொழுப்பு மற்றும் உப்பு, செயற்கை சுவையூட்டிகள் மற்றம் நிறமூட்டிகள் என்பனவாகும். சில துரித உணவு வகைகளாக பொரித்த கோழி, பீட்சா, பர்கர், சன்விட்ச், டோனட், Milk Shake, என்பனவாகும். பொதுவாக அத்துரித உணவுகள் அதிகமாக கவரப்படுவதும், விரும்பி உண்ணப்படுவதும் கட்டிளமைப்பருவத்தினராலாகும். கட்டிளமைப் பருவத்தினரைப் பொருத்த வரையில் உணவின் போசனையை விட சுவை, கவர்ச்சித் தன்மைக்கே அதிகம் விருப்பம் காட்டுவர். எனவே துரித உணவுகளில் பெரும்பாலும் போசனை குறைவாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவு வெற்றுக் கலோரிகள், கொழுப்பு, உப்பு என்பனவையே அதிகம் காணப்படுவதனால் அவை உணவிற்கு அதிக சுவையையும், செயற்கை சுவையூட்டிகள், நிறமூட்டிகள், மணமூட்டிகள் ஊடாக அதிக கவர்ச்சியும், மணமும் காணப்படும். ஆகவே இன்றைய நவீன பரபரப்பான உலகில் வாழும் மனிதர்களினால் துரித உணவின் பால் அதிகம் நாட்டம் செலுத்தப்படக் காரணம்,

1) குறைந்த விலை
2) இவ்வுணவுகளை கொள்வனவு செய்ய அல்லது சமைக்க குறைந்த நேரம் எடுக்கும்
3) அதிக சுவையைக் கொண்டிருத்தல்.
4) பல்வகைத் தேர்வு
5) கவர்ச்சி
6) வேலைப்பலு

போன்ற காரணங்கள் துரித உணவின் மீது மக்கள் அதிக நாட்டம் செலுத்த காரணமாகின்றன. துரித உணவுகளை இரசாயனப் பொருட்களை சேர்த்து நீண்ட நாட்கள் பதப்படுத்தி வைத்தே துரித உணவகங்களில் சமைக்கப்படுகின்றன. இதன் மூலம் உணவு பழுதடைவது தவிர்க்கப்படுகின்றது.

மேலும் குழந்தைகளும், துரித உணவுகளை அதிகம் விரும்பி உண்பர். உதாரணம்:

Ice Cream, Donuts, cake, Milk Shake

பொதுவாக பிள்ளைகளிடம் துரித உணவு வகைகளை கவரச் செய்ய பெரிய பெரிய உணவகங்களில் பல வகையான உத்திகள் கையாளப்படுகின்றது.

1) பிள்ளைகளுக்கு துரித உணவுகளுடன் இலவசமாக விளையாட்டுப் பொருட்களை வழங்குதல்.
2) கார்ட்டூன் பதிக்கப்பட்ட உருவங்களைக் கொண்ட பொதிகளில் உணவை வழங்குதல்.
3) மேலும் துரித உணவகங்களில் பிள்ளைகளுக்கு விருப்பமான கேலிக்கை விளையாட்டுக்களை அமைத்தல்.

இவ்வாறான உத்திகளை கையாண்டு நுகர்வோரைக் கவர மேற்கொண்ட போதிலும், நுகர்வோரால் அதிகம் துரித உணவுகள் கவரப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டு உண்ணப்படுகின்றது. அவை ஆரோக்கியமானதல்ல. உடலுக்கு கேடு விளைவிப்பதாகவே காணப்படுகின்றது.

1) அதிக கலோரியைக் கொண்டிருத்தல்.

அதிக கலோரி, கொழுப்பு போன்றவற்றை கொண்டிருப்பதால் அவை உடலில் மேலதிக சக்தி மற்றும் கொழுப்பாக சேமிக்கப்படுகின்றது. இது உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) உடற் பருமன் ஏற்படல்

துரித உணவுகள் பெரும்பாலும் பொறித்த உணவுகளாக காணப்படுவதனால் அவற்றால் அதிகளவு கெட்ட கொழுப்பு, கொலஸ்திரோல், கலோரி, மற்றும் அதிகளவு சீனி போன்றவற்றைக் கொண்டிருப்பதனால் அவை உடலில் மேலதிக சக்தியாக சேமிக்கப்பட்டு உடல் பருமன் அதிகரிக்கும். மேலும் குழந்தைகள் கட்டிளமைப் பருவத்தினர் அதிகம் விரும்பி துரித உணவுகளை உட்கொள்வதனால் அவர்களில் பெரும்பாலும் உடற்பருமன் அதிகரிக்க ஏதுவாக அமைகின்றது.

3) உயர் குருதி அமுக்கம்

துரித உணவுகள் நீண்ட காலத்திற்கு முன் பதப்படுத்தப்பட்டு வைக்கப்படுவதனால் அவற்றில் அதிகளவு உப்பு மற்றும் செயற்கை பதப்படுத்தும் பொருட்கள் சேமிக்கப்பட்டு இருப்பதனால் அவை உயர்குருதி அமுக்கம் மற்றும் நரம்புச் சோகை ஏற்பட காரணமாகின்றது.

4) பற்சொத்தை ஏற்படல்

Ice cream, Milk Shake, Donut போன்ற உணவுப் பொருட்களை சிறுவர்கள் அதிகம் விரும்பி உண்பதனால் அவர்களுக்கு பற்சொத்தை ஏற்படக் காரணமாக அமைகின்றது.

5) பெண் பிள்ளைகள் சிறுவயதிலேயே பூப்படைதல்.

அதில் சேர்க்கப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாக அமைகின்றது.

6) மேலும் அதிகளவு உப்பு அவ்வுணவுகளில் சேர்ப்பதனால் ஒரு விதமான மன உளைச்சலுக்கு மனிதர்களை இட்டுச் செல்லும். அதாவது தொடர்ச்சியாக துரித உணவுகளை உட்கொள்வதனால் இந்நிலை உண்டாகும்.

ஆகவே துரித உணவுகள் வாய்க்கு இதமான சுவையை மட்டும் தருகின்றதே தவிர, அவற்றில் எவ்விதப் போசணைப் பெருமானமும் இல்லை என்பது தெளிவாக புரிகின்றது. மேலும் அவை பெரியோர் தொடக்கம் சிறியோர் வரை உடல் நலத்திற்கு கேடு விளைவிப்பதாக அமைகின்றது.

துரித உணவகங்கள் முன்னைய காலங்களைப் போலன்றி தற்காலத்தில் மூலை, முடுக்குகள் என அனைத்து இடங்களிலும் அமைக்கப்பட்டிருப்பதனால் மக்கள் அதிகளவு அதன் பால் நாட்டம் கொள்வது அதிகமாகும். ஆகவே இன்றைய நவீன காலத்தில் மக்கள் ஆரோக்கியமான உணவுகளை விரும்பி உட்கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. காரணம், துரித உணவின் மீதுள்ள விருப்பினாலாகும். ஆகவே ஒவ்வொரு மனிதனும் துரித உணவினை உட்கொள்வதனால் உடலுக்கு ஏற்படும் ஆபத்தினை அறிந்து அவற்றை உட்கொள்வதை தவிர்ப்பது நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் விளையாட்டும்

எஸ்.எம்.எவ். மாஹிரா.
முதலாம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்.

இஸ்லாத்தில் விளையாட்டு அங்கீகரிக்கப்பட்டதா? இஸ்லாமிய மார்க்கம் வெறுமனே மற்ற மதங்களைப் போன்று உலகத்தை வேறாகவும் மார்க்கத்தை வேறாகவும் பார்க்கவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியிருப்பதே அதன் சிறப்பம்சம் ஆகும். இதனாலே உண்ணல், குடித்தல் போன்ற அன்றாட விடயங்களைக் கூட இபாதத்தாக ஆக்கியுள்ளது. அதே போன்று விளையாட்டையும் இபாதத்தாக ஆக்கியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் தமது மனைவியர்களுடன் விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னைய காலத்திலும் விளையாட்டுக்கள் காணப்பட்டன. பெருநாட்களில், சந்தோசமான நாட்களில் விளையாட்டுக்களின் மூலம் சந்தோசத்தைக் கொண்டாடும் வழக்கம் சஹாபாக்களின் சமூகத்தில் காணப்பட்டது.

இஸ்லாமிய ஷரீஆவுக்கு முரணான விளையாட்டுக்களும் உள்ளன. அவ் விளையாட்டுக்களை விளையாடுவது இஸ்லாமியப் பார்வையில் குற்றச் செயலாகும். எந்த ஒரு விடயத்தையும் இபாதத்தாக மாற்ற வேண்டுமானால் அல்லாஹ்வுக்காகவும், நபி மற்றும் ஷரீஆவுக்கு முரண்படாமலும் நேர்த்தியாகவும் செய்யவேண்டும்.

விளையாட்டு உத்வேகத்ததையும், சுறுசுறுப்பையும், உடல் ஆரோக்கியத்தையும், ஆளுமைப் பண்புகளையும் வளர்க்கின்றது. விளையாட்டுக்கள் ஒரு மனிதனின் வாழ்வில் இம்மை, மறுமைப் பயன்களைத் தருகின்றது. பயன்கள் கல்வி ரீதியான பயன்கள், ஆளுமை ரீதியான பயன்களையும் தருகின்றது.

**கல்வி ரீதியான பயன்கள்:**

இஸ்லாம் ஒரு மனிதனுக்கு கல்வியை கட்டாயமாக்கியுள்ளது. கல்வி என்கின்ற போது வாழ்க்கைக்கு பயன் தரக்கூடிய அனைத்துமே கல்வியாகும். அல் குர்ஆனில் படிப்பீராக வாசிப்பீராக என்ற சொல்லை முதல் சொல்லாக அருளியமை கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. விளையாட்டுக்களை ஒரு மனிதனுக்கு செயல் ரீதியாக கற்றுக் கொடுக்கும் அத்தியவசியமான கல்வி எனலாம். இன்றைய மனிதர்களைப் பார்த்தோமேயானால் ஒரு குறிப்பட்ட துறையில் கவனம் செலுத்துபவர்கள் அத்துறையில் மாத்திரமே தேர்ச்சி பெற்றுள்ளார்கள். ஆனால் விளையாட்டில் ஈடுபட்டுள்ள மனிதர்கள் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக காணப்படுகின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

விளையாட்டானது உடலின் அனைத்து பகுதிகளையும் சிறந்த முறையில் இயக்குவதோடு தெளிவான சிந்தனையுடன் தேகாரோக்கியத்தோடு இருப்பதனால் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்கான உடல், உள நிலைகளையும், தைரியத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்துகின்றது.

**ஆளுமை ரீதியான பயன்கள்:**

ஒரு மனிதனுக்குத் தேவையான அனைத்து ஆளுமைப் பண்புகளையும் விளையாட்டின் மூலம் வளர்த்துக் கொள்ளலாம். பல்வேறு ஆளுமைத் திறன்கள் வளர்வதனால் சமூகத்திற்கு பிரயோசனம் உள்ள மனிதனாக மாறுகிறான். இந்தப் பண்புகளே சமூகத்தில் அவனை தலைவனாகவும் ஆக்கிவிடுகின்றது. விளையாட்டின் மூலம் மனிதர்கள் அடைந்து கொள்ள முடியுமான ஆளுமைகள் ஏராளம் உள்ளன. அதாவது தலைமைத்துவமும் கட்டுப்பாடும், குழுச்செயற்பாடு, சுய ஒழுங்கு, தொடர்பாடல் திறன், நேரத்தை பிரயோசனப்படுத்தல், போன்ற பல்வேறுபட்ட ஆளுமைகளைக் குறிப்பிடலாம்.

எனவே பொருத்தமான விளையாட்டுக்களையும், உடற்பயிற்சிகளையும் செய்வதன் மூலம் அறிவு, உடல், ஆரோக்கியம் அனைத்திலும் பலமான முஃமீனாக மாறுவதற்கு முயற்சிப்போமாக.

# தேசத்தின் மீதான வேட்கை

நினைவுகள் பற்றியதான தடம் பதிப்புக்களின்
ஆக்கிரமிப்பு பற்றியதான முனங்கல்களில்
வெளிக்கொணரப்படும் சிற்சில
எண்ணங்கள் சிதைப்புக்குட்படுத்தப்படுகையில்
சுக்கு நூறாகிப் போன மனங்கள்
வெளியுலகில் எச்சில் பேச்சுக்காய்..

எதிர்ப்பார்ப்பு தேடல் என
அத்தனையும் ஆர்ப்பரிப்புக்குள்ளாய்
முடக்கி விடப்படும் போது
எழும் முனங்கல் சத்தங்கள்
மண்டைகளில் இரத்தங்களை
தொன்னூறு பாகை செல்சியசுக்கப்பால்
கொதித்தெழ செய்கிறது.

முக்காட்டு வேசம் முகத்திரை வழியே
விழி புடைத்து ரணங்களை கோடிடுகையில்
கோடிக்கணக்கான சிந்தனைகளும்
சிதறடிக்கப்பட்டு புரியப்படும் சாகசங்கள்

லௌகிக வாழ்வில் வியாபிப்பின்றி
பொழுதுகளை வித்தியாசமாக கழிக்கின்றது.

அராஜகம் ஆர்ப்பரிப்பு என்ற
பல்வேறுபட்ட வேஷதாரங்களின்
முகமூடிகளைக் கிழிக்க என் உணர்வுகள்
வெளியுலகை எட்டிப்பார்க்கத் துடிக்கிறது.

நற் சிந்தனைகளும் நியாயமான
பேச்சுக்களும் இப்பூமியில் உதித்து
விடுமானால் நாளைய
வாழ்தல் வசப்பட்டு நல்வாசம் வீசும்
என்பதில் துளியும் அச்சமில்லை
எழுவோம் எழுச்சிகள் காண்போம்..

எம். பஸ்லான்
மூன்றாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவை ஏன் இஸ்லாம் ஒழிக்கின்றது

டி.ஏ. ஹிப்தியா சிரீன்
இரண்டாம் வருடம்
புவியியல்.

இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் ஆறறிவு கொண்ட மனிதனாகவும், பகுத்தறிவு உள்ள மனிதனாகவும் படைக்கப்பட்டு இருக்கின்றான். அவன் பிறந்து வளர்ந்து தீய பழக்கங்களை கையாண்டு அற்புதமான வாழ்க்கையை சீரழித்து இறந்து போகிறான். மேலும், மனிதனானவன் புலன்களை அடக்கி சீரான வாழ்க்கையை வாழக்கூடிய மனிதனாகவும் படைக்கப்பட்டுள்ளான். ஆனால் இன்றைய காலகட்டத்தில் மனிதன் மதுபான பழக்கத்திற்கு அடிமையாகுவது மட்டுமல்லாது புலன் உணர்வுகளை தொலைத்து அரிதான, அற்புதமான வாழ்க்கையையே அழித்துக் கொள்கின்றான். அவன் குடித்தான். தள்ளாடியது அவன் மட்டுமல்ல அவனது குடும்பமும் தான் என்று கூறும் அளவிற்கு குடிப்பழக்கம் வாழ்க்கையை பாதாளத்தில் தள்ளிவிடுகின்றது.

அதாவது இரத்தத்தில் அல்கஹோல் எனப்படும் மதுபானத்தின் அளவு அதிகரிக்க அதிகரிக்க மனிதன் தன்னை இழக்க ஆரம்பிக்கின்றான். முதலில் தசைக் கட்டுப்பாடு இழக்கும், தொடு உணர்வு குறையும், சிந்தனை மாறும், வாய் வார்த்தைக் குன்றும், நடையில் தள்ளாட்டம், அதிக மறதி, அதிக மயக்கம், குழப்பம் போன்ற பல வழமைக்கு மாறான செயல்களை உண்டாக்குகின்றது. இவ்வாறாக மனிதனை சாதாரணமாக இயங்கச் செய்வதை தடை செய்வதோடு மட்டுமல்லாமல் மனம் போன போக்கில் செயற்படவும் வைக்கின்றது. மேலும் எயிட்ஸ் எனப்படும் உயிர்க்கொல்லி நோய்களும் பரப்பப்படுவதோடு சண்டை சச்சரவு, விபச்சாரம், கொலை, கொள்ளை போன்ற சமூகத்திற்கு முரண்பாடான விடயங்களையும் தூண்டுகின்றது. ஆகவே இந்த மதுபாவனைப் பழக்கம் சமூகத்தினால் விலக்கி வைக்கப்பட வேண்டியதாகும்.

> **"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
> சான்றோர் முகத்துக் களி"**

எனும் திருக்குறள், கள் உண்ணாமை எனும் அத்தியாயத்தின் கீழ் பின்வருமாறு மதுவை வெறுக்கச் செய்கின்றது. அதாவது தன்னைப் பெற்றெடுத்த தாயின் முகத்தேயும் கள் குடித்து மயங்குதல் இழிவாகும், ஆயின் சான்றோர் முன்பு கள்ளுண்டு மயங்குதல் எப்படி இருக்கும்? என மது அருந்துபவரை இழிவாக்கிக் கூறுகின்றது.

இவ்வாறான மது பாவனைப் பழக்கத்தை இல்லாதொழிப்பதே எல்லா மதங்களின தும் போதனையாக உள்ளது. ஆகவே சமூகத்திற்கு முரண்பாடான விடயங்களைத் தூண்டுகின்ற இந்த மதுவை சமூகத்தினால் ஒழிக்கப்பட வேண்டியதாகும், என்பதை சமூகத்தின் பார்வையிலும், இஸ்லாமிய கண்ணோட்டத்திலும் நோக்குவோம்.

மதுவுக்கு எத்தனை பெயர்கள் இருந்தாலும் எத்தனை வகைகள் இருந்தாலும். எல்லாம் ஒன்றுதான். எல்லாம் மது தான். எல்லாவற்றுக்கும ஒரே சட்டம் தான் (ஹராம் தான்) என இஸ்லாம் கூறுகின்றது. மதுவே தவிர்த்துக் கொள்ளுங்கள் என கட்டளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டிருப்பது அது ஹராம் எனபதற்கு பலமான ஆதாரங்களை அல்குர்ஆன், ஹதீஸ்களில் காணக்கூடியதாக உள்ளது.

"(நபியே!) மதுபானத்தையும், சூதாட்டத்தையும் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். நீர் கூறும், இவ்விரண்டிலும் பெரும் பாவம் இருக்கின்றது. மனிதர்களுக்கு அவற்றில் சில பலன்களும் உண்டு. ஆனால் அவ்விரண்டிலும் உள்ள பாவம் அவ்விரண்டிலும் உள்ள பலனை விடப் பெரியது. (அல்குர்ஆன் 2:219)"

இவ் இறை வசனமானது மதுபானம் அருந்துவதில் பலன் உண்டு என எண்ணுபவர்களை எச்சரித்து பலனை விட பாவம் அதிகம் என உணர்த்துகின்றது.

**மேலும் "விசுவாசிகளே! நீங்கள் போதையாக இருக்கும் நிலையில் தொழுகையின் பால் நெருங்காதீர்கள். (அல்குர்ஆன் 4:43)"**

எனும் இறை வசனமானது போதையில் இருக்கும் நிலையில் தொழுகை யின் பால் நெருங்காதீர்கள் எனக் கூறப்படுகின்றது. காரணம் ஒரு மனிதன் போதையில் இருக்கும் நிலையில் அவனை சாதாரண நிலையில் இயங்கச் செய்வதை தடை செய்வதோடு தன் மனம் போன போக்கில் செயற்படவும் வைக்கின்றதால், நாம் தொழுகையின் போது உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் மாறும் போது இவற்றின் பொருள் மாறுபட்டு தொழுகையை பூரணமாக நிறைவேற்ற விடாது தடுக்கின்றது. இந்த முக்கிய காரணம் இஸ்லாம் மதுவை ஒழிப்பதில் முக்கியத்துவம் வகிக்கின்றது. மேலும் இஸ்லாம் தன்னை சேர்ந்தவர்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளாக ஐந்தைக் குறிப்பிடுகின்றது. அவ் ஐந்தும் இஸ்லாத்தின் ஐந்து தூண்கள் என அழைக்கப்படுகின்றன. கலிமா, தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ், எனும் ஐந்து கடமைகளின் இரண்டாவது கடமையான தொழுகையை பூரணமாக நிறைவேற்ற விடாது இம் மது காணப்படுவதால் இஸ்லாம் மதுவை ஒழிக்கின்றது.

மேலும் இஸ்லாமியர்கள் மத்தியில் சிலை வணக்க வழிபாடு எவ்வளவு பெரிய பாவம் என்பதனை அறியாதவர்கள் எவரும் இல்லை. இவ்வாறு இருக்க பின்வரும் ஹதீஸ் வசனமானது மதுவில் மூழ்கிய நிலையில் ஒரு முஸ்லிம் இறந்து விட்டால் சிலை வணங்கி பெரும் பாவத்தில் ஈடுபட்டவனைப் போன்று மறுமையில் அல்லாஹ்வை சந்திப்பான் என விளக்குகின்றது.

நபி(ஸல்)அவர்கள் கூறுகின்றார்கள் : மதுபோதையில் மூழ்கியவன் இறந்து விட்டால் சிலை வணங்கியை போன்று மறுமையில் அல்லாஹ்வை சந்திப்பான். அறிவிப்பவர் இப்னு அப்பாஸ்(ரலி), ஆதாரம்: அஹ்மத் இந்த ஹதீஸ் மதுவில் மூழ்குபவனை சிலை வணக்க வழிபாட்டில் ஈடுபடுபவனிற்கு ஒப்பிட்டு கூறுகின்றது.

மேலும் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகள் குழப்பங்கள் என்பவற்றிற்கு மூல காரணமாக அமையக் கூடிய இந்த மது பாவனைப் பழக்கம் வேரோடு அழித்து ஒழிக்கப்பட வேண்டும் என இஸ்லாம் எண்ணுவதோடு பல்வேறு சட்டங்களையும் கொண்டுவந்துள்ளது அது பின்வரும் நபி மொழியில் இவ்வாறு உள்ளது "போதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரக்கூடிய அனைத்தும் மதுவாகும் போதை தரக்கூடிய அனைத்தும் ஹராமாகும்" அறிவிப்பவர் இப்னு உமர்(ரலி) நூல்(முஸ்லிம்) இந் நபி மொழி புத்தியை போதலிக்கச் செய்து போதையை ஏற்படுத்தக் கூடிய அனைத்தும் ஹராம் ஆகும் என தெளிவுபடுத்துகின்றது.

இஸ்லாமியரான ஒவ்வொரு அடியானும் சுவர்க்கம் நரகம் என்பவற்றின் தன்மைகளை அறியக் கூடியவனாகவும் மறுமை வாழ்வைப் பற்றி எண்ணிக் கெண்டு காலத்தைக் கழிப்பவனாக காணப்படுகின்றான் மேலும் பின்வரும் ஹதீஸை நோக்கினால் "மதுவில் மூழ்கி இருப்பவனும் பெற்றோரைத் துன்புறுத்துபவனும் தன் மனைவியின் மீது வீண்பழி சுமத்துபவனும் சுவனம் புகமாட்டான்"(ஹாகிம்)

அதாவது மதுவை அருந்தி நரகத்திற்குச் செல்லாது மதுவை அடியோடு ஒழித்து விட்டு நல்லடியானாக சுவர்க்கத்திற்கு செல்ல வேண்டும் என்பதனை புகட்டி மதுவை இஸ்லாம் ஒழிக்கின்றது.

இவ்வாறாக பல்வேறுபட்ட வழிகளிலும் தீங்குகளை விதைக்கக் கூடிய இந்த மதுவை இஸ்லாம் ஒழிப்பதோடு மட்டும் நின்றுவிடாது மதுபானங்களை அருந்துவதில் நேரிடையாகவோ அல்லது மறை முகமாகவோ ஈடுபடுபவர்கள் அனைவரும் இறைவனால் சபிக்கப்பட்டவர்கள் என இஸ்லாம் கூறுகின்றது. அத்தகையவர்கள் யார் யார் என்றால்,

1 மதுபானம் தயாரிப்பவன்.

2 யாருக்காக மதுபானம் தயாரிக்கப்பட்டதோ அவன்.

3 மதுபானங்களை குடிப்பவன்.

4 மதுபானங்களை விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்பவன்

5 யாருக்காக மதுபானங்கள் கெண்டு செல்லப்பட்டதோ அவன்.

6 மதுபானங்களைப் பரிமாறுபவன்

7 மதுபானங்களை விற்பவன்

8 மதுபானம் விற்று வரும் பணத்தை பயன்படுத்துபவன்.

9 மதுபானங்களை வாங்குபவன்

10 மதுபானங்கள் யாருக்காக வாங்கப்பட்டதோ அவன்.

ஆகிய பத்து சாரார் மீதும் அல்லாஹ்வின் சாபம் இறங்குகின்றது என அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். அறிவிப்பவர் : இப்னு உமர்(ரலி) நூல் : இப்னு மாஜா இவ்வாறு இஸ்லாம் மது வோடு தொடர்புடைய ஒவ்வொரு சாரார்களையும் எச்சரித்து முற்றாக மதுவை ஒழிக்கும் மார்க்கமாகக் காணப்படுகின்றது.

இஸ்லாம் எச்சரிக்கின்றது மது அருந்திய நிலையில் மரணித்தால் நரகத்தில் நுழைவான்! அதிலிருந்து விடுபட்டு பாவமன்னிப்புக் கோரினால் அல்லாஹ் மன்னிப்பான் மேலும் மது அருந்தி போதை அடைந்தவனின் நாற்பது நாட்கள் தொழுகை ஏற்றுகொள்ளப்பட மாட்டாது அவன் அவ்வாறே இறந்து விட்டால் நரகத்தில் நுழைவான் மீண்டும் அருந்தினால் மறுமை நாளில் "ரக்கத்துல் கப்பால்" எனும் பானத்தை அல்லாஹ் அவனுக்கு புகட்டுவது கடமையாகி விட்டது. என்று நபி(ஸல்) அவர்கள் கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! "ரக்கத்துல் கப்பால்" என்றால் என்ன? என்று கேட்டனர். அதற்கவர்கள் நரகவாசிகளிடம் பிழிந்தெடுக்கப்பட்ட பானம் என்று பதிலளித்தார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) நூல் : இப்னு மாஜா. இவ்வாறாக, இஸ்லாம் மது அருந்துவதால் ஏற்படும் அல்லாஹ்வின் தண்டனையை வெளிக்காட்டியே மதுவை ஒழிக்கும் மார்க்கமாக உள்ளது.

சமூகத்தை சீர்கெடுக்கவைக்கும் இம் மது பாவனை ஆனது அண்மைக் காலங்களில் இளைஞர்கள் மத்தியில் சடுதியாக அதிகரித்து வருவதாக "ஆபத்தான போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் அதிகார சபையின்" (National Dangerous Drugs Control Board ) அறிக்கை தெரிவிக்கின்றது. கடந்த ஒரு சில வருடங்களில் சிறுவர்களிடத்தில் குறைந்திருந்த போதைப் பொருள் பாவனை மீண்டும் நாட்டில் தலை தூக்கி வருவதாகவும் புகைத்தல் மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை தெரிவித்துள்ளது மேலும் நம் நாடு சமூக வறுமையுடன் கூடிய நாடாக இருப்பதற்கும், பல்வேறுபட்ட சமூக பிரச்சினைகளுக்கு வடிகாலாகவும் இந்த மதுபாவனை திகழ்கின்றது. மேலும் ஒட்டு மொத்த சமுதாயத்தையும் பாதிக்கவல்ல இந்த போதை பொருளை முற்றிலுமாக ஒழிக்கும் நடவடிக்கையில் உலக நாடுகள் அனைத்தும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு சிறிது நேர அற்ப சந்தோசத்திற்காக தங்கள் வாழ்கையை பணயம் வைக்கும் எமது சமுதாயத்தினரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை மீட்பது நம் அனைவரதும் கடமையாகும் இஸ்லாம் என்பது உண்மையான ஆன்மீக மனிதனுடைய வாழ்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் கலந்து வழி காட்டும் மார்க்கமாகும். மறுமை வாழ்க்கையை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மறுமைக்காகத்தான் இவ்வுலகில் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஆழமாகப் பதித்தது.

எனவே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நபித் தோழர்கள் மதுவின் சுகத்திற்கு அடிபணியாமல் மதுவை விடப் பன்மடங்கு நேசித்த குர் ஆனின் கட்டளைக்கு உடனே பணிந்தார்கள் இவ்வாறாக பல்வேறு சந்தர்பங்களில் இஸ்லாம் அல்குர்ஆன், ஹதீஸ்கள் மூலம் மதுவை ஒழிக்கின்றது எனவே இஸ்லாத்தில் ஒழிக்கப்பட்ட பழக்கமாக மதுபாவனை திகழ்கின்றது. எனவே நாம் இஸ்லாத்தின் பால் ஒன்று சேர்ந்து போதை பொருள் பாவனை முற்றாக ஒழிக்கப்பட்ட சமூகத்தை உருவாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆனும் ஆரோக்கியமும்

வை. நஸ்மியா
இரண்டாம் வருடம்
வரலாறு மற்றும் மனைப்பொருளியல

மனித வாழ்வில் சகல துறைகளுக்கும் வழிகாட்டுகின்ற வான்மறை உடல் ஆரோக்கியத்துக்கும் உள ஆரோக்கியத்துக்கும் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கிறது. அவ்வாறே அல்லாஹ் இப்பூவுலகை மனிதனுக்கு வசப்படுத்தியும் கொடுத்துள்ளான். அவன் எந்தவொரு அருளையும் மனிதனுக்கு காரணமில்லாமல் கொடுக்கவுமில்லை. அவன் அளித்துள்ள அருள்கள் பற்றி ஒரு நாள் வினாத்தொடுக்கவும் அவன் காத்திருக்கிறான்.

**வாழ்வாதாரங்கள் அருளப்பட்டிருப்பதில் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம்**

மனித உடல் உள்வாங்க முடியுமான பொருட்களாக இருப்பினும் அவற்றை ஆகுமானவரை தடுக்கபட்டவை என அல்குர்ஆன் இரண்டாகப் பிரித்துக் காட்டுகிறது. "மனிதர்களே! பூமியில் உள்ளவற்றில் அனுமதிக்கப்பட்ட பரிசுத்தமானதையே உண்ணுங்கள். மேலும் ஷைத்தானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள்." *(2 : 168)*

பனூ இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ் புரிந்த அருள்களுள் ஒன்றுதான் வானத்திலிருந்து அவர்களுக்கு உணவு வகைகளை இறக்கியதாகும். "மன்னு, ஸல்வா எனும் உணவை உங்களுக்கு இறக்கி, நாம் உங்களுக்கு வழங்கிய பரிசுத்தமானவற்றிலிருந்து உண்ணுங்கள் என்றோம்." *(2 : 57)*

"மன்னு" என்பது ஒரு வகையான தானியமாகும். "ஸல்வா" என்பது அவர்கள் இலகுவாகப் பிடித்துக் கொள்ளக்கூடிய ஒருவகைப் பறவையாகும். ஒரு மனிதனின் சீரான தேகாரோக்கியத்துக்கு அவசியப்படும் காபோவைதரேட்டும், புரதமும் இந்த இருவகை உணவுகளிலும் அடங்கியிருந்தன. ஆனால் அனைத்திலும் மாறுசெய்த பனூ இஸ்ரவேலர்கள் இந்த அருளையும் துச்சமாக மதித்தார்கள். விண்ணிலிருந்து இறக்கப்பட்ட இந்த ஆகாரங்களை உட்கொண்டு காலப்போக்கில் களைப்படைந்து போனார்கள்.

"மூஸாவே! ஒரே வகையான உணவை எம்மால் சகிக்க முடியாது. எனவே பூமி விளைவிக்கின்ற கீரை, வெள்ளரிக்காய், பூண்டு, பருப்பு, வெங்காயம் ஆகியவற்றை எங்களுக்காக வெளிப்படுத்தித் தருமாறு உம் இறைவனிடம் கேட்பீராக என்று கூறியபோது சிறந்ததற்குப் பகரமாக தாழ்ந்ததையே மாற்றிக் கேட்கிறீர்கள்? ஏதேனும் ஒரு நகரத்துக்குச் சென்று விடுங்கள். அதில் நீங்கள் கேட்பது நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும்" என்று மூஸா கூறினார்." *(2 : 61)*

இறைதூதர் ஐயூப் (அலைஹிஸ்ஸலாம்) நோயுற்றிருந்த வேளையில் தன் இறைவனை அழைத்தபோது அவரது நோயைக் குணப்படுத்த அல்லாஹ் தண்ணீரை அமைத்துக் கொடுத்தான். "உமது காலால் நிலத்தில் அடிப்பீராக! என்றோம். அடிக்கவே நீர் பீறிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியது. இதோ குளிர்ந்த குளிக்குமிடமும் குடிபானமுமாகும் எனக் கூறினோம். *(38 : 42)*

மர்யம் (அலைஹஸ்ஸலாம்) கருவுற்று, ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை ஈன்றெடுத்த வேளையில் அவரையும் குழந்தையையும் அல்லாஹ் எவ்வாறு அரவணைத்தான் என்பதை ஸூறா மர்யம் பின்வருமாறு விபரிக்கிறது :

"ஜிப்ரீல் அவரை அழைத்து, மர்யமே! நீர் கவலை கொள்ளாதீர். உமக்கு கீழே உம் இறைவன் ஒரு நீரூற்றை ஏற்படுத்தியுள்ளான் என்று கூறினார். "பேரீத்த மரத்தின் அடிப்பாகத்தைப் பலமாக உம் பக்கம் உசுப்புவீராக. அது கனிந்த பேரீத்தம் பழங்களை உம்மீது சொரியும். நீர் உண்டு குடித்து கண்குளிர்ச்சி அடைவீராக" என்று அவர் கூறினார்." *(19 : 24 26)*

பேரீத்தம் பழங்களில் உள்ள சிறப்புக்களை நபி (ஸல்லல்லாஹ்அலைஹிவஸல்லம்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் சிலாகித்துப் பேசியுள்ளார்கள்.

"யார் காலையில் எழுந்ததும் அரேபியாவின் ஏழு பேரீத்தம் பழங்களை உண்ணுகிறாரோ அவருக்கு அந்நாளில் எந்த நச்சோ, மந்திரமோ தீங்காக அமையாது."

(அல்புகாரி, முஸ்லிம்)

**இறை ஏவல் - விலக்கல்களில் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் :**

கடமையான குளிப்பை நிறைவேற்றுவது பற்றிய சட்டத்தைப் பிரகடனம் செய்யும்போது "நீங்கள் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருந்தால் அல்லது உங்களில் ஒருவர் மலசலம் கழித்துவிட்டு வந்தால் அல்லது நீங்கள் உடலுறவு மூலம் மனைவியைத் தீண்டியிருக்கும் நிலையில் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் தூய்மையான மண்ணைநாடி உங்கள் முகங்களையும், உங்கள் கைகளையும் தடவிக் கொள்ளுங்கள்." *(4 : 43)*

இந்த வசனத்துக்குப் பேரறிஞர் இப்னுல் கையிம் அல்ஜவ்ஸி (ரஹிமஹுல்லாஹ்) தனது பிரபலமான "அத்திப் புந் நபவி" எனும் நூலில் இவ்வாறு விளக்கமளிக்கிறார்.

"தண்ணீரைப் பாவிப்பதானது ஒரு நோயாளியின் உடல்நலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று கருதப்படும்போது தூய புழுதியைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த வசனம் ஒருவரின் உடல் உள்வாங்கும் வெளியேற்றும் உடலுக்குக் கேடு விளைவிக்கும் அம்சங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒருவர் எல்லாச் சந்தரப்பங்களிலும் எடுக்க வேண்டிய அனைத்து முன்னெச்சரிக்கைகளையும், வருமுன் காக்கும் நடவடிக்கைகளையும் வலியுறுத்தும் ஒரு வசனமாகும்."

நோன்பு நோற்பதைக் கடமையாக்கியபோது "உங்களில் எவர் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருந்தால் அவர் வேறு நாட்களில் கணக்கிட்டு நோற்றுக் கொள்ளட்டும். எனினும் முதுமை அல்லது நிரந்தர நோய் போன்ற காரணங்களால் நோன்பு நோற்பதைக் கடினமாகக் காண்பவர்கள் அதற்குப் பகரமாக ஒரு ஏழைக்கு உணவளிக்கட்டும்" *(2 : 184)* என்று கூறி நோயாளர்களுக்கு அவர்களது நோய் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பை விடுவதற்கு அல்லாஹ் அனுமதித்துள்ளான். மேலும் பிரயாணத்தின்போது பயணிகளின் ஆரோக்கியத்தைப் பேணவும், உடற்பலத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் அல்லாஹ் விதிவிலக்களித்துள்ளான்.

பயணம் என்பது வேதனையின் ஒரு பிரிவாகும். அது உங்களில் ஒருவரது உணவையும், பானத்தையும், தூக்கத்தையும் தடுத்து விடுகிறது. உங்களில் ஒருவர் பயணத்தில் தன் குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டால் அவர் தன் குடும்பத்தாரிடம் விரைந்து திரும்பட்டும்" என்று நபி (ஸல்லல்லாஹ்அலைஹி வஸல்லம்) கூறியுள்ளார்கள். (அல்புகாரி, முஸ்லிம்)

ஹஜ்ஜின்போது இஹ்ராம் அணிந்தநிலையில் தலைமுடியை சிரைப்பது தடுக்கப்பட்டதாகும். எனினும் தலைமுடி அல்லது தலையிலுள்ள பிணி காரணமாக ஒருவரின் ஆரோக்கியத்துக்கு ஊறு விளையுமானால் உடலில் தேங்கி நிற்கும் அத்தகைய அம்சங்களை நீக்கி உடல்நலத்தைப் பேண நிபந்தனையின் அடிப்படையில் குர்ஆன் விதிவிலக்களித்துள்ளது.

"உங்களில் எவரேனும் நோயாளியாக அல்லது தனது தலையில் தொந்தரவு தரும் பிணி உள்ளவராக இருந்தால் அவர் தலைமுடியைச் சிரைக்கலாம்." (2 : 196)

அப்போருக்கான அழைப்புக்குப் பதிலளிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே வேளை "போருக்குச் செல்லாதிருப்பது பார்வையற்றவர் மீது குற்றமில்லை முடவர் மீதும் குற்றமில்லை நோயாளியின் மீதும் குற்றமில்லை." (48 : 17) என்கிறது வான்மறை.

அல்குர்ஆன் தடைசெய்துள்ளவற்றிலும் மனிதனின் உடல் நலமும் உள ஆரோக்கியமும் கருத்தில் கொள்ளப்பட்டது. மதுபானம் பற்றி "அது ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்." (5 : 90) என்றும் மாதவிடாய் காலத்தில் பெண்களைத் தீண்டுவது பற்றி "அது ஓர் அசௌகரியமும் அசுத்தமுமாகும்" (2 : 222) என்றும் அல்குர்ஆன் உபதேசிக்கின்றது.

**எது முழுமையான ஆரோக்கியம்?**

மனிதன் இரு கூறுகளால் படைக்கப்பட்டுள்ளான். ஒன்று அல்லாஹ்வின் பூமியிலிருந்து ஒரு பிடி மண் மற்றது அல்லாஹ்வின் "ரூஹ்" இல் இருந்து ஓர் ஊதல். முன்னையது மனித உடலுடனும், பின்னையது மனித ஆன்மாவுடனும் சம்பந்தப் பட்டுள்ளது. உடல் ஆரோக்கியத்தைப் பேண மனிதர்களுக்குச் சகல வாழ்வாதாரங் களையும் வகுத்துக் கொடுத்துள்ள அல்லாஹ், மனிதன் தனது முக்கிய கூறான ஆன்மாவைப் புறக்கணித்து வாழ்வதை ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை. ஒருநாள் உக்கி மண்ணோடு மண்ணாக மாற இருக்கின்ற உடலைப் பலப்படுத்திக் கொழுக்கச் செய்து ஆன்மாவைப் புறக்கணிப்பவனை "மனிதன்" என்றே அல்லாஹ் கருதுவதில்லை. உடலிலிருந்து ஆன்மா பிரிக்கப்படும்போது அல்லாஹ் தன்னிடம் எதிர்பார்ப்பது நேர்த்தியான ஆன்மாவைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"அமைதியடைந்த ஆன்மாவே! நீ உன் இறைவனின் பக்கம் திரும்பி விடு." (89 : 27-28)*

இதனால்தான் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) இப்படி இறைஞ்சினார்கள்.

*"மனிதர்கள் எழுப்பப்படும் நாளில் என்னை இழிவுபடுத்தி விடாதே! அந்நாளில் செல்வமோ பிள்ளைகளோ பயன்தர மாட்டாது! ஆரோக்கியமான உள்ளத்துடன் வருபவரைத் தவிர." (26 : 87-89)*

முழுத் திருக்குர்ஆனிலும் நன்கு நோக்கத்தக்க அம்சம் யாதெனில், உடல்நலத்தைப் பேண அல்லாஹ் வழங்கியுள்ள உணவு வகைகளையும் அவற்றின் சட்டங்களையும் அல்குர்ஆன் எங்கெல்லாம் விவரிக்கிறதோ அங்கெல்லாம் ஆன்மாவின் ஏதாவது ஒரு பகுதியை சீர்செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளது. பின்வரும் வசனங்களைப் படித்துப் பார்த்தால் இந்தப் பேருண்மை உங்களுக்குப் புரியும்!

*"படரவிடப்பட்ட கொடி, படரவிடப்படாத செடிகளையும் கொண்ட தோட்டங்களை சுவையில் வேறுபட்ட பேரீத்தம் மற்றும் தானியங்களையும் மேலும் தோற்றத்தில் ஒன்றுபட்டு சுவையில் மாறுபட்ட ஸைத்தூனையும் மாதுளையையும் அவனே உருவாக்கினான். அவை பயனளிக்கும்போது அதன் பலனிலிருந்து உண்ணுங்கள். அதை அறுவடை செய்யும் நாளில் அதற்குரிய கடமையைக் கொடுத்து விடுங்கள். நீங்கள் வீண்விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக அவன் வீண்விரயம் செய்பவர்களை நேசிக்கமாட்டான்." (6 : 141)*

*"வானத்திலிருந்து பொழியும் மழை மூலம் பயிர்களையும், ஸைத்தூனையும், பேரீத்த மரங்களையும், திராட்சைகளையும் மற்றும் அனைத்துக் கனி வர்க்கங்களையும் உங்களுக்காக அவன் முளைக்கச் செய்கிறான். நிச்சயமாக இதில் சிந்திக்கும் சமூகத்துக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது." (16 : 11)*

*"கடலிலிருந்து புத்தம் புதிய மாமிசத்தை நீங்கள் புசிப்பதற்காகவும், நீங்கள் அணியக்கூடிய ஆபரணத்தை அதிலிருந்து வெளிப்படுத்துவதற்காகவும் அவனே கடலை வசப்படுத்தித் தந்தான். நீங்கள் அவனது அருளை அடைந்து கொள்வதற்காகவும் நன்றி செலுத்துவதற்காகவும் இவ்வாறு செய்தான்." (16 : 14)*

*"கால்நடைகளிலும் நிச்சயமாக உங்களுக்கொரு படிப்பினை இருக்கிறது. அவற்றின் வயிற்றிலுள்ள சமிபாடு அடைந்த உணவுக்கும் இரத்தத்துக்கும் இடையிலிருந்து அருந்துவோருக்கு சுவையான, சுத்தமான பாலை உங்களுக்கு நாம் புகட்டுகிறோம்." (16 : 66)*

தேன் பற்றி, *"அவற்றின் வயிறுகளிலிருந்து பல்வேறு நிறங்களுடைய பானம் வெளியேறுகிறது. அதில் மனிதர்களுக்கு நிவாரணம் இருக்கிறது. நிச்சயமாக இதில் சிந்திக்கும் சமூகத்துக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது." (16 : 69)* என்கிறது. (மேலும் பார்க்க, 2 : 172, 6 : 142, 13 : 3 4, 16 : 67, 36 : 33-35)

பனூஇஸ்ரவேலர்களில் ஒரு போருக்கு அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாலூத் என்பவர் பற்றி அல்லாஹ் இப்படிக் கூறுகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிச்சயமாக அல்லாஹ் உங்களைவிட அவரையே தெரிவு செய்து அறிவில் ஆற்றலையும், உடலில் வலிமையையும் அவருக்கு அதிகப்படுத்தி இருக்கிறான்." (2 : 247)

போர்த் தளபதிக்கு அதிகம் தேவைப்படும் உடல் வலிமைக்கு முன்னால் அவரது அறிவாற்றல் குறிப்பிடப்பட்டிருப்பது இங்கு நோக்கத்தக்கதாகும். ஏனெனில் அறிவு ஆன்மாவுடன் சம்பந்தப்படும் ஓர் அம்சமாகும்.


Reference :

*1)* அல்குர்ஆன் வசனங்கள்

*2)* ஹதீஸ்கள் (புகாரி, முஸ்லிம்)


மனிதன் இரு கூறுகளால் படைக்கப்பட்டுள்ளான். ஒன்று அல்லாஹ்வின் பூமியிலிருந்து ஒரு பிடி மண் மற்றது அல்லாஹ்வின் "ரூஹ்" இல் இருந்து ஓர் ஊதல். முன்னையது மனித உடலுடனும், பின்னையது மனித ஆன்மாவுடனும் சம்பந்தப்பட்டுள்ளது. உடல் ஆரோக்கியத்தைப் பேண மனிதர்களுக்குச் சகல வாழ்வாதாரங்களையும் வகுத்துக் கொடுத்துள்ள அல்லாஹ், மனிதன் தனது முக்கிய கூறான ஆன்மாவைப் புறக்கணித்து வாழ்வதை ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை.

# சீதனம்

சீர்பெற்ற சமூகமே சிந்திப்பாயா?
சீரழிகிறது சமூகம் சீதனப்புயலால்
சீர்வரிசை பெற்றவர் புன்னகைக்க
சீரிழந்து..தவிக்கிறார் கொடுத்தவர்

நித்திலத்து நிம்மதி கெடுக்கும் சீதனம்
நம் சமூகத்தில் இன்னும் தொடர்வதேன்?
நங்கையரை வாழ வைத்த மார்க்கமடா–இஸ்லாம்
நபிவழி மறந்து விழ்ந்து போவதேனோ..

மஹர் எனும் உரிமை கொடுத்து!
மணவாழ்வில் நிம்மதி பெற்றிட!
கோழையாய் கௌரவப்பிச்சை கேட்பதேன்?
உண்மை விரத்தியாகிகள் எங்கே?

பெற்ற பெண் பிள்ளையை கரைசேர்க்க
தகப்பன் ஆயுள் முழுதும் கஷ்டப்பட்டுழைக்க
கூடப்பிறந்தவனோ– கடல் கடந்து உழைக்க
காரணமோ சீதனச் சீற்றத்தின் கொடுமை!

பெண்விட்டார் செல்வத்தை அஞ்சாது
உறிஞ்சிக்குடிக்கும் அட்டைப்பூச்சிகளே
வேண்டாதீர் சீதனத்தை!
வாழ்விக்கும் சீர்மிகு ஆண்களே!

இறைவனோ சொல்கிறான் மஹர் கொடுக்க!
நீயோ எதிராய் சீதனம் எடுக்கிறாய்
உன் வாழ்க்கை தான் சந்தோஷத்துடன் ஆரம்பிக்குமோ?
இறையவன் அருள்தான் உமக்கு கிட்டுமோ?

சிந்தித்துப் பார்ப்பீரோ சகோதரர்களே!
உம் வாழ்க்கைத் துணைக்கு தொகை நிர்ணயமா!?
பெண், உறவுகளின் வாழ்க்கை அரங்கேற
தூக்கி எறிந்திடுவோம்–சீதனத்தை
இறையருள் பெற்ற சமூகமாக மாறிடுவோம்!


டி.எம்.எம். மாஹிஸ்
இரண்டாம வருடம்
வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய கண்ணோட்டத்தில் சமூக ஊடகங்கள்

எம்.எஸ்.எம். முந்தாஸ
இரண்டாம் வருடம்
ஊடகக் கற்கைகள்

எமது சமூகத்திற்கு தொலை தூரத்தில் இருந்த ஊடகம் இன்று எம் வீட்டுக் கதவுகளை திறந்து கொண்டு வீட்டுக்குள் புகுந்து எம்மை ஆட்டிப்படைக்கும் நிலைக்கு விளையாடுகின்றது என்றால் அதை யாராலும் மறுக்க முடியாது. அண்மைக்காலம் வரை எமது முஸ்லிம் சமூகத்தில் "சமூக ஊடகம்" என்பது ஒரு கருத்து முரண்பாடான விடயமாகவே காணப்பட்டது. அதாவது ஒரு பிரிவினர் சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றை முற்று முழுதாக ஒதுக்கினர். அவற்றை ஷைத்தானியப் பாவங்களின் ஊன்றுகோலாக நோக்கினர்.ஆனால் ஊடகத்தை கத்திக்கு உவமித்து நோக்கின் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் பயன்படும் கத்தி என்பது வேண்டாம் என்பது சரிதானா? ஊடகத்தின் தீய பாதைகளை மனதாலும் செயலாலும் மூடிவிட்டு நல்ல பாதைகளைத் திறந்து செயலாற்ற எம்மால் முடியாதா? என்ற வினா நம்முள் எழுகிறது.

ஆனால் அல்ஹம்துலில்லாஹ் இன்று நிலமை மாறிவருவதை அவதானிக்கலாம். முஸ்லிம்களும் சமூக ஊடகப்பயன்பாட்டை உச்ச முறையில் பயன்படுத்தலாம் என்ற காலோசிதமான தீர்மானத்திற்கு மாறியுள்ளமை அதிஷ்டம் தான்.

உண்மை தான். தஃவா பணியின் போது ஊடகப் பயன்பாடு அவசியமானதே. இஸ்லாத்தின் இலக்குகள், குறிக்கோள்கள் மாறாத் தன்மையுடன் மக்களை சென்றடைய வேண்டிய பணியில் மாற்றங்களை கொண்டு வந்தே தீர வேண்டியுள்ளோம்.

"நபியே ஒவ்வொரு சமூகத்தாரும் அவர்களுக்கு நம் தூதுவத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக எந்தவொரு தூதரையும் அவருடைய சமூகத்தாரின் மொழியைக் கொண்டே அல்லாது நாம் அனுப்பவில்லை." (இப்றாஹீம்-வசனம் 04)

என்ற குர்ஆன் வசனம் அதற்கான வாய்ப்புக்கள் திறந்து விடப் பட்டுள்ளதை நாம் காணலாம்.

அதே போன்று யூஸுப் கர்ழாவி அவர்கள், "ஊடகங்கள் வாயிலான அழைப்புப்பணியே இன்றைய காலத்து ஜிஹாத்" எனக்கூறியிருப்பது உண்மையான விடயமே.

எவ்வழிமுறையாயினும் ஷரீஆவின் வரையறைக்கு உட்பட்டுள்ளதா? என்பதை ஆராயும் கடமை எமதே.கட்டுப்பாடு வரையறை பேணப்படாத ஊடகப் பாவனையை அனுமதிக்க முடியாது.ஆகவே அச்சு, இலத்திரனியல் ஊடகங்களை இஸ்லாமிய வரையறையைப் பேணி பயன்படுத்த வேண்டும்.

இவ்வூடகங்கள் மூலம் இஸ்லாத்தை குதறும் மேற்குலகத்தாருக்கு எமது கருத்துக்களை கூற முடியும்.இஸ்லாம் உலகத்தாருக்கான அருட்கொடை என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிக்க முடியும்.தஃவா பணியில் ஈடுபட முடியும்.ஏன் சமாதானத்திற்கான அழைப்பை விடுக்கவும் முடியும்.

உலகிலே இஸ்லாமிய ஊடகப்பயன்பாடு மொத்தத்தில் குறைவானதே. அதிலும் இஸ்லாமியர் சிறுபான்மையாக வாழும் இலங்கையில் அரிதிலும் அரிது என்றே கூற வேண்டும்.இன்றைய சமூக ஊடகமான அச்சு ஊடக மானது முஸ்லிம்களால் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், இலத்திரனியல் ஊடகங்கள் முஸ்லிம்களால் கை வைக்கப்படாமல் இருக்கின்றதை காணலாம்.எச்சாதனத்தையும் உடனுக்குடன் பயன்படுத்தி அதன் உச்ச பயனைப் பெறுவதே சிறந்த வழிமுறையாகும்.

எது எவ்வாறாயினும் நவீன இஸ்லாமிய உலகின் மறுமலர்ச்சியின் விளைவால் இன்றைய முஸ்லிம்கள் ஊடகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவது மகிழ்ச்சிகரமான விடயமே. எனவே இன்றைய இஸ்லாமிய உலகம் ஊடகப் பாவனையை உச்சப்படுத்தும் காலம் வெகு தொலைவில் இல்லை.உதாரணம் அல் ஜெஸீராவானது இன்று அரபு, ஆங்கில மொழிகளில் சேவையாற்றுகின்றது.

மேலும் அல்-அரபிய்யாஇ அல் முஸ்தகில்லா, அல் ஹிவார், அல்கிரா, பீஸ் செனல், இஸ்லாம் செனல் எனும் இஸ்லாமிய ஊடகங்கள் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

எனவே நாமும் எமது சக்திக்கு உட்பட்ட மட்டத்தில் சகலவிதமான சமூக ஊடகங்களையும் பயன்படுத்தி எமது தஃவா பணியைத் தொடருவோம்.நமக்கு எதிராக நாமறியாமல் நடைபெறும் உள சிந்தனா சக்திப்படைகளை எதிர்த்து இஸ்லாமிய வரையறைக்குள் எமது சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி குடும்பங்களையும் வளம்பெறச் செய்வோம். இதன் மூலம் சிறந்த இஸ்லாமிய உம்மாவை தோற்றுவிப்பதற்கான எம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள வல்ல இறைவன் அருள் புரிவானாக!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

எஸ்.எம். சஜுஸ்
முதலாம் வருடம்
தகவல் தொடர்பாடல் தொழிழுநுட்பம் மற்றும் பொருளியல்

அன்று சனிக்கிழமை விடுமுறை நாள் என்றபடியால் வழமைக்கு மாறாக சற்று நேரம் தாழ்த்தி நித்திரையில் இருந்து எழுந்தான் சயீத். முற்றத்தில் நின்ற பூஞ்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றியபடி அதில் மொய்க்கும் வண்டுகளையும் வண்ணத்துப்பூச்சிகளையும் வேடிக்கை பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான். இவ்வளவு சந்தோசமாக, சுதந்திரமாக வாழ்கின்றவனே என மனதுள் நினைப்பதற்குள் ரீங்......... ரீங்......... ரீங் என்ற மணியோசை வாசலில் ஒலித்தது. திரும்பி பார்த்தான் கையில் கடிதக்கட்டுடன் நின்ற தபாற்காரன் அதில் ஒரு கடிதத்தை எடுத்து சயீத்திடம் கொடுத்தான். அதைப்பெற்றுக்கொண்டவன் நன்றி கூறிவிட்டு வந்து சாய்வு நாட்காலியில் அமர்ந்து கடிதத்தை படிக்கத்தொடங்கினான்.

அன்பகம் இல: 48,

கண்டி வீதி, கேகாலை.

அன்பு மகனே!

நீண்ட காலமாக உன்னைக்காணாத கவலையில் இதை எழுதுகிறேன். மகனே! இந்த முதியோர் இல்லத்தில் என்னை சேர்த்துவிட்டதோடு என்மீது இருக்கும் உனது கடமைகள் நீங்கிவிட்டதாக எண்ணியிருப்பாய் என்னை மறந்தும் விட்டிருப்பாய். ஆனாலும் என்னை பொறுத்தவரையில் இவ்வாறு இருக்க முடியாது. மகனே! பெத்தமனம் பித்து என்பார்களே! இங்கு வந்ததுமுதல் எனது கடந்த காலத்தை எண்ணி கண்ணீர் வடிக்காத நாளே இல்லை. மகனே! நான் திருமணம் முடித்து 5ஆண்டு காலமாக குழந்தை பாக்கியம் இல்லாது பட்ட வேதனையை நீ அறியமாட்டாய். நோன்புகள் பிடித்து, துஆக்கள் பல கேட்டு உன்னைப்பெற்று எடுத்தேன். அன்று நான் அடைந்த மகிழ்ச்சியை கூற வார்த்தையே இல்லை. ஈ, எறும்பு மொய்க்காமலும் நோய் நொடிகள் அணுகாமலும் கண்ணை இமை காப்பது போல் காத்து வளர்த்தேன் உனது சுகத்துக்காகப் பத்தியங்கள் அனுஷ்டித்த நாட்கள் எண்ணில் அடங்காதது.

மகனே! உனக்கு 6வயதாக இருக்கும் போது உனது தந்தை உன்னையும் என்னையும் ஏன் இந்த உலகையுமே பிரிந்து மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டார். அந்த நாள் முதல் உன்னை வளர்த்து பொறியியலாளர் என்ற இடத்திற்கு கொண்டுவர நான் பட்ட துன்பங்களை அல்லாஹ்வை தவிர யாருமே அறியமாட்டார்கள். ஒவ்வொரு நாளும் உன்னை பள்ளிக்கு ஆயத்தமாக்கி அனுப்பிவிட்டு, வீடு வீடாய்ச்சென்று வேலை செய்து உனது வயிற்றயும், அறிவையும் வளர்த்தேன் இதனால்தான் மெழுகுவர்த்தியை ஒப்பிடுகின்றார்கள்

எனது உழைப்பில் சிறுக சிறுக சேர்த்தும், அரசாங்கம் தந்த புலமைப்பரிசிலும் சேர்த்து உனது பட்டப்படிப்பை முடிப்பதற்கு ஏதுவாக அமைந்தன. நீ பொறியிலாளர் என்ற பட்டத்தையும் சூடிக்கொண்டாய். ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோன் எனக்கேட்டதாய் என்ற வள்ளுவப்பெருமகனின் கூற்றின் உண்மையை அன்றுதான் உணர்ந்து கொண்டேன். மகனே! எனது கற்பனை கோட்டையில் இருந்ததெல்லாம் உன்னை சான்றோனாக்கி, உனது குடும்பம் குட்டிகளோடு உன் நிழலில் வாழவேண்டும் என்பதுதான். பேரப்பிள்ளைகள் எனது மடியில் விளையாட வேண்டும். அவர்களது மழலை மொழியில் இன்பம் காண வேண்டும். அவர்களுக்கு தாலாட்டுப்பாட வேண்டும் அயலவர்களோடும், உறவினர்களோடும் சேர்ந்து வாழவேண்டும். ஆனால் நீ இதற்கு மாறாக எனக்கு உணவும், தண்ணீரும் கிடைத்தால் போதும் என்று நினைத்திருப்பாய். மகனே! அவை இங்கு தாராளமாகவே கிடைக்கின்றன. என்றாலும் சில வேலை நான் ஒரு சிறைக்கைதியா? என எண்ணத்தோன்றுகிறது.

மகனே! என்னை இந்த வயோதிபர் இல்லத்தில் சேர்த்துவிட்டாய் என்பதற்காக நான் உன்னை திட்டுவதோ, பழிப்பதோ இல்லை. எனது விதி இதுவாக இருந்தால் யாரால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். மகனே! உன்னுடைய முதுமை காலத்திலும் இவ்வாறான இல்லங்களில் தஞ்சம் புகாமல் இருக்க இன்றிலிருந்து ஆவணம் செய்து கொள் என்று விடைபெறும் இவள் என்றும் உன் அன்புத்தாய்.
ஆமினா உம்மா

இதைப்பார்த்து முடிக்க சயீதின் கண்களிலிருந்து அவனை அறியாமலே கண்ணீர் பெறுக ஆரம்பித்தது. அவனது நெஞ்சில் "தனது தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம்" அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பமடைந்து (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்து கொண்டலைந்தாள் என்ற உணர்வு இழையோடியது. சே...... இவ்வளவு படிச்ச நான் ஏன்? ஒரு முட்டாள் தனமான காரியத்தை செய்து விட்டேன்? எனது சுயநலனுக்காக என்மீது உயிரையே வைத்து ஆளாக்கிய தாய்க்கு மாறு செய்து விட்டேனே. எனத்தனக்குள் புலம்பியபடி செய்வதறியாது அங்குமிங்கும் நடந்தான். இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தான். இந்த நிமிடமே அந்த முதியோர் இல்லத்திற்கு சென்று தான் செய்த தவறுக்காய்த் தாயிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அவரை வீட்டுக்கு அழைத்து வந்து தனது விருப்பப்படி வாழ வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இந்த வலைப்பின்னல் காலத்திலும் கூட வயது முதிர்ந்த பெற்றோரை சுமை என நினைத்து ஒதுக்குவோருக்கு நான் முன்மாதிரியாக இருந்து காட்ட வேண்டும். இவ்வாறு எண்ணியபடி மனைவிக்கு கூட சொல்லாமல் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். காரின் வேகத்தை விட அவனது கற்பனை குதிரையின் வேகம் அதிகமாகவே இருந்தது.

நண்பகல் 12 மணி இருக்கும், சயீதின் கார் "அன்பகம்" முதியோர் இல்லத்தை சென்றடைந்தது. காரை விட்டிறங்கிய சயீத் ஆயிரம் கற்பனைகளோடும், குற்ற உணர்வோடும் உள்ளே சென்றான். அந்த முதியோர் இல்லம் சற்று பரபரப்பாகவே இருந்தது. அங்கிருந்த பொறுப்பாளரிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு ஆமினா தனது தாய் என்பதையும் கூறினான். அழைத்துச் செல்வதற்காகவே தான் வந்ததாகவும் குறிப்பிட்டான். இதைச்செவியுற்ற பெரியவரின் முகத்தில் திடீர் மாற்றம் ஏற்றப்பட்டதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயீத் கண்டு கொண்டான். சயீதை உட்காரும்படி பணித்து அவரும் நாற்காலியில் உட்கார்ந்தார். சில விநாடிகள் இருவருக்குமிடையில் அமைதி நிலவியது. மௌனத்தை களைத்த பெரியவர் தம்பி! நீர் பிந்தி விட்டீர். நீர் கொடுத்து வைத்தது இவ்வளவுதான். ஆமினா சில நிமிடங்களுக்கு முன்பு தான் இவ்வுலகை விட்டுப் பிரிந்துவிட்டார் என்று கூறி முடிப்பதற்குள் சயீத் அனலிடப்பட்ட புழுவானான். 1000 சம்மட்டி கொண்டு தலையில். அடிப்பது போன்ற உணர்வு. தன் அன்புத்தாயின் பூதவுடலை கட்டியணைத்து அலறினான், புலம்பினான், துடித்தான், துவண்டான். என்ன பயன்? ஆண்டாண்டு காலம் அழுது புறண்டாலும் மாண்டோர் வருவாரோ மானிலத்தே?

# புதுயுகத்தில் புதையுறும் மார்க்கம்

இருகரம் படைத்தான் இறைவன் - மானிடர்க்கு
இருகரம் கொண்டு புதுக்கரம் படைத்தான்
மனிதன் தன் வாழ்க்கைக்கு
இறையோனின் மறையை
இருகரம் ஏந்துகின்றானோ இல்லையோ
இருபத்தி நான்கு மணிநேரமும் - தன்
புதுக்கரத்துடன் நகர்கிறது
அவன் புதுயுக வாழ்க்கை

முப்பொழுதும் தன் இருகரம் கொண்டு
புதுக்கரத்தில் மூழ்கியிருக்க
இருகரம் ஏந்த வேண்டிய திருமறையை
மறந்தது ஏனடா.
அதிகாலை சுபஹ் இறைவணக்கத்தை
தொலைத்தது ஏனடா
புதுக்காலையில் தொழுகையுடன் ஆரம்பமாக
வேண்டிய உன் நாட்களை
புதுக்கரத்திற்காய் தியாகம் செய்த
தியாகி நீயடா..
நீ செய்த தியாகம் மறுமையில்
உன் எதிராளியாய் நிற்பதை
சற்று சிந்தித்துப் பாரடா..

வாழ்நாள் முழுவதும் உன் வாழ்வின்
தேடலுக்காய் ஓடும் நீ உன் மறுவாழ்வின்
தேடலுக்கான சேமிப்பை மறந்தது ஏனடா.
ஐந்நேர இறைவணக்கத்தை துறந்தாய்!

எங்கு செல்கிறது உன் எதிர்காலம்
மறுவாழ்வின் தேடலின்றி
சிந்தித்து கருமமாற்றும் நீ
உன் மறுமை பற்றி சிந்திக்க மறந்தது ஏனடா

இறையில்லம் சென்றால் அங்கும் - உன்
புதுக்கரத்தின் ரிங்..ரிங். ஓசை
உன் பாவக்கறைகளை பரிசுத்தமாக்கிட
புனித ஹஜ் சென்றாலும்
அங்கும் ""செல்பி"" காட்சிகள்
எங்கே போகிறது ? இப் புனித மார்க்கம்
வலைத்தளங்களில் தன்
தலைகளை காட்டியபடி
வண்ணப் புகைப்படங்களுடன் நம் பெண்கள்
அன்னை ஆயிஷா வழிவந்த
பெண் என்பதை நீ மறந்தாயோ!

உன் இவ்வுலக வாழ்வை மட்டுமன்றி
உன் மறுவுலக வாழ்வையும்
மக்கிப் போகச் செய்யும்
உன் புதுக்கரத்திற்கு - இன்றே
புது வரையறைகள் விதித்திடடா

**எஸ்.எப். ரஸானா**
முதலாம் வருடம்
புவியியல் மற்றும் அரசறிவியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையான இயந்திரம் - மனித உடல்

ஏ.எம்.எப். ஸபியா
இரண்டாம் வருடம்
மனைப்பொருளியல்

இவ்வுலகின் நிலைப்பிற்கு குழந்தைகள் எனும் அருட்கொடை இறைவனால் வழங்கப்படுகிறது.ஒவ்வொரு புதிய மனித உயிரும் உருவாவது அற்புதமே.ஒரு துளி இந்திரியமும்,ஒரு முட்டையும் இணைந்து குண்டூசி முனை அளவு உருவாகும் ஒரு பொருள் பின்பு இரத்தம் சுற்றியோட எலும்புக்கூட்டை மூடிய தசையும் அதனை போர்த்திய தோலுமாக எல்லாம் முறையாய் அமைந்த அங்கங்களும் என்று உருவாகும் மனித உயிரானது கருப்பை எனும் இருட்டறையில் 280 நாட்கள் முறையாக இறைவனால் சிருஸ்டிக்கப்பட்டு இவ்வுலகிற்கு பரிசளிக்கப்படுகிறது. உடலானது உயிரணு என்ற கட்டமைப்பில் இருந்து எளிமையான (தனி) இழையம், சிக்கலானகூட்டு இழையம், உறுப்பு, தொகுதி என்று கட்டங்கட்டமாக வளர்ச்சி அடைகிறது. மனிதன் பிறந்தது முதல் உடலின் உள்ளும் புறமும் பல தொகுதிகள் இயக்க உடல் செயற்பட்டுக் கொண்டுடிருக்கிறது. மனித உடலானது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு இடை வினையாற்றும் பல உடற் தொகுதிகளை கொண்டுள்ளது.

வெவ்வேறு உடற் தொகுதிகள்,வேறுபட்ட உடற்கூற்று அமைப்புகளை கொண்டிருந்தாலும் உடல் இயக்கத்திற்காக அவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு செயலாற்றுகின்றன. இருப்பினும் ஒவ்வொரு தொகுதியில் உள்ள உறுப்புக்களும் தமக்கான தனிப்பட்ட தொழில்களைச் செய்ய இசைவாக்கம் அடைந்துள்ளன. அதில் மனித உடலின் உட்புறமாக குருதிசுற்றோட்டத் தொகுதி, நரம்புத் தொகுதி, இனப்பெருக்க தொகுதி, கழிவகற்றும் தொகுதி, சுவாசத்தொகுதி, சமிபாட்டுத்தொகுதி என்பனவும் உடலை போர்த்தியபடி தோல் அமைப்பும் காணப்படுகிறது.

உடலின் இயக்கத்திற்காகவும் மனித உயிர் நிலைப்பிற்கும் மனித உடலினுள் ஒவ்வொரு நொடியும் இவ்வனைத்துத் தொகுதிகளும் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏதாவது ஒருமனித உடற் தொகுதி தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தன் இயக்கத்தை நிறுத்திக் கொள்ளும்போது முழு உடலுமே அஸ்தமனமாகிறது.இதனை மரணம் என அழைக்கிறோம்.

மனித உடலின் கட்டமைப்பு மற்றும் தொழிற் பாட்டின் அடிப்படை அலகாக கலம் காணப்படுகிறது. கலமானது உடலினுள் பல்வேறு தொழிற்பாடுகளை ஆற்றுகிறது. அணுக்களே உயிரினங்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்த மிகவும் அடிப்படையான நிலையாகும். இரண்டுக்கு மேற்பட்ட அணுக்களுக்கிடையிலான இடைத் தொடர்பினால் மூலக் கூறுகள் உருவாகும். இவ்வாறு பல மூலக் கூறுகள் ஒன்றுபட்டு உயிரணுக்களாலான நுண்ணுறுப்புகளை உருவாக்கும். நுண்ணுறுப்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் சேர்ந்தே உயிருள்ள ஒரு தொழிற்படும் உயிரணுவைக் கொடுக்கிறது. இந்த நுண்ணுறுப்புகள் உயிரணுக்களில் வெவ்வேறு தொழில்களை புரிவதற்காக விருத்தி அடைந்திருக்கும்.உயிரணுக்கள் இணைந்து குறிப்பிட்ட செயலை புரிவதற்காக இழையங்களாக மாறுகிறன. இவ்விழையங்கள் குறிப்பிட்ட விசேடமான செயலை புரிவதற்காக கூட்டாக இணைந்து உறுப்புகளை தோற்றுவிக்கின்றன.பல உறுப்புகள் ஒன்றாக இணைந்து விசேடமான தொழிலைப் புரிகின்ற போது அது ஒரு உடற் தொகுதியாகக் கொள்ளப்படும்.தற் காலத்தில் ஆரோக்கியத்திற்காக அலைகின்ற மனிதன் தன் உடலைப் பற்றியோ, ஆரோக்கியத்தைப் பற்றியோ, உடலின் விந்தையான அமைப்புப் பற்றியோ எள்ளளவும் சிந்திப்பதில்லை. மாறாக தன்னை அறிந்தும் அறியாமலும் தன்னுடைய ஆரோக்கியத்தையும், உடலையும் நாசமாக்கிக் கொண்டிருக்கிறான்.மனித உடலின் பிரதான செயற்பாட்டுத் தொகுதியாக மனித குருதிச்சுற்றோட்டத் தொகுதி காணப்படுகிறது. மனித உடலினுள் போசனைப் பதார்த்தங்கள் ஒட்சிசன் என்பவற்றை அவை அகத்துறிஞ்சப்படும் பகுதிகளிலிருந்து அவை பயன்படுத்தப்படும் பகுதிகளுக்கு எடுத்துச்செல்ல குருதிச் சுற்றோட்டத் தொகுதி பயன்படுகிறது.

மனித குருதிச் சுற்றோட்டத் தொகுதியானது இதயத்திலிருந்து குருதியை உடல் எங்கும் கொண்டு செல்ல நாடி என்ற அமைப்பையும், உடற் பகுதிகளிலிருந்து இதயத்திற்கு குருதியை கொண்டு வர நாளம் என்ற அமைப்பையும் கொண்டு காணப்படுகிறது. மற்றும் இலட்சக்கணக் கான மயிர்த்துளைக்குழாய்கள் இத் தொகுதிக்கு வலுச்சேர்க்கிறது. மிக முக்கியமாக இத் தொகுதியின் தலைவனாகவும், உடலின் பிரதான பாகமுமாக இதயம் காணப்படுகிறது. இறைவனின் சக்தி மிக்க செயற்பாடு இவ்விதயம் மூலம் மிக கச்சிதமாக உடலினுள் நடந்து கொண்டிருக்கிறது.

உடலின் ஒவ்வொரு உறுப்புகளும் நரம்புகளால் இணைக்கப்பட்டுள்ளன. நரம்புகளின் கூட்டிணைப்பு உடலின் மொத்த வடிவத்தை ஆக்குகின்றன. கடற்பஞ்சுகள் எனப்படும் உயிரியை தவிர மற்ற அனைத்து விலங்குகளிலும் நரம்புத் தொகுதி விருத்தி அடைந்துள்ளன.உடலால் வழங்கப்படும் கட்டளைகளை மூளை விளங்கி, ஏற்றுக் கொண்டு நரம்புகளின் வழியே செய்தி கடத்தப்பட்டு உடல் இயங்குகிறது. இது விஞ்ஞானமே கண்டு வியக்கும் அற்புதமான தொடர்பாடல் முறையாகும்.

மனிதன் உயிர் வாழ்வதற்கு ஏதுவான சுவாச ஊடகம் ஒட்சிசனானது மூக்குக் குழி வழியே உள்ளெடுத்து சுவாசப்பை வரை கொண்டு சென்று காபனீரொட்சைட் வாயுவை வெளிவிடும் உயிர்பான செயற்பாடு சுவாச் தொகுதியினுள் இடம் பெறுகிறது.சாதாரன ஒரு மனிதனில் 12-15 தடவைகள் இச் செயற்பாடு நிகழ்கிறது.புகைத்தல் செயற்பாடானது சுவாசத் தொகுதியை அழித்துவிடும் ஒரு உயிர் கொல்லியாகும்.சிகரட் புகையில் உள்ள நிகொட்டின் எனும் இரசாயனப் பதார்தமும்,காபனோர் ஒட்சைட் எனும் நச்சு வாயுவும் இணைந்து குருதியில் செங்குருதிக் கலங்களை அழித்து,இதயத் துடிப்பு வேகத்தை அதிகரிக்கச் செய்கிறது.சுவாசக் குழாய்களில்அசாதாரண மாற்றத்தை உருவாக்கி புற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயை வரவழைக்கிறது. பாரமற்ற ஒட்சிசனுக்கு பதிலாக காரமான புகைத்தற் செயற்பாடு உயிரைக் குடித்து விடுகிறது.

மனித உடற்க்கட்டமைப்பில் உணவுக்கால்வாய் தொகுதியின் பங்களிப்பு பிரதானமானது. மனிதனின் ஆரோக்கியம், வாழ்நாள் என்பவற்றை தீர்மானிக்கும் ஒரு தொகுதியாக இது காணப்படுகிறது. இது வாய்க் குழியில் ஆரம்பித்து நாக்கு,பல் என்பவற்றுடன்தொடர்புபட்டு தொண்டை, களம், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், குதம் என முடிவடைகிறது.உடலில் மிக நீளமான தொகுதியாகவும் காணப்படுகிறது. இறைவனால் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடு காரணமாக ஒவ்வொரு போசணையுள்ள உணவுகளும் ஒவ்வொரு விதமாக சமிபாடடையச் செய்யப்பட்டு உடலினுள் அகத்துறிஞ்சப்பட்டு சக்தியாக வெளிவிடப்படுகிறது. சமிபாடடையாத எஞ்சிய மீதிகள் மலமாக வெளியேறி உடலுக்கு ஆரோக்கியத்தை வழங்குகிறது. இன்னொரு இயந்திரம் கொண்டு செயற்படுத்த முடியாத ஒரு படைப்பாக உணவுக் கால்வாய்த் தொகுதி காணப்படுகிறது.

ஒவ்வொரு உயிர் உள்ள அங்கிகளும் தன்னை போன்ற ஒரு அங்கியை உருவாக்கிக் கொள்ள இனப் பெருக்கம் செய்கிறது. மனிதனை பெருத்தவரையில் ஆண், பெண் என இரு பாலாருக்கும் இனப்பெருக்கத்திற்கு என்று உடலின் உள்ளும் புறமுமாக உறுப்புகள் காணப்படுகிறது. சமூகத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இவ்வுலகில் ஒரு மனித உயிர் பிறக்கும் போது இது மகிழ்ச்சியான தருனமாகிறது.

விந்தணு, முட்டை என்ற இரண்டு சிறிய உயிர் கலங்களின் சேர்க்கை ஒரு புதிய உயிரை உருவாக்கும் அடிப்படை செயற்பாடாகும். மழைத்துளி போன்று தூய்மையான ஒன்றாகவே புதிய ஒரு மனித உயிர் இவ்வுலகில் ஜனனிக்கிறது. குடும்பம், சூழல், மரபணு போன்ற இன்னோரன்ன காரணங்களால் மனிதப் பிறப்பு நல்லதா? கேட்டதா என தீர்மானிக்கப்படுகிறது. உடல் இயக்கத்திற்கான அனைத்துத் தொகுதிகளையும் கருவில் வைத்து சீராக படைத்து இனப் பெருக்கத்தின் மூலம் ஆரோக்கியமான ஒரு உயிரை இறைவன் பிறப்பிக்கிறான.

ஆகவே, மனித உடலானது இயற்கையாகவே அனைத்து செயற்பாடுகளுக்கும் என்று மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மனிதன் அவனாகவே தனக்கு தீங்கிழைத்துக் கொள்ளாத வரையில் உடலியக்கம் இறைவனின் திட்டப்படி சிறப்பாகவே நடைபெற்று வரும். எப்போது மனிதன் ஆரோக்கியத்திற்கும் தன் உடலுக்கான ஓய்விற்கும் மற்றும் மனோ ரீதியான செயற்பாடுகளுக்கும் குழப்பத்தை உண்டுபண்ணுவானோ அப்போதே மனிதன் தன் வாழ்நாளை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொள்கிறான். ஆக, ஆரோக்கியமான போசணையான உணவுகளை அளவோடு உள்ளெடுப்பதன் மூலமும், உளம் சீராக்கல் செயற்பாடு மற்றும் ஆன்மீகம் என்பவற்றில் ஈடுபடுவதன் மூலமும் கற்றது கொண்டு செயற்பட்டு நலமாக வாழ முயற்சிப்பதன் மூலமும் மனிதன் தன் வாழ்கையை அழகாக மாற்றி கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை நின்றவை:

*சிவகுமாரன்.வீ.ச(2010) இயைபாக்கமும் ஒரு சீர்திட நிலையும்(உயிரியல் புதிய பாடத்திட்டம்), கிறிப்ஸ் பதிப்பகம்.*

*சிவகுமாரன்.வீ.ச(2001) தொழிற்படும் விலங்கு, கிறிப்ஸ் பதிப்பகம்*

*உணவு வழிகாட்டி(2010), சுகாதார அமைச்சு போசணைப் பிரிவின் வெளியீடு.*

The human body:anatomy facts and functions-live science(https://www.livescience.com)

List of systems of the human body-wikipedia(https://en.m.wikipedia.org>wiki)

(www.teacher of india.org) teacher plus-,jo;( vz; -75)

நவம்பர்-டிசம்பர்(2001)-வெளியாள இந்தியக் கட்டுரை.

# பலஸ்தீன பூமி

உள்ளமில்லா இஸ்ரேலே! மஸ்ஜிதைப் பறித்தாய்!
முஸ்லிம்களின் உரிமையில் குறுக்கிட்டாய்!
வெட்கமில்லா இஸ்ரேலே! மஸ்ஜிதைப் பறித்தாய்!
முஸ்லிம்களின் வாழ்வில் விளையாடினாய்!

இரக்கமில்லா இஸ்ரேலே! மஸ்ஜிதைப் பறித்தாய்!
பலகோடி முஸ்லிம் உயிர்களைக் காவுகொண்டாய்!
நீதியில்லா இஸ்ரேலே! மஸ்ஜிதைப் பறித்தாய்!
பலஸ்தீன பூமியை அபகரித்தாய்!

மனசாட்சியில்லா இஸ்ரேலே! வாழிடம் அற்றவன் - நீ
அதை ஒர் நொடியேனும் உணர்ந்தாயா?!
வாழிடம் கொடுத்தவர்களையே விரட்டிவிட்டாய் - நீ
முஸ்லிம் உறவுகளை கதியற்றவனாய் அலையவிட்டாய்!

நாணயமில்லா இஸ்ரேலே! மஸ்ஜிதைப் பறித்தாய்!
-பலஸ்தீன பூமியைப் பறித்து
முஸ்லிம்களின் உள்ளத்தை நொறுக்கிவிட்டாயே!
உன் மனம் உன்னை உறுத்தவில்லையா?!

இஸ்ரேலே! நீ பகுத்தறிவுள்ள ஜீவனா? அல்லது காட்டுமிராண்டியா?
இஸ்ரேலே! உன் உள்ளம் பித்தா?
அல்லது முளையாத வித்தா?

இஸ்ரேலே! நீ முஸ்லிமின் துன்பத்தில் இன்பமடைந்தாயே!
இது உன் நிரந்தர இன்பமென எண்ணாதே!
முஸ்லிமின் வாழ்விற்கு முற்றுப்புள்ளியென நினைக்காதே!
இவை உன் போலி வேஷம் என்பதை - மறவாதே!

ஏ.ஜே. சகீனா
முதலாம் வருடம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் அரசறிவியல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தின் பார்வையில் கல்வியின் முக்கியத்துவம்

ஏ.எஸ்.பி. ஆயிஷா
இரண்டாம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

அகிலத்தை படைத்து ஆட்சி புரியும் அல்லாஹ் ஒருவனுக்கே புகழ் அனைத்தும். அல்லாஹ் இவ்வுலகில் படைத்த படைப்புகளில் சிறந்த படைப்பாக மனிதர்களை படைத்திருக்கிறான். சிறந்த படைப்பாக மனிதன் படைக்கப்பட்டதன் காரணம் அல்லாஹ் அவனுக்கு வழங்கியுள்ள "அறிவு" என்னும் அற்புதப் பொக்கிஷமாகும். அல்-இல்ம்(அறிவு) என்ற சொல்லும் அதிலிருந்து தோன்றியவழிச் சொற்களும் அல்குர்ஆனில் 780 தடவைகளுக்கும் மேலாக உபயோகிக்கப்பட்டுள்ளன. எமது இறைத்தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட ஆரம்ப குர்ஆன் வாக்கியங்கள் சில மனிதர்களுக்கு வாசித்தல், எழுதுகோல், கற்பித்தல் என்பவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றன.

"(நபியே! யாவையும்) படைத்த உமதிறைவனின் திருநாமத்தால் (எனது கட்டளைகளடங்கிய திருக்குர்ஆனை) நீர் ஓதுவீராக! அவனே மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். (நபியே இன்னும்) நீர் ஓதும்: உமதிறைவன் மாபெரும் கொடையாளி: அவன் தான் எழுதுகோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான். அன்றி (அதன் மூலம்) மனிதன் அறியாதவைகளையெல்லாம் அவனுக்கு கற்றுக்கொடுக்கின்றான்." (அல்குர்ஆன் 96: 1-5)

"ஆதி மனிதன் ஆதம்(அலை) அவர்களை படைத்து அவர்களுக்கு அனைத்து நாமங்களையும் கற்றுக் கொடுத்து பின்னர் அவ்வறிவுடனேயே அவர்களை மலக்குமார்களுக்கு மத்தியில் காட்சிப்படுத்தினான்" என்ற குர்ஆன் வசனத்தின் மூலம் கல்வியின் மகிமையை புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே அறிவு என்பது தனிமனித, சமூக, குடும்ப ஆகிய வாழ்வுகளில் அளப்பரிய இடத்தை தமக்கென ஒதுக்கியிருக்கிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளவேண்டும். அல்குர்ஆனும் சுன்னாவும் எமக்கு, மனிதனின் பலதரப்பட்ட வாழ்வுகளில் "அறிவு" எவ்வளவு முக்கியம் என்ற விடயத்தினை தெளிந்த நீரை விட தெளிவாக சொல்லியிருப்பதை பார்க்க முடிகின்றது.

"அறிவுள்ளமனிதர்களும், அறிவற்றமனிதர்களும் ஒருவருக்கொருவர் சமனானவர்களா? என்றுகேட்பீராக! (அல்குர்ஆன் 39:09)

"அல்லாஹ்வின் அடியார்களில் அறிவைகற்றுத்தேர்ந்தவர்களே அவனை அதிகம் பயப்படுவர்" (அல்குர்ஆன் 35:28)

மேற்கூறிய குர்ஆனிய கருத்துக்களில் முதலாவது கருத்து, சமூகத்தில் அறிவுள்ளவர்கள் மதிக்கத்தக்கவர்கள் அது போன்று அறிவற்று வாழக்கூடாது என்று இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராருக்கும் அதாவது அறிவுள்ளவர்கள், அறிவற்றவர்கள் ஆகியோருக்கிடையில் உள்ள சிறப்பை ஒத்து சொல்வதன் மூலம் தெளிவுபடுத்தியிருப்பதனை பார்க்க முடிகின்றது. அதே போன்று இரண்டாவது வசனம் கூறும் விடயத்தினை பார்கின்ற போது அல்லாஹ்வை அஞ்சி வாழ்வதற்கு அறிவு அவசியம் என்ற விடயம் இவ்வசனத்தில் உணர்த்தப்பட்டிருப்பதை பார்க்க முடிகின்றது.

அறிவையும், அறிவுடையோரையும் புகழ்ந்துரைக்கும் மரபுமொழிகள் பலவும் இஸ்லாமிய மரபுமொழிகளில் உண்டு. இது சம்பந்தமான பல ஹதீஸ்கள் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்படுகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு: -

"அறிவை தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயமானதாகும்"

"அறிஞர்கள் இறைத்துதர்களின் வாரிசுகளாவர்"

"சீனா தேசம் சென்றேனும் அறிவைத் தேடு"

"அறிஞரின் மையும், உயிர்தியாகிகளின் உதிரமும் மீள உயிர்பிக்கப்படும் நாளில் எடை போடப்படும். அப்போது உயிர்தியாகிகளின் உதிரத்துக்கு மேலாகஇஅறிஞர்களின் மை உவக்கப்படும்"

நான்காம் கலீபா அலி(ரழி) அவர்கள் ஷைத்தானுக்கு ஆயிரம் வணக்கசாலிகளை வழிகெடுப்பதை விட ஒரு அறிஞனை வழிகெடுப்பது மிகக் கடினமாகும் என்று கூறியிருக்கிறார்கள். அதுமற்றுமன்றி இஸ்லாமிய வரலாற்றில் அறிவு எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை பின்வரும் நிகழ்வினூடாக நோக்கலாம். ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் அன்றைய கால சர்வதேச மொழியான சுர்யாணி மொழியை கற்பதற்காக ஒரு மாற்று மத அறிஞரிடம் அனுப்பி வைத்தார். அதுபோன்று இரண்டாம் கலீபாஉமர்(ரழி) அவர்கள் அறிவுக்கடல் அப்துல்லாஹ் பின் அப்பாஸ்(ரழி) அவர்களை தனது அரசவை அமைச்சர்களுக்கு மத்தியில் கண்ணியப்படுத்துதல் அதாவது உமர்(ரழி) அவர்களின் பாராளுமன்றத்திற்கு வருகின்ற சந்தர்பத்தில் சிறுவன் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களை அழைத்து வருவார்கள். அவ்வாறு அவரை அழைத்து வருவது ஏனைய உறுப்பினர்களுக்கு விருப்பமற்ற ஒரு விடயமாக இருந்தது. எனவே அமீருல் முஃமினீன் அவர்கள் சிறுவனின் அறிவுப் புலமையை எடுத்துணர்த்த அரசவை தோழர்களிடத்தில் ஒரு கேள்வியினை எழுப்பினார். "சூரதுல் நஸ்ர்" இறங்கியதன் பின்னணி என்னவென்று வினவினார்கள். அப்போது ஒவ்வொருவரும் ஒவ்வோரு காரணத்தை சொல்ல அது அதற்குரிய காரணம் இல்லை என்று மறுத்து அதற்கான காரணத்தை சிறுவனிடம் வினவ அது நபி (ஸல்) அவர்களின் மரணத்தை குறித்து நிற்கின்றது என்றும் அதனால் நபி(ஸல்) அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வை புகழ்ந்து பாவமன்னிப்பு கோரும் படியும் வேண்டப்பட்டிருக்கிறார்கள் என பதிலளித்தார். எனவே இவ் அத்தியாயம் மூலம் சிறியார் என்று நாம் யாரையும் மதியாமல் இருக்க முடியாது. அவர்களிடத்திலுள்ள அறிவு மதிக்கப்பட வேண்டும் என்று எண்ணியே உமர்(ரழி) அவர்கள் அச்சிறுவனை மதித்தார்கள் என்ற விடயத்தினை உணர்த்துகின்றது.

"என் இறைவா! பிரயோசனமற்ற அறிவை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாக!"என்று இறைத்துாதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்ததாக அறிவிக்கப்படுகின்றது. இஸ்லாமியக் கருத்தின் அடிப்படையில், அறிவின் ஒழுங்கான உபயோகத்தை உறுதிப்படுத்துவது இறைவிசுவாசமாகும். அறிவும், இறை விசுவாசமும் புனித அல்குர்ஆனிலே அடுத்தடுத்து வருகின்றன. இறைதுாதர் (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட முதல் வாக்கியத்தில் வாசிப்பு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. ஆனால் சிருஷ்டிகருத்தாவின் பெயருக்கு அடுத்ததாகவே வாசிப்புவருகின்றது. அறிவைப் பெற்றுக் கொள்வது இறைவனின் பெயரால் இருக்க வேண்டுமேயன்றி ஷைத்தானின் பெயரால் அல்ல என்பதே அதன் அர்த்தமாகும். இறை விசுவாசத்துடன் இணைந்த அறிவு நேர் வழிக்கு இட்டுச் செல்லும். அதேவேளை, இறைநிராகரிப்பாளர்களின் கைகளில் அறிவு என்பது, நாசகாரக் கருவி ஒன்றாகும். இறைவிசுவாசமற்ற அறிவாளிகளினால் அறிவு பலவாறாக துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. இறைத்துாதர் (ஸல்) அவர்களால் கூறப்பட்டதாக அறிவிக்கப்படும் ஹதீஸ் ஒன்றாவது:

"நிச்சயமாக தீமைகளில் எல்லாம் மிக மோசமானது துஷ்ட அறிவாளிகளும், நன்மையானவற்றில் எல்லாம் மிகச் சிறந்தது நல்ல அறிவாளிகளாவர்"

இஸ்லாம், எந்த வகையான அறிவை விதந்துரைக்கின்றது எனும் விடயம் இஸ்லாத்தின் ஆரம்பகாலம் முதல் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக இருந்துவருகின்றது. கற்றுக்கொள்ள வேண்டிய குறிப்பிட்டவொரு வகையான அறிவு இருக்கின்றதா? மார்க்கத்துடன் நேரடித் தொடர்புடைய அறிவுத் துறைகள் மட்டுமே போற்றத்தக்கன என பிரபல்யமான அறிஞர்கள் சிலர் கருதினர். சமுதாயத்தின் ஸ்தீரத்தன்மைக்கும் நலனுக்கும் அத்தியவசியமானவை எவை என தீர்மானிப்பது அந்த சமுதாயத்தின் பொறுப்பாகும் என அவர்கள் கருத்திற் கொள்கின்றனர். அறிவைப் பெறுவதில் எவ்விதக்கட்டுப்பாடும் இருந்திருக்குமாயின் அவற்றினை இறைத்துாதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறியிருப்பார்கள் என்பதும் எமது விசுவாசமாகும். அதற்கும் மேலாக குர்ஆனினதும் இஸ்லாமிய மரபுமொழிகளினதும் அடிப்படையில் சிபாரிசு செய்யப்பட்ட அறிவும் கூட பரந்து வியாபித்த விடயங்களை உள்ளடக்கியுள்ளது என எவரும் கருதமுடியும்.

இஸ்லாமியப் போதனைகளையும், நடைமுறையிலுள்ள இஸ்லாமிய நோக்கத்தை யும் ஆய்வு செய்து கற்பதன் மூலம் முஸ்லீம்களால் மனித குலத்தை, உண்மையான நலத்தையும் மகிழ்வையும் நோக்கி வழிநடத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையின் மகத்துவம்

எச்.எம். சுமியா நிசா
இரண்டாம் வருடம்
தமிழ் (சிறப்பு)

நாம் எதிர்நோக்கும் யுகமும் நாம் எதிர்நோக்குகின்ற வரலாற்றுக்காலக்கட்டமும் மிகவும் சோதனை நிறைந்ததாகவே தோன்றுகின்றது. இத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளில் ஒரு முஃமினுடைய வாழ்வில் பொறுமையெனும் பண்பு முக்கியத்துவம் பெறுகின்றது. அல்லாஹ் இப்பூலோகத்தை அவனை ஏற்ற விசுவாசிகளுக்கு ஒரு சிறைக்கூடமாகவும் சோதனைக்களமாகவுமே ஆக்கியுள்ளான். நாம் இங்கு சந்திக்கின்ற அனைத்து வித இன்னல்களுக்கும் மகத்தான கூலியையும், நற்பேற்றையும் இன்னொரு வாழ்விற்காக சித்தப்படுத்தி வைத்துள்ளான். அத்தகைய மறுமைப்பேற்றை அடைய ஓர் இறை விசுவாசியின் வாழ்வில் பொறுமையெனும் பண்பு அதிமுக்கியத்துவம் பெறுகின்றது. பொதுவாக பொறுமை மனித வாழ்வில் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய நற்குணங்களில் மிக முக்கியமான ஒன்றாகும்.

பொறுமை எனும் சொல்லின் பொருளை நோக்குவோமேயானால் ஸபர் எனும் அரபு மொழிச்சொல் பொதுவாக பொறுமை என மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. அல்லாஹ் அல்குர்ஆனில் பொறுமைப்பற்றி பல இடங்களில் பேசியுள்ளான். அவற்றை நோக்குவோமேயானால்,

*"நிச்சயமாக பொறுமையுள்ளவர்கள் தங்கள் கூலியை கணக்கின்றிப்பெறுவார்கள்."*
*(அல்குர்ஆன் 39:10)*

*"இறைநம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையை மேற்கொள்ளுங்கள். எப்பொழுதும் ஒருங்கிணைந்து முனைப்புடன் இருங்கள்." (3:200)*

*மேலும் கூறுகின்றான். சிறிதளவு அச்சத்தாலும் பசியாலும் உடைமைகள், உயிர்கள் விளைப்பொருள்களில் இழப்பை ஏற்படுத்தியும் திண்ணமாக உங்களை நாம் சோதிப்போம். (இந்த சூழ்நிலைகளில்) பொறுமையை மேற்கொள்வோருக்கு (நபியே! நீர் நற்செய்தி சொல்வீராக!(2:155)*

*பொறுமையாளர்களுக்கு அவர்களின் கூலி கணக்கின்றி நிறைவாய் வழங்கப்படும்.(39:10)*

*"யார் பொறுமையை மேற்கொள்கிறார்களோ மேலும் மன்னிக்கவும் செய்கிறார்களோ அவர்களின் எந்த செயல் திண்ணமாக உறுதிமிக்க (வீரச்) செயல்களைச் சேர்ந்ததாகும்."(42:43)*

*பிறிதோரிடத்தில்,*

*"பொறுமை மற்றும் தொழுகையின் மூலம் உதவி தேடுங்கள் திண்ணமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்" (2:153)*

*மேலும் அல்லாஹ் கூறுகின்றான் ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே) நன்மாராயம் கூறுவீராக!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வாழ்க்கை பயணப்பாதையில் மனிதன் பல்வேறுப்பட்ட இன்னல்களையும், இடையூறுகளையும் எதிர்கொள்ள நேர்கிறது. சில வேளைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவனை பிண்ணிப்பிணைந்து அவனது வாழ்க்கைப்பயணத்தில் இறுதிவரை நிழலாய்த்தொடர்ந்து செல்கின்றன. இவ்வாறான நிலையிலிருந்து மனிதன் தன்னை விடுவித்துக்கொள்வது மிகவும் சிரமமாகும்.

வாழ்வில் துன்ப இருள் சூழ்ந்து கொள்ளும் போது பொறுமையுடன் நடந்துக்கொள்வது மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகவும் முக்கிய வழிப்பாட்டு அம்சமாகவும் காணப்படுகின்றது. உலக வாழ்க்கையில் ஏற்படும் விரக்தி ,ஏக்கம், ஏமாற்றம்,திடீர் திருப்பங்கள் போன்றவற்றிலிருந்து ஒரு முஸ்லிம்களுக்கு அரணாக அமைவது பொறுமை மாத்திரமே!

இவ்வாறு பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு கட்டளையிடக்கூடிய குர்ஆன் வசனங்கள் ஏராளமாக உள்ளன.

ஒரு முஸ்லிமின் வாழ்க்கையில் கஷ்டங்களும் கடுமையான இழப்புக்களும் ஏற்படவே செய்யும் ஈமானிய வாழ்வில் துன்பமும் துயரமும் சோதனைகளும் ஏற்படவே செய்யும் என்ற எதிர்பார்ப்புடனே அவன் தனது இஸ்லாமிய தஃவா வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வேண்டும்.

உண்மையில் அவன் துன்பத்தைக் கண்டு அச்சமில்லாமல் இவை சிறிது காலத்திற்கு பின்பு மறைந்து விடும். இது வாழ்வின் துன்பம் நிறைந்த இருளைப் போன்றது. இந்த இரவுக்குப் பின்னால் பிரகாசமான வெளிச்ச விடியல் இருக்கிறது என்று எண்ண வேண்டும். இரவுக்குள் பகலையும் பகலுக்குள் இரவையும் மாற்றி மாற்றி வித்தை பிரிந்து தனது அத்தாட்சிக்களை வெளிப்படுத்திவரும் அல்லாஹ் நிச்சயமாக எமது வாழ்விலும் ஒரு மகத்தான விடியலைக் கொண்டு வருவான் என்ற உறுதியான நம்பிக்கையுடன் பொறுமையாக ஒவ்வொரு முஃமினும் தனது வாழ்வில் ஏற்படும் தடைக்கற்களை எதிர்க்கொள்ள வேண்டும்.

உண்மையில் ஒரு முஃமினின் வாழ்வு சோதனைக்களமே! திருமறை நிழலில் அவனது வாழ்வில் இடர்கள் வரும் என அவன் எதிர்பார்திருந்தால் எந்த கஷ்டமும் அவனை எதுவும் செய்து விடமுடியாது.

ஆனால் அதிகமானவர்களின் பொறுமையற்றப்பண்புதான் பல சந்தர்ப்பங்களில் அவர்களைப்படைத்து போஷிக்கும் இறைவனை மறக்கவும் மறுக்கவும் செய்கிறது.

**பொறுமையை பல வழிகளில் நோக்கலாம். அவையாவன:**

1) அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு தனது வாழ்வை அமைத்துக்கொள்கின்ற போது அவன் தனது கட்டுப்பாட்டு எல்லையை மீறி நடந்திடாது பொறுமையை மேற்கொள்ள வேண்டும். தான் மேற்கொள்கின்ற வணக்க வழிப்பாட்டை பூரணமாக நிறைவேற்றவும் பொறுமை அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) அல்லாஹ் தடுத்த பாவங்களில் தன்னை ஈடுப்படுத்தாமல் இருப்பதற்கு அல்லது அவற்றிலிருந்து தற்காத்து தவிர்த்து கொள்வதற்கும், மனோ இச்சைக்கு கட்டுப்படாதிருப்பதற்கும் பொறுமை அவசியமாகின்றது.

உ+ ம் விபச்சாரம் தடை செய்யப்பட்ட மிகப்பெரிய பாவம் இதனை விட்டு தன்னை தற்காத்து நல்லவனாக வாழ பொறுமை அவசியமாகின்றது.

3) மனித வாழ்வில் ஏற்படுகின்ற தடைக்கற்கள், உயிரிழப்புக்கள், பொருளாதார நஷ்டங்கள், பலாய், முஸீபத்துக்கள் போன்றவற்றை துணிவோடு எதிரக்கொண்டு பொறுமையோடு மனந்தளராதிருத்தல் கட்டாயமாகும்.

அல்லாஹுதஆலா மனிதனை பல வழிகளில் சோதிப்பான். இத்தகைய சோதனைகளின் போது மனந்தளர்ந்து விடாது, உறுதியோடு அவற்றை எதிர்க்கொண்டு இறையன்பை எதிர்ப்பார்க்க வேண்டும். இறைவனின் சோதனை வடிவங்களை இனி சற்று நோக்குவோம்

தனது சிருஷ்டி கர்த்தாவிடமிருந்து பல சோதனைகள், அவமானங்கள், நோய்கள், வறுமை போன்றன இன்னோரன்ன பிரச்சினைகளை மனிதன் தன் வாழ்வில் சந்திக்கின்றான். இச்சிரமங்களை ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு கொடுப்பதில்லை. அல்லாஹ்வே கொடுக்கின்றான். ஒரு மனிதனை செல்வந்தனாகவும், மற்றவனை ஏழ்மை நிலையிலும் தனது அத்தாட்சியை வெளிப்படுத்தி உலகை இயங்கச்செய்ய இவ்வாறு ஆக்கியுள்ளான்.

ஒருவனை பார்வை உள்ளவனாகவும், இன்னொருவனை பார்வையற்றவனாகவும் ஆக்கிவிடுகின்றான். இவனது பிறவிக் குருட்டுத்தனத்திற்கு இன்னொருவர் காரணமாவதில்லை. அல்லாஹ்வே அவனை சோதிக்கச் செய்கிறான். இதே போன்று சிலருக்கு குழந்தைப் பாக்கியத்தை வழங்கி சிலருக்கு தடுத்து விடுகின்றான். சிலருக்கு நல்ல ஆரோக்கியத்தையும், சிலருக்கு நோயையும் கொடுக்கின்றான்.

சிலருக்கு உடல் வலுவைக் கொடுத்து சிலரை வலிமைக்குன்றிய பலவீனர்களாக மாற்றுகிறான். சிலருக்கு பொதுவான உயரமும், சிலருக்கு அளவுக்கு மீறிய உயரம், அளவுக்கு மீறிய பருமன், குட்டை, குள்ளம் இவ்வாறு இறைவன் தனது மகத்தான அத்தாட்சிகளாக ஆக்கியுள்ளான்.

ஒரு குறையும் இல்லாத மனிதனை உலகில் பார்க்கவே முடியாது. இதனை நன்கு புரிந்தால் பொறுமை தானாகவே நம்மிடம் வந்துவிடும். இறைவன் புறத்திலிருந்து சோதனைகளும் துன்பங்களும் வரும் போது அதனை நிதான வழியில் பொறுமையோடு ஏற்று, யார் வாழ்க்கை நடாத்துகின்றார்களோ அவர்களுக்கு நற்செய்தி உண்டு.

எனவே இவ்வுலக வாழ்வானது அற்பமானதாகும். அனைத்தும் என்றோ ஒரு நாள் நிச்சயமாக அழிந்துவிடக்கூடியதாகும். எனவே இவ்வுலக வாழ்வில் இறைவனின் புறத்திலிருந்து சோதனைகளும், துன்பங்களும் வரும் போது அதனை நிதான வழியில் பொறுமையுடன் ஏற்று யார் வாழ்க்கை நடத்துகின்றார்களோ அவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்றவர்களாவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சொழுக்கம் பேணி வாழ்வோம்

ஏ.ஆர்.எவ். சிப்றினா
முதலாம் வருடம்

இன்று இனம், நிறம், மொழி, மதம், தேசம் என்ற பேதங்களுக்கு அப்பால் எல்லா இடங்களிலும் மனிதம் நீர்த்துப் போயுள்ளது.

ஏழு பில்லியன்களையும் தாண்டிய மக்கள் தொகை இந்நாட்களில் இருப்பதாக புள்ளி விபரங்கள் தருகிறார்கள். தோற்றத்தில் வேண்டுமானால் மனிதர்கள் இந்த உயர்ந்த தொகையை சொல்லி பெருமிதப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் மதங்கள் ரணகளப்படுத்தப்பட்ட மனித நேயத்தின் செங்குருதிச் சொட்டுக்களில் இருந்து துளிர்த்துக் கொண்டிருக்கின்றன. மதங்கள் வாழ்ந்தால் மனிதம் மரணித்து விடுமோ என்று நினைக்குமளவு மதத்தின் பெயரில் மனிதர்கள் வதைக்கப்படுகிறார்கள்.

சக மனிதர்களிடம் அன்பு காட்டுவதை மனித நேயம் எனக் கூறலாம். இதில் உயிரிக்கப் பண்பு என்பது மனித நேயத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.
மனிதம் பற்றி அனைத்து மதங்களும் பேசியிருந்தாலும், இஸ்லாம் கொடுத்திருக்கும் முக்கியத்துவம் போன்று எந்தவொன்றும் மனித நேயத்திற்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்பது திண்ணம்.

மனித நேயத்தின் வாசலை "நல்ல நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைப் பேசுங்கள்" என்ற வழிகாட்டலின் ஊடாக இஸ்லாம் திறந்து விடுகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் "(இஸ்லாத்தில்) சகுனம் பார்ப்பதோ, பறவைச் சகுனம் பார்ப்பதோ அனுமதிக்கப்பட்டது கிடையாது. எனினும் எனக்கு ஃபஃல் (நற்குறி) என்ற விடயம் பிடித்தமானது." நபித்தோழர்கள் கேட்டார்கள் அல்லாஹ்வின் தூதரே ஃபஃல்(நற்குறி) என்றால் என்ன? "நல்ல வார்த்தை பேசுவதாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

ஒருவர் ஒரு முக்கியமான விடயமாக பயணம் போகத் தயாராகுகிறார். அந்த விடயம் கைகூடுமா? இல்லையா? என்ற பதட்டம் அவரை ஆக்கிரமிக்கிறது. அவரின் தோளைப் பிடித்து "போய் வா! எல்லாம் நல்ல படியாக நடக்கும்" போன்ற நல்ல வார்த்தைகளை உதிர்ப்பதுதான் ஃபஃல் என்று நபிகளார் கூறிய வார்த்தையின் பொருளாகும்.
வார்த்தையில் கூட பிறரை வதைக்க கூடாது என்பதில் அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கும் மார்க்கம் இஸ்லாம். ஆனால் இன்று இந்த இஸ்லாம் மாற்று மதத்தவர்களுக்கு மத்தியில் பிழையாக சித்தரிக்கப் பட்டுள்ளது.

முஸ்லிம்களில் சிலர் அப்படி நடக்கிறார்கள் என்பதற்காக இஸ்லாம் விமர்சனத்துக் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய மார்க்கம் அல்ல. அது தெளிவான வெள்ளை வெளேரென்ற மார்க்கம். விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது. மனித மனங்களை வென்ற, வென்று கொண்டிருக்கக் கூடிய உயரிய உன்னதமான கோட்பாடுகளைக் கொண்ட மாசு அற்ற கண்ணிய மார்க்கம் என்பதை புரிய வைக்க வேண்டிய தேவை எம் எல்லோருக்கும் உண்டு.

*"அல்லாஹ்வின் படைப்புக்களில் எதையும் பழிக்காதீகள்! மானிடரில் எவரையும் பழிக்காதீர்கள்!*

*குட்டையானவர்களைக் கண்டு குறை கூறும் நோக்கில் ஏளனம் புரியாதீர்கள்!*
*பெண்கள் மீது களங்கம் கற்பிக்கும் பொருட்டு அவதூறு சொல்லாதீர்கள்"*
*அல்குர்ஆனினதும் அண்ணல் நபியினதும் அறக்கட்டளைகள் இவை.*

*அனைத்துப் படைப்புக்களும் அழகாகவே படைக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றைப் பற்றியும் மனிதன் இழிவாகவோ பழித்தோ பேசத் தேவையில்லை. நபி (ஸல்) அவர்கள் இரத்தினச் சுருக்கமாக சொன்னார்கள் "அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசம் கொண்டவர் பேசினால் நல்லதைப் பேசட்டும் இல்லையேல் மௌனமாக இருந்து கொள்ளட்டும்."*

*பரிகாசம் செய்தல், குறை கூறல், பட்டப் பெயர் வைத்து அழைத்தல் மற்றும் புறம் பேசுதல் போன்ற புறம் போக்குத்தனங்களில் இருந்து மனிதர்கள் (முஸ்லிம்கள்) விலகி நடக்க வேண்டும் என்பது இஸ்லாத்தினது கட்டளை மீறுவோர், அநியாயக்காரர்கள், உயிருக்கும் உடைமைக்கும் சேதம் விளைவிப்பது, உரிமைகளை மறுப்பது மட்டுமல்ல அநியாயம், வார்த்தையால் மற்றவனை மட்டுப்படுத்துவதும் அநியாயம்தான் அதுவும் மனிதாபிமானத்திற்கு எதிரானதுதான்.*

*நோயாளிக்கு உடல், பொருளால் உதவி செய்வது ஒரு புறமிருக்க அவர்களை குசலம் விசாரிக்கச் சென்று நாலு வார்த்தைகளை ஆறுதலாகக் கூறி அவர்களுக்காக பிரார்த்திப்பது இஸ்லாம் சகோதரத்துக்கு கடமையாக ஆக்கியுள்ளது.*
*"விசுவாசங் கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்! நேர்மையான கூற்றையே கூறுங்கள்!" (33:70)*

*"எவர் கண்ணியத்தை நாடுகிறாரோ கண்ணியம் யாவும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். தூய வாக்கியங்கள் அவனளவில் மேலோங்கிச் செல்கின்றன. நல்ல செயலும் அதை (அல்லாஹ்வின்பால் உயர்த்துகிறது." (35:10)*

*நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! உங்களை நான் கண்டால் உன் மனம் குளிர்ச்சி அடைகிறது. எனக்கு அனைத்துப் பொருட்களைப் பற்றியும் கூறுங்கள். அதற்கு அவர்கள் "அனைத்தும் நீரிலிருந்து படைக்கப்பட்டுள்ளது." எந்த காரியத்தை நான் செய்தால் சொர்க்கத்திற்கு செல்வேனோ அப்படிப்பட்ட காரியத்தை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு கற்று தாருங்கள். அதற்கு அவர்கள் "ஸலாத்தைப் பரப்பு! நல்ல வார்த்தையே பேசு! உறவுகளை இணைத்து வாழ், மக்கள் உறங்கும் போது இரவில் நின்று வணங்கு சந்நதியுடன் சுவனம் செல்வாய்" என்று கூறினார்கள்.

நல்ல பேச்சுக்கள் சுவனத்தைப் பெற்று தருவது மட்டுமல்ல, கொடிய நரகத்திலிருந்தும் நம்மைக் காப்பாற்றும் என்பது நபிகளாரின் வாக்காகும். நல்ல வார்த்தை பேசுவது மனிதன் மனிதனுக்கு ஔடதம். மனிதனின் மனம் குளிரும்படி நடப்பது ஒரு முஸ்லிமினது கடமை. அந்நக் கடமையை பாழாக்கியவனால் சுவனத்தைப் பெற்றுக் கொள்வது இயலாத காரியம். பேரீத்தம் பழத்தின் ஒரு துண்டைக் கொடுத்தேனும் நரகத்திலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். அதுவும் இல்லையென்றால் இனிய வார்த்தைகளைக் கொண்டாவது காப்பாற்றிக் கொள்ளுங்கள். (நூல் புஹாரி) சுவனத்தை வெகுமதியாகப் பெறக் கூடிய கருமங்களில் ஒன்றாக நல்ல பேச்சு நபிகளாரினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மனித நேயம் தொடர்பான பல்வேறு போதனைகள் இஸ்லாத்தில் கொட்டிக் கிடக்கின்றன. அவை அனைத்தையும் இங்கு குறிப்பிடுவதல்ல நோக்கம். மனிதர்களுடன் பேசும் போது இஸ்லாம் காட்டித்தந்த வழிமுறையில் பிறர் மனம் புண்படாமல் செயற்படுவதை உணர்த்துவது தான் இக்கட்டுரையின் நோக்கம்

ஆல்லாஹ்/த்தஆலா அவனுடைய மார்க்கத்தை தூய வழியில் நின்று வணங்குவதற்கும் மற்றவர்களுக்கும் இது தொடர்பான தெளிவான செய்திகளை சொல்வதற்கும் அருள்புரிவானாக..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் அளித்த இரண்டு அறிவுகள்

எல்.எப். ஸகியா
இரண்டாம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

மண்ணிலுள்ள சிறு துரும்பு முதல் விண்ணிலுள்ள ஆகாயக் கற்கள் வரை சிருஷ்டித்தப் பெருமை படைப்பாளனையே சாரும். படைப்பாளனே இல்லை என்ற உண்மையை ஏற்க மறுக்கும் பல நாத்திகர்களின்[1] மத்தியில் படைப்பினங்களின் படைப்பாளன் ஒருவன் என உரத்துச் சொல்லும் வலிமை, நேர்வழிப் பெற்ற முஸ்லிம்களின் வசமேயுள்ளது. படைப்பாளன் ஒருவன்தான், அவன்தான் படைப்பினங்களின் உரிமையாளன் எனும் மகுடம் தாங்கிய புனித மார்க்கம் இஸ்லாமாகும்.[2] இஸ்லாம், இது வெறுமனே ஒரு மார்க்கமல்ல. மாறாக, அனைத்துலக மக்களுக்கும், அனைத்துத் துறைகளிலும் வழிகாட்டும் ஓர் உன்னத வழிகாட்டி. இஸ்லாமிய மார்க்கத்திற்கு பல அறிஞர்களினால் பல வரைவிலக்கணங்கள் வரையப்பட்டுள்ளன. அதில் தலைமையானது, “இஸ்லாம் என்பது அல்லாஹ்வைத்[3] தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்று சாட்சி கூறுவதும், தொழுகையை நிலைநாட்டுவதும், ஸகாத்தைக்[4] கொடுப்பதும், ரமழானில்[5] நோன்பு நோற்பதும், சக்தியுள்ளவர்கள் ஹஜ்[6] கடமையை நிறைவேற்றுவதாகும்”. “அகிலத்தின் இரட்சகனான அல்லாஹ்விற்கு முற்று முழுதாகக் கட்டுப்பட்டு அவன் முன்னால் சரணடைதல்” என்பதனையும் இஸ்லாம் என வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்கள்.

மேலும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு தன் ரப்பிடமிருந்து இறக்கி வைக்கப்பட்ட அகீதா எனும் நம்பிக்கைகள், அஹ்லாக் எனும் ஒழுக்க மாண்புகள், இபாதத் எனும் வணக்க வழிபாடுகள், முஆமலாத் எனும் தொழில்சார் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள் முதலியவற்றுடன் தொடர்பான சட்டங்கள் மற்றும் அல்குர்ஆன், சுன்னாவில்[7] குறிக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்களின் தொகுப்பே இஸ்லாமாகும். இவ்வாறான பல வரைவிலக்கணங்களின் செயல் வடிவமே இஸ்லாத்தின் முழு முதல் நோக்காகும். நிச்சயமாக அல்லாஹ்வினிடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமேயாகும் என்பதனை அல்லாஹ் பின்வரும் வசனத்தில் உறுதிப்படுத்தியுள்ளான். “நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம்தான்.”[8] இறைவனின் கைவண்ணத்தில் படைக்கப்பட்ட படைப்பினங்களில் உன்னதமான மற்றும் அற்புதமான படைப்பாக அல்லாஹ் மனிதனைப் படைத்துள்ளான். இதனை அவன் திருமறையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

“நிச்சயமாக நாம் மனிதனை மிக்க அழகான வடிவில் படைத்திருக்கின்றோம்.”[9] மேலும் அல்லாஹ், ஒளியினால் படைக்கப்பட்ட வானவர்களை,[10] வெறும் மண்ணினால் படைக்கப்பட்ட மனிதனுக்கு சிரம் பணியும் படி கட்டளையிட்டான்.

இதற்கான காரணம் தான் என்ன???

களிமண்ணும், ஒளியும் ஈடாகுமா???

வானவர்களை விட மனிதர்கள் தரம் உயர்ந்தவர்களா???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு கற்று தாருங்கள். அதற்கு அவர்கள் "ஸலாத்தைப் பரப்பு! நல்ல வார்த்தையே பேசு! உறவுகளை இணைத்து வாழ், மக்கள் உறங்கும் போது இரவில் நின்று வணங்கு சந்நதியுடன் சுவனம் செல்வாய்" என்று கூறினார்கள்.

நல்ல பேச்சுக்கள் சுவனத்தைப் பெற்று தருவது மட்டுமல்ல, கொடிய நரகத்திலிருந்தும் நம்மைக் காப்பாற்றும் என்பது நபிகளாரின் வாக்காகும். நல்ல வார்த்தை பேசுவது மனிதன் மனிதனுக்கு ஔடதம். மனிதனின் மனம் குளிரும்படி நடப்பது ஒரு முஸ்லிமினது கடமை. அந்நக் கடமையை பாழாக்கியவனால் சுவனத்தைப் பெற்றுக் கொள்வது இயலாத காரியம். பேரீத்தம் பழத்தின் ஒரு துண்டைக் கொடுத்தேனும் நரகத்திலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். அதுவும் இல்லையென்றால் இனிய வார்த்தைகளைக் கொண்டாவது காப்பாற்றிக் கொள்ளுங்கள். (நூல் புஹாரி)சுவனத்தை வெகுமதியாகப் பெறக் கூடிய கருமங்களில் ஒன்றாக நல்ல பேச்சு நபிகளாரினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மனித நேயம் தொடர்பான பல்வேறு போதனைகள் இஸ்லாத்தில் கொட்டிக் கிடக்கின்றன. அவை அனைத்தையும் இங்கு குறிப்பிடுவதல்ல நோக்கம். மனிதர்களுடன் பேசும் போது இஸ்லாம் காட்டித்தந்த வழிமுறையில் பிறர் மனம் புன்படாமல் செயற்படுவதை உணர்த்துவது தான் இக்கட்டுரையின் நோக்கம்

ஆல்லாஹ்/த்தஆலா அவனுடைய மார்க்கத்தை தூய வழியில் நின்று வணங்குவதற்கும் மற்றவர்களுக்கும் இது தொடர்பான தெளிவான செய்திகளை சொல்வதற்கும் அருள்புரிவானாக..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் அளித்த இரண்டு அறிவுகள்

எஸ்.எப். ஸகியா
இரண்டாம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

மண்ணிலுள்ள சிறு துரும்பு முதல் விண்ணிலுள்ள ஆகாயக் கற்கள் வரை சிருஷ்டித்தப் பெருமை படைப்பாளனையே சாரும். படைப்பாளனே இல்லை என்ற உண்மையை ஏற்க மறுக்கும் பல நாத்திகர்களின்[1] மத்தியில் படைப்பினங்களின் படைப்பாளன் ஒருவன் என உரத்துச் சொல்லும் வலிமை, நேர்வழிப் பெற்ற முஸ்லிம்களின் வசமேயுள்ளது. படைப்பாளன் ஒருவன்தான், அவன்தான் படைப்பினங்களின் உரிமையாளன் எனும் மகுடம் தாங்கிய புனித மார்க்கம் இஸ்லாமாகும்.[2] இஸ்லாம், இது வெறுமனே ஒரு மார்க்கமல்ல. மாறாக, அனைத்துலக மக்களுக்கும், அனைத்துத் துறைகளிலும் வழிகாட்டும் ஓர் உன்னத வழிகாட்டி. இஸ்லாமிய மார்க்கத்திற்கு பல அறிஞர்களினால் பல வரைவிலக்கணங்கள் வரையப்பட்டுள்ளன. அதில் தலைமையானது, “இஸ்லாம் என்பது அல்லாஹ்வைத்[3] தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்று சாட்சி கூறுவதும், தொழுகையை நிலைநாட்டுவதும், ஸகாத்தைக்[4] கொடுப்பதும், ரமழானில்[5] நோன்பு நோற்பதும், சக்தியுள்ளவர்கள் ஹஜ்[6] கடமையை நிறைவேற்றுவதாகும்”. “அகிலத்தின் இரட்சகனான அல்லாஹ்விற்கு முற்று முழுதாகக் கட்டுப்பட்டு அவன் முன்னால் சரணடைதல்” என்பதனையும் இஸ்லாம் என வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்கள்.

மேலும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு தன் ரப்பிடமிருந்து இறக்கி வைக்கப்பட்ட அகீதா எனும் நம்பிக்கைகள், அஹ்லாக் எனும் ஒழுக்க மாண்புகள், இபாதத் எனும் வணக்க வழிபாடுகள், முஆமலாத் எனும் தொழில்சார் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள் முதலியவற்றுடன் தொடர்பான சட்டங்கள் மற்றும் அல்குர்ஆன், சுன்னாவில்[7] குறிக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்களின் தொகுப்பே இஸ்லாமாகும். இவ்வாறான பல வரைவிலக்கணங்களின் செயல் வடிவமே இஸ்லாத்தின் முழு முதல் நோக்காகும். நிச்சயமாக அல்லாஹ்வினிடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமேயாகும் என்பதனை அல்லாஹ் பின்வரும் வசனத்தில் உறுதிப்படுத்தியுள்ளான். “நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம்தான்.”[8] இறைவனின் கைவண்ணத்தில் படைக்கப்பட்ட படைப்பினங்களில் உன்னதமான மற்றும் அற்புதமான படைப்பாக அல்லாஹ் மனிதனைப் படைத்துள்ளான். இதனை அவன் திருமறையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

“நிச்சயமாக நாம் மனிதனை மிக்க அழகான வடிவில் படைத்திருக்கின்றோம்.”[9] மேலும் அல்லாஹ், ஒளியினால் படைக்கப்பட்ட வானவர்களை,[10] வெறும் மண்ணினால் படைக்கப்பட்ட மனிதனுக்கு சிரம் பணியும் படி கட்டளையிட்டான்.
இதற்கான காரணம் தான் என்ன???
களிமண்ணும், ஒளியும் ஈடாகுமா???
வானவர்களை விட மனிதர்கள் தரம் உயர்ந்தவர்களா???


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலமான இறைவனின் நோக்கம் தான் என்ன???
இவ்வாறான பல வினாக்கணைகள் நம்மைத் தட்டியெழுப்பலாம். காரணமின்றி காரியம் நிகழாது. அதுபோலவே இறைவன் ஆணையிலும் நிச்சயமாக சத்தியம் இருக்கும்.

இவ்வாறு வெறும் களிமண்ணினால் படைக்கப்பட்ட ஆத்மா மேம்படுத்தப் பட்டமைக்கான காரணத்தை பின்வரும் குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

"ஆதமிற்கு பூமியிலுள்ள எல்லாப் பொருட்களின் பெயர்களையும் கற்றுக் கொடுத்து, பின்னர் அவற்றை மலக்குகளின் முன்பாக்கி, "நீங்கள் உண்மையாளர்களாய் இருந்தால், இவற்றின் பெயர்களை எனக்கு அறிவியுங்கள்" எனக் கூறினான். அதற்கு அவர்கள், "நீ மிகத் தூய்மையானவன். நீ எங்களுக்கு அளித்தவற்றைத் தவிர வேறேதும் எங்களுக்குத் தெரியாது. நிச்சயமாக நீயே நன்கறிந்தவனும், ஞானமுடையோனுமாய் இருக்கின்றாய்" எனக் கூறினார்கள். பின்னர் இறைவன், ஆதமே! நீர் அவற்றின் பெயர்களை அவர்களுக்கு அறிவிக்கவும் எனக் கூறினான். அவர் அவர்களுக்கு அவற்றின் பெயர்களை அறிவித்த போது, அவன் (மலக்குகளை நோக்கி) பூமியிலும், வானங்களிலும் மறைந்திருப் பவைகளை நிச்சயமாக நான் நன்கறிபவன், என்று நான் உங்களுக்குக் கூறவில்லையா? ஆகவே, நீங்கள் (ஆதாமைப் பற்றி) வெளியிட்டதையும், மறைத்துக் கொண்டதையும் நிச்சயமாக நான் நன்கறிவேன்" என்றான். பின்னர் நாம் மலக்குகளை நோக்கி, ஆதமிற்கு நீங்கள் பணிந்து, ஸுஜூது[11] செய்யுங்கள் எனக் கூறிய போது அவர்கள் ஸுஜூது செய்தார்கள், இப்லீஸைத்[12] தவிர, அவனோ பெருமைக் கொண்டு விலகி நிராகரிப்பவனாகி விட்டான்."[13]

அறிவு என்ற ஓர் உன்னத பொக்கிஷமே வானவர்களை விட மனிதர்களை தரம் உயர்த்தியது. களிமண்ணுக்கு ஒளியை அடிபணிய வைத்தது. அறிவு எனும் ஓர் ஆற்றல் மனிதனிடம் இல்லையென்றால் அவன் இவ்வுலகில் போற்றப்படமாட்டான், மதிக்கப்படமாட்டான், கன்னியப்படுத்தப்படமாட்டான். மேலும் உயிர் தாங்கிய சடலமாகவும், மனித வடிவில் விலங்காகவுமே செயலாற்றியிருப்பான். இவ்வாறு அகிலத்தின் இரட்சகன் இஸ்லாம் எனும் நித்திய மார்க்கத்தை இவ்வையகத்தில் நிலைநாட்டி, அவனின் படைப்புக்களில் மேன்மையான படைப்பாக மனிதனை சிருஷ்டித்து, மேலும் அவனைக் கன்னியப்படுத்தும் வகையில் அறிவு என்னும் அற்புதத்தையும் வழங்கினான். அறிவு எனும் ஆயுதம் இஸ்லாத்தில் எவ்வாறெல்லாம் கன்னியப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை பின்வரும் குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள் மற்றும் அறிஞர்களின் கூற்றுக்கள் தெளிவுப்படுத்துகின்றன.

**1) அறிவு பற்றிய குர்ஆன் வசனங்கள்:-**

1. "நபியே! படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவனே மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். நீர் ஓதும், உமது இரட்சகன் மாபெரும் கொடையாளி, அவன்தான் எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்".[14]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முதலாக இறங்கிய இவ்வசனங்கள் அறிவைப் பறைசாற்றுவதாகவும், அறிவின் அடிப்படையான வாசிப்பு மற்றும் எழுதுகோலைப் பற்றி குறிப்பிடுவதாகவுமே அமைந்துள்ளது.

2. "நூன்" எழுதுகோலின் மீதும், அதனைக் கொண்டு அவர்கள் எழுதுபவை மீதும் சத்தியமாக"[15]
3. "அல்லாஹ்வை அவனது அடியார்களில் அஞ்சுபவர்கள் அறிஞர்களே"[16]
4. "அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா?"[17]
5. "உங்களில் இறைநம்பிக்கையாளர்களுக்கும், அறிவுடையோருக்கும் பல பதவிகளை அல்லாஹ் வழங்குவான்."[18]
6. (நபியே) நீர் கூறும், "பூமியில் சுற்றித் திரிந்து (ஆரம்பத்தில்) சிருஷ்டிகளை எவ்வாறு படைத்தான் என்பதைப் பாருங்கள்"[19]

**2) அறிவு பற்றிய ஹதீஸ்கள்:-**

1. "அல்லாஹ் ஒருவருக்கு நலவை நாடி விட்டால், மார்க்க விடயத்தில் அவரை அறிஞராக்குவான்."[20]
2. இருவர் விடயத்திலே தவிர பொறாமை கூடாது. (1) அல்லாஹ் செல்வத்தை வழங்கி, அதை உரிய வழியில் செலவு செய்பவர். (2) அல்லாஹ் அறிவு ஞானத்தை வழங்கி, அதன் மூலம் தீர்ப்பளித்து, பிறருக்கும் கற்றுத் தருபவர்."[21]
3. "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ் உம் மூலம் ஒருவனுக்கு நேர்வழி காட்டுவது, சிவப்பு நிற ஒட்டகைகள் உம்மிடம் இருப்பதை விட சிறந்ததாகும்."[22]
4. "கல்வியைத் தேடும் பாதையில் ஒருவர் நடந்தால், அவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தின் பாதையை இலகுவாக்குகின்றான்."[23]
5. "நேர்வழியின் பக்கம் ஒருவர் அழைத்தால், அதைப் பின்பற்றுவோருக்கு கிடைப்பது போன்ற நற்கூலி, அழைத்தவருக்கும் கிடைக்கும். இது, அவர்களின் (பின்பற்றுப - வர்களின்) நற்கூலிகளில் எதையும் குறைத்து விடாது."[24]

**3) அறிவு பற்றிய அறிஞர்களின் கூற்றுக்கள்:-**

1. "அறிவைக் கற்றுக் கொள்ளுங்கள். அதனை அல்லாஹ்விற்காக கற்பது இறையச்சமாகும். அதனைத் தேடுவது இபாதத் ஆகும். அதனை மீட்டுவது தஸ்பீஹ்[25] ஆகும். அதனைப் பற்றி ஆராய்வது ஜிஹாதாகும்.[26] அறியாதவர்களுக்கு அதனைக் கற்பிப்பது ஸதகாவாகும்.[27] அதனை அதற்குரியவர்களுக்கு அளிப்பது நற்கருமமாகும். அறிவு தனிமையின் தோழன், மார்க்கத்தின் வழிகாட்டி இன்ப, துன்பத்தின் போது உதவியாளன், நண்பர்கள் மத்தியில் மந்திரி, நெருக்கமானவர்கள் மத்தியில் நெருங்கியவன், சுவனப் பாதையின் ஒளிவிளக்கு."[28]
2. "அறிஞர்கள் இல்லாதிருந்தால் மனிதர்கள் மிருகங்களைப் போன்றிருப்பார்கள்."[29]
3. "கல்வி கற்பது ஒரு வணக்கமாகும்."[30]
4. "சிறிது நேரம் கல்வி கற்பது ஓர் இரவு நின்று வணங்குவதை விட மேலானது."[31]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. "கடமையான பர்ளை[32] அடுத்து அறிவைத் தேடுவதை விடச் சிறந்ததோர் அமல் இல்லை."[33]
6. "நபிலான[34] தொழுகையை விட அறிவைப் பெறுவது சிறந்ததாகும்."[35]
7. "அறிஞனின் மையையும், ஷஹீதுகளின்[36] இரத்தத்தையும் நிறுத்தால், அறிஞர்களின் மையே கனமாக இருக்கும்."[37]

இவ்வாறான பல கன்னியப்படுத்தலுக்கு அப்பால் இறைவன் இவ் அறிவினை இரண்டு கூறாக வேறுபடுத்தினான். ஆனால் இவ்விரண்டு கூறுகளும் ஒன்றை ஒன்று தழுவாமல் முழுமைப் பெறாது என்பதே உண்மையாகும். அல்லாஹ் இவ் அறிவினை எழுதுகோலின் அறிவு மற்றும் அவனது வழிகாட்டலின் அறிவு என வகைப்படுத்தினான். மேலும், உலகை வசப்படுத்தும் விந்தையை எழுதுகோலின் அறிவில் புதைத்துள்ள அதே சமயம் மனிதனை வசப்படுத்தும் விந்தையை அவனின் வழிகாட்டலின் அறிவில் புதைத்து வைத்துள்ளான் மாட்சிமை மிக்க மாண்பாளன்.

காலைப்பொழுதின் சுகந்தங்களும், மாலைப்பொழுதின் ரம்மியங்களும், இராப்பொழுதின் இரகசியங்களும் அறியும் அற்புத ஆற்றல் இன்றைய அறிவியலின் அறிவுகளாம். ஆண்டாண்டு காலமாய் ஆராயப்பட்ட விடயங்களின் ஆதாரங்கள் இன்று கைக்கூடியுள்ளதாம். உலகம் வியக்கும் விசித்திர படைப்புக்கள் இன்றைய அறிஞர்களின் கண்டுபிடிப்புக்களாம். இன்றைய உலகு, வாயைப் பிளந்து வியக்கும் மாயா ஜாலங்களின் மறுவுருவாம்.

என்றெல்லாம் புகழ் பாடுவது ஏன்?
இவையெல்லாம் எவ்வாறு நிகழ்ந்தது?
இவை சாத்தியம்தானா?
இல்லை, இவற்றை எம்மால் நம்பத்தான் முடியுமா?

மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட எழுதுகோலின் உருவான இத்தனையும் உண்மைதான், நாம் அதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இறைவன் அளித்த எழுதுகோலின் அறிவானது இன்றைய உலகில் வியாபித்திருப்பதை பற்றிக் கூறினால் முடிவில்லாமல் கூறிக் கொண்டே போகலாம். உள்ளங்கைக்குள்ளே உலகை வைத்திருக்கும் அறிவு என்றால் எதற்குத்தான் ஈடாக்கலாம்??? மேற்கத்தேய சர்வாதிகார நாடுகள் அதிகாரத்தை நழுவவிடாமல் பற்றிக்கொண்டிருப்பதற்கான முக்கிய ஆயுதம் இவ் எழுதுகோலின் அறிவுதான். அறிவியல் வரலாற்றில் எழுதுகோலின் அறிவினால் சாதனைகள் படைத்துச் சென்ற நாகரீகங்கள், மேற்கத்தேயர்கள் மட்டுமல்ல மாறாக இஸ்லாமிய நாகரீகமும் மாபெரும் கால் தடங்களை பதித்துத்தான் உள்ளன. ஆனால் அநியாயமான அதிகாரங்களினால் அவை சிதைக்கப்பட்டுள்ளன. எமது இஸ்லாமிய நாகரீகமானது எட்டு நூற்றாண்டுகளை விட அதிகமான காலம் இவ்வுலகிற்கு அறிவைக் கொடுத்து வந்தது, அறிவினால் ஒளியைப் பரப்பியது, ஐரோப்பாவானது இந்நாகரீகத்தின் அறிஞர்களான இப்னு சீனா, கஸ்ஸாலி, இப்னு ருஸ்த் போன்றோரிடமிருந்து ஆய்வுமுறைகளைக் கற்றுக் கொண்டது. அறிஞர் குவாரிஸ்மி, கணிதவியலின் தந்தையாவார் என்று நம் நாகரீகத்தின் எழுதுகோல் அறிவியலின் சாகசங்களை பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். உலகத்தை வசப்படுத்தக் கூடிய இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுகோலின் அறிவு இவ்வாறிருக்க இறைவனின் வழிகாட்டலின் அறிவும் இங்கே செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது.

இறைவனின் வழிகாட்டலின் அறிவை மிக இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியாது. காரணம் அவ் அறிவினை இறைவன் தான் நாடியவர்களுக்கே வழங்குகின்றான். அவன் நாடியவர்களின் கூட்டத்தில் நாமிருந்தால்தான் அவ் அறிவு எமக்குக் கிட்டும். மார்க்கத்தில் அதாவது இறைவனின் வழிகாட்டலில் ஆழமான அறிவைப் பெறுவது வெறும் மேலோட்டமான அறிவைப் பெறுவதை விட்டும் வித்தியாசப்படுகிறது. ஆழமான அறிவு என்பது ஒன்றின் இரகசியங்களையும் அதன் இலக்குகளையும் அறிந்து கொள்வதாகும். ஷரீஆவின்[38] அடிப்படை இலக்குகள், விளைவுகள் பற்றிய அறிவு, ஒப்பீட்டாய்வு, முதன்மைப்படுத்தல் பற்றிய அறிவு, நாகரீகம் பற்றிய ஆழமான புரிதல், சமூக மாற்றம் பற்றிய பார்வை, நடைமுறை அறிவு போன்ற இவ் அறிவுகள் அனைத்தும் மார்க்கத்தை ஆழமாக அறியும் அறிவின் வட்டத்தினுள் வருகின்றன. இறைவனின் வழிகாட்டலின் அறிவானது, அழைத்தால் மார்க்கத்துடன் அழைப்பதற்கு, பத்வா[39] கொடுத்தால் தெளிவுடன் பத்வா கொடுப்பதற்கு, கற்பித்தால் விளக்கத்துடன் கற்பிப்பதற்கு, தீர்ப்புக் கூறினால் அறிவோடு தீர்ப்புக் கூறுவதற்கு உறுதுணையாகவிருக்கும். இறைவனின் வழிகாட்டலின் அறிவு எவ்வளவு முக்கியம் என்பதை மார்க்கத் தீர்ப்புக்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களிலே தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். எது குறித்துப் பேசுகின்றோமோ அது பற்றிய முழுமையான ஞானம் தேவை. முடிந்தவரை அறிவைத் திரட்ட வேண்டும். சிலரிடம் தவறைச் சுட்டிக் காட்டும் போது, "இப்படி ஒரு ஹதீஸ் இருக்கா?" என்று கேட்பார்கள் அல்லது "இந்த ஹதீஸ் எனக்கு இப்போதுதான் தெரிய வருகிறது" என்பார்கள். என்ன காரணம்??? புதிதாகத் தெரிய வருவதற்கு இது ஒன்றும் வஹி[40] இறங்கும் காலமில்லையே. அவ்வாறெனின் ஏற்கனவே இருக்கும் விடயங்களில் முழுக் கவனம் செலுத்தவில்லை என்றுதானே பொருள்.

எது தொடர்பாக தீர்ப்புக் கொடுக்க நாடுகிறோமோ அது தொடர்பாகவுள்ள அத்தனை குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் எல்லா நூல்களிலிருந்தும் திரட்டி ஆராய்ந்த பின்னர் ஞானத்துடன் தீர்ப்பு வழங்க வேண்டும். ஆகவே, மார்க்கத் தீர்ப்பு வழங்கும் மார்க்க அறிஞர்கள் கண்டிப்பாக ஞானம் உடையவராக இருக்கவேண்டும். இல்லையெனில், ஹலாலை[41] ஹராமாக்குவார்[42], வாஜிபை[43] விட்டுவிட்டு பித்அத்துக்கு[44] முக்கியம் தருவார், முஸ்லிம்களை காபிர்[45] ஆக்குவார். ஷரீஆவின் பெயரில் அறிவை முடக்குபவர்களது நிலைப்பாட்டை நாம் மறுக்கும் அதே சமயம் அறிவின் பெயரால் ஷரீஆவை திரிபுக்குள்ளாக்க நினைப்போர் அல்லது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஷரீஆவை விட அறிவுக்கு முன்னுரிமை கொடுப்போரது நிலைப்பாட்டையும் மறுக்க வேண்டும். இவ்வாறு இறைவன் அறிவைக் கூறுபடுத்தினாலும் இஸ்லாமிய நோக்கில் இவற்றிற்கிடையில் முரண்பாடு இல்லை. காரணம் அறிவு ஒன்றுதான் மார்க்கத்தை ஆழமாகக் கற்றுக் கொள்வதற்கும், உலக நடைமுறையை சரியாகப் புரிந்து கொள்வதற்குமான ஏக வழிமுறையாகும். இஸ்லாத்தின் சிந்தனை எப்பொழுதுமே நடுநிலையானதாகும். அதனாலே அல்லாஹ் அல்குர்ஆனில் முஸ்லிம்களை நடுநிலைச் சமுதாயமாக வர்ணித்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"(விசுவாசிகளே!) அவ்வாறே, (ஏற்றத்தாழ்வற்ற) நடுநிலையான சமுதாயத்தினராகவும், நாம் உங்களை ஆக்கினோம்.[46]"

நடுநிலை இஸ்லாமிய சிந்தனையின் இலக்குகளில் ஒன்று இன்றைய உலகு வேண்டி நிற்கும் தன்னிகரற்ற அறிவியல் நாகரீகமொன்றை கட்டியெழுப்புவதாகும். அது இறைவனுடன் நெருங்கிய தொடர்புடைய, மனிதர்களின் தொடர்பையும் கொண்டுள்ள, அறிவையும், ஈமானையும்[47] இணைக்கின்ற, ஆன்மீகத்தையும், சடவாதத்தையும் கலக்கின்ற, புத்திக்கும், உணர்விற்கும் மத்தியில் சமநிலை காண்கின்ற, வானத்தையும், பூமியையும் இணைக்கின்ற, பலம் சத்தியமாவதை விட சத்தியம் பலமாவதை வலியுறுத்துகின்ற நாகரீகமாக உருப்பெற வேண்டும். எழுதுகோலின் முனைக் கொண்டு இறைவனின் வழிகாட்டலை வியாபிக்கச் செய்வோம்.

சாகா வரம்
இறந்த பின்னும் உயிர் வாழ
நீ இன்றிய இவ்வையகம் உன் பெயர் மொழிய
பேனா முனையால் தீட்டப்பட வேண்டும்
தீனின் வண்ணங்கள்.

**உசாத்துணைகள் :-**

1. http://www.sheikhagar.org/articles/education/101-education2
2. https://dhlcm.lk/zee1.html
3. இஸ்லாத்தில் முன்னுரிமைகள் (மௌலவி நூஹ் மஹ்ழரி)
4. நடுநிலை இஸ்லாமிய சிந்தனை (அரபு மொழி மூலம் : - கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி, தமிழ் மொழி மூலம் : - அஷ்ஷைய்க் றிஷாட் நஜிமுதீன் (நளீமி))
5. இறைதூதரும் கல்வியும் (கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி)
6. கல்வி கற்றல், கற்பித்தல் (அஷ்ஷைய்க் எ.சி. அகார் முஹம்மத்)
7. ரியாளுஸ்ஸாலிஹீன் (அபூ ஜக்கரிய்யா யஹ்யா பின் ஷரப் அந்நவவீ (ரஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்பு

1. கடவுள் இல்லை என வாதிடுபவன்
2. கற்றுக்கொள்ளுதல், ஒப்படைத்தல், கீழ்படிதல்
3. கடவுள், இறைவன்
4. வளர்த்தல், தாய்மைப்படுத்தல்
5. இஸ்லாமிய நாட்காட்டியின் படி ஒன்பதாவது மாதம். இஸ்லாமிர்களின் புனித மிகு மாதம்.
6. மக்கா நோக்கிய இஸ்லாமியர்களின் புனிதப் பயணம்
7. இறைநாதர் முஹம்மது(ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம்
8. ஆல இம்ரான் : 19
9. அத்தீன் : 4
10. இறைவனால் படைக்கப்பட்ட இறைவனின் சேவகர்கள்.
11. சிரம் பணிதல், நெற்றியை தரையில் வைத்தல்
12. ஷைத்தான்களின் தலைவன், இறைமறுப்பாளன்
13. அல்-பகரா: 31 - 34
14. அல் - அலக்: 1 - 5
15. அல்கலம் : 1
16. அல்பாதிர் : 28
17. அல் ஸீமர் : 09
18. அல்முஜாதலா : 11
19. அல் அன்கபூத் : 20
20. புகாரி - 71& முஸ்லிம் - 1037
21. புகாரி - 73 & முஸ்லிம் - 816
22. புகாரி - 421 & முஸ்லிம் - 2406
23. முஸ்லிம் - 2699
24. துதி செய்தல், புகழ்பாடுதல்
25. விடாமுயற்சி, அயராத போராட்டம், கடின உழைப்பு
26. தர்மம்
27. முஆத் இப்னு ஜபல் (ரழி)
28. இமாம் அல் ஹஸனுல் பஸரி(ஹை)
29. இப்னு மஸ்ஊத் (ரழி)
30. அபூதர்தா (ரழி)
31. கட்டாயக் கடமைகள்
32. இமாம் அஸ்ஸௌரி (ரஹ்)
33. மேலதிகமானவை, உபரியானவை
34. இமாம் அஷ்ஷாபி (ரஹ்)
35. இஸ்லாத்தின் சட்டங்கள்
36. மார்க்கத் தீர்ப்பு
37. இறைவனால் இறைதூதருக்கு வழங்கப்பட்ட இறைசெய்தி
38. ஆகுமாக்கப்பட்டவை
39. தடுக்கப்பட்டவைகள்
40. கடமையாக்கப்பட்டவைகள்
41. அல்லாஹ்வும், அவனது தூதரும் காட்டித்தராதவைகளை மார்க்கம் எனச் சொல்வது
42. இறைநிராகரிப்பாளன்
43. அல்-பகரா: 143
44. நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லீம்களின் கல்வி நிலை

எச். பெனாசிர்
இரண்டாம் வருடம்
பொருளியல்

இலங்கையரைப் பொருத்தவரை கல்வி என்பது இன்றைய கால கட்டத்தில் முக்கியமான ஒன்றாக நோக்கப்படுகின்றது. ஆரம்ப நிலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை ஏழைகள் முதல் பணக்காரர் வரைசாதி, மதம், இனம், மொழி போன்ற வேறுபாடுகள் எதுவுமின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி திட்டங்கள் பின்பற்றப்படுகின்றது. சிறந்த கல்வி மறையின் பயனால் தான் 2017ம் ஆண்டில் இலங்கையின் கல்வி அறிவு வீதம் 93% மாக காணப்பட்டது. இத்தரவின் படி நாட்டின் கல்வித்துறை யானது முன்னேற்ற மடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஒரு சமூகத்தின் எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் முக்கிய பங்கு வகிப்பது அச்சமூகத்தின் கல்விப்பலமும், பொருளாதாரப் பலமுமேயாகும். இலங்கைப் பொருத்தவரை இலங்கை முஸ்லிம்கள் கல்வியில் பின்தங்கியவர்கள் என்ற எண்ணமே சமூகத்திடம் மேலோங்கியுள்ளது. ஆனால் கடந்த காலங்கலோடு ஒப்பிட்டுமிடத்து முஸ்லிம்கள் எல்லாத் துறையிலும் முன்னெற்றம் கண்டு வருகின்றனர் என்பதே உண்மையாகும் எனினும், ஏனைய சமூகத்தவர்களுடன் ஒப்பிடும் போது பின்தங்கியதாகவே காணப்படுகிறது. இதற்கு காரணம் ஆரம்பத்தில் எமது கல்வி நிலையில் இருந்த பின்னடைவேயாகும்.

ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் கல்வித்துறையில் முன்னேற்றம் கொண்ட சமூகமாகவே காணப்பட்டார்கள். மருத்துவத் துறை, வர்த்தகத் துறை, வானவியல், புவியியல் ஆகிய துறைகள் பற்றிய அறிவியலும் அனுபவமும் கொண்டவர்களாகவே அக்கால முஸ்லிம் சமூகம் காணப்பட்டது. இந்த நிலையில் 433 ஆண்டுகள் இலங்கைத் திருநாடானது அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்தவேளை மாற்றமடைந்தது.

பிரித்தானியர் ஆட்சியின் கீழ் கல்விக்கூடங்கள் கிறிஸ்தவ மயமாக்கப்பட்டன. இச்சூழ்நிலையில் சிங்கள, தமிழ் மக்கள் இவ்வாங்கிலக் கல்வியினை பெற்றனர். ஆனால் முஸ்லிம்கள் தமது மார்க்கத்தை பாதுகாக்கும் பொருட்டு மதமாற்ற நோக்கம் கொண்ட இக்கல்விமுறையை புறக்கணித்தனர். இதுவே அவர்களின் வர்த்தம், கல்வி என்பவற்றில் சரிவை ஏற்படுத்தியது.

மேலும் 1889 வரை முஸ்லிம்களுக்கு என்று ஒரு தனியான பிரதிநிதி கூட இருக்கவில்லை. சேர் பொன்னம்பலம் அவர்களே "முஸ்லீம்களும் தமிழர்களே அவர்களுக்கு என்று தனியான பிரதிநிதித்துவம் தேவையில்லை" என்று கூறியதுடன் அவரே தமிழ் மற்றும் முஸ்லிம்களின் பிரதிநிதியாக இருந்தார். முஸ்லிம்களுக்கு என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியான பிரதிநிதித்துவம் இன்மையால் முஸ்லிம்கள் எல்லாத்துறையிலும் பின்னடைவை சந்தித்தனர்.

இவ்வாறு முஸ்லிம் சமூகம் பின்னடைவில் இருந்த சூழ்நிலையில் தான் மார்க்கத்துடன் கூடிய நவீன கல்வியை கற்பதன் அவசியத்தை. உணர்த்தும் வண்ணம் அறிஞர் சித்திலெப்பை, ஒராமிபாஷா ஆகியோர் முஸ்லீம் கல்விச்சங்கம் என்ற பெயரில் கல்வி மேம்பாட்டிற்கான விழிப்புணர்வுகளை சமூகத்திற்கு வழங்கினார்.

மேலும் பிரித்தானிய கல்வி முறையை புறக்கணித்தமையால் முஸ்லிம்கள் ஆங்கில மொழித் தேர்ச்சியற்றவர்களாக இருந்தனர் இந்நிலையை மாற்ற அறிஞர் சித்திலெப்பை அவர்களால் 1882 இல் உருவாக்கப்பட்ட முஸ்லிம் நேசன் பத்திரிக்கை உதவியது இப்பத்திரிகை தமிழ்,சிங்கள,ஆங்கில,அரபு மொழி போன்ற நான்கு மொழிகளையும் கற்பதற்கான தளத்தை வழங்கியது.

இலங்கையின் முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கான அடையாளமாக M.C.அப்துல் றஹ்மான் வாப்புச்சு மரைக்கார் அவர்கள் 1889 இல் ஒக்டோபர் மாதம் 29ம் திகதி நியமிக்கப்பட்டார். இவர் அறிஞர் சித்திலெப்பை, ஒராமி பாஷா ஆகியோருடன் இணைந்து நாட்டின் பல பாகங்களிலும் ஸாஹிராக் கல்லூாரிகளை நிறுவியதுடன் அவர்களது கல்வி தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கினார்.

இதன் விளைவாகவே 1884 இல் இஸ்லாமிய மார்க்க கல்வியுடன் மேல் நாட்டு கல்வியையும் கற்பிக்கும் நோக்கில் "அல்மதரஸதுல் கைரியதுல் இஸ்லாமஸய்யுர்" எனும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதுவே பிற்காலத்தில் "ஹமிதிய்யா" ஆங்கில பாடசாலை என பெயர் மாற்றம் பெற்றது.

இங்கு நாம் கவனிக்கையில் முதலில் தமிழ் பாடசாலையானது 1814 இல் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம்களினால் 1884 இலேயே முதல் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. எனின் முஸ்லிம் சமூகமானது ஏனைய சமூகத்தவரை விட 70 வருடங்கள் கல்வியில் பின் தங்கியவர்களாக இருந்துள்ளோம்.

1930 களில் கொண்டுவரப்பட்ட அரசியல் திட்டங்கள் இலங்கையின் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இம்மாற்றம் முஸ்லிம்களின் கல்வி நடவடிக்கையில் நேரடியாக தாக்கம் செலுத்தியது. மேலும் 1970களில் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் கல்வி அமைச்சராக இருந்த வேளை அரச பாடசாலைகளில் இருந்த ஆசிரியர் மற்றும் வளப்பற்றாக்குறைகளை தீர்த்தார். அத்தோடு 1973ல் நளீம் ஹாஜியாரால் பேருவளையில் ஸ்தாபிக்கப்பட்ட ஜாமிஆ நளிமீயா கலாபீடம் மூலம் இலங்கை முஸ்லிம்கள் மார்க்கக் கல்வியுடன் கூடிய நவீன கல்வியையும் பெற்று வந்தனர்.

ஆரம்பத்தில் ஆங்கில மொழிக் கல்வியில் பின்தங்கியிருந்த முஸ்லிம் சமூகமானது பின்னர் தமது பிள்ளைகளை ஆங்கில மொழி மூலப்பாடசாலைகளில் சேர்ப்பதில் ஆர்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினர். இது ஆங்கில மொழி மூலமான கற்றலை வளர்ச்சியடையச் செய்தது. 1977களின் பின்னர் தோற்றம் பெற்ற சர்வதேச ஆங்கில மொழி மூலமான தனியார் கல்வி நிலைகளில் உயர்வர்க்க முஸ்லீம் மாணவர்கள் அதிகளவில் சேர்க்கப்பட்டனர்.

இவ்வாறு முஸ்லிம்களின் கல்வி நிலையானது படிப்படியாக முன்னேற்றமடைந்து வந்தது. 1990களில் அரசாங்கத்தினால் உதவி பெற்ற ஆரம்ப பாடசாலைகளில் புள்ளி விபரத்தினை நோக்கின்,

பௌத்த பாடசாலை 142
மாணவர் தொகை 8700
இந்து பாடசாலை 45
மாணவர் தொகை 6560
முஸ்லீம் பாடசாலைகள் - 04
மாணவர் தொகை 362 ஆக காணப்பட்டது.

**இன்றைய நிலை**

ஆரம்பத்தில் முஸ்லிம்களின் கல்வி நிலை பின்னடைவாக இருந்த போதும் ஆரம்பத்தில் இருந்த மந்த நிலை தற்போது இல்லை. 2017 தகவலின் படி இலங்கையில் உள்ள மொத்த பாடசாலைகளிக் எண்ணிக்கை 10194 ஆகும். இதில் சிங்களப் பாடசாலைகளின் 6966 ஆகவும் தமிழ் பாடசாலைகள் 2302 ஆகவும் முஸ்லீம் பாடசாலைகள் 920 ஆகவும் காணப்படுகின்றன. இவ்வெண்ணிக்கையின் விகிதாசரம் முறையே 68.33%, 22.56%, 9.08% ஆகும்.

2012ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் படி முஸ்லிம்களின் எண்ணிக்கை 9.07% ஆகும். நாம் கவனிக்கையில் எமது சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்றவாறு பாடசாலைகளை நாம் கொண்டுள்ளோம்.

இன்றைய எமது பல்கலைக்கழக நுழைவினை பார்ப்போமாயின் 2013/2014 கல்வி ஆண்டில் 7.95% மான முஸ்லீம்கள் பல்கலைக்கழக தெரிவினை பெற்றுள்ளனர். இது 2014/2015 கல்வி ஆண்டில் 8.07% ஆகவுள்ள 2015/2016 இல் 9.63% ஆகவும் உயர்வடைந்து செல்கின்றது.

இப்பல்கலைக்கழக தெரிவில் 70% மான மாணவர்கள் கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கே தெரிவாகின்றனர். மருத்தவத்துறையில் பல்கலைக்கழக நுழைவு குறைவாக இருப்பினும் அண்மைக்காலங்களில் சற்று உயர்வடைந்தே வருகின்றது. 2013/2014 இல் மருத்துவத் துறையில் எமது பல்கலைக்கழக அனுமதி 6.4% மாகவும் 2014/2015 இல் 7.3% மாகவும் காணப்படுகிறது.

இந்தரவின் படி முஸ்லிம்கள் கல்வித்துறையில் முன்னேற்றமடைந்து வருவதை அறியமுடிகிறது. இருப்பினும் இம்முன்னேற்றத்திற்கு தடையாக சில அம்சங்கள் காணப்படுகின்றன. இவற்றை களைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. மாணவர்களின் கல்வி இடைநிறுத்தம்**

எமது சமூகத்தின் மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தி விட்டு வெளிநாடு நோக்கி பயணமாவதால் ஆண்களின் கல்வி நிலை மந்த நிலையில் உள்ளது. பொதுவாக குடும்பங்களில் நிலவும் பொருளாதார சூழ்நிலைகளை கருதி அதிகமானவர் கல்வியை இடைநிறுத்துகின்றனர்.

இது தொடர்பாக பெற்றோர்கள், ஆசிரியர்கள் கூடிய கவனத்தை எடுக்க வேண்டும். மேலும் மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தி விட்டு வெளிநாடுகளுக்கு செல்வதை தடுத்து கல்வியை முழுமையாக பூரணப்படுத்தி விட்டு உயர் கல்விக்காகவும், உயர்வேலை வாய்ப்புக்களுக்காகவும் வெளிநாடு நோக்கி செல்வது சிறந்தது ஆகும்.

**2. சமூகத்தில் உள்ள படித்த கல்வியாளர்களின் மனநிலை**

சமுதாயத்தில் படித்து உயர் நிலையில் உள்ள சொற்பமான சிலர் சரியான மார்க்க அறிவின்மையாலும் சமூக வளர்ச்சியில் அக்கறை காட்டாமலும் சுயநலமாக இருக்கின்றனர். மேலும் சமூகப்பணியில் உள்ளவர்களும் அவர்களுக்குள் உள்ள போட்டி, பொறாமை, புகழ், பெருமையின் காரணமாக பிளவுபட்டுள்ளனர்.

நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள் எமது சமூகம் பற்றியும் நாம் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக மாறினால் தான் எமது சமூகம் கல்வியில் முன்னேற்றமடையும்.

**3. பகுதி நேர வகுப்புக்கள்**

பகுதி நேர வகுப்புக்களினால் மாணவர்கள் கல்வி செயற்பாடுகளில் சிறப்பாக இயங்கினாலும் சில ஆசிரியர்கள் பாடசாலையை விட பகுதி நேர வகுப்புக்களில் அதிக அக்கரை செலுத்துவதால் ஏழை மாணவர்கள் பாதிப்படைகின்றனர். எனவே ஆசிரியர்கள் இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்து பாடசாலைகளிலும் சிறப்பான கற்பித்தலை மேற்கொள்ள முனைய வேண்டும்.

**4. மாணவர்கள் கல்வி செயற்பாடுகளில் கூடிய அக்கறை காட்டாமை**

- அதாவது மாணவர் கல்வி தொடர்பான இதர செயற்பாடுகளான போட்டி நிகழ்வுகள், விளையாட்டு செயற்பாடுகளில் போதிய கவனம் செலுத்துவது குறைவு. இன்று பல்கலைக்கழகங்களில் இடம் பெறும் போட்டி நிகழ்ச்சிகளில் முஸ்லிம்களின் பங்குபற்றல் என்பது ஏனைய சமூகத்தவரை விட குறைவாகவே உள்ளது. திறமைகள் இருந்தும் அதை வெளிப்படுத்துவதற்கான ஆர்வம் எம்மிடத்தில் குறைவாகவே உள்ளது. இவ் மன நிலையை தவிர்த்து போட்டி நிகழ்வுகளில் எமது திறமைகளை வெளிப்படுத்த நாம் எத்தனிக்க வேண்டும்.

**5. வாசிப்பின் மீதான ஆர்வமின்மை**

இன்று நாம் சமூக வலைத்தளங்களில் காட்டுகின்ற ஆர்வத்தை விட நூல்களின் மீதுள்ள ஈடுபாடு என்பது குறைவாகவே உள்ளது. புதிய தகவல்களையோ அறிவு சார்ந்த தகவல்களையோ அறிவதைத்தவிர்த்து எமது அதிகமான நேரத்தை வீணான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளிலேயே கழிக்கின்றோம். மேலும் முஸ்லீம்கள் வாழும் பிரதேசங்களில் நூலகங்கள் இருப்பினும் அங்கு போதியளவான நூல்கள் இல்லாதிருப்பதுடன் மாணவர்களின் வரவும் மிக அரிதானதாகவே இருக்கின்றது.

வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும் ஒரு செயற்பாடாகும் எனவே மாணவ சமுதாயம் வீணான செயல்களைத் தவிர்த்து தங்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் நூலகங்களின் வளப்பற்றாக் குறையை அரசியல் பிரமுகர்களும், சமூக தொண்டர்களும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

**6. எதிர் மறையான சிந்தனைப் போக்கு**

எம்மிடத்தில் உள்ள எதிர்மறை சிந்தனைகள் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளன நாம் கல்வி நிலையில் பின்தங்கியவர்கள் என்ற எண்ணம் எம்மிடத்தில் வலுவாக இருப்பதுடன் பின்தங்கியவர்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றோமே தவிர அதற்கான தீர்வுகளைக்காண முனைவது குறைவு. எனவே இச்சிந்தனையை தவிர்த்து எம்மால் முன்னேற்றமடைய முடியும் என்ற எண்ணத்தோடு செயற்பட தொடங்குவோம்.

மேலும் அனைத்து முஸ்லிம்களும் உயர் கல்வியைப்பெற முயற்சிப்பதுடன் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைகளில் பங்கு பற்றவேண்டும் அத்தோடு பெண் கல்விக்கும் கிராமியபுற மாணவர்களின் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்க அப்பிரதேச சமூகவியளார்கள் முன்வர வேண்டும். திறமையுள்ள ஏழை மாணவர்களைக் கண்டறிந்து அவர்களின் கல்வி நடவடிக்கைக்கான பண உதவிகளை சமூகத்திலுள்ள வசதி படைத்தோர் செய்வதுடன் படித்த கல்வியாளர்கள் தமது சுயநலத்தை கைவிட்டு விட்டு குழுக்களாக இணைந்து தங்களின் பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் கல்வியை உயர்த்தும் நோக்கில் இலவசமான கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

மேலும் மாணவர் சமுதாயமும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த முயற்சிப்பதுடன் தனித்துவத்தினை பேணி மார்க்கத்துடனான கல்வியை பெற முயற்சிக்க வேண்டும் கல்வி அறிவு குறைந்த மாணவர்களுக்கு ஏனைய துறைசார் பயிற்சிகளை வழங்கி அவர்களையும் சமூகத்தில் முன்னேற்ற வழிசெய்ய வேண்டும்.

எனவே ஒரு சமூகத்தில் கல்வி அச்சமூகத்தின் முதுகெழும்பாகும். என்பதால் அதைக் காத்து, வளர்த்தெடுக்க வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும்.

"கல்வியை பெறுவது முஸ்லிமான ஆண்கள் மீதும், பெண்கள் மீதும் கடமையாகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்.

அஸ்ரா
நான்காம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

பாரம்பரிய இஸ்லாமிய கற்றல் நிறுவனங்கள் (மத்ரஸாக்கள், மக்தப், தாருல் உலூம்) என்பன முஸ்லிம்களின் உயர்மட்ட அறிவிற்கு வித்திட்டன. இவை "பிரித்தானிய கலைக்களஞ்சியத்தில்" சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளன. மத்ரஸாக்கள் பொதுவாக மதம்சார் விஞ்ஞானம் மற்றும் ஏனைய அறிவுத் துறைகளுக்கான போதனைகளை வழங்கிவந்தன. சிறந்த அறிவு வளர்ச்சிக்காக இந் நிறுவனங்களின் பங்களிப்புக்கள் அளப்பரியன.

முஸ்லிம் அறிஞர்கள் ஞாயிற்றுப் பாதையின் கோணத்தைக் கணித்தனர். புவியின் அளவை அளவிட்டனர். அவர்கள் சிகிச்சைக்காக உணவு மற்றும் மூலிகைப் பாவனைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்தினர். உட்புற, வெளிப்புறத் தொகுதியொன்றுடனான வைத்தியசாலைகளைத் தாபித்தனர். குறிப்பிட்ட நோய்களுக்கான காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றின் சரியான அறிகுறிகளையும் அடையாளம் கண்டுகொள்வதை விருத்தி செய்தனர். உடல் நலம் தொடர்பான நவீன கருதுகோள்களை முன்வைத்தனர். புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சத்திர சிகிச்சை உபகரணங்களுடன் சத்திரசிகிச்சையில் மயக்கமருந்துப் பாவனையை உருவாக்கி உடற்கூற்றியலில் அறுவைச்சிகிச்சை விஞ்ஞான முறையை அறிமுகப்படுத்தினர்.

முஸ்லிம்கள் குதிரைகள் மற்றும் கால்நடைகளின் விஞ்ஞான முறையிலான இனப்பெருக்கத்தினை முன்னெடுத்தனர். புதியவகைப் பூக்கள் மற்றும் பழங்களை உற்பத்தி செய்வதற்கு புதிய ஒட்டு முறைகளைக் கண்டறிந்தனர். நீர்ப்பாசனம், பசளை மற்றும் சாகுபடி என்பவற்றை அறிமுகப்படுத்தியதோடு விஞ்ஞான முறையிலான கடற்பயணத்தையும் மேம்படுத்தினர். இரசாயனவியலில் முஸ்லிம் அறிஞர்கள் பொட்டாசியம், அற்ககோல், அலுமினியம் நைத்திரிக் அமிலம் மற்றும் பாதரசம், குளோரைட் போன்ற பதார்த்தங்களைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டனர்.

மேலும் துணிவகைகள், மட்பாண்டங்கள் மற்றும் உலோகங்கள் சார்ந்த துறைகளை விருத்தி செய்தனர். விஞ்ஞான மேம்பாட்டிற்காக அமெரிக்க கல்விக்கேற்ப அமெரிக்க சங்கத்தினால் 2007 பெப்ரவரி 2ம் திகதி வெளியிடப்பட்ட நாளேட்டில் மத்திய காலப்பகுதியில் இஸ்லாமிய உலகில் மேற்பரப்பு தளங்களில் வரையப்பட்டிருந்த அலங்காரங்கள் அதை மேற்கொண்டவர்களின் கணிதக் கருத்தியல்களின் தெளிவினை வெளிப்படுத்தி நின்றன. அவை 500 ஆண்டுகளாக மேற்குலகினால் அறியப்படாமலேயே இருந்தன. பல மத்தியகால இஸ்லாமிய கட்டிடச்சுவர்கள் கோடுகளால் இணைக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டன. அவற்றில் நன்கு அலங்கரிக்கப்பட்ட வடிவமைப்பு சார்ந்த நட்சத்திரம் மற்றும் பல்கோணி அல்லது "கிரிஹ்" போன்ற பல்வேறு முறைகள் கையாளப்பட்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளிலேயே கழிக்கின்றோம். மேலும் முஸ்லீம்கள் வாழும் பிரதேசங்களில் நூலகங்கள் இருப்பினும் அங்கு போதியளவான நூல்கள் இல்லாதிருப்பதுடன் மாணவர்களின் வரவும் மிக அரிதானதாகவே இருக்கின்றது.

வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும் ஒரு செயற்பாடாகும் எனவே மாணவ சமுதாயம் வீணான செயல்களைத் தவிர்த்து தங்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் நூலகங்களின் வளப்பற்றாக் குறையை அரசியல் பிரமுகர்களும், சமூக தொண்டர்களும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

**6. எதிர் மறையான சிந்தனைப் போக்கு**

எம்மிடத்தில் உள்ள எதிர்மறை சிந்தனைகள் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளன நாம் கல்வி நிலையில் பின்தங்கியவர்கள் என்ற எண்ணம் எம்மிடத்தில் வலுவாக இருப்பதுடன் பின்தங்கியவர்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றோமே தவிர அதற்கான தீர்வுகளைக்காண முனைவது குறைவு. எனவே இச்சிந்தனையை தவிர்த்து எம்மால் முன்னேற்றமடைய முடியும் என்ற எண்ணத்தோடு செயற்பட தொடங்குவோம்.

மேலும் அனைத்து முஸ்லிம்களும் உயர் கல்வியைப்பெற முயற்சிப்பதுடன் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைகளில் பங்கு பற்றவேண்டும் அத்தோடு பெண் கல்விக்கும் கிராமியபுற மாணவர்களின் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்க அப்பிரதேச சமூகவியளார்கள் முன்வர வேண்டும். திறமையுள்ள ஏழை மாணவர்களைக் கண்டறிந்து அவர்களின் கல்வி நடவடிக்கைக்கான பண உதவிகளை சமூகத்திலுள்ள வசதி படைத்தோர் செய்வதுடன் படித்த கல்வியாளர்கள் தமது சுயநலத்தை கைவிட்டு விட்டு குழுக்களாக இணைந்து தங்களின் பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் கல்வியை உயர்த்தும் நோக்கில் இலவசமான கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

மேலும் மாணவர் சமுதாயமும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த முயற்சிப்பதுடன் தனித்துவத்தினை பேணி மார்க்கத்துடனான கல்வியை பெற முயற்சிக்க வேண்டும் கல்வி அறிவு குறைந்த மாணவர்களுக்கு ஏனைய துறைசார் பயிற்சிகளை வழங்கி அவர்களையும் சமூகத்தில் முன்னேற்ற வழிசெய்ய வேண்டும்.

எனவே ஒரு சமூகத்தில் கல்வி அச்சமூகத்தின் முதுகெழும்பாகும். என்பதால் அதைக் காத்து, வளர்த்தெடுக்க வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும்.

"கல்வியை பெறுவது முஸ்லிமான ஆண்கள் மீதும், பெண்கள் மீதும் கடமையாகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்.

அஸ்ரா
நான்காம் வருடம்
மொழிபெயர்ப்பு கற்கைகள்

பாரம்பரிய இஸ்லாமிய கற்றல் நிறுவனங்கள் (மத்ரஸாக்கள், மக்தப், தாருல் உலூம்) என்பன முஸ்லிம்களின் உயர்மட்ட அறிவிற்கு வித்திட்டன. இவை "பிரித்தானிய கலைக்களஞ்சியத்தில்" சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளன. மத்ரஸாக்கள் பொதுவாக மதம்சார் விஞ்ஞானம் மற்றும் ஏனைய அறிவுத் துறைகளுக்கான போதனைகளை வழங்கிவந்தன. சிறந்த அறிவு வளர்ச்சிக்காக இந் நிறுவனங்களின் பங்களிப்புக்கள் அளப்பரியன.

முஸ்லிம் அறிஞர்கள் ஞாயிற்றுப் பாதையின் கோணத்தைக் கணித்தனர். புவியின் அளவை அளவிட்டனர். அவர்கள் சிகிச்சைக்காக உணவு மற்றும் மூலிகைப் பாவனைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்தினர். உட்புற, வெளிப்புறத் தொகுதியொன்றுடனான வைத்தியசாலைகளைத் தாபித்தனர். குறிப்பிட்ட நோய்களுக்கான காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றின் சரியான அறிகுறிகளையும் அடையாளம் கண்டுகொள்வதை விருத்தி செய்தனர். உடல் நலம் தொடர்பான நவீன கருதுகோள்களை முன்வைத்தனர். புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சத்திர சிகிச்சை உபகரணங்களுடன் சத்திரசிகிச்சையில் மயக்கமருந்துப் பாவனையை உருவாக்கி உடற்கூற்றியலில் அறுவைச்சிகிச்சை விஞ்ஞான முறையை அறிமுகப்படுத்தினர்.

முஸ்லிம்கள் குதிரைகள் மற்றும் கால்நடைகளின் விஞ்ஞான முறையிலான இனப்பெருக்கத்தினை முன்னெடுத்தனர். புதியவகைப் பூக்கள் மற்றும் பழங்களை உற்பத்தி செய்வதற்கு புதிய ஒட்டு முறைகளைக் கண்டறிந்தனர். நீர்ப்பாசனம், பசளை மற்றும் சாகுபடி என்பவற்றை அறிமுகப்படுத்தியதோடு விஞ்ஞான முறையிலான கடற்பயணத்தையும் மேம்படுத்தினர். இரசாயனவியலில் முஸ்லிம் அறிஞர்கள் பொட்டாசியம், அற்ககோல், அலுமினியம் நைத்திரிக் அமிலம் மற்றும் பாதரசம், குளோரைட் போன்ற பதார்த்தங்களைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டனர்.

மேலும் துணிவகைகள், மட்பாண்டங்கள் மற்றும் உலோகங்கள் சார்ந்த துறைகளை விருத்தி செய்தனர். விஞ்ஞான மேம்பாட்டிற்காக அமெரிக்க கல்விக்கேற்ப அமெரிக்க சங்கத்தினால் 2007 பெப்ரவரி 2ம் திகதி வெளியிடப்பட்ட நாளேட்டில் மத்திய காலப்பகுதியில் இஸ்லாமிய உலகில் மேற்பரப்பு தளங்களில் வரையப்பட்டிருந்த அலங்காரங்கள் அதை மேற்கொண்டவர்களின் கணிதக் கருத்தியல்களின் தெளிவினை வெளிப்படுத்தி நின்றன. அவை 500 ஆண்டுகளாக மேற்குலகினால் அறியப்படாமலேயே இருந்தன. பல மத்தியகால இஸ்லாமிய கட்டிடச்சுவர்கள் கோடுகளால் இணைக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டன. அவற்றில் நன்கு அலங்கரிக்கப்பட்ட வடிவமைப்பு சார்ந்த நட்சத்திரம் மற்றும் பல்கோணி அல்லது "கிரிஹ்" போன்ற பல்வேறு முறைகள் கையாளப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிரிஹ்" மேற்தள முறையானது முன்னைய அணுகுமுறைகளை விட மிகவும் வினைத்திறனும் நுட்பமும் வாய்ந்தது. மேலும் இம்முறை இஸ்லாமிய கணிதவியல் மற்றும் அலங்கார வடிவிற்கும் மிகவும் துணைபுரிந்தது.

விஞ்ஞானம், இறையியல் துறைகளில் முஸ்லிம் அறிஞர்கள் வகித்த பங்கினை நோக்குகையில், புகழ் பெற்ற விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டின் கூறியதுபோல் "மதம் இல்லாத விஞ்ஞானம் முடமாகும் விஞ்ஞானம் இல்லாத மதம் குருடாகும்". தத்துவவியலாளர் பிரான்ஸிஸ் பேகன் குறிப்பிடுகையில் "விஞ்ஞானம் பற்றிய சொற்ப அறிவு உங்களை ஒரு நாத்திகராக்குகிறது. ஆனால் விஞ்ஞானம் பற்றிய ஆழமான அறிவு கடவுள் நம்பிக்கையினை ஏற்படுத்துகிறது."

மத்திய காலப்பகுதியில் வாழ்ந்த அதிகமான முஸ்லிம் விஞ்ஞானிகள் மற்றும் அறிஞர்கள் இஸ்லாம், இறையியல் துறைகளில் முக்கிய இடம் வகித்ததாக விமர்சனப் பகுப்பாய்வு ஒன்று குறிப்பிடுகின்றது. முன்னைய முஸ்லிம் விஞ்ஞான ஆய்வுகள் பௌதீக மற்றும் ஆன்மீக விடயங்களுக்கு இடைப்பட்ட உள்ளாந்த தொடர்பினை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவை பிரபஞ்ச இயற்கையை ஆய்விடுவதற்கு வேண்டிய அவதானிப்பு, சிந்திப்பு சார்ந்த செயன்முறை ஒன்றினால் வெளிப்பட்டவை.

**முஸ்லிம் விஞ்ஞானிகளில் அல்குர்ஆனின் செல்வாக்கு**

உலக முஸ்லிம் விஞ்ஞானிகள் அல்குர்ஆன் வசனங்களின் மூலம் உந்தப்பட்டனர். "நிச்சயமாக வானங்களையும், பூமியையும் (அல்லாஹ்) படைத்திருப்பதிலும் இரவும் பகலும் மாறி மாறி வந்து கொண்டிருப்பதிலும், மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும் வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமி இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும், அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவவிட்டிருப்பதிலும் காற்றினை மாறி மாறி வீசச் செய்வதிலும், வானத்திற்கும் பூமிக்கும் இடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும் சிந்தித்துணரும் மக்களுக்கு (அல்லாஹ்வினுடைய வல்லமையையும் கருணையையும் எடுத்துக்காட்டும்) சான்றுகள் உள்ளன. (02:164) நிச்சயமாக இரவும் பகலும் ஒன்றன்பின் ஒன்றாக மாறி வருவதிலும், வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ் படைத்துள்ள அனைத்திலும் பயபக்தியுள்ள மக்களுக்கு நிரம்ப அத்தாட்சிகள் இருக்கின்றன."(10:16)

மேலும் பல விடயங்கள் கண்டுபிடிப்பதற்கு இருக்கின்றன என்பதை அல்குர்ஆன் அவர்களுக்கு உணர்த்தியது. அவர்கள் சூரிய மற்றும் சந்திர சுற்றுவட்டப் பாதை பற்றிய துல்லியமான தகவல்களை கொண்டிருக்கவில்லை ஆயினும் அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளது போல் இரவு பகல் மாறி மாறி வருவதிலும், சூரிய சந்திரனின் தெளிவான நகர்வுகளிலும் அர்த்தமுள்ள ஏதோ ஒன்று பொதிந்திருப்பதை அறிந்தனர்.

**புகழ்வாய்ந்த முஸ்லிம் விஞ்ஞானிகள் மற்றும் அறிஞர்கள்**

பிரசித்தி பெற்ற இறையியற் கோட்பாட்டாளர்கள், தத்துவவியலாளர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள் பலரை பாரம்பரிய கற்றல் தொடர்பான இஸ்லாமிய நிறுவனங்கள் பலவும் உருவாக்கின. அவர்களில் சிலர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**இரசாயணவியல்**

ஜாபிர் இப்னு ஹய்யான் அபூ முஸா (713-815) இரசாயணவியலின் தந்தை என அறிப்படுகிறார். அவர் மருத்துவம் உட்பட பல்வேறு உப துறைகளையும் கற்றிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாஸியர்கள் உமையாக்களைத் தோற்கடித்த பிற்பாடு ஜாபிர் அப்பாஸிய கலீபா ஹாருன் அல் ரஸீதின் அரசவை வைத்தியராக செயற்பட்டார்.

**கணிதம், வானியல், புவியியல்**

அல்குவாரிஸ்மி (770-840கி.பி) என்பவர் கணிதம் (Mathematics) அல்கோரிதம் (Algorithm) எண்கணிதம் (Arithmetic) திரிகோண கணிதம் (Trigonometry) வானியல் (Astronomy) மற்றும் புவியியல் (Geography) போன்ற துறைகளில் ஓர் ஆய்வாளராக காணப்பட்டார். இவர் வானியல் அட்டவணைகளைத் தொகுத்ததுடன் இந்திய எண்களையும் அறிமுகம் செய்தார். (அவை அராபிய எண்களாயின.) மேலும் முன்னர் அறியப்பட்டிருந்த திரிகோண அட்டவணைகளையும் முறைப்படுத்தினார். மற்றும் ஏனைய அறிஞர்களின் பங்களிப்புடன் புவியியல் சொற்களஞ்சியம் ஒன்றையும் தயாரித்தார்.

**பௌதிகவியல் ,தத்துவவியல், மருத்துவம்.**

இப்னு இஷாக் அல்-கிந்தி (அல்கின்டுஸ்) (800-873கி.பி) தத்துவவியல், பௌதிகவியல், மருத்துவம், கணிதம் மற்றும் உலோகக்கலை என்பவற்றில் புலமையாளராக காணப்பட்டார். அலி இப்னு ரப்பான் அல் -தபரி (838-870கி.பி) மருத்துவம், கணிதம் எழுத்தாணிக்கலை மற்றும் இலக்கியம் என்பவற்றில் நிபுணத்துவம் பெற்றிருந்தார்.

அல் -ராஸி (ராஸஸ்) (864- 930கி.பி) இவர் மருத்துவம், கண் மருத்துவம், சின்னமுத்து, இரசாயணவியல் மற்றும் வானியல் துறைகளில் விஞ்ஞானியாகவும் மருத்துவராகவும் விளங்கினார்.அல்-ராஸி எழுதிய 220 ற்கும் அதிகமான நூல்களில் 140 நூல்கள் மருத்துவம் சார்ந்தவை. அவற்றுள் கிதாப் அல் மன்சூரி ,அல்ஹாவி என்பன முக்கியமானவை.

இது 12ம் நூற்றாண்டில் லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. பல்வேறு சிறியளவிலான மருத்துவ நூல்களிடையே சின்னம்மை, பெரியம்மை பற்றி விளக்கும் கிதாப் அல் ஹாவி விரிவான நூலொன்றாகக் காணப்படுகிறது. இந்நூல் இலத்தீன், பைசாந்திய, கிரேக்க மொழி மற்றும் பல்வேறு புதிய மொழிகளுக்கு பெயர்க்கப்பட்டது. அல் பாரபி (Al pharabius) (870-950கி.பி) இவர் சமூகவியல், தர்க்கவியல், தத்துவவியல், அரசியல், விஞ்ஞானம் மற்றும் இசை என்பவற்றில் வினைத்திறன் மிக்கவராக காணப்பட்டார். அபூ அல்காஸிம் அல் ஸஹ்ராவி (Albucasis 936-1013கி.பி) அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவம் என்பவற்றில் புலமை வாய்ந்தவராகக் காணப்பட்டதோடு நவீன அறுவைச்சிகிச்சை முறையின் தந்தை எனவும் அறியப்படுகிறார்.

இப்னு அல் ஹைதம் (Alhazen) (965-1040கி.பி) என்பவர் பார்வை தொடர்பான கோட்பாட்டின் மலர்ச்சியில் தலையாய பங்கு வகித்த கணிதவியலாளரும் வைத்தியரும் ஆவார்.இவர் ஒளித்தெறிப்புஇ விலகல்,தொலைகாட்டியுடனான பார்வை,வானவில், தொடர்பாகவும் இன்னும் பல கோட்பாடுகளையும் முன்வைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபூ றைஹான் அல்பிரூனி(973-1048)இவர் பேர்சிய விஞ்ஞானியொருவராவார். இவரின் பிரசித்திபெற்ற நூல்களாக "அதர் அல் பாகியா(புராதன தேசங்களின் காலக்கிரமம்), அத்தப்ஹீம்(வானியலின் மூலக்கூறுகள்) அல் கானுன் அல்-மசூதி போன்ற இன்னும் பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் இப்னு ருஷ்த், அல் ஸூஹ்ர், அல் ஸர்காலி, இப்னு ஸினா, இப்னு ஹஸ்ம் போன்றோரின் பங்களிப்புக்களும் இத்துறையில் அளப்பரியன.

முக்கியமான முஸ்லிம் பெண்கள் மற்றும் முஸ்லிம் புலமையாளர்களின் பங்களிப்புக்கள். இஸ்லாம் அறிவைப் பெற்றுக்கொள்வதில் ஆண்களை மற்றும் வரையறுத்து நிற்கவில்லை. பெணகளும் அறிவினைப் பெற வேண்டப்பபட்டாரகள். இதனால் பல பெண்கள் பல்வேறுபட்ட துறைகளுக்கு தங்களது பங்களிப்புக்களை நல்கினர். முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் அன்பு மனைவி ஆயிஷா(ரலி) அவர்கள் இஸ்லாத்தில் மிகச்சிறந்த பெண்ணாக கருதப்பட்டார்கள்.

ஒரு பெண்ணானவள் புலமையாளரொருவராகவும் உத்வேகம் மற்றும் தலைமைத்துவத்துடன் ஆண், பெண் மீது தாக்கம் செலுத்தக்கூடியவளாகவும் இருக்க முடியும் என்பதை ஆயிஷா(ரலி) அவர்களின் வாழ்க்கை நிரூபணமாக்குகின்றது. அவ்வாறு தாக்கம் செலுத்தக் கூடிய அதே பெண் முழுமையான பெண்ணியல்வாதியாகவும் மகிழ்ச்சியையும் மனஆறுதலையும் தனது கணவனுக்கு வழங்கக்கூடியவளாகவும் இருக்க முடியும் எனும் உண்மையையும் அவரது வாழ்க்கை சான்றுப்படுத்துகின்றது.

ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் பல்வேறு துறைகளில் ஆர்வம் காட்டினார்கள் என்பதற்கு சுகைனா, உம்மு அத்னான் அல் அதவிய்யாஹ், ஸூபைதா, அர்வா பின்த் அஹ்மத் போன்றோரைக் குறிப்பிடலாம்.

ஆகவே இன்று மேற்குலகு பல கண்டுபிடிப்புக்களில் முன்னணியில் திகழ்ந்தாலும் அக்கண்டுபிடிப்புக்கள் பலவற்றிற்கு முஸ்லிம்களே அடித்தளமிட்டார்கள் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

இக்கண்டுபிடிப்புக்களை முஸ்லிம்கள் வெற்றிகொள்ளக் காரணமாய் இருந்த அல்குர்ஆன் மற்றும் ஸூன்னா என்பன இன்னும் மேற்குலகினால் ஆய்விற்குட்படுத்தப்பட்டே வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PROPHET ADAM [a]

Allah made the mountains and the seas
He made all the animals
He made the heavens and the stars
He made the sun and the moon
And he made the angels
The angels were like Allah's servants
And did everything he ordered
Then Allah decided to make a man
He called this first man as Adam
He taught him many things
So that Adam had more knowledge
Than the angels
There was a one jinn
Called Iblis and he thought
He was better than Adam
So Allah would not let him
Stay with the other angels
He was to be called
'Shaytan', the devil
Shaytan blamed Adam for what had
Happened to him and was very angry
Allah let Adam live in
A beautiful place because he was good
The place was called paradise
It was a very nice place but
Adam was a little lonely
On his own all of the time
Allah decided to help Adam
He made Hawa to be Adam's wife
They were happy and liked living
in paradiseThere was,however,
One thing they were not allowed to do
There was a special tree and
Allah had told them they must not
Eat any fruit from that tree
At first Adam and Hawa were
Very good and kept away from the tree
Shaytan decided to do
Something very naughty
He told them they were silly
To keep away from the tree
He said nothing would happen
If they ate its fruit
He said the fruit was delicious
And they should try it
After a while they began to
Listen to shaytan and thought
They would have just a little
Taste of the fruit,just to see
What it was like
Shaytan was very happy because
He had made them disobey Allah
As soon as they had eaten the fruit,
Adam and Hawa realized that they
had been
Very naughty and they felt guilty
For what they had done
Allah forgave,but he wouldn't let them
Stay in paradise anymore
So he sent them to live on earth.

**M.R.M. Wafa Raheem**
*First Year*
*Translation Studies.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழியாம் தமிழ்மொழி

எம். எப். பர்ஹா
புவியியல் மற்றும் தமிழ்
இரண்டாம் வருடம்

அன்று தொட்டு இன்று வரை மொழியானது எமக்கு இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது. மொழி என்பது தகவல் பரிமாற்றத்துக்கான ஒரு கருவியாகும். அத்தகு தகவல்கள் ஒரு குறிப்பிட்ட மொழியின் மூலம் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டு அம் மொழி முக்கியத்துவம் பெறுகின்றது.

மனிதனை ஏனைய விலங்குகளில் இருந்து வேறுபடுத்தி, அவனுக்கென்று தனித்துவத்தைக் கொடுப்பது அவனது பேச்சாற்றலாகும். இந்தப் பேச்சுத்திறமை என்பது இன்று, நேற்று வந்த ஆற்றல் அல்ல. பல நீண்ட பரிணாம வளர்ச்சிப் பின்னணி இந்த பேச்சாற்றலோடு தொடர்புடைய மொழிப்பிரயோகத்திற்கு உண்டு.

இவ்வாறு ஒவ்வொறு மொழியும் பல வளர்ச்சிகளைக் கடந்து இன்று தனக்கென்று தான் பயன்படுத்தப்படும் பிரயோக நிலைகளில் தனது தனித்துவத்தை பேணுகின்றன. ஒவ்வொரு மொழியும், ஒவ்வொறு சமூகத்துக்குமான கலாசார விழுமியக் கோட்பாடுகளின் கட்டமைப்பிலான ஒழுங்கமைப்புக்கள் மொழி என்னும் அடித்தளத்தின் கீழ் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. சமூகக்கட்டமைப்புக்களின் நிலையான உறுதித் தன்மைக்கு இந்த மொழியின் நிலைக்குலையாத இருப்பும் அவசியமாகின்றது. அத்தகைய மொழி அறிவிற்கு தாய்மொழி என்னும் ஒருவருடைய உணர்வு மொழிகள் இன்றியமையாததாகின்றன. மனித குலத்தின் உயிர் மூச்சாக விளங்கும் மொழியானது மனிதனின் சிந்தனை ஆற்றலுக்கும் அவசியமாகின்றது. சிந்திக்கும் ஆற்றலுக்கு மொழி எவ்வளவு அவசியமோ அதேபோன்று சிந்தித்து தன் கருத்தை மற்றையோருக்கு தெளிவுபடுத்தவும் மொழியே இன்றியமையாததாகும்.

இதனால் தான் உலகளாவிய ரீதியில் எமது தாய்மொழியான தமிழ் மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்த, அதைப் பேண வேண்டிய கடப்பாட்டை வலியுறுத்தி உணர்த்தும் சிறப்பு தினமாக ஆண்டு தோறும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி சர்வதேச தாய்மொழித் தினம் நினைவு கூறப்படுகிறது. நாகரீகமடைந்த சமூகத்தை அளவிடும் அளவுகோலாக அச்சமூகத்தின் சிந்தனையை வளப்படுத்திய, வளப்படுத்தி வரும் முக்கிய அம்சமாக தாய்மொழி விளங்குகின்றது் பெருமையும் சேர்க்கின்றது. இந் நிலையிலேயே நாம் யார்? நமது சிறப்பு என்ன? என்பவற்றை எடை போட நமது தாய்மொழியான தமிழ்மொழி வகுத்துள்ளது. அது எமது இனத்தின் பெருமைக்கும் சான்று பகர்கிறது.

உலக மொழிகளிலும் இன்று வழக்கிலுள்ள மொழிகளிலும் மூத்த மொழியான தமிழ்மொழி நமது தாய்மொழி என்பதில் எமக்கு பெருமையுண்டு. "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடி" என்று கூறப்படுவதன் மூலம் எமது தாய்மொழியின் தொன்மை புலப்படுத்தப்படுகின்றது. மேலும் இம் மொழியானது தமிழ் பேசும் மக்களுக்கு மாத்திரம் தாய்மொழியாக காணப்படவில்லை. மாறாக திராவிட மொழிக் குடும்பத்தின் தாய்மொழியாகவும் காணப்படுகிறது என மேலைத்தேயத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த ஆய்வாளர் காட்வெல் பாதிரியார் குறிப்பிடுகிறார். அவரின் ஆய்வின் படி கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு மொழிகள் தமிழ்மொழியை தாய்மொழியாக கொண்டவை என்று குறிப்பிட்டுள்ளார். எது எவ்வாறிருப்பினும் நமது தாய்மொழி தமிழ் என்று பெருமைப்பட பல்வேறு ஆதாரங்கள் உண்டு. உலகின் பழம்பெரும் மூத்த மொழிகள் ஆறு. அதில் தமிழ்மொழியும் ஒன்று. அவற்றில் சமஸ்கிருதம், இலத்தீன் என்பன வழக்கிழந்த நிலையில் தளர்வின்றி தலை நிமிர்ந்து நிற்கும் மொழியாக தமிழ்மொழி விளங்குகின்றது.

மொழியியல் ஆய்வாளரும் பேராசிரியருமான அலெக்ஸ் கோலியர் என்பவர் உலக மூத்த மொழி தமிழ் என்பதை தனது ஆய்வில் கண்டுபிடித்துள்ளார். 1995ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட இவ்வாய்வின் படி வழக்கிலுள்ள மொழிகளில் அதிக சொற்களைக் கொண்ட மொழியாக முதலிடம் வகிப்பது தமிழ்மொழியாகும். நம் தமிழ்மொழி சர்வதேச மொழி எனப்படும். ஆங்கிலத்தை இரண்டாம் இடத்தில் நிறுத்தியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். மேலும் அறமொழி, அறிவியல் மொழி, பக்தி மொழி, செம் மொழி, செந்தமிழ் மொழி, முத்தமிழ் மொழி என்று எத்தனையோ அடைமொழிகளால் அதன் சிறப்பை, பண்டைய இருப்பை, வரலாற்றை பெருமையை உலகளாவிய ரீதியில் இன்றும் வீசிக் கொண்டிருக்கிறது எம் தாய்மொழி என்றால் அது மிகையாகாது.

தமிழ் இலக்கிய வரலாற்று காலங்களில் கூட மனதிற்கு இதமளிக்கக்கூடிய நுண்மையான அறிவுத்திறனை வளர்க்கக்கூடிய, உயர்ந்த உண்மைகளை விளங்கக்கூடிய இலக்கியங்கள் இம்மொழியில் தோற்றம் பெற்றுள்ளதை இன்று எம்மால் அவதாணிக்க முடிகிறது. இதற்கு உதாரணமாக திருக்குறளை எடுத்துக் கொண்டால் அதன் சிறப்பு எவ்வாறு காணப்படுகிறது? கால சூழ்நிலைகளுக்கேற்ற விடயங்கள் எம் முன்னோர்களும், நாமும், எமது எதிர்கால சந்ததியினரும் தேடிப்பார்க்கும் அளவிற்கு கருத்தாழம் மிக்க விடயங்களைக் கொண்டுள்ளது. இது முதன் முதலில் தமிழ்மொழியிலேயே படைக்கப் - பட்டது என்பது நாம் அறிந்த உண்மையே காலப்போக்கில் இத்திருக்குறளானது பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு தலை சிறந்த சிறப்பு வாய்ந்த இலக்கியங்கள் பல முதன் முதலாக தமிழ்மொழியிலே தான் படைக்கப்பட்டு பின்னர், வேற்று மொழி பேசும் மக்களின் நலன் கருதி, பிற தேவைகளின் பொருட்டு, வேற்று மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன.

அதுமாத்திரமின்றி தமிழ் ஆங்கிலம், பிரஞ்சு, ஹிந்தி என பல்வேறு மொழிகளில் புலமை பெற்றிருந்த மகாகவி பாரதியார், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியதும், "தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியதும் தமிழ்மொழி அவர்களினுடைய காலத்தில் கூட எவ்வாறு முக்கியத்துவம் பெற்று காணப்பட்டது என்பதற்கு சான்றாக அமைகின்றது. இவ்வாறு இன்று உலகில் தமிழ்மொழியை தாய்மொழியாக கொண்ட மக்கள் 5 கண்டங்களை சேர்ந்த 64 நாடுகளில் வாழ்கிறார்கள். எனவே தகவல்களை பரிமாற்றிக்கொள்ளும் முக்கிய ஊடகமாக மொழி காணப்படுவதோடு அதில் சிறப்பு வாய்ந்த காலத்தால் அழியாத அன்றும் இன்றும் என்றும் இப்பாரினில் நிலைத்து நிற்கும் தாய்மொழியாம் தமிழ்மொழியினை நாமும் கற்றுணர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணுக்கு வழிகாட்டும் விண்மீன் விளக்குகள்

என். எப். அப்ரா
மொழிபெயர்ப்பு கற்கைகள்
இரண்டாம் வருடம்

வல்ல நாயனாகிய அல்லாஹ் நாம் வாழும் இந்த பூமியைப் படைத்து பரிபாலித்துக் கொண்டிருக்கிறான். அவன் இம்மாபெரும் பிரபஞ்சத்தை வீண்விளையாட்டுக்காக அன்றி ஒவ்வொன்றையும் தக்க காரணத்துக்காகவே படைத்துள்ளான். அந்த வகையில் நட்சத்திரங்கள் அவனது மாபெரும் படைப்புகளில் ஒன்றாகும். மேலும் அல்லாஹ் நட்சத்திரங்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறான்.

"அவனே உங்களுக்கு நட்சத்திரங்களை உண்டாக்கினான் அவற்றைக் கொண்டு நீங்கள் தரையிலும், கடலிலும் உள்ள இருள்களில் நீங்கள் வழி அறிந்துக்கொள்கிறீர்கள் - அறியக்கூடிய மக்களுக்கு இவ்வாறு விவரிக்கின்றோம்." (6:97)

அல்லாஹ் நட்சத்திரங்களை படைத்ததன் நோக்கங்களில் ஒன்று இருளில் பயணிப்பவர்கள் வழியை அறிந்துக் கொள்வதற்காக ஆகும். ஆதி காலத்திலிருந்தே மனிதனானவன் இருள் சூழ்ந்த நேரங்களில் தன் வழியை அறிந்துக் கொள்வதற்கான நட்சத்திரங்களின் திசையை பயன்படுத்தியுள்ளான்.

பல கோடிக்கணக்காண நட்சத்திரங்களை வானில் பரப்பி அல்லாஹ் பார்ப்பவர்களுக்கு அலங்காரமாக்கி உள்ளான். சுமார் 6000 நட்சத்திரங்களை நம் அடையாளம் காணலாம். நன்கு பிரகாசமுள்ள 38 நட்சத்திரங்களின் இருப்பிடத்தை அடையாளமாக வைத்து கடலில் மாலுமிகள் கப்பலை செலுத்துகின்றனர். இதனை "Celestial Navigation" என்று அழைக்கின்றனர்.

இன்றும் அமெரிக்காவில் வருடந்தோறும் வானில் நட்சத்திரங்கள் இருக்கும் இடத்தை அட்டவணைப்படுத்தி "Nautical Almanac" என்ற பெயரிலும் இங்கிலாந்தில் "Her Majesty's Nautical Almanac Office" என்ற வழிகாட்டி விண்மீன் பஞ்சாங்கத்தை வெளியிடுகிறார்கள். நிலம், நீர், ஆகாயம் இம்மூன்றிலும் பயணிக்கின்ற மனிதர்களுக்கு இந்நட்சத்திர வழிகாட்டி பெரிதும் பயன்படுகிறது.

இன்றைய நவீன அறிவியல் வழி அறிவதற்கு GPS போன்ற பல நுட்பமான சாதனங்களை மனிதன் பயன்படுத்தினாலும் இன்றும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளில் கப்பல், விமானங்களில் பயிற்சி பெறும் விமானிகள் மற்றும் மாலுமிகள் அடிப்படை நட்சத்திர வழிகாட்டும் (Celestial Navigation Test) தேர்வில் வெற்றி பெறாமல் பணியில் சேர முடியாது. GPS என்னும் செயற்கைக்கோள் வழிகாட்டி சாதனம் எந்நிலையிலும் பழுதாகக்கூடும். அவசரகாலங்களில் எமக்கு பயன்படுவது விண்மீன் வழிகாட்டுதலே. கடந்த காலங்களில் மனிதனின் பயணம் நீரிலும் நிலத்திலும் மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது. நவீன மனிதன் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் பயணம் செய்கின்றான். 1400 ஆண்டுகளுக்கு முன்பே பாலைவனத்தின் ஒட்டகத்தில் பயணம் செய்த மனிதர்கள் மத்தியில் இறங்கியதே அல்குர்ஆன் வசனங்கள். மனிதன் விண்ணில் பயணம் செய்வான், சந்திரனில் பயணம் செய்வான், சந்திரனில் இறங்குவான் என எவரும் கற்பனை கூட செய்திராத காலத்தில் விண்வெளிப் பயணத்தை அல்குர்ஆன் பேசுகிறது.

*"மனித, ஜின் கூட்டத்தார்களே! நீங்கள் வானங்கள் பூமியின் எல்லைகளைக் கடந்து சென்று விட உங்களால் கூடுமாயின் அவ்வாறு சென்றுவிடுங்கள். ஆயினும் மிகப்பெரும் பலத்தைக்கொண்டே தவிர நீங்கள் செல்ல முடியாது." (55:33)* விண்வெளி வீரர்களுக்கு வழி காட்டுவது யார்? ஆதி மனிதனுக்கு வழிகாட்டிய அல்லாஹ் படைத்த நட்சத்திரங்கள் தான் விண்வெளி வீரர்களுக்கு வழிகாட்டுகின்றன. அப்பலோ பயணத்தில் (Apollo mission) நட்சத்திரத்தை அடையாளமாக வைத்தே (Celestial Navigation) வழி அறிந்தனர். பூமியிலுள்ள இலக்குகளைத் துல்லியமாக தாக்குவதற்கு கண்டம் தாண்டிச் செல்லும் அமெரிக்காவின் "TRIDENT" ஏவுகணைகளும் ஒரு நட்சத்திரத்தை நிலையான அடையாளமாக வைத்தே செயல்படுகின்றன.

இவ்வாறு பூமியில் வசிக்கும் மனிதர்களுக்கு மட்டும் அல்லாஹ் வழி காட்டவில்லை. அனைத்து ஜீவராசிகளுக்கும் அல்லாஹ்வுடைய வழிகாட்டுதல் உள்ளது. ஏனெனில் மற்ற உயிரினங்களும் நம்மைப்போன்ற ஒரு இனமே! அல்லாஹ்வுடைய படைப்பில் அனைத்து உயிர்களும் ஒன்றோடொன்று பிண்ணிப்பிணைந்துள்ளதாக அல்லாஹ் கூறுகிறான்.

*"பூமியில் ஊர்ந்து திரியும் பிராணிகளும், தம் இரு இறக்கைகளால் பறக்கும் பறவைகளும் உங்களைப் போன்ற இனமேயன்றி வேறில்லை." (6:38)* கடந்த ஜனவரி 24ந் திகதி 2013, BBC யில் வந்த ஒரு ஆய்வுச் செய்தி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. மலத்தை உருட்டிச் செல்லும் வண்டு (Dung Beetle) தன் பொந்திற்கு போகும் பாதையை தொலை தூரத்தில் உள்ள பால்வீதி நட்சத்திர மண்டல ஒளியின் மூலம் வழி அறிவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயிரியல் ஆய்வாளர் எரிக் வாரண்ட் ஸ்வீடன் லேண்ட் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளராக உள்ளார். பூச்சிகளின் சிறப்புத் தன்மைகள் குறித்துப் பல ஆய்வுகள் நடத்தி புகழ் பெற்றவர். இரவில் இரை தேடும் சிறு பூச்சிகள் போன்ற உயிரினங்கள் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களை வைத்து வழி அறிவதாக கண்டறிந்தார். இது போல் சில பறவைகள், விலங்குகள், ரெயின்டீர் மான்கள், கடலில் உள்ள சீல் மீன்கள் போன்றவை நட்சத்திரங்களின் ஒளியின் மூலம் தங்கள் வழியை அறிவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இவ்வாறு நட்சத்திரங்களை அல்லாஹ் உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் வழிகாட்டியாக அமைத்துள்ளான்.

*"(வழிகாட்டும்) அடையாளங்களையும் (வழி காட்டுவதற்காக அவன் அமைத்துள்ளான்) நட்சத்திரங்களைக் கொண்டும் அவர்கள் வழிகளை அறிந்து கொள்கிறார்கள்." (16:16)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையின் வீரியம்

திராட்சை ரசம் என்னும் பெயருடன் - நான்
ஆதியிலே உதயமானேன் பாரினிலே.
தேன் போன்று இனிமை தரும் பானமாக
முடி சூடிய வேந்தர்களின் பாவனையில் - நான்
கடலில் இடும் நங்கூரமாய் வேருன்றினேன்

முயல் ஓட்ட வேகத்தில் செல்லும் கால மாற்றத்தால்
மது என்னும் அரக்கன் ஆனேன்.
வாழ்க்கையை அழிக்க வந்திருக்கும்
மரணம் என்று தெரியாத மடையர்களிடையே
இன மத பேதமின்றி சேரும் நீரும் போன்ற கலவையானேன்.

புகைத்தல் என்னும் புகையால்
புகைப்பவரின் உடலை கரியாக்கினேன்.
என்னால் - நுரையீரலோ கரியீரலானது.
அதனையும் அறிந்தும் அறியா மூடன் இவன்.

என்னால் எத்தனையோ அழிவையும் அறிந்திருந்தும்
என் போதைக்கு அடிமையானான்.
யார் பெற்ற பெண்ணோ - இவள்
கயவன் இவனின் காதல் மாயையில் சிக்கி திக்கு முக்காடினாள்.

அவனோ! போதையின் மதிமயக்கத்தால் பாவம் - இவள்
பேதையின் வாழ்க்கையையும் சூறையாடினான்.
குடி குடியைக் கெடுக்கும் என்ற முதுமொழியை அறிந்த மங்கை - இவள்
தன் ஒரே வாழ்க்கையையும் பறிகொடுத்து நின்றாள் வீதியினிலே!
(என்ன அவலமடா!)

யார் அறிவார் என் வீரியத்தை பாவம் - இவன்
அறிந்திருந்தும் என்னில் சிறையாகியிருந்தான்.
எமனின் விளையாட்டால் என்னாலேயே மண்ணாகியும் போனான்.
அவன் தான் போதையின் வீரியம் நான் ஆவேன்.

ஜே. நசீகா பேகம்
மனைப்பொருளியல்
இரண்டாம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நீர் நெருக்கடி

என். ஜெஸ்ரின்
புவியியல்
இரண்டாம் வருடம்

இறைவன் அளித்த அருட்கொடைகளில் ஒன்றாக நீர்வளம் காணப்படுகின்றது. "நீர் இன்றி அமையாது உலகு" எனக் கூறும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக நீர் காணப்படுகின்றது. உலகில் கடல், குளங்கள், அருவிகள், நீர்த்தேக்கங்கள், நீரூற்றுக்கள், பனிக்கட்டிகள், பாறைகள், காற்று, தாவரங்கள், விலங்குகள் என்பவற்றில் திண்மம், திரவம், வாயு ஆகிய வடிவங்களில் நீர் காணப்படுகின்றது. இந் நீரானது ஏனைய கிரகங்களிலும் காணப்படுகின்றது. ஆனால் பனிக்கட்டி வடிவிலேயே காணப்டுகின்றது. மண்ணில் உள்ள போசணைப் பொருட்களை பிரிகையடையச் செய்து தாவர விலங்களுக்கு கடத்துவதில் நீர் முதன்மை பெறுகின்றது. ஒளித்தொகுப்புச் செயற்பாட்டின் பிரதான மூலப் பொருளாகவும் உலக வானிலை மற்றும் காலநிலையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகவும், புவியியல் காணப்படும் எல்லா உயிரின வாழ்வுக்கும் ஆதாரமாகவும் காணப்படுகின்று.

நீர் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுதவதற்கு அடிப்படைக் காரணம் புவிமேற்பரப்பில் காணப்படும் நீரானது சமமான அளவில் எங்கும் பரந்து காணப்படாமையேயாகும். உலகத்திலுள்ள நீரில் 3% மட்டுமே நன்னீராக காணப்படுகின்றது. ஏனைய 97% மான நீர் சமுத்திர நீராகப் பரம்பிக் காணப்படுகின்றது. நன்னீரில் 79% மான நீர் பனிக்கட்டியாகவும் 20% மான நீர் தரைக்கீழ் நீராகவும் 1% மான நீர் மேற்பரப்பு நீராகவும் காணப்படுகின்றது. மேற்பரப்பு நீரில் 52% மான நீர் ஏரிகளாகவும் 38% மான நீர் மண்ணின் ஈரப்பதனாகவும் 8% மான நீர் வளிமண்டல நீராகவும் 1% மான நீர் ஆறுகளாகவும், 1% நீர் உயிர் அங்கிகளின் உடலில் காணப்படுகின்றது.

சனத்தொகை அதிகரிப்பு, வாழ்க்கைத்தரம் உயர்தல், கைத்தொழில் நடவடிக்கைகள், விவசாயத்தின் வளர்ச்சி, ஏனைய தேவைகளிற்கு நீரைப் பயன்படுத்துதல் என்பவற்றின் காரணமான நன்னீருக்கான தேவை அண்மைக்காலங்களில் பல மடங்கு அதிகரித்துள்ளது. எனினும் மனிதனின் தேவைக்கு உகந்த நன்னீரின் அளவு குறைவாக உள்ளதோடு இது ஒரு புதுப்பிக்க முடியாத வளமாகவும் விளங்குகின்றது. அந்த வகையில் மொத்த நீரில் 0.6% மான நீரே மனிதர்களுக்கு கிடைக்கக்கூடிய நன்னீராக காணப்படுகின்றது.

நீரானது பல பயன்களைக் கொண்டு காணப்படுகின்றது. இது கமத்தொழில், கைத்தொழில், பொழுதுபோக்கு, நகர, மாநகர அபிவிருத்தி, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. உலகில் கமத்தொழிலுக்கே அதிகளவான நீர் பயன்படுகின்றது. மொத்த பாவனையில் 70% கமத்தொழிலுக்கே பயன்படுகின்றது. இதனை அடுத்து கைத்தொழில் துறைக்கு அதிகளவான நீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுகின்றது. இதன் அளவு 23% மாக காணப்படுகின்றது. மேற்கு நாடுகளில் வீட்டுத் தேவைகளிற்கு நாளொன்றில் ஒருவர் நுகரும் அளவு 300 லீற்றராகும். இதில் 32% மலசல கூடங்களில் நீரை பீச்சி அடிப்பதற்கு பயன்படுகின்றது. 17% குளிப்பத்ற்கும், 12% ஆடைகளை துவைக்கும் இயந்திரங்களிற்கும், 38% சமைப்பதற்கும், குடிப்பதற்கும், கையால் ஆடைகளை துவைப்பதற்கும், வீட்டுத்தோட்டங்களிற்கும் பயன்படுகின்றது. குடிநீராகவும், உணவுடனும் நாளொன்றில் ஏறத்தாழ 2 லீற்றர் நீர் நுகரப்படுகின்றது.

இத்தகைய பல பயன்பாடுகளை உடைய நீரானது தற்காலத்தில் பல்வேறு காரணிகளினால் மாசாக்கத்திற்கு உட்படுகின்றது. விவசாய நடவடிக்கைகளின் போது பயன்படுத்தபடுகின்ற பீடைநாசினி, களைநாசினிகளின் பாவனை நைத்திரேற்று அதிகம் கொண்ட வளமாக்கிகளின் பாவனைகள் மூலம் நீர் உவர்த்தன்மை அடைதல் போன்ற காரணங்களால் அதிகளவில் மாசுபடுகின்றன. கைத்தொழில் நடவடிக்கைகளின் போது வெளியேற்றப்படும் இலத்திரனியல் கழிவுகள், இரசாயனக் கழிவுகள், ஆடைத் தொழிற்சாலைக் கழிவுகள் போன்றன நீர்நிலைகளுடன் காய்தல் நீரானது மாசாக்கத்திற்கு உட்படுகின்றன. நகராக்கத்தின் போது கடல் நதியை அண்மித்து காணப்படும் நகரக்கழிவுகள் நீரில் கலத்தல், அதிகரித்த சனத்தொகையின் காரணமாக இடப்பற்றாக் - குறையால் நகரக்கழிவுகளை கடலில் கொட்டுதல் என்பவற்றின் மூலம் நீர் அதிகளவில் மாசடைகின்றது. மேலும் அதிக கப்பற்போக்குவரத்து, எண்ணெய் கப்பல்கள் நீரில் மூழ்குதல், கடலில் எண்ணெய் கசிவுகள் ஏற்படுதல், கண்டல் முருகைக் கற்பாறை - களினுடைய அகழ்வு நடவடிக்கைகளின் காரணமாகவும் நீரானது மாசாக்கத்திற்கு உட்படுகின்றது.

இவ்வாறு நீரானது மாசாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டு வருவதனால் எதிர் காலத்தில் நீர் தொடர்பான நெருக்கடிகள் ஏற்படுத்தப்படும் என குறிப்பிடப்படுகின்றது. 2050ம் ஆண்டு ஆகும் போது உலகம் மிகப் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும். அதுவம் நீருக்காக மக்கள் அல்லல்படுவார்கள் எனவும் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். 2025ம் ஆண்டுக்குள் 1.8 பில்லியன் மக்கள் நீர் நெருக்கடியினை சந்திப்பர் எனவும் 2030ம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் 1/3 பங்கினர் வரட்சியாலும் தண்ணீர் பற்றாக்குறையாலும் பாதிக்கப்படுவர் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் வெள்ளை அறிக்கை கூறுகின்றது. இன்றைய காலகட்டத்தில் 110 கோடிக்கும் மேற்பட்ட மக்களில் 8 நாடுகளில் வாழும் 40% மான மக்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை உள்ளதாகவும் அதிகரித்து வரும் மனித வர்க்கத்தினருக்கு எதிர் காலங்களில் நீர் ஒரு சவாலாக அமையலாம் என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் உலகப்போர் நடைபெறுமாக இருந்தால் அது நீருக்காக மாத்திரமே நடைபெறும் என்றும் உலகில் மூவரில் ஒருவருக்கு பாதுகாப்பான குடிநீர் உறுதி செய்யப்படவில்லை எனவும் ஆய்வு மையம் குறிப்பிடுவதுடன் நிலத்தடி நீரின் ஆளவும் குறைந்து கொண்டு வருகின்றது எனவும் குறிப்பிடப்படுகின்றது. அண்மையில் ஆகெள்டீனாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டில் நீரியல்தின நிகழ்வின் போது ஒரு சொட்டு தண்ணீருக்கான விலை ஒரு சொட்டு பொற்றோலியத்துக்கான விலையை விட எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தண்ணீர் பற்றாக்குறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக உலகெங்கிலும் மக்களுக்குப் புலம் பெயர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது கிராமங்கள் தான் காலியகாகி வருகின்றன. எதிர்காலத்தில் பெரு நகரங்களையே மாற்றியமைக்கும் சூழல் ஏற்படும் மேலும் சீனாவின் உள்மங்கோலியா, நீங்ஸியா, மற்றும் கான்ஸ் மாநிலங்களில் பாலைவன அகதிகள் உருவாகி வருவதனை அந்நாட்டு விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். எதிர்காலத்தில் தலா ஒருவருக்கான நீர் கிடைப்பனவு குறைவடையும் எனக்குறிப்பிடப்படுகின்றது. உதாரணமாக 1975ம் ஆண்டு இலங்கையில் தலா ஒருவருக்கான நன்னீரின் அளவு 3878 $M^3$ ஆகக் காணப்பட்டது. இது 2025ம் ஆண்டில் 2123 $M^3$ ஆக குறைவடையும் எனக் குறிப்பிட்டுள்ளது.

நிலத்தடி நீரின் அளவு குறைவடைந்து கொண்டு செல்கின்றது. இதன் காரணமாக எதிர்காலத்தில் புதிய பாலைவனங்கள் உருவாகலாம் எனவும் மேலும் ஏற்கனவே உள்ள பாலைவனங்களின் பரப்பு எல்லை விஸ்தரிக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் 43 நாடுகளில் 768 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் குடிநீர் பிரச்சினையை எதிர் நோக்குகின்றனர். உலகில் 1.6 மில்லியன் நீர் தொடர்பாக நோய்களால் வருடாந்தம் இறக்கின்றனர்.

இவ்வாறான நீர் நெருக்கடிகளைக் குறைப்பதற்கும் நீர் தொடர்பான முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் நீரின் தரம் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், நீர் நிலைகளில் நீரின் தரத்தை கண்காணித்தல், பொதுமக்களின் சுகாதார ஆரோக்கிய வசதிகளை மேம்படுத்துதல், தொழிற்சாலைகளிரலிருந்து வெளியேறும் நீர்க்கழிவுகளை கண்காணித்தல், நீர் வடிகால் தொகுதிகளை பாதுகாத்தல், மண் பாதுகாப்பு சட்டங்களில் அதிக கவனம் செலுத்துதல், வளங்களின் விஸ்திரத்தை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைளின் மூலம் நீர் தொடர்பான நெருக்கடிகளை குறைத்துக் கொள்ள முடியும்.

நீர்வளப் பாதுகாப்பை வலியுறுத்தும் முகமாகவே சர்வதேச நீர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 1993ம் ஆண்டு மார்ச் 22ம் திகதி முதல் குடிநீர் தினமானது கொண்டாடப்படுகின்றது. இவ் நீர்தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் "உலகளாவிய ரீதியில் நீர்ப்பிரச்சினையை தீர்த்தல் மக்களிடையே நீர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்" ஆகும். இக் குடிநீர் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளை மையமாக வைத்து கொண்டாடப்படுகின்றது. 2018ம் ஆண்டு குடிநீர் தினத்தின் தொனிப்பொருள் "இயற்கைக்கான நீர்" ஆகும்.

புவி மேற்பரப்பில் காணப்படுகின்ற இத்தகைய வரையறுக்கப்பட்ட நீர்வளத்தினை சிக்கனமாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துவதன் மூலம் நாமும் நன்மையை பெறுவதுடன் எதிர்கால தலைமுறையினரும் நன்மையைப் பெற்றுக் கொள்வதற்கு புதுப்பாதையினை காட்ட முடியும்.

## Reference:-

சரத் அமரசிறி (2008) "அற்புதமான நீரைப் பாதுகாப்போம்" இலங்கை இயற்கை ஒன்றியம் 546ஃ3, வடட்ட மாவத்த, கங்கொடவில நுகேகொட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Details of Arts Students

### 4th Year

| | | |
|---|---|---|
| 1. | Aafira S.M - | Buhari Haji Road, Oodamawadi-03. |
| 2. | Akeela M.A.F - | 369, 9th cross Street Al-Qaasimi City, Palavi-61280. |
| 3. | Askar A.A.M - | Stubtion Division, Rakwana. |
| 4. | Asra M.C.F - | 208, kappagama, kalawewa, Vijithapura. |
| 5. | Faizal Wazeer M.M - | 79/A, Kumarimulla, Pugoda. |
| 6. | Hajar M.I.M - | 360/25, Samahiwaththegama, Dangedara, Galle. |
| 7. | Jeenath Banu M.M - | 289/A, Gafoor Gs Lane, Sammanuthurai. |
| 8. | Manasira BAnu M.M - | No 45, Katukeliyawa, Pubbogama, Anurathapura. |
| 9. | Munasira L.T.F - | Kallanchiyagama, kagama, Kekeirawa, Anuradhapura. |
| 10. | Noorus Shahar M.N | 469, Ediman Main Street, Kinniya-04 |
| 11. | Fawsdeen Famees S.M | Pandaraveli, Chilawathurai, Mannar. |
| 12. | Riffath Mohammed M.R | Ismail Hajiyar Lane, New Katthankudy-03. |
| 13. | Sabina Farween M.M | 166/14b, Poruthuts, Kochikada. |
| 14. | Sahani F.S | 25, Kappaigama Vijithapura, Anuradhapura. |
| 15. | Samla M.K.F | 122, Marikkar Street, Kalutura. |
| 16. | Shamrina R.F | Ward No 04, Irakkandy, Nilaveli, Trincmalee. |
| 17. | Shareeha M.J.F | 88, Us Road, Kinniya. |
| 18. | Sreenthaj I | 416, New Town, Nachchaduwa, Anuradhapura. |
| 19. | Sumra A.W.F | 211, Malkampity Road, Vilinayadi-03, Sammanthurai. |
| 20. | Zamra I.F | 198/1, Kekunugolla, Narammala, Kurunegal. |

### 3rd Year

| | | |
|---|---|---|
| 1. | Afra A.J.F | Madigemudunduwa, Ibbagamuwa, Kurunegala. |
| 2. | Ashfa M.R.F | 442/1, Nawamawatha, Dangolla, Horombawa. |
| 3. | Asra Begum M.A | Poowella, Weerapokuna. |
| 4. | Ashrifa O | 152/2, Arakyala, Kekunagolla, Kurunegala. |
| 5. | Azmiya T | 41/7a, Milagahawatha, Thihariya, Kalagedihena. |
| 6. | Farha A.F | 258, 8th Lane, Arafanagar, Nurachcholai,Puttalam. |
| 7. | Fasmiya A.L.F | Jummah Mosque Road, Oddamawadi-02. |
| 8. | Ishadha N.A.F | 87/32, Dharmapala Mawatha, Anuradhapura. |
| 9. | Ishrath Banu S | Kiulekkade, Horowpothane |
| 10. | Mujeeba J | Aliyawetunawewa, thabutta, Galgamuwa. |
| 11. | Nadheera Farwin M | 39/B, Pulichchakulam, Battulu-Oya, Puttalam. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 12. Najeeber Rahman M.M | 45/8, Irumpuththaikka Road, Kattankudy-06, Batticaloa. |
| 13. Naura N.F | 21, Egodauyana, Tholupola Road, Pallimulla, Panadura. |
| 14. Nifla M.W.F | Nachchaduwa, Anuradhapura. |
| 15. Nusrath Nisa A.F | Main Street, Soorangal, Kinniya. |
| 16. Offa S.H | Kovilbandhawewa, Parasangaswewa, Anuradhapura. |
| 17. Rasheeda Farwin M.M | 75/9, 3rd Lane, Heerassagala Road, Kandy. |
| 18. Rasmiya Farwin S.L | Haskampola, Siyambalakaskotuwa, Kurunegala. |
| 19. Risla M.R.F | 206/A, Pussella, Parakaduwa. |
| 20. Rusaika M.A.F | 05, Narawila Road, Ihalakottramulla. |
| 21. Safana S.F | Jagamapalkdawela, Galgamuwa. |
| 22. Sahra M.P.F | 47, Thelambugalla, Dodangaslanda. |
| 23. Sapna Banu M.S | 314, Galewela Road, Thambala, Polannaruwa. |
| 24. Siththi Usena M.S | New Salambaikkulammannar Road, Vavuniya. |
| 25. Sumaiya A.W.F | Koolankulan, Chilawathurai, Mannar. |
| 26. Thilasath Banu S | Hussain Street, Tharapuram, Mannar. |
| 27. Zahra I | 32/1, Sekkupiti, Kekirawa. |
| 28. Zahra M.M.F | 422, Rambukana Road, Madige galagedara, Kandy. |
| 29. Zaneeha M.S.F | 117/2, Kuriwela, Ukuwela. |

**2nd Year**

| | |
|---|---|
| 1. Aayesha A.S.P | 40, Pothuhera, Alahitiyava, Kurunegal. |
| 2. Afra B | 496, Panichamkulam, Van Ela, Kinniya. |
| 3. Afra M.H.F | 33, Kahatowita, Veyangoda. |
| 4. Afra N.F | 183, Main Street, Kekirawa. |
| 5. Afros Banu M.N | Keeriyagali, Mundhal. |
| 6. Ajeefa A.A.F | No.26, Muslim Colony, Kadhuruwela, Polannaruwa. |
| 7. Arshad A.G.M | 23/1, Galpanawa, Monnekulama, Nikaweratiya, Kurunegala. |
| 8. Asaam M.A.A | Bamunugama, Muriyakadavala, Kekirawa. |
| 9. Asna M.A.F | Mirithampitiya, Eaththawaththa, Kurunegala. |
| 10. Asra H.K | 9/3b, Udathalawinna, Kandy. |
| 11. Banu A.S | Utthupittiya, Muriyankkadawela, Anuradhapura. |
| 12. Benazir H | Jaya Najar, Kuchchveli, Trincomalee. |
| 13. Farha M.F | Arafanagar, Nurachcholai, Puttalam. |
| 14. Farvin M.M.M | 114/B, Weligoda Gade Bolagala Road, Werellagama, |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | Kandy. |
| 15. Farvin S | 200, Main Street, Mahruf Nahar, Kinniya-03 |
| 16. Fasrina M.F.F | Habeeb Lane, Pallivasalthurai, Puttalam. |
| 17. Feroza W | Al-Hamra, Pallivas;thurai, Puttalam. |
| 18. Haafila M.M.P | Paragaha Kotuwa, Pahamune. |
| 19. Hafsa M.H.F | Mellapoththa, Minuwangeta, Kurunegala. |
| 20. Hamna M.N | 28/A, 1st Lane, Spill Road, Puttalam. |
| 21. Haneesa A.M | Aliyawetunawewa, Thambutha, Galgamuwa. |
| 22. Hasmiya M.F.F | 42/1, Meeripenna Road, Dharga Town, Kaluthura. |
| 23. Hasna A.S.F | 92/3, Pothuhara, Alahitiyawa, Kurunegala. |
| 24. Hasna H.F | 552/18, Elagolla Garden, Heerasagala, Kandy. |
| 25. Hassana A.G | 90 Acre, Kandal Kuda, Thalawila, Puttalam. |
| 26. Hibthiya Sirin T.A | 15c 61, Kurunegala Road, Moor Street, Ninthany, Puttalam. |
| 27. Hifla M.S.F | 5, 5th Lane, 5th Cross Street, Puttalam. |
| 28. Hifrath K.R.F | 14, 3rd Lane, 3rd Cross Street, Puttalam. |
| 29. Jesreen N | 296f/2 Vv Road, Natpiddimunai-04, Kalmunai. |
| 30. Jeenath Nifa A.R | 172K/3, Madrasa Road, Kalmunai Kudi-10 |
| 31. Mahis T.M.M | Poonochchikkulam, P.P Potkerny, Mannar. |
| 32. Maryam T | Ahaththi Murippu, PpPotkerny, Mannar. |
| 33. Mifla W.F | Colony, Kandal kuli, Puttalam. |
| 34. Mifra Banu R | 22/1a, Puthukudiyiruppu, Kalpitiya, Puttalam. |
| 35. Minhath Begum K | Paththawe, Horowpothana, Auradhapura. |
| 36. Mirfa J.F | 486, Mm Road, Maruthamunai-03. |
| 37. Muhaffil M.H.M | 109, Assuhatha Street, Kattankudy-01. |
| 38. Mumthas M.S.M | 298/B1, Mahahapugala, Gintota, Galle. |
| 39. Musharrath M.F.F | 100, Kalpitiya Road, Etalai, Puttalam. |
| 40. Musfira M.R.F | 25, 14th Lane, Spill Road, Puttalam. |
| 41. Nadha M.M.B - | 544/22, Heerassagala, Kandy. |
| 42. Najeem M.T.M | Veppankulam, P.P Potkerny, Mannar. |
| 43. Naseeha Begum J | 126/32, 7th Cross Street, Sadhamiya Puram, Thillayadi, Puttalam. |
| 44. Nasmiya Y | Bamunugama, Muryakadawala. |
| 45. Nazeera N.F | Madheena Nagar, Poonthottam , Vavuniya. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 46. Nisa H.M.S | 203, valluwarpuram, Visvamadu. |
| 47. Niyasa Banu W | 117, Kadayamottai, Madurankuliya, Puttalam. |
| 48. Nusha M.N.F | 28/5, 14th Lane, Marikkar Street, Puttalam. |
| 49. Nuska M.F | 3/2A, 5th Lane Newsettelement Road, Puttalam. |
| 50. Nusla M.L.F | Al-Madheena Lane, Ch/Puthukudiyiruppu, Puttalam. |
| 51. Nusvi M.F | P.S Road, Oddamavadi-02, Batticalo. |
| 52. Raheem S.S.A | 85, Katukeliyawa, Pubbogama, Kekirawa. |
| 53. Rashidha A.H.F | Gambirigaswewa, Anuradhapura. |
| 54. Rifka N.F | 248/10, bebilagolla Road Kandy. |
| 55. Rifna M.M | 87/C, Ullandhupitiya, Werallagama. |
| 56. Rifnas M.N.F | Pilichankulam, Battulu Oya, Puttalam. |
| 57. Rihana A.P | Gambirigaswewa, Anuradhapura. |
| 58. Rihana J.F | 24, Dharmapalapura, Black pool, Nuwaraeliya. |
| 59. Rijwana H.P | Gonnawa, Anukkane, Thorakotuwa, Kurunegala. |
| 60. Rikaza M.C.F | Pulichankulam, Battulu Oya, Puttalam. |
| 61. Riskan K.M | Neithal Nagar Muthur 01, Trincomalee. |
| 62. Safana Begum J | 316f/1, Natpittimunai 04, Kalmunai. |
| 63. Safiya A.M.F | 661, Smt Hajiyar Road, ODdamawadi-01. |
| 64. Safna A.G.F | 580/B, Kanamoolai, Madurankuliya, Puttalam. |
| 65. Saheeka M.S | Al-Hamra, Pallivasalthurai, Kalpitiya, Puttalam. |
| 66. Sahnas A.M.p | 54/2, Abukkagama, Monnekeulam ,Kurunegala. |
| 67. Sahnas M.R.F | 141, Nikagolla Yatawatha, Matale. |
| 68. Samna M.F.F | Al-Madheena Lane, Puththukudiyiruppu, Puttalam. |
| 69. Samsath Begum M.H.H | 519/10a, Jayanthi mawatha, Anuradhapura. |
| 70. Šasna S.F | 266, 14th Cross Street, Al-Qaasimy City, Thillayadi. |
| 71. Shafna M.I.F | 67/11, Peradeniya Road, Kandy. |
| 72. Shafra M.N.F | 144/3, Nikagolla yatawatha, Matale. |
| 73. Shereen M.I.I | No.03, Muslim College Road, Kattady, Jaffna. |
| 74. Sifna M.S | Kondachi, Chilavaththturai, Mannar. |
| 75. Sumaiya M.I.S | 244, Vihara Mawatha, Hunupitiya, Watthala. |
| 76. Sumaiya S.M.F | 73, Meevathuwa, Peradeniya, Kandy. |
| 77. Zakiya L.F | No 27, Bangala House, Madawala Bazaar. |

**1st Year**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1. | Aashifa begum A - | Pudhukkudiyiruppu, Kalpitiya, Puttalam. |
| 2. | Asra M.S.F - | Arippu Rd, Thissawewa, Anuradhapura. |
| 3. | Afna M.F - | 197, Samagi mawathe, Kanthale. |
| 4. | Amrah M.F.F - | Ethungkaha kotuwa, Kuliyapitiya, Kurunegala. |
| 5. | Ansah M.F.F - | Main street, Kandakkuliya, Kalpitiya. |
| 6. | Asfiya M.F.F - | Welimalai, Chilawathurai, Mannar. |
| 7. | Asmath M.B.F - | No 61/17 A 5th street, najhoor masjid Rd, Puttalam. |
| 8. | Asna A.F - | 405, Kolikkadai Rd, Valaichenai-05, Batticalo. |
| 9. | Asja F.F - | Periya karisa pesalai, Mannar. |
| 10. | Asra A.C.F - | 179B, Puttalam Rd, Sanguthattan, Chilaw. |
| 11. | Asrina A.F - | Kurinjipitiya Rd, Kalpitiya, Puttalam. |
| 12. | Azfa K.M.F - | 22/1, Markaz Rd, Peraru, Kanthale. |
| 13. | Azha F - | Kurunduwatta, Aluthgama, Panandura. |
| 14. | Farhana A.S.F - | Koofa mayyawadi street, Faisal nagar, Kinniya-03, Trincomalee. |
| 15. | Farwin B.J | Periya Karisa Pesalai, Mannar. |
| 16. | Fasniya M.P - | No 127/1 Thalgaspitiya, Ambakotte, Kurunegala. |
| 17. | Fasreen S.H.M - | 126, Karambai, Puttalam. |
| 18. | Fasrina M.I.F - | Anaolandawa, Horowpothana, Anuradhapura. |
| 19. | Fayis Mohammed A.A | Kanthale, Trincomalee. |
| 20. | Hadhiya Farwin H - | NO 151, Puttalam Rd, Jayabima, Chilaw. |
| 21. | Hafsa M.J.F - | 51, 4th Cross, Husainiyapuram, Palavi, Puttalam. |
| 22. | Hafsha N.M.C.F - | No 42/13, Main street, Dehiowita, Kegalle. |
| 23. | Hafla M.S.F - | No 152, Kalpitiya Rd, Thigaly, Ettalai, Puttalam. |
| 24. | Hanaya H.M - | No 81, Ihala angunochiya, Horowpothana, Anuradhapura. |
| 25. | Hansa M.Y - | No 91, 6th cross, Palavi, Puttalam . |
| 26. | Hasna H.M.F - | 435, Pahamune, Narammala, Kurunegala. |
| 27. | Hassana begum M.K - | Kollankuttygama, Maradankadawala, Anuradhapura. |
| 28. | Haleema M.R - | No 355/F, Mathale Rd, Madhipola. |
| 29. | Hilmiya M.I - | Welpothuwewa, Boraluwewa, Kurunegala. |
| 30. | Humaira M.Y.F - | No 227/1, Unambuwa, Kahatapitiya, Gampola . |
| 31. | Ihijas M.S.M - | Chilawaththurai, Mannar. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 32. Inka M.R.F - | Ihala Kiniyama, Weerapokuna, Kurunegala. |
| 33. Isra A.T - | Kallachiyagama, Kagama, Kekirawa, Anuradhapura. |
| 34. Jahan R.A - | Balaluwewa, Palagal. |
| 35. Jeseena J.F - | Puludhivayal, Palavi, Puttalam. |
| 36. Jesmin M.J - | Irakkandy, Nilaveli, Trincomalee. |
| 37. Maahira S.M.F - | Poowella, Weerapokuna, Kurunegala. |
| 38. Maheesa K.D.F - | Powella, Weerapokuna, Kurunegala. |
| 39. Majith M.T.A - | lake roud, nikaweratiya, kurunegala. |
| 40. Mifra M.N.F - | 40/7A, Kaleel place, Kaluthura(south). |
| 41. Mifrah M.F - | No 06, Tower lane, Keeriyangkalli, Mundal . |
| 42. Mifjala A.N - | Al- Hamra, Palliwayalthurai, Kalpitiya. |
| 43. Minha M.U - | Kalpitiya Rd, Alangkuda, Ettalai, Puttalam. |
| 44. Murshid M - | No-308, weralagawaththa, galewala . |
| 45. Musammila S - | Koofa nagar, Faisal nagar, Kinniya-03, Trincomalee. |
| 46. Nafla F. - | 135, Veyangallla, Agalawaththa. |
| 47. Naflee M.T.F - | Kalawewa, Vijithapura. |
| 48. Nasfiha N - | Welimalai, Chilawathurai, Mannar. |
| 49. Nasrin M.N.F - | Kattaiyaru street, Kinniya-04, Trincomalee. |
| 50. Naseeha M.N.F - | 115/A/2, SM Rd, Dargatown . |
| 51. Nasrullah M.T - | walpaluwa, thambuththegama, galgamuwa. |
| 52. Niflan S.M - | Hussain street, Tharapuram, Mannar. |
| 53. Nirosha N.P - | Rathmalgahawewa, Rambewa, Anuradhapura. |
| 54. Nishamila A.J - | VC Rd, Kurinchakeni 02, Kinniya. |
| 55. Nosha N.F - | Pudukkudiyiruppu, Bathulu-oya, Puttalam. |
| 56. Nuha M.N - | Thalgaspitiya, Ambakotte, Kurunegala. |
| 57. Nusla M.S.P.N - | NO 622/8, Gall Rd, Kaluthara(south). |
| 58. Nusra M.N.F - | Koolangulam, Chilawathurai, Mannar. |
| 59. Nusha begum M.F - | NO 128, Thambala, Polonnaruwa. |
| 60. Nusrath banu N - | Nelliyagama, Palagala. |
| 61. Rasana S.F - | 61/6, Anuradhapura Rd, Puttalam. |
| 62. Razi M.M.A - | 123, Bakiyathussalihath rd, periyaneelavanai. |
| 63. Reenas M.T.F - | Tharakkudiwillu, Bathulu-oya, Chilaw. |
| 64. Rifana N.M.P - | Thalgahawewa, Rambewa, Anuradhapura. |
| 65. Rifdha R.F - | No 20, Lane 07, New settlement Rd, Puttalam. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 66. Rifna M.R.F - | Al-Qassimi city,Rathmalyaya, Puttalam. |
| 67. Rifkana nasrin K.R - | No 14/6, 4th lane, Wettukkulam Rd, Puttalam. |
| 68. Risny M.H.F - | 208/A, Vellangarai, Palliwayalthurai, Kalpitiya. |
| 69. Riyas mohammed A.A - | Kanthale, Trincomalee. |
| 70. Roshana S.M - | 135, Al Manar Rd, Maruthamunai. |
| 71. Rukshana - | 230, Keppitigala Rd, Rambukkandana, Rideegama. |
| 72. Rukshana A.K.F - | 125 SM Rd,Dargatown. |
| 73. Rumaisa C.B - | No 98, Ihala angunochiya, Horowpothana, Anuradhapura. |
| 74. Sabeeha M.A.F - | School Rd, Sornapury, Adampan, Mannar. |
| 75. Safana S.F - | Junaid Rd, Nadutheevu, Muthur 07, Trincomalee. |
| 76. Safana M.F - | Hussain Street, Tharapuram, Mannar. |
| 77. Safras F.M - | A/walahawiddawewa, pargiyawadiya, Horowpothana. |
| 78. Sahana S - | Kalpitiya Rd, Aalngkuda, Ettalai. |
| 79. Sahani M.J.F - | No 114/12, 5th cross street, sadamiyapuram, Thillayadi, Puttalam. |
| 80. Sahiya S.P - | 42, Horowpothana, Anradapura. |
| 81. Sahra M.R.F - | Bodhiraja Mawatha, Nikaweratiya. |
| 82. Saneeha M.F.F - | Mediwelagedara, Horombawa, Kurunegala . |
| 83. Sanoos M.S.S - | Karambai, Puttalam. |
| 84. Sanoosiya M.M - | Aliyawatunuwewa, Thambuththa, Galgamuwa. |
| 85. Sasana M.A.S.P - | No 43, Kalawewa, Vijithapura, Kekirawa, Anuradhapura. |
| 86. Sasna K.A.F - | No 102, Aluthgama, Gambirigaswewa, Anuradhapura. |
| 87. Sarjana - | 35/4, Nagarasaba Mawatha, Kanthale. |
| 88. Sakeena A.J - | Puthuweli, Chilawathurai, Mannar . |
| 89. Sharafath K.N - | No 96, Periyamadu, Mannar . |
| 90. Shereena T.N.F - | No 04, Jayanthi Mawatha, Anuradhapura. |
| 91. Sifna M.N.F - | F 111/4, Thalgaspitiya, Aranayaka. |
| 92. Sifana A.R.F - | Welpothuwewa, Boraluwewa,Kurunegala. |
| 93. Sifrana M.S.F - | No.288, Samagi mawatha, Kadayakulam, Puttalam. |
| 94. Sihan S.M - | No-05, Soorangal, Kinniya. |
| 95. Sihara M.S.F - | Mirihampitiya, Ithanawatta, Kurunegale. |
| 96. Siththi suhaina M - | Muslim attaweerawewa, Kebithygollawa, Anuradhapura. |
| 97. Sumaiya A.L.F - | Madalassa, Kekunagolla, Narammala. |
| 98. Sumaiya M.S.F - | AS Kulam, Chilawathurai, Mannar . |
| 99. Sumaiya M.R.F - | NO 20, Main street, Dehiowita, Kegalla. |
| 100. Suhaina M.U.F - | No 525/23, Rathnayakepura, Anuradhapura. |
| 101. Wafa M.R.N - | 40/45A,Madalagama, Polgahawela |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"All Kinds of Printings in one roof"

Vista8 Printers

Vista8 Printers

Designing | Offset, Digital Printing | Banner Print | Hoardings | PlaquesDigital Name Board | Wedding Invitation Cards | Mug Print | Shield & etc ...




ASAL Tailaring

All Kind Of Ladies & Gents Wear Specialist Wedding Dress With Curtains.

No:131 Ramanathan Road,Kaladdy Junction Jaffna.

T.P -0776964787,0727046618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழிப் பயில்துறைகளில் புலமைப்பரப்பை நிலைப்பெறச் செய்த பெருமையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்திற்கு தனியிடமுண்டு. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது அதிகப்படியான முஸ்லிம் மாணவர்களினைக் கொண்ட பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணம் திகழ்கின்றது. அதில் கால் பங்கிற்கும் மேற்பட்டவர்கள் கலைப்பீட மாணவர்களேயாவர்.

இந்த அடிப்படையில் முஸ்லிம் மஜ்லிஸினை ஆரம்பம் தொட்டு இன்று வரை திறம்பட நடத்துவதிலும், வெற்றிகரமான செயற்திட்டங்களை முன்னெடுப்பதிலும் கலைப்பீட மாணவர்களின் பங்கு அபரிமிதமானது. இதன் அடிப்படையில் கலைப்பீட மாணவர்களின் எழுத்தாற்றலுக்கானதொரு களமாக எழுதுகோல சஞ்சிகை உள்ளது.

2012 ஆம் ஆண்டு கலைப்பீடத்தின் எமது சிரேஷ்ட மாணவர்களினால் முதலாவது சஞ்சிகை வெளியிடப்பட்டது. அவர்களது கன்னிப்பிரசவத்தினைத் தொடர்ந்து இரண்டாவது இதழ் முயற்சியாக இது உள்ளது. இச் சஞ்சிகையானது இனி வரும் காலங்களில் ஆண்டாண்டு பிரசுரிக்கப்படும் என்ற நம்பிக்கை எம்மிடமுள்ளது.

சகவாழ்வு மற்றும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, இஸ்லாம் பற்றிய சந்தேகங்கள் மற்றம் தெளிவின்மைகளை நிவர்த்தி செய்தல், புதிய விடயங்களை நோக்கிய துறை சார்ந்த பங்களிப்பினை வழங்குதல் என்று இன்னும் பல இலக்குகளை தன்னகத்தே கொண்ட எழுதுகோலின் பணி மென் மேலும் வியாபிக்கும் என்பதில் ஐயமில்லை.

இது போன்ற காத்திரமான கருத்துக்களையும், புத்தாக்கத்திறன்களையும், நவீன சிந்தனைகளையும், வாசிப்போனின் அறிவிற்கு வித்திடும் வித்துக்களையும், சமூக விழித்திரைகளை களைந்தெறிவதற்கான அடித்தளங்களையும், இது போன்ற எண்ணிலடங்கா இன்னும் பல சுவாரஷ்யமான விடயங்க்ளையும் சுமந்துள்ள எழுதுகோல் 02 எனும் சஞ்சிகையைப் பிரசுரிக்கின்றோம். எல்லாம் வல்ல இறையோன் எதிர்வரும் காலங்களிலும் இம்முயற்சியை தொடர்ந்து, வெற்றிகரமாக நிறைவேற்ற அருள்பாலிப்பானாக என உளமார பிராத்திக்கின்றோம்.

அல்ஹம்துலில்லாஹ்.

MUSLIM MAJLIS - UNIVERSITY OF JAFFNA
PEACE ★ KNOWLEDGE ★ FAITH

Vista8printers.0212215488

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org